2

ச. லெ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த திருப்பாடற்றிரட்டு, புலம்பல், பத்திரகிரியார் புலம்பல், ஆகிய இவற்றின்

ஞானார்த்ததீபவுரை.

இவ்வுரை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மகாவித்துவான் சித்தாந்தசரபம்
அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியார்

இயற்றியது.

K. V. துரைசாமி முதலியார்
K. திருவேங்கடமுதலியா ரவர்களால்,

இதன் விலை] 1924. [ரூபா 2—0—0

PRINTED AT THE S. A. M. PRESS, MADRAS. 18-11-24.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

பட்டினத்துப்பிள்ளையார் பாடல், புலம்பல், பத்திரகிரியார் புலம்பல் ஆகியவற்றிற்குக் காலஞ்சென்ற கேளம்பாக்கம். பெ-சிங்காரவேலுமுதலியா ரென்பார் அஷ்டாவதானம். பூவை. கலியாணசுந்தரமுதலியார் அவர்களைக்கொண்டு உரையொன் றெழுதுவித்து "ஞானார்த்ததீப உரை" யெனப் பெயரிட்டு கிரந்த சுதந்தரச்சட்டபடிச்சகல வுரிமைகளும் தாமே யடைந்து பிரசுரித்து வந்த இந்நூலினது சர்வ சுதந்திரங்களையும் சி. முருகேச முதலியார் எம்மிடமிருந்து கிரயம் பெற்றுக்கொண்டு விற்றுக்கொடுத்துவிட்டனர். இனித்தாம் அச்சிடவாவது பிரசுரம் செய்யவாவது பிறருக்கு அதன் பாத்தியதைகளை விற்கவாவது தமக்கு யாதொரு உரிமையும் கிடையாது இல்லையென்பதையும் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்துவிட்டனர். ஆதலின் இனி ஷை "ஞானார்த்ததீப வுரை என்னும் இப்புத்தகத்தின் சர்வ சுதந்தரங்களும் எங்களுக்குஉரியதாகலின் ஷை புத்தகத்தை எங்களுடைய அனுமதியின்றி யாவராயினும் அச்சிட்டாலும் அல்லது மேற்படி புஸ்தகத்திலிருக்கிற எந்த அமிஸங்களை அச்சிட்டாலும் 1867ஞ் 25-வது ஆக்டின் 6-வது பிரிவின் பிரகாரம் அதனால் எங்களுக்கு நேரிடும் சகல நஷ்டத்திற்கும் ஜவாப்புதாரியாவதுடன் கிரிமினலுக்கும்பாத்தியமாவார்கள் என்பதை இதன்மூலமாய் அறிவித்திருக்கிறோம்.

இப்படிக்கு,

கீ. திருவேங்கிட முதலியார்.

கே. வெ. துரைசாமி முதலியார்.

நெ. 62. திருப்பள்ளித் தெருவு,

ஜார்ஜ் டவுன் மதராஸ்.

மூன்று ரூபா ஸ்டாம்பு.

எடிடர் பாதித்ய நகல்.

1924ஞு நவம்பர்மீ 10உ சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை வடமலே மேஸ்திரி தெருவு 10வது நெம்பர் வீட்டிலிருக்கும் வேளாளர்குலம்-சிவமதம்-பயிண்டாபீஸ் ஜீவனம் கீழ்ச்சேரி-பொன்னப்ப முதலியார் குமாரன் கீ. திருவேங்கட முதலியார்-1 ஷை பட்டணம் ஷை பேட்டை திருப்பள்ளித்தெருவு 62-வது நெம்பர் வீட்டிலிருக்கும்-வேளாளர்குலம் - விஷ்ணுமதம்-வர்த்தக ஜீவனம் கேளம்பாக்கம் - வெங்கடாசல முதலியார் குமாரன் **K. V.** துரைசாமி முதலியார்-2 ஆகிய உங்களிருவருக்கும் ஷை பட்டணம் சீனுமுதலி தெருவு 13-வது நெம்பர் வீட்டிலிருக்கும் வேளாளர்குலம் சிவமதம் கஷடம் அவுஸ் கிளியரிங்கு ஏஜெண்டு ஜீவனம் காலஞ்சென்ற கொடுங்கூர் - இராஜரத்தின முதலியார் குமாரன் கொ. முருகேச முதலியார் எழுதிக்கொடுத்த கரூர் நாமா என்னவென்றால், 1918ஞு செப்டம்பர்மீ 28உ சென்னை சூளை சட்டண்ணநாய்க்கன் தெருவு 12 - வது நெம்பர் வீட்டிலிருக்கும் சிறுமணவூர் - முனுசாமி முதலியார் குமாரன் சி. மு. நடேசமுதலியாருக்கு சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை நம்மாழ்வார் தெருவு 53 - வது நெம்பர் வீட்டில் குடியிருந்து காலஞ்சென்ற **K. P.** சிங்காரவேலுமுதலியார் ரிஜிஸ்டர் பாத்தியதையுடன் அனுபவித்துவந்த பட்டணத்தார் பாடல் ஞானார்த்த தீபவுரை அஷ்டாவதானம் பூவை. கலியாண சுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பட்ட புஸ்தகம் - 1 சோதிட விளக்க வினவிடை என்னும் பெரிய சுந்திர சேகரம்-2 சோதிட கடலகராதி-3 இம்மூன்று புஸ்தகங்களின் ரிஜிஸ்டர் பாத்தியதையும் **K. P.** சிங்காரவேலு முதலியார் குமாரன் **K. P. S.** இராஜகோபாலு முதலியார் என்பவர் இடமிருந்து மேல்கண்ட சி. மு நடேச முதலியார் கிரயம் பெத்துக்கொண்ட மேல்குறிப்பிட்ட மூன்று புஸ்தகங்களின் ரிஜிஸ்டர்பாத்தியதையை 1921ஞு அக்டோபர்மீ 19உ யில் ஷை சி. மு. நடேச முதலியாரிடமிருந்து நான் கிரயத்திற்கு வாங்கி என்னுடைய பொருப்பில் வைத்திருந்த மூன்று புஸ்தகங்களின் ரிஜிஸ்டர் பாத்தியதையுடன் அனுபவித்து

வந்ததை உங்களிருவருக்கும் நாளது தேதியில் சுத்த கிரயஞ் செய்து தீர்மானித்துக் கொண்ட ரூபாய் 150—0—0 எழுத்தால் ரூபாய் நூற்றிஐம்பதும்இன்றையதேதியில்உங்களிருவரிடமிருந்து நான் ரொக்கம் பெற்றுக் கொண்டே னுகையால் இன்றுமுதல் மேல்கண்ட மூன்று புஸ்தகங்களின் ரிஜிஸ்டர் பாத்தியதையை அச்சிடவாவது விற்கவாவது அடமானம் வைக்கவாவது யாதொரு பாத்தியதையும் எனக்கு கிடையாது. இனிமேல் தாங்களிருவரும் மேல்கண்ட புஸ்தகங்களை அச்சிடவும் பிரசுரம்செய்யவும் முதலான சகல சுதந்தரமும் உங்களுடையதே யாகும். அதன்றி உங்களில் ஒருவராகிய K. V. துரைசாமி முதலியார் என்பவர் ஜீவனார்த்தம் செய்யும் பொருட்டாய் என்னை தயாவிஷயமாய் கேட்டுக்கொண்டதின்பேரில் பட்டனத்தார் பாடல் ஞானார்த்ததீப வுரைஎன்னும் புஸ்தகம் மாத்திரம் 1-பதிப்பு-2000 புஸ்தகங்களையோட்டுக்கொள்ளும்படி 1921-ம் வருஷத்தில்ஏற்கெனவேஉத்திரவுகொடுத்ததும் இல்லாமல் 1923-ம் வருஷத்தில் K. P. S. இராஜகோபாலுமுதலியாருக்கும்தயாவிஷயமாய் என்னைகேட்டுக் கொண்டதின்பேரில் பட்டனத்தார் பாடல்ஞானார்த்ததீப வுரைஎன்னும் புஸ்தகம்1-பதிப்பு2000-புஸ்தகமும்சோதிட கடலகராதிஎன்னும் புஸ்தகம் 1-பதிப்பு 2000-புஸ்தகமும் அச்சிட்டுக் கொள்ளும்படி ஏற்கெனவே நான் உத்திரவு கொடுத்திருக்கிறேன். தவிரவேறு யாருக்கும் அச்சிடும்படி உத்திரவு செய்தது கிடையாது மேல்கண்ட இரண்டு பதிப்புத்தவிர வேறுயாராகிலும் பதிப்புபோட்டிருந்தாலும் போடபிரயத்தினப்பட்டாலும் அப்பேர்பட்டவர்களைக்கண்டுபிடித்துநீங்களே சட்டபடி தாவாசெய்து சகலநஷ்டத்தையும் அவாளிடமிருந்து வசூல் செய்துக்கொள்ள வேண்டியது. இந்தப்படிக்கு என் மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த புஸ்தக ரிஜிஸ்டர் காப்பிரைட் விக்கிரய பத்திரம்.

சாக்ஷிகள். C. முருகேச முதலியார்.

பெ. ஆதிமூல முதலியார்.

N. கணபதி முதலியார்.

ம. திருவேங்கட முதலியார்

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

மான்மிய சங்கிரகம்.

கல்யாண சுந்தரகுண சம்பன்னரானசிவபெருமான் ஒருகாலத்தில் அளகேசனாகிய தமது தோழன் வேண்டுகோளுக்கிரங்கி, அநாதிமல பெத்தர்களாகிய ஆன்மகோடிகள் உய்யுமாறு திருவுளங்கொண்டு தென்தேயநோக்கி, நித்தியமங்களஸ்வரூபியாகிய பார்வதியாருடன் தருமவிடைமே லெழுந்தருளி, பற்பலதேவர்கள் சூழ்ந்துவரத் திருக்கைலாயத்தினை விட்டு நீங்கி, காசி முதலிய தமது திவ்வியக்ஷேத்திரங்களைக் கடைக்கணித்துக்கொண்டு திருக்காவிரிப்பூம் பட்டினத்திற்குச் சமீபித்தருளினர்.

அப்பட்டினத்தில் நஞ்சமர் நீல கண்டனுக்குகந்த சைவாசாரத்துல்யர்கள் நிறையப்பெற்றுச் சிவமணம்வீசிக்கொண் டிருத்தலைக்கண்ட குபேரன் அப்பட்டினத்தினைவிட்டு நீங்க மனமெழாது திகைக்கையில் அஃதுணர்ந்த கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் குபேரனைநோக்கி, "நீ இப்பட்டினத்தில் விருப்புற்றனை யாகலின் நீ யிவ்விடத்தில் பிறக்கக்கடவாயென்றனர்."

அக்கட்டளையைச்சிரமேற்கொண்டு திடுக்கிட்டுமனங்கலங்கிச் சிவபெருமானை வணங்கி ஐயா! அடியேன் தேவரீர் ஆஞ்ஞையின்படி இப்பட்டினத்தில் பிறந்து வளர்கையில் மேலும் மேலும் பிறவிக்கடலில் ஆழாதவண்ணம் தடுத்தாட் கொண்டருளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள பெருமான் அங்ஙனமே யாகுகவெனத்திருவாய்மலர்ந்தருளி வெள்ளியங்கிரிக்கு எழுந்தருளினர்.

பின்னர்குபேரன் அப்பட்டினத்துச்சிவநேசச்செல்வராகிய சிவநேசகுப்தருக்கும் ஞானகலை யென்பவருக்கும் சற்புத்திரராக

அவதாரஞ்செய்து திருவெண்காடர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று வளர்ந்து வருகையில், தனது ஐந்தாம் வயதில் தந்தையார் சிவசாம்பிராச்சியமடையத் தாயாருடனிருந்துகொண்டு சிறுபிராயத்திற்றானே கல்வித்திறம்பெற்று சிவசாத்திரவுணர்ச்சியுற்றுப் பிறவிக்கஞ்சிப் பெரிதும் பெருமானைச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் கண்ணுதற்பெருமான் ஒருவேதியர் வடவங்கொண்டு அவர் கனவிற்றோன்றி "குழந்தாய்" நாளையதினம் திருவோண நட்சத்திரமும் பிரதோஷமுங்கூடிய சோமவாரச் சுபத்தினமாக விருத்தலின் திருவெண்காட்டினையடைந்து சிவதீட்சை பெற்றுவரக் கடவா யென்றனர். கனவினின்று நீங்கி எழுந்து தனது கனவினைத் தாயாருக்குத்தெரிவித்து அவ்வம்மையார் சம்மதத்துடன் அவ்வெண்காட்டினையடைந்து ஆலயத்திற் பிரவேசித்தமாத்திரத்தில் கனவிற்கண்ட வேதியரே எதிர்வந்து ஆசீர்வதித்து சிவதீட்சை செய்து, விநாயகமூர்த்தியும், ஸ்படிகலிங்கமும் அமைந்த வொருதங்கப் பெட்டகத்தினை யீந்தருளவேற்று அவ்வாசிரியர் கட்டளையின்படி அம்மூர்த்திகளைப்பூசித்து ஆன்மார்த்த மூர்த்திகளாகக்கொண்டு, எண்ணிறந்த சிவனடியார்கட்கு மகேச்சுரபூஜை செய்வித்து அவ்வடியார்கட்கு வேண்டிய திரவியமும் அபாரமாகக் கொடுத்துவரப் பின்னர் பொருளின்மையால் அக்குறிப்பைத்தனது தாயாருக்குத்தெரிவித்து வருந்துகையில், அன்றிரவு அவர் கனவில் சிவபெருமான் எழுந்தருளி, "அன்ப! நம்மில்லத்தில் வேண்டிய திரவியம் வைக்கப்பட்டிருக்கிறது. அழைப்பித்து நின்குறையை முடிப்பிக்க" என்ற மாத்திரத்தில் கனவினின்றும் நீங்கிக் களிப்புற்று அங்ஙனமே பொருளையழைப்பித்து வேண்டியவளவு சிவநேசச் செல்வர்க்கு அளித்துக் காவிரிப்பூம்பட்டினந் திரும்பிவந்து வாழ்ந்து வருகையில், தனது பதினாறு வயதில் அப்பட்டினத்திலேயே தனதுமரபினுக்கொத்த சிவசிதம்




சிவசருமரும் சுசீலையும் சிவபிரானாகிய குழந்தையைக் காணுதல்.

பரசெட்டியாருக்கும் சிவகாமியம்மைக்குப் பிறந்த சிவகலை என்னும் பெண்மணியை விவாகம்செய்துகொண்டு இல்லற தருமத்திலிருந்து தனது குலத்தொழிலை விருத்திசெய்து பட்டினத்துச் செட்டியாரென யாருமழைக்கத்தகுந்த சிறப்புப்பெயருடன் வாழ்ந்துவருகையில்முப்பதுவயது வரையில் புத்திரசம்பத்தின்றியிருப்பதையுணர்ந்து திருவிடைமருதூர் பெருமானை வணங்கிப் பலவிரதமியற்றி வருவராயினர்.

இங்ஙனம் நிகழுகையில், திருவிடைமருதூர்நன்முலைநாயகி சமேதராகியமருதப்பிரானவர் தம்மைப்பூசிக்கும்சிவசருமசிவாச்சாரியர் தருமத்தினை நீக்கியருளும்பொருட்டு அவ்வேதியர்பால் பலவற்புதங்களைக்காட்டிக் கடைசியில் அவ்வேதியர் கனவினும், அவர் மனைவி சுசீலை கனவினுந்தோன்றி, "அன்புடையீர்! நாம் இத்தலத்தின் காருண்யாமிர்த தீர்த்தக்கரையில் கீழண்டைவில்வ விருட்சத்தில் குழந்தையுருகொண்டு இருப்போம் அக்குழந்தையை நீங்களெடுத்துக்கொண்டுபோய்க் காவிரிப்பூம் பட்டினத்தில் புத்திரனின்றிப் பல தவம் செய்துகொண்டிருக்கிற திருவெண்காடரிடங்கொடுத்து அக்குழந்தை நிறையளவு பொன்பெற்று உங்கள் தரித்திரத்தினை நீக்கிக்கொள்வீர்களாக" எனத்திருவாய்மலர்ந்தருளினர். அங்ஙனமே மறுநாள் சிவசருமர் அக்குழந்தையினைக்கண்டு எடுத்துக்கொண்டு வந்து தனதுமனைவி பால்கொடுக்க அவ்வம்மையார் ஏற்று அக்குழந்தையின் வடிவத்தினைக்கண்டு அக்குழந்தையைவிட்டுச் சிறிதும் பிரிதற்கு மனம்வராது வருந்தி ஆயினும் சிவபெருமான் கட்டளைக்கஞ்சி அக்குழந்தையுடன் தானும் தனது நாயகனுமாகக் காவிரிப்பூம்பட்டினத்தைநோக்கி நடந்து அவ்வூரினுக்குச் சமீபத்திலுள்ள ஒரு சோலையில் தங்கியிருந்தனர்.

சிவபெருமான் திருவெண்காடர் சிவகலை இவர்களிருவர் கனவினுமெழுந்தருளி "சோலையிலேவந்திருக்கும் பிராமணரிடத்துள்ள குழந்தையினைப் பெற்றுக்கொண்டு அக்குழந்தை நிறையளவு திரவியம் கொடுக்கச்சொல்லி" மறைந்தனர். கண்விழித்தெழுந்த திருவெண்காடர் தன் மனைவியுடன் சோலையிற் சென்று அவ்விருவரையும் தமது வீட்டிற் கழைத்துக் கொண்டுவந்து பலவுபசாரம்செய்து குழந்தையைப்பெற்றுக்கொண்டு அக்குழந்தைக்குச் சரியிடையாகத் திரவியங் கொடுத்தனுப்பி வைத்தனர்.

இங்ஙனம்கிடைக்கப்பெற்ற புத்திரனுக்குத் தாய்தந்தையர்கள் மருதப்பிரான் எனத்திருநாமமிட்டுப் புத்திரோற்சவம்கொண்டாடி வளர்த்து வருவராயினர். மருதப்பிரான் தமது இளவயதிற்றனே சகலகலா வல்லவராகிக் கண்டோர் ஆச்சரியமுறப்பலவற்புத திருவிளையாடல்களைச் செய்து வருவராயினர். பதினாறு வயது பூர்த்தியானவுடன் தமது தந்தையிடம் சென்று "ஐயா! நான் தீபாந்தரங்களிற்சென்று வர்த்தகம் செய்து பொருள் சேகரிக்க விரும்புகிறேன் உத்தரவு கொடுத்திடவேண்டும்" எனக் கேட்கத் தந்தையார் தனது புத்திரனைப்பிரிய மனமில்லையாயினும் தனது குலத்திற்குத் தக்கபடி பொருளீட்டுதல் தருமமென வெண்ணி விடைகொடுக்கப்பெற்று தோழர்பாலருடன் கப்பலேறித் தீவாந்தரம்சென்று தாம்கொண்டுபோன சரக்குகளையெல்லாம்விற்றுத் திரவியம் சேகரித்து அவற்றை யெல்லாம் சிவகைங் கரியமாக செலவழித்துவிட்டு, எருமுட்டைகளையும், தவிட்டுமூட்டைகளையுங் கப்பனிறையவேற்றிக்கொண்டு தமது தோழருடன் திரும்பி வருகையில், பலவற்புதங்களைக் கடலினடுவிற் காட்டிக் கரைவந்து சேர்ந்தவுடன், திருவெண்காடர் எதிர்கொண்டுபோய் தனது புத்திரர் கப்பலில் எருமுட்டைகளும், தவிடுமூட்டைகளு மிருக்கக் கண்டு தனது புத்திரனுக்கு ஏதோ சித்தப்பிரமை கண்டிருப்பதா



குழந்தையை சுவேதாரணயரிடத்தில்கொடுத்து பொன்பெறுதல்.

கத் தீர்மானித்து, அப்புத்திரனை ஒரு காட்டில் வைத்துவிட்டு எருமுட்டைகளையும் தவிட்டினையும் சோதித்துப்பார்க்க முறையே மாணிக்கங்களும், பொற்றூளும் இருக்கக்கண்டு ஆச்சரியமுற்று ஓடோடியும்சென்று தன்புத்திரனைப் பார்க்கையில் அவனைக்காணாது மனம்வருந்திநின்றனர். காவலிலிருந்த மருதவாணர் திருவிடைமருதூரில் சிவசருமர் முன்தோன்றி அவரைக்குடும்பத்துடன் ஐக்கியம் செய்துக்கொண்டு மகாலிங்கத்தி லெழுந்தருளினர்.

திருவெண்காடர் புத்திரசோகத்தால் மிகவருத்தமடைந்து கொண்டிருக்கையில், தனது மனைவியார் ஒருசிறுபெட்டிகொண்டு வந்து முன்னர்வைத்து "இதனைத் தாங்கள் வந்தவுடன்தங்களிடம் கொடுக்கும்படி நமதுபுத்திரன் கொடுத்துவிட்டுப்போயினன்" என்றனர். திருவெண்காடர் அதனைத்திறந்துபார்க்க அதில் ஒரு காதற்றவூசியும், 'காதற்றவூசியும்வாராதுகாணும் கடைவழிக்கே" என்று எழுதியுள்ள வொருசீட்டும் இருக்கக்கண்டு, அக்கணமே துறவடைந்து தடுத்த தாயாருக்கும் மனைவிக்கும் பல ஆறுதலை சொல்லிவிட்டு தனது திரவிய பொக்கிஷத்தினைச் சிவனடியார்கட்குச்சூறையிடும்படி தனதுகணக்கப்பிள்ளையாகிய சேந்தனுருக்குக் கட்டளையிட்டு வெளியேற அவ்வூர்ப் புறத்திலுள்ள பொது மண்டபத்திலிருந்து கைப்பிச்சையேற்று உண்டுசிவஞானநிஷ்டைகூடியிருந்தனர். சிலநாளைக்குப்பின் தனதுதாயார்தேகவியோகமடையச்சுற்றத்தினர் அவ்வம்மையாரை ச்சுடுகாட்டிற்குக்கொண்டு போகையில் திருவெண்காடர்கண்டு அச்சுற்றத்தினரை விரட்டிவிட்டுத் தாயாரை பச்சைவாழைமட்டையிற் கிடத்திச் சிலவெண்பாக்களைப்பாடித் தகனகிரியை முடித்துப்பின்னர் திருவிடைமருதூர்முதலிய பல தலங்கட்குச் சென்று பலபாக்களைப்பாடித் திருவாரூரடைந்து தன்னிடத்தன்பு பூண்டிருந்து சந்நியால் உயிரிழந்த வொருவனை மீண்டுயிர் பெற்றெழச்செய்து, கொங்குநாட்டினையடைந்து வாய்பேசாத மவுனவிரதத்தோ டிருக்கையில் ஒரு

நாள் அர்த்தராத்திரியில் ஒருமூர்க்கன்வீட்டுத் தலைவாயலிலிருந்து கைதட்ட, அவன் இவரையறியாமல் கள்ளனென்றெண்ணித் தடியெடுத்தடிக்கச் சிவசிவ எனத்திரும்பி இனி இருக்குமிடந்தேடி வந்தாலன்றி அன்னம்புசிப்பதில்லையெனத்தீர்மானித்துக்கொண்டு வடதேயநாடிஉஞ்சேனைமாகாளமடைந்து அவ்வூர்ப்புறத்திலுள்ள கணபதி யாலயமடைந்து சிவஞான நிஷ்டைகூடியிருக்கையில், அவ்வூர் இராஜனான பத்திரகிரியார்வீட்டில் களவு செய்துகொண்டுபோகும் திருடர் தாங்கள்செய்த பிரார்த்தனைபடி ஒரு ஆரத்தினை கணபதிக்குச் சாத்தவெண்ணி யிருட்டில் அக்கணபதிக்குச் சமீபத்தில் நிஷ்டைகூடியிருந்த திருவெண்காடர் கழுத்திலிட்டுச்சென்றனர். மறுநாள் காவலாளர் அரசன்வீட்டு ஆபரணம் திருவெண்காடர் கழுத்திலிருக்கக்கண்டு இவர் திருடருள் ஒருவரெனத் தீர்மானித்து அரசரிடம் ஒப்புவித்து பலதீங்குசெய்யவும் அவர் சிவசிவவென நிற்க இவரைக் கழுமரத்தி லேற்றும்படி அரசன் ஆக்ஞாபித்தனன். இவர் கழுமரத்தினுக்குச் சமீபித்தவுடன் அதுபற்றியெரிய வரசன்கண்டு சுவாமிகள் திருவடியிற் பணிந்து துறவடைந்தனன். பின்னர்சுவாமிகள் கட்டளையின்படி பத்திரகிரியார் திருவிடைமருதூரடைந்து தான்ஒரு நாயினைவளர்த்தார் அந்நாயிறந்தபின் அதுகாசிராஜன் புத்திரியாகப்பிறக்க அதுகண்டு தானும் அப்பெண்ணுமாகச் சுவாமிகளைக்கண்டு வணங்கி அப்போது அவ்விடத்துண்டாகிய வொரு சோதியிற்கலந் தருளினர். திருவெண்காடர் மறுபடியும் திருவெண்காடடைந்து அவ்வூரரசனாற்சிறையிற்கிடந்த சேந்தனாரை அவ்வூர் விநாயகரைக்கொண்டு சிறைவிடுவித்து அவ்வூரைவிட்டுப் பல தேசயாத்திரை செந்தமிழ்ப்பாக்கள் பலபாடிக்கொண்டே யுலவிச் சோழநாடுகடந்து, தொண்டைமண்டலத்திற் பிரவேசித்தும் பலதலங்களைத் தரிசித்தபின்னர், திருவருட் பெருஞ்செல்வர்களாய் மூவர் பாடல்பெற்றதும் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும் சங்கிலிநாச்சியாருக்கும் திருமணம் நடந்தேறியதும், விண்டு, இலட்சுமி, பிரமன், சரஸ்வதி, சந்திரன், ஆதிசேடன், அகத்தியர், வால்மீகி, யாணினி, உரோமசர் வாசுகி, இலவன், தொண்டையான் முதலியோர் பூசித்ததும், மோ

ட்சபூமியுமாகிய திருவொற்றியூர் என்னும் திவ்வியதலத்தினைய டைந்து சமுத்திர தீரமடைந்து அவ்விடத்தில் விளையாடிக்கொண் டிருந்த சிறு பிள்ளைகளுடன் கூடிச்சில விநோதங்களைக் காட்டி குழியில் மறைகிறதும் மணற் குன்றின்மேல் வருகிறதுமான திரு விளையாட்டினைச் செய்துகொண்டே யிருந்து ஒருதரம் குந்தித் தன்மீது ஒரு சாலைக்கவிழ்க்கச்செய்தனர். சிறிது நேரத்திற்குப் பின் அச்சிறுபிள்ளைகள் அச்சாலை யெடுத்துப்பார்க்கத் திருவெண் காடர் சிவலிங்கத் திருவுருக்கொண்டெழுந்தருளினர். அப்போது அச்சிறுவர்கள்கண்டு வியந்து இவ்வதிசயத்தினை ஊரில் உள்ளவர் கட்கெல்லா மறிவிக்க அவர்களெல்லோரும் திரண்டுவந்து தரி சித்து ஆனந்தித்தார்கள். இதற்குமுன்பே இவர் பத்தினியாராகிய சிவகலையம்மையார் இவர் திருவடியையே சிந்தித்துக்கொண்டிரு ந்து சிவபதமடைந்தனர். காவிப்பூம் பட்டினத்தில் உள்ளயாவரும் திருவெண்காடரது சிவைக்கிய நிலையைக்கேட்டு அங்கு நின்றும் புறப்பட்டுவந்து திருவொற்றியூரினை யடைந்து தரிசித்துப் பல திருத்தொண்டு செய்து திருவருட்பாங்குக் குரியவரானார்கள். சுபம். சுபம். சுபம்.

நேரிசை வெண்பா.

"ஆடியுத்தி ராட மவிர்பூசம் புகார்த் திருவெண்
காடரொற்றித் த்யாகர் கவின்பதியில்—நீடுமன
லிற்கோ லியகுயையி லேய்ந்து சிவலிங்கச்
சிற்கோல மான தினம்."

திருவெண்காடர் மான்மிய சங்கிரகம்

முற்றிற்று.

உ

கணபதி துணை.

பட்டினத்துப் பிள்ளையார்

அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டும்,

ஞானார்த்ததீபவுரையும்.

முதலாவது

கோயிற்றிருவகவல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

(பொழிப்புரை.) மங்கள சொரூபமாயுள்ள முதல்வனை, மனமே! சிந்தனை செய்வாய், மனமே! சிந்தனைசெய்வாய் செம்மையாகிய பொன்மயமாயுள்ள சபையிலுள்ளவனைச் சிந்தனை செய்வாய் மனமே! சிந்தனை செய்வாய் மனமே.

(**சூரிப்புரை.**) நினைமின் மனனே என்பது இழிவிற் சிறப்பாக வந்த ஒருமையிற் பன்மை மயக்கம், ஈண்டுச் சிவபெருமானென்றது நிஷ்கள சொரூபமாயுள்ள முதல்வனை, அம்பலவனையென்றது சகல சொரூபமாயுள்ள தில்லை நடராஜ பிரபுவை.

அலகைத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க

(பொ-ரை.) பேய்த் தேரினையும், சுழல்காற்றினையு முறையே யொத்த பொய்யாகிய உலக வாழ்வினையும் உடம்பினைப் பாது காவா திருப்பாயாக.

(கு-ரை.) உலகம் என்று காரியப்பாட்டினையுடைத்தா யிருத் தலினாலும், உடல் அநித்திய தன்மையைப் பெற்றிருத்தலினாலும் இவ்விரண்டினிடத்து மழுந்தற்கவென்பார் ஓம்பற்கவென்றார். அருஞ்சுரத்தின் முதுவேனிலின் நண்பகற்கடுமை பற்றித்தோற் றிச் சூரியனின் கிரணம் மேகப்படலத்தின் மறைந்த வழித்தானு மறைந்து போவதாகிய பேய்த்தேர் ஒரு காரணங்காட்டி உலககா ரிய மறைந்து போவதற்கு உவமையாவது. உலகமித்தை யென் பது கருத்தல்ல. பொய்யென்றது காரணகாரியப்படுகிற திரிபினை நோக்கியாம். உடலைக்கொண்டு சுற்றிச்சுற்றி யுலகத்திலலைவதால் காற்றுக்குவமையாக்கினர். உயிரை விசாரியாது உடம்பு காத்தலி லேயே காலங் கழித்தல் கூடாதென்பார் ஓம்பற்க வென்றார். இதனால் உடலை வெறுத்துவிட வேண்டுமென்பதன்று. அங்ஙனம் கூறின் "உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே" என்று திரு மந்திரத்தோடு முரணும்.

பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்குந்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்

பெருந்தன சிறக்குஞ் சிறந்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்.

(பொ-ரை.) (யோனிவாய்ப்பட்டுப்) பிறந்தனயாவும் இறந்துவிடும், இறந்தனயாவும் (மற்றொருகாலத்தில் யோனிவாய்ப்பட்டு) பிறக்கும், உற்பத்தியாவன வெல்லாம் மறைந்துவிடும், மறைந்தனவெல்லாம் மறுபடியும் உற்பத்தியாகும், தூலவடிவினையுடையவெல்லாம் சூட்சுமரூபத்தினை யடைந்துவிடும்,சூட்சுமரூபத்தினையுடையன திரும்பத் தூலவடிவினை யடையும், தெரிந்தனயாவும் மறந்துவிடும், மறந்தனயாவும் பின்பு ஞாபகத்தில் வரும், சேர்ந்திருந்தவைத்தூரவிலகும், தூரமாயிருந்தன பின்வந்து சேரும், உண்ட உணவனைத்தும் மலமாகின்றன, தரித்த ஆடைகளனைத்தும் அழுக்காய்விடும், விரும்பப்படுவன வெறுக்கப் படுகின்றன, வெறுக்கப்படுவன வெல்லாம் விரும்பப்படும் என்று சொல்லப்படுகின்ற இவையனைத்தும் (மனமே) பிரத்தியட்சமாகத் தெரிந்துகொண்டனை அல்லாமலும்,

(கு-ரை.) இதனால் பிரபஞ்சம் எக்காலத்தும் காரியகாரணம் பட்டுக்கொண்டே யிருக்குமன்றி யொருகாலத்து மழிந்துசூனியப் பொருளாவதில்லை யென்பார் மாறி மாறியாவும் வருமென்னும் பிரத்தியட்சமான அனுபவங்களை யெடுத்துக்காட்டினார். இதனால் சித்தாந்தத்தாற் பிரதி பாதிக்கப்படும் சற்காரிய வாதவுண்மை தெரிவித்தவாறாயிற்று.

பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்.

(பொ-ரை.) (இதுகாறும் அடிக்கடி உலகின்கண்ணே நீ) பிறந்துள்ள பிறவிகளனைத்திலும் அனேகமான உயிர்களை நீ கொன்றாய், அவைகளும் உன்னைக்கொன்றன, அவைகளையெல்லாம் நீ தின்றாய், அவைகளு முன்னைப்பெற்றன. எல்லாவற்றையும் நீகாத்தாய், அவைகளு முனைக்காத்தன, செல்வமடைந்தகாலத்து ஆனந்தமுற்றாய், தரித்திரமடைந்தகாலத்துத் துக்கமுற்றாய், புண்ணியஞ்செய்து தெய்வலோகமடைந்தாய், (பாவஞ்செய்து) நிரயத்திற்கிடந்தாய், சுக துக்கங்களை இப்பெரிய வுலகிலனுபவித்தாய், (கூறியவற்றுள்) ஒவ்வொன்றினின்றும் நீங்காது அனுபவித்தாய், அல்லாமலும்,

(கு-ரை.) அநாதிதொட்டு ஆன்மகோடிகள் அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி பிரபஞ்சத்தில்போகங்களை யனுபவிக்குந்தோறும் அப்போகங்கள் மாறிமாறிவந்துகொண்டிருந்த வியல்பென்றதாயிற்று இருவினையொப்பு மலபரிபாகம் விளையாதவரையில் ஆன்மாக்களுக்கு இச்சுழற்சி நீங்காதென்பதும் குறிப்பால் விளக்கியவாறாயிற்று.

புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையு நீரும் புறப்படு மொருபொறி
மீளுநுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமும் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து.

(பொ-ரை) நீர்க்குமிழியை யொத்த சிறுகுடிலை, யாருமருவருத்துத் துச்சிலென வொதுக்கத்தகுந்த இடமென்னத் தங்கியிருக்கும் நல்வினை தீவினைக் கிருப்பிடமாகிய உடலைக் கருங்கல்லினைக்காட்டிலும் வலிமையினையுடையதாக நினைத்தனை இவ்வுடலுள் (கண்ணென்னும்) ஒரு பொறியில் பீளையும் நீரும் வெளிப்படும், மறுபடியும் (காதென்னும்) ஒரு பொறியில் குறும்பி புறப்படும், (மூக்கென்னும்) ஒரு பொறியில் சளியும் நீரும் இழியும், (வாயென்னும்) ஒரு பொறியில் உமிழ் நீரும் கோழையும் ஒழுகும் (பாயுருவென்னும்) ஒரு வழியில் காற்றும் மலமும் உண்டாகும், (உபத்தமென்னும்) ஒரு வழியில் சலமும் சீயும் வழியும் (இவையேயன்றி) அவ்வுடலில் உள்ளிருந்து வெளிவரைக்கும் நாற்றமடுக்கும், கடைசியாக உடல் சுட்டெலும்பாகிவிடும். (இத்தகையஉடலுற்ற வாழ்வினை நன்கு விசாரித்துத் தெரிந்து, இவ்வுடற்பற்று நீங்கி.)

(கு - ரை.) யாவரும் அருவருக்கத்தகுந்த இத்தகைய வ
திக்களுடன்கூடிய உடல்மிகுந்த அசுத்தமான தெனக்குறிப்பி
தன திருக்கடைக்காப்பு. "என்பினாற் சுழிநிறைத்திறைச்சி ம
சுவரெறிந்திதுநமில்லம், புன்புலாலுறு தோல்போர்த்துப் பொல்
மையான் முகடுகொண்டு, முன்பெலா மொன்பது வாய்தலா
குரம்பையின் மூழ்கிடாதே" என்றதனாற் காண்க.

கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவரும் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினமின் மனனே! நினைமின் மனனே!

(பொ-ரை.) பரிமளமிகுந்த (பிரணவாகாரமாகிய) கொன்
றை மலரினைத்தரித்த சடையினைவாய்ந்த முடியோடுங்கூடியசிவ
பெருமானை, நீங்காத மங்களகரமான பெரிய சிவானந்த வின்ப
தினை, (மரத்தைவிட்டு நீங்காத நிழலைப்போல அதனை நீங்கா
தன்மையுடன் தங்கி, எனதென்னும்மமகாரம் நீங்க, தற்போத ெ

ண்ணநீங்கி, நல்வினை தீவினை மும்மல நீங்க, பிறப்பு இறப்புநீங்க, மாயாமயக்க நீங்க, ஆணவ விருளற, இரவுபகலென்னுந் தோற்ற நீங்க, இம்மை மறுமைப் (பயன்களின் ஆசை) நீங்க ஒப்பற்ற முதல்வனை, சிதம்பரத்தில் சகளீகரித்தெழுந்த (அருட்பெருஞ்) சோதியை, பொன்னம்பலத்தின் சபாபதியை, ஆனந்தத்தாண்டவ மூர்த்தியை, அக்கினியைக்கண்ட அரக்கினைப்போல நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி, சிதாகாயமாகிய திருச்சிற்றம்பலத்திலே விளங்குகின்ற சிவபெருமானை, மனமே சிந்தனை செய்வாய், மனமே ! சிந்தனைசெய்வாய், மங்கள சொரூபமாயுள்ள முதல்வனை செம்மையாகிய பொன்மயமாயுள்ள சபையிலுள்ளவனை மனமே! சிந்தனை செய்வாய் மனமே சிந்தனை செய்வாய்.

(கு - ரை.) அபாஞான முன்னிட்டுச் சுட்டுப் பொருள்களினுட்ட முறுமவரையில் வாசகஞானமேயன்றி வாச்சியஞான நிகழாதாகலின் வேற்றுமையுற்ற வனைத்தினு முள்ளுதற்போத நீங்கப் பரஞானத்தேநின்று அந்த ஞானநீதனைய் விளங்கும் சிவத்தினையே• தரிசித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பார், எனதற ***** நினை நின்மனனே என்றனர். சிவஞான சித்தியார்.

“ பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானவைந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞான திருஞான ஞேயந்
தங்கியஞானஞ் சங்கற்பனைபஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.”

என்றதனாற்காண்க.

இரண்டாவது
கோயிற் றிருவகவல்.

நேரிசையாசிரியப்பா.

காதலா வோடிய கலகப் பாதகக்
கன்னியர் மருங்கிற் புண்ணுட னொடுங்
காதலும் கருத்துமல் லானின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தித் தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை

சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
சடக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணம்ப
ஊரிற் கிடக்கவொட் டாவுபாதி
காலெதிர் குவிந்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னுருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்டகன் காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அனைய மனையும் பிரமனை யனையும்
இமய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கையின் னருளினுக் கழகே.

(பொ-ரை.) (உடலானது) அங்கும் இங்குமாகச் சுழலுகின்ற (பஞ்சேந்திரியமென்னும்) ஐந்து கள்வர்கள் கலகம் விளைத்துவருத்துகின்ற காடு, மூத்திரமும் மலமுந்தங்கிய பெட்டி, நல்வினை தீவினை நிறைந்தபொய்யிடம், வாதம் பித்தம் சிலேட்டுமம்என்கிற

முப்பிணிகளும் வாசஞ் செய்கின்றசிறியவூர், அழுக்காகிய அற்பத் தோலில் இரத்த நிறைந்தவச்சு, துர்நாற்றத்தை யுடைய பானை, நாலுமுழ நீளமும் என்பது துவாரங்களு முள்ள கிழிந்த துண்டுத் துணி, (உண்பதற்குதவாத) பேய்ச்சுரைக்கொடி பயிராகுந்தோட்டம், உயிர்களைக் கொன்று தின்கின்றமையால்) சாம்பல் மிகுந்த விசாலமான சுடுகாட்டுமேடு, ஆசைக்கயிற்றால் ஆடுகின்ற பம்பரம், நீங்காத பலநோய்களுக்கு இடம், ஓடுகின்ற கப்பல், மாயாக்காரியங்களையுடைய அழியும் கூண்டு, சோற்றினை யூதும் துருத்தி, தூற்றுகின்ற பதர், காற்றினில் பறக்கின்ற காற்றாடி, கன்மத்திற்குத் தக்கபடி எமன் வெட்டுகின்ற கட்டை நான்கு முகங்களுடன் கூடிய தையற்காரனால் தைக்கப்படும் அங்கி, சுடுகாட்டு நெருப்புக் கிடுகின்ற சிலகரி, காமத்தீயில் கறுகிப்போகின்ற உலர்ந்த அலை, புழுக்கள் குடையும் கிழங்குத்தோல், பாவமாகிய தளிர்படருதற் கான கொழுகொம்பு, விவாகக்கோலத்துடன் சஞ்சரிக்கும் வடிவினைவாய்ந்து அந்தியத்தில் பிணமாய்ப்படுக்கும்சவவுருவம் (பிணமாயினபின்) ஊரில் தங்கவொட்டாதபடி (பலராலும் செய்யத்தகுந்த) உபத்திரவம், காற்றுக்கு முன் குவித்துவைத்த பூளைமலர், காலையிலுதிக்கும் சூரியனுக்கு முன்தோன்றிய மிகுதியாகிய நிறைந்தபனி (மழைக்காலத்தில்) ஆகாயத்திற் றோன்றுகின்ற இந்திரவில், இடிக்கின்ற மேகத்துருவினது நுட்பமாகிய நிழல், நீரிற்றோன்றும் குமிழி, நீரின்மேலெழுதும் எழுத்து, கனவுகாலத்தில் அனுபவிக்கும் காட்சி, அக்காட்சியினும் நிலையில்லாத மாய்கையுடைய களங்கம் (இத்தகையவுடல்) வரும் (எனக்கும்) வரும்! எனதுபெருமானே! வரும், இத்தேகம் வாராதபடி) காதுவரையில் நீண்டு கலகத்தைச்செய்யும் பாதகத்தன்மைவாய்ந்த கண்களையுடைய மாதர்கள் சமீபத்தில் துன்பத்துடனும் ஆசையும் எண்ணமும் மல்லாமல் தேவரீருடைய இரண்டு திருவடித்தாமரைகளைத் தரிக்கப்

புண்ணியஞ் செய்யாத சங்கடம் மிகுந்த அடியேன் பக்கத்திலிருந்
து பார்வதியார் வாழ்த்துச்சொல்லித் தோத்தரிக்க சிவானந்தத்
தாண்டவத்தினைச் செய்து (அடியேனை) தடுத்தாண்டுகொண்டரு
ளுதல் தேவரீர் திருவருளினுக்கு அழகாகும்.

(கு - ரை.) பிரானே! பாங்கிருந்து ஆண்டுகொண் டருள்கை
நின்னருளினுக்கழகே என்று அன்வயஞ்செய்து முடித்துக்கொள்
ளுக மகளிடத்துக் காதலும் கருத்து மமைப்பது மிகுசங்கடமெ
ன்பார், காதலாவோடிய * * * கூர்ந்த தமியேன் என்றனர். திரு
மந்திரம் "கோழை யொழுக்கக் குளமூடு பாசியி, லாழநடுவாரளப்
புறுவார்களைத், தாழத்துடக்கித் தடுக்ககில்லாவிடிற், பூழைநுழை
ந்தவர் போகின்றவாறே" என்றதனாற்காண்க. தேகமானது பல
வகைப்பட்ட ஆபாசங்கட்கும் இடமாயதென்பார், அங்கோடிங்
கோ * * மாயக்களங்க மென்றனர். திருவாசகம் "பொத்தையூன்
சுவர்புழுப்பொதிந்துளுத்த சும்பொழுகிய பொய்க்கூறை, யித்தை
மெய்யெனக்கருதி நின்றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை" என்
றதனாற்காண்க. இங்ஙனம் பெண்ணினிடத்தும் உடலினிடத்து
முண்டான பற்றொழித்து ஆனந்தத் தாண்டவத்தினையே ஆதார
மாகக் கொள்ளவேண்டு மென்பார், இமையவல்லி * * * அழகே
என்றனர், திருமந்திரம் "ஒளியாம் பரமு முளதாம்பரமு, மளியார்
சிவகாமியாகுஞ் சமயக், களிவார் பரமும் கருத்துறையந்தத், தெ
ளிவாஞ் சிவானந்த கூட்டத்தின் சித்தியே" என்றதனாற் காண்க.

மூன்றாவது
கோயிற்றிருவகவல்.

இணைக்குற ளாசிரியப்பா.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்

(பொ ரை.) திருப்பாற்கடலை (முதல்வன் ஆணையின்றித் தேவர்களும் (அசுரர்களும்) கடைய அக்காலத்தில்) உண்டாகிய விஷமாகிய வெண்ணெயை அழகியகண்டத்தின் கண்ணே வைத்த சிவபெருமானே அடைக்கலம்.

(கு-ரை.) அங்ஙனம் திருப்பாற் கடலிற்றோன்றிய விஷத்தாற் சர்வான்மாக்களுந் துன்புறு வகையாகத் தேவர் முனிவர் வேண்டுகோளுக் கிரங்கிப் பானஞ்செய்து அவர்கட்கு அடைக்கலந்தந்தமையின் தானுமடைக்கல மென்றார் பாகவதம் "யேஸமா மந்தரிய பகவாந் பவாநீம் விசுவபாவநா, தத்விஷம் க்க்துக ரேபே ப்ர பாவஜ்ஞோர்வ மோதத, ததாகரதலீக்ருத்ய வ்யாபிஹாலாஹலம் விஷம், அப...யக் மகாதேவாக் ருபயாபூதபாவநா, நிசமயகர்ம பிச்சம் போர்வே தேவதேவஸ்யமீடுஷா, ப்ரஜாதா...ஷாயணீ ப்ர ஹ்மா வைகுண்டஸ்சஸ்ஸ விரே" என்றதனுற் காண்க.

அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்

(பொ-ரை) யாவற்றினையும் தனது சாமர்த்தியத்தால் அடக்கும் (வல்லமைவாய்ந்த) கொடிய கொலையினைச் செய்யும் இயமனைத் திருவடியைத் தூக்கியெடுத்து (உதைத்து) அடக்கியகடவுணினது அடைக்கலம்

(கு - ரை.) இயமனை யிடதுகாலா லுதைத்துத் தள்ளித் தன்னைப் பூசித்துவந்த மார்க்கண்டேய முனிவரைச் சிரஞ்சீவியாக்கி யடைக்கலந்தந்தமையின் தானுமடைக்கல மென்றனர். அரதத்தர் "காலகர்வாபஹத்வாத்தைத் யோவால" எனவும், சங்கர சங்கிதை "மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தனுயிர்வவ்வப், பதைத்தானென்றுன்னி வெகுண்டான் பதமூன்றுந், சிதைத்தான்வாமச்சேவடி தன்னுற் சிறிதுந்தி, யுதைத்தான் கூற்றன் விண்முகில் போன்மண்ணுற வீழ்ந்தான்" எனவும் வருவனவற்றாற்காண்க.

உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கரத் தடக்கிய விறைவநின் னடைக்கலம்.

(பொ-ரை.) உலகமனைத்தையு முண்டாக்கினவராகிய (பிரமனது) தலையினைக்கிள்ளி இடது திருக்கரத்தில் வைத்திருக்கிற இறைவனே நினது அடைக்கலம்.

(கு-ரை.) தானே பிரமமெனத் தருக்குற்ற பிரமனது ஐந்தாவது தலையினை நகநுதியாலரிந்து பின்வேண்ட அடைக்கலந்தந்தமையின் தானுமடைக்கலமென்றனர். பிரமாண்டபுராணம் "ஸவர்வஜஸ் வாத்மகரகிந் சித்பைரவம் லோகதாருகம். ஸ்வயம் ஸரவொகமகாதேவ [illegible]ருத்வை காலபைரவா, சகந்தகராஜாக்ரேணப் ரஹிமணபஞ்சமம் ஸிரா" என்றதனுற் காண்க.

செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்.

(பொ - ரை.) செம்மையாகிய பொன்னம்பலத்திலே யெழுந்தருளியிருக்கும் செல்வனே நினது அடைக்கலம்.

(கு-ரை.) சிவபெருமானொருவனே செல்வனென்பது அதர்வசிரசு 'ஸர்வைஸ்வரிய சம்பன்னுஸம்பு' எனவும், சவேதாசவ

தாம், 'தமீஸ்ணும்பரபமம்மஹே ஆவரம் எனவும், ஸகவஸ்ய ப்ரபு மீஸநம், ஏனவும் வருவனவாற்ருற்காண்க.

ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்

(பொ-ரை.) அழகனே உன்னுடைய அடைக்கலம் அடியேன் நினது அடைக்கலம்.

(கு-ரை.) அழகென்னும் பொருளைப் பயக்கும் ஐ என்றமொழியினடியாக ஐயன் என்ற சொல் பிறந்தமையின் அழகன் எனப் பொருள்கொண்டாம். ஆரியன் என்னும் பதம்ஐயனெனத்திரிந்ததெனப்பொருள்கொள்வர் சிலர் அவர் தமிழ்நயமறியாதவராவர்.

மனவழி யலைந்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழக்குறு மனனும்
ஆணவ மலத்துதித் தளைந்தது ழலைந்திடு
நிணவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்காறு மிவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சினம்
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும்பணிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை

மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலப்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பிறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி னாடும்பம் பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங்காற் றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கெடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
னடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையோ யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் றாடிக்

கருணைமொண் டலைபெறி கடவுளே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

(பொ-ரை.) மனம்போன வழியிலேயே சென்று (என்னை) அலக்கழிக்கும் கனவினுக்குரிகரான இப்பிரபஞ்சவாழ்வும், (திருவருளென்னும் மேன்மையான பொறிளினையறியாது குற்றமுடையமனமும், ஆணவமலத்திற்பிறந்து அதிற்கலந்துஉபத்திரவப்பட்டுக் கொழுப்பிற்புழுவென்ன அசையும் சிந்தையும், வஞ்சகமும் பாவமும் வாய்ந்த (யாவரும்) பழிக்கத் தகுந்த நினைப்பும், குற்றமும், பொறாமையும், ஆசையும், மறதியும், கபடமும், பொய்யும், தந்திரமும், அதிகக் கோபத்தால் விளையும் போரும், கொலையும், இழிவாகிய சிறுமையும் விரோதமும், பயமும் திடனும், நடுக்கமும்முக்குணத்தால் விளைந்த அறியாமையும், பஞ்சேந்திரியங்களின் செயலும், இல்லாமையும், நோயும்தங்கியதேகத்தினை, உயிரென்றழைக்கப்படும் பட்சிநீங்கியோடும் கூட்டினை, எலும்புடனே நரம்பினைக்கொண்டு (ஆங்காங்கு ஒன்றிற்கொன்று பொருந்திய) இடங்களிற் கட்டி, கொழுப்புடன்கூடிய தோலினால்மூடியொழுக்குண்டாகும் குடிசிலினை, செழிப்பில்மிகுந்த உதிரத்துடன்கூடிய சிறு புழுக்கள் தங்கியகூண்டினை; மலப்பொருள் நிறைந்த பாண்டத்தினை, ஊணிறைந்த கூடையினை, நீங்காதசோற்றினை (யடைக்கும்) துன்பமயமான பள்ளத்தினை, கொலைசெய்யத்தகுந்த ஆயுதங்கள் எண்ணிலவிருக்கும் தூணியினை, வெறுக்கத்தகுந்தபலவினைகளென்னும்பண்டங்களாகியகுப்பையினை, பழிமொழிகளாகிய சரக்குகள்சிந்தும் கந்தற்கோணியை, கோபாக்கினியையுண்டாக்

கும் கொல்லனுடைய துருத்தியினை, பஞ்சேந்திரியப்பட்சிகள்அடைந்திருக்கும் கூண்டினை, நீங்காத கிலேசங்கள் வளரும் மரப்பொந்தினை, ஆசைக்கயிற்றாற் சுழலும் பம்பரத்தினை, காசு (சம்பாதிப்பதிலும்) பணம் சம்பாதிப்பதிலும் சுழன்று திரிகின்ற காற்றாடியினை, ஆன்மாக்கள்செய்யும் கன்மத்திற்குத்தக்கபடி மயங்கி (எக்காலமும்) சுற்றிவரும் சக்கரத்தினை, (பிரபஞ்சமாகிய) வெட்டவெளியில் யுருட்டிவிட்ட தேர்ச்சக்கரத்தினை, பாவமாகிய பாண்டங்களை யேற்றிக்கொண்டு பிறப்பாகிய கடலிற்புகுந்து,காமமென்னுங்காற்று மோதியலைக்க, தீபவழியென்னும் கரையிற்போய்ச் சேர்ந்து கெடுகின்ற கப்பலை, இரண்டு வினைகளாகிய விலங்குடன் சஞ்சரிக்கும் உடலினை, இயமன் வந்துஅழைத்திட நடுக்கங்கொள்ளும் தேகத்தினை, சவமாகக்கிடத்திவிட்டு (ஆன்மாவாகிய) யான் வெளிப்படுகையில் தேவரீரது திருவடித்தாமரையினிடத்து அபயமாக அடைக்கலம் (புகுந்தேன்.) ஆகாயத்தில் அச்சத்துடன் இடியிடித்தாலென்ன ஆவேசத்துடன் எழுகின்ற வேகமான நடையினைவாய்ந்த வெள்ளை இடபத்தின்மேல் எழுந்தருளும் கடவுளே தேவரீருக்கு அடைக்கலம். இமைகொட்டாத திருநேத்திரங்களையுடைய இறைவனே அடைக்கலம். அன்பர்கட்கு எளியவனே யடைக்கலம் அடைக்கல. தீட்சிதம் பிராமணர்கள் வாழுகின்ற தில்லையம்பதியில் கனகவம்பலத்தி லெழுந்தருளி ஆனந்த நிர்த்தனஞ்செய்து,!திருவருளினை முகந்துவீசுகின்ற கடவுளே! யடைக்கலம், தேவர்களும் முனிவர்களும் தினஞ்சென்றிருந்து தோத்தரிக்க, பசுமையாகிய ஆபரணங்களைத்தரித்த கொடிபோன்றசிவகாமியுடன் விரைந்து அருள்புரியும் எமது பெருமானே தேவரீரது இரண்டு திருவடிகட்கபயம் பொன்னம்பலத்துச் சபாபதியே தேவரீருக்கே யடைக்கலம்.

(கு-ரை.) உடலை யுற்றுநோக்கி விசாரிக்கின்ற காலத்து எவ்வகையினும் பிரயோசனப் படுவதாகத் தோன்றுவதற்கேது இன்

மையின் இவ்வுடற்பற்றைவிட்டு அம்பலத்தரசனையே யடையவே ண்டுவதே தகுதியெனக் குறிப்பித்தனர். திருக்கடைக்காப்பு "நிணக்குடர்தோ னரப்பென்பு சோர்க்கை தானிலாயதன்றூர், குணங்களார்க்கல்லது குற்றநீங்காதெனக் குலுங்கிறையே, வணங்குவார் வானவர் தானவா வைகலு மணங்கொண்டீட்டத்து, மனைநகரூர் தொழுதுய்யலாமையல் கொண்டஞ்சவெலற்சே, என்றதுறற்காண்க.

நான்காவது
கச்சித்திருவகவல்.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருமால் பயந்த திசைமுக னமைத்த
வருமெழ் பிறவியு மானிடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்.

(பொ-ரை.) நாராயண மூர்த்தியானவர் பெற்ற சதுர்முகப் பிரமன் படைத்தவரும் எழுபிறவிகளிலும் மனித சென்மமாகப் பிறந்து, பார்வதியாருடைய தலைவனாகிய சிவபெருமானது தாமரைமலரைப்போன்ற திருவடியினை வணங்கி விளங்குகின்ற சிவபதவியினை அடையாமல் வீணாக மாதர்களை (எண்ணிச்) சந்தோஷித்து ஆசைபூண்டு கொண்டாடுகின்ற மாந்தர்களுக்கெல்லாம் நான் (சில உண்மைகள்) எடுத்துச்சொல்வேன்! காதலுக்குரிய எளிமையினை வாய்ந்த மாந்தர்கள் தெளிவடையக் கேளுங்கள் (அவை யென்னையோ வெனின்.)

(கு - ரை.) பூர்வசென்மத்தில் மாடுமுதலியவைகளாயிருந்து புண்ணியமிகுதியால் அந்தசென்ம மனிதப்பிறவி யெடுத்தவர்கட்கு அது முதல் இரண்டொரு சென்மம் வரையில் மலத்தடிப்பு அதிகமாகையால் அவர்களறிவிற்குச் சிவபெருமானுண்மை விளங்காது என்பது சகஜம். எழுதரம் மனிதர்களாகப் பிறந்தவர்கட்கு அம்மலத்தடிப் பிராதாகலின் இத்தகையினரும் சிவபெருமான் உண்மை தெரியாதிருக்க அவர்பாலிரங்கி, எப்பிறவியும் * * * குறுகாது என்றனர், அடவேனகள் மூன்றில் மண், பொன் இரண்டினையும் விட்டு "மாதரை மகிழ்ந்து" என்று பெண்களை மாத்திரம் குறித்ததென்னையோ வெனில்? பொன்னை விரும்புவதும் மண்ணை விரும்புவதும் காதல்கொண்டுள்ள பெண்ணினைப்பற்றியே யாகலானென்க. இவ்வளம் முதல்வனை மறந்தோரர் மயலில் மயங்குவார் பிறருக்கிடுவ பொத்தாரென்பார் மாக்களென்றது மக்களென்றார்.

முன்னுங் கல்லூ முயன்று கடக்கும்
உள்ளங் காலே பங்கென வுரைத்தும்
வௌவௌ லும்பாலே பேசிய கனைக்கால்
துன்னும் வாயெனச் சொல்லித் துதித்தும்
தசைய மெலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியப்பிடும்
செடிபுடை குங்கி னின்றிடு மிடையைத்
துடியிடை யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி

உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்.

(பொ-ரை.) முள்ளினும் கல்லினும் முயற்சித்து நடக்கும் உள்ளங்காலினைச் செம்பஞ்சென்னச்சொல்லியும், வெண்மையான எலும்புகளினாலே பொருத்தப்பட்டிருக்கின்ற கணைக்காலினைத் துள்ளுகின்றவரால் மீனென்னப் புகழ்ந்தும், மாமிசமும் எலும்பும் பொருத்தமாகவுள்ள அற்பத்துடையினை யிசைபாகிய வாழைத்தண்டென உரைத்தும், நீண்ட உடலினைச்சுமந்துகொண்டிருக்கும் இடையினை உடுக்கைபோன்றதென்றும், பிடியளவானதென்றும் கூறிப்புகழ்ந்தும், மலமும் நீரும் கொழுப்பும் மடிப்பும் அலைந்து கொண்டிருக்கின்ற வயிற்றினை ஆலிலையென்றும், சிலந்திப் புற்றினைப்போலக்கிளம்பி முன் வளர்ந்து உருண்டுபுடைத்துச்சீவடிந்து நகத்தால் கிள்ள உலர்ந்து உள்ளுருகிச் (சில காலத்திற்குப்பின்) கண்டவர் சிரிப்பதற்கேற்றதாய் தொங்கி வற்றிப்போகும் தனத்தினை நோக்கித் தாமரை மொக்கென்றும் (நாய்போன்று) குலைக்கும் மோகாந்தகாரத்தில் முழுகிக்கிடக்கும் அந்தகர்கட்குச்சொல்லுவேன்.

(கு-ரை.) நாயானது பசையற்றஎலும்பினைக்கடித்துக்கொண்டிருந்து ஓயாது குலைத்துக் கொண்டிருப்பதுபோல மாந்தர் பிரயோசனமற்ற மாதரை யனுபவித்துக்கொண்டு காலமனைத்தும் புகழ்ந்துகொண்டே யிருப்பவரென்பவர் குலையும் என்றனர். குருடர் என்றதனால் அறிவாகிய கண்ணைக்கொண்டு சிவத்தினை யறியாது காமாந்தகாரத்தில் மூழ்கி யறிவுமயங்கிக் கிடப்பாரை அன்றியும், வயதினாலும், உணவினாலும், கழுவுவதினாலும், ஆபரணங்

கள் அணிதலினாலும் ஆடைஉடுத்தலினாலும், மாதர்கள் அவயவங்கள் மேனோக்கில் கண்களுக்கு ரம்மியமாகத் தோன்றிக் காமுகர்களைக் கவரச் செய்யினும், அறிஞர்கள் உற்று நோக்கில் அவையனைத்தும் மிக அருவருக்கத் தகுந்தவைகளால் ஆகியதெனவும், நாற்றமடிக்கத் தகுந்தவை சேரத்தக்கனவு மாயிருப்பனவற்றை உவமான வாயிலாக வாயாரப் புகழ்ந்து காலங்கழித்தலென்னபிரயோசனமென்பார், காமக்குருடர் என்றனர்.

நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றாய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையக்
தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த

சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நக்கிச் செல்லு நரக வாசல்.

(பொ-ரை.) (ஒரு பொருளையெடுக்க) நீட்டுதற்கும், (எடுத்த பின்) முடக்குதற்கும், மிகுந்ததிரவியத்தினைவாங்குதற்கும், (உணவுமுதலியவற்றை) ஊட்டுதற்கும், (யாதாமொன்றை பிசைவதற்கும் உபகாரங்களை இவ்விடத்துச் செய்யாநின்ற உள்ளங்கையினை நோக்கிக் காந்தள் புட்பமென்று கூறியும், வியர்வினையும் அழுக்கினையும் பொருந்திய கழுத்தினை உலகினிலினிமையான பாக்குமரமெனச்சொல்லியும், வெப்புநாற்றத்தினையும் ஊத்தையினையும் பொருந்தியவாயினைச்சிவந்த முருக்க மரத்தின் சுத்தமான புட்பமென்றும் சாதத்தினையும் பதார்த்தத்தினையும் மென்று மென்று (வயிற்றில்) இறக்குகின்ற முன்னேயுள்ள பல்லினை முத்தென வியம்பியும், ஜலமும்சளியும் தங்கியிருந்து ஒழுகும்அந்த மூக்கினைக்குமிழம்பூவெனவியம்பியும், தண்ணீரும் பீளையும் நீங்காது ஓடிவரும் கண்ணினைநோக்கிச்செங்கழுநீர் புட்பமென்றும், உள்ளேகுறும்பி தங்கி வழிகின்றகாதினை வள்ளைத்தண்டினிழைகையொத்ததெனப் புகழ்ந்தும், கையினால் எண்ணெயைக்கொண்டு தடவாதிருக்கின் கொடிய புழுதியும் பேனுமுண்டாகத் திரண்டமேகமென்றும் பல மொழிகளைப் பேசிப்புகழ்ந்து (மாந்தர்களாகிய) நீங்கள் விரும்பிப் போகின்ற நரகவாசல் எத்தகையதென்னில் இயம்புதும்.)

(கு-ரை.) "வையமிசை மாரிபெய் கொண்டலோபசிய சைவலமோ கருங்குழல், நுதல்வளரிளம்பிறையோ மதனன்கைச்சிலையோ, மதர்த்துமான்மருள் மிகுந்து மையணிந்தையரிபடர்ந்தகண் கடிகாவிமலர்த்தடத்தில் வளரிளஞ்சேலோ வாடவர்மனஞ்சூறைகொள்ளும்வேலோ, செய்யபவளக்கடிகையோ விதழிலங்குநகை

செப்பு வெண்டரளவடமோ, தீஞ்சொல்மாங் குயிலோசையோ கிள்ளை மொழியோ தெவிட்டாத தெள்ளமுதமோ, திகழ்வதன மோராயிரந்திங்களொளியினைச்சேர்த்தேயமைத்திட்டதோ, செம்பொனஞ்சிறையனங்குலவுமேதென் வாவியிற் செழித்தசம்போதிகழ் களம், துய்யமணி மார்பிடங்கொண்டு பூரித்துசுணங்கு பூத்தொளிர்கிருங்கத், தாரிருங்குசந்தனச் சாந்தணிந்திலகுதுணை முலைவெண்முளரிமுகையோ சூதோ கடற்குமிழியோ கூவிளங்கனியோ சொல்லரிய விமயகிரியோ சொர்ன கிண்ணங்களோ கும்பமோ சிற்றிடைதூய மலர்வாளியென்மேல் எய்யுமதனே, விண்ணிடைத்தோன்று மின்னலோ விதழ்வில் பூங்கொடியோ மதன், இல்லெனச் சொல்லுநல்லல்குலரவோ தொடையிலங்குமிளவாழையோ பொன் இணையிலடிபங்கயப்போதோ மற்றேதோவியம்புதற்கயனனந்தன் இவர்கட்கு மரிதென்னிலன்னனே நின்னமுகை யாவருரை செய்வர் மாதோ" எனப்புலவர் வியந்து பாடுவது, வழக்கமாகலின் "சொற்பல பேசித்துதித்து" என்றனர்.

தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொலைபெறு வாசல்
என்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக் காமுக ருய்த்தா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி

உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாசற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாசல்.

(பொ-ரை) தோலும், மாமிசமும் நெருங்கிச் சீவடிகின்றகாமக்குகையாம் கருவோற்பத்தியாகும் கழனியாம், சூதகம்வழிகின்றதுவாரத்தினையுடையவாயலாம், எட்டுச்சாணுடலிருக்கும் உடல் வெளிவரும் பெரியவழியாம், உலகத்தில் (ஆன்மாக்களின்) இந்திரியத்தினை யொழித்தற்கேற்ற மறைந்த இடமாம், அத்தகையஇடத்தினை விரும்பிக்காமாந்தகாரத்தினால் தானெக்காலத்தும், ஆசை கொண்டிருக்கும் உடலின் மத்தியிலுள்ள பெரியவாசலாம், சந்திரனைச் சடாபாரத்திலுயுடைய பெருமான் திருவருளினையடையாதவர் இருந்து திரிகின்ற மெலிவான பெரியவழியாம், இது புண்ணுக்குச் சமானமென்று புடவையைக்கொண்டு மூடியும் உள்ளே யிருந்து நீரினை யூற்றும் ஓசையுடன் கூடிய சிவந்த புண்ணும், காமவாசை கொண்டு (சிவபெருமான் திருவருளினையறியாத மாந்தர்கள் நுழைகின்ற வழியாகும், காமநோய்பெற்று அது நீங்காத அற்பர்கள் போகும் வழியாகும் கருவம் கொண்ட காமிகள் நெருங்கும் படுகுழியாம்; செருக்கினையுடைய காமிகள் சேருகின்ற சிறியகுழியாம்; பெண்ணும் ஆணும் பிறப்பதற் கேதுவாகிய பெரியவழியாம், மலமானது வழிந்து இறங்குந் தண்ணீர் வாசலாம்.

இத்தகை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்ட முமனைத் துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே.

(பொ-ரை.) இத்தகைய (நிதம்பத்தினை) நீங்கள்சுகமான தென்றுவிரும்பாமல், பொதுமகளிரைப் புகழ்தலின்று நீங்கி (நீரும்) பச்சிலையிடினும் அடியார்களுக்கு (மனம்) இரங்கி வியந்து பாராட்டித் (தமது) சிவபதமாகிய மோட்சவீட்டினைப் பாலிக்கின்ற பெருமானை மோட்சத்தினுக்குத் தலைவனை, நித்தியமாயுள்ள முதல்வனை அண்டபகிரண்டங்களையும் பதினான்கு புவனங்களையும் காரியப் படுத்திய தலைவனை, காஞ்சிமாநகரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனை, தன்னந்தனியனை, (அவனது) இரண்டு திருவடிகளையும் தொழுமின்கள்.

(கு-ரை.) இதுகாறுமெடுத்துக் கூறியதக்கவர்களாலே யருவருக்கத்தகுந்த அங்கத்தினுக் காசைப்படா திருக்கவேண்டு மென்பார் "இனிதெனவேண்டா" என்றனர், வெறும் பச்சிலையினைப்பறித்துப் பரமனையருச்சிக்கினும் பத்தருக்குப் பரிந்தருள், செய்வானென்பார், "பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி என்றனர் தாயுமானவர், "கல்லாலெறிந்துங் கைவில்லாலடித்துங் கனிமதுரச், சொல்லாற்றுதித்துநற்பச்சிலை தூவியுந்தொண்டரினை, மெல்லாம்பிழைத்தன னன்பற்றநானினியேது செய்வேன், கொல்லாவிரதியர்நேர்

நின்ற மூக்கட்குருமணியே" என்றதனாற்காண்க, போகமாதரென்பது விலைமகளிரை. இவர்கள் பெயரைக்குறித்துச் சொல்லவே, இல்லறத்திலிருந்துகற்புடைய மனைவியுடன் வாழ்ந்துஇல்லற நெறி தவறாது சிவசிந்தனையுட னிருக்கின் றவரல்லவென வேற்பட்டது. பின்னும் திருவெண்காட்டடிகள் மாதரையடிக்கடிவை வது பொருட்பெண்டிரை நோக்கியேயாம்.

திருவேகம்பமாலை.

கட்டளைக்கலித்துறை.

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற் [பனே.
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்

(பொ-ரை.) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! தருமஞ் செய்பவனைப் பார்க்கிலும் வீட்டைநீங்கியதுறவியானவன் கோடிபங்கு உயர்ந்தவன், இத்துறவியினைப் பார்க்கினும் மனத்துறவு அடைந்தவன் நூறுகோடிபங்கு உயர்ந்தவன், கோபமுழுவதனையு நீக்கி அறிவுமயமா யிருந்து சகலகேவலமறறத் தற்போதமொழிந்தவன் பெருமையினை நானென்னவென்று சொல்லி (மதிப்பேன்)

(கு - ரை.) அறமியற்றுபவன் இல்லறத்தான், இல்லந் துறந்தான் வானப்பிரஸ்தன் உள்ளத்துறவுடையோன் சந்நியாசி, இருவாதனை யற்றிறந்தான் ஞானி, பிரபஞ்சமுகமாகச் செல்லும் வாசனையை யொடுக்கிக்கொண்டு சிவமயமாயிருந்து பிறவிக் கேதுவா

கிய தற்போத மொழிந்தவனே பெரியோனென்பார் "என்சொல்லுவேன்" என்றனர். பதிபசுபாசவிளக்கம். "அறிவிலறிவாயகண்டிதமா யநந்தாநந்த மயமாகிச், செறியும்பரம சிவந்தன்னைத், தன்னுட்கண்டுதியானித்துக், கறவையருந்தப்பால் சுரருக்குங்காலமேனுங் கடைப்பிடிப்போர், பிறவிக்கடலைக் கடந்தோர்களவரேயுலகிற் பெரியோரே" என்றதனாற் காண்க. (1)

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகி யப்பா
லெட்டியடி வைப்ப ரோவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே (ஆசைமிகுதியினாலே இருகரங்களால்) சேர்த்து, (மார்புடனே) யணைக்கத்தகுந்த மனைவியரும் புத்திரரும். தச்சனாகிய இயமன் (மரம்போன்ற சரீரத்தினைவெட்டிமுறித்துக் கீழே மரம்போலத் தள்ளிவிட்டால் அவர்கள் சாப்பறையடிப்பித்து வாத்தியமுழக்குவித்துப் புலம்புவார் சுடுகாடு வரையில் வந்து (திரும்பி வந்துவிடுவார்) அப்புறத்தில் ஓரடியாயினும் வைப்பாரோ (வையார்).

(கு-ரை.) பெண்டிரைக் கட்டியணைத்தல் காமமிகுதியால் மக்களைக் கட்டியணைத்தல் அன்புமிகுதியால், ஆன்மாக்களின்காலவரையறை யுணர்ந்து வருபவனாகலின் இயமன் காலனெனப் பட்டான், தச்சன் மரங்களைவெட்டிக் கீழே தள்ளுதல்போல இயமனும் உடலைக்கீழேதள்ளுபவனாகையால் தச்சனென்றார், மனைவியரும் புத்திரரும் மயானத்திற்கு அப்புறம் வாராரெனவே, செய்துள்ள புண்ணியபாவங்கள் சூக்குமவுடல் செல்லு முலகத்திற்கும் வருமென்பதாயிற்று. (2)

கைப்பிடி நாயகன் றூங்கையி லேயவன் கையையெடுத்
தப்புறந் தன்னி லசையாமன் முன்வைத் தயல்வளவி
லொப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை
யெப்படி நானம்பு வேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (விவாககாலத்தில் பலரறிய) கைப்பிடித்த கணவன் கையினை (மெள்ளத்தூக்கி அப்புறத்தில் சிறிதுமசையாதபடி முன்னேவைத்துவிட்டு வேறுவீட்டிற்குத் தன்சம்மதத்துடன்சென்று தூக்கமின்றி (அன்னிய நாயகனொருவனுடன் சுகித்திருந்து) திரும்பிவந்து (தன்து சொந்தநாயகன்பக்கத்தில் பழையபடி நித்திரை செய்பவளை எவ்வாறு நம்புவேன்.

(கு-ரை-) "கைப்பிடிநாயகன் என்றது விலைமகளிரேயன்றி குலமகளிருவரும் இன்ன நடவடிக்கை யுடையாரெனக் குறித்தற்கு எப்படி நம்புவேன் என்றதனால் மாதர்கள் உள்ளத்தினையறிவது கஷ்டமென்பதாயிற்று. "அத்திமலருமருக்காக்கை வெண்ணிறமுங், கத்துபுனமீன்பாதங் கண்டாலும் பித்தரே, காணுரறிவுடைபோர்க்கடவுளருங் காண்பரோ, மானார்விழியார்மனம்" என்றதனாற் காண்க. (3)

நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவைநன் னார்தப்பினாற்
றன்னாலு மாடிச் சலித்திடு மோவந்தத் தன்மையைப்போ
லுன்னாலி யானுந் திரிவதல் லான்மற் றுனைப்பிரிந்தா
லென்னாலிங் காவதுண் டோவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே, நல்லநாரினால் கட்டப்பட்டிருக்கிற சூத்திரப்பதுமை (ஆடிக்கொண்டிருக்கிற சமயத்தில்) அந்த நல்லநார்

அறுந்து விட்டால் பதுமையேயாடியசையுமோ (அசையாது) அந்தத்தன்மையைப்போல தேவரீரால் யானும் (இந்த வுலகத்தில்) சஞ்சரிப்பதல்லால், தேவரீரைப் பிரிந்தால் அடியேனால் இவ்வுலகில் ஆகும் காரியம் ஏதாவது உண்டோ, (ஒரு சிறியதுமில்லை.)

(கு - ரை.) ஆன்மா சுதந்தர வீனனாய்த் தனக்கென வொரு செயலின்றியாயும் முதல்வன் செய்விக்க செய்பவனாகலின், என்னாலிங்காவதுண்டோ என்றனர். சிவஞான சித்தியார், உலகினி லென்செய லெல்லா முன்விதியே நீயே யுன்னின்றுஞ் செய்வித்துஞ்செய்கின்றாயென்று, நிலவுவதோர் செயலெனக் கில்லெனுஞ் செயலென்று நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்குந்தானே" என்றதனாற் காண்க. பதுமையினை யொருவன் ஆட்டுவிக்க ஆடுவது போல ஆன்மாவும் முதல்வன் ஆட்டுவிக்கவாடு மென்பார், தன்னாலாடிச் சலித்திடுமோ என்றனர். தேவாரம் "ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே" என்றதனாற் காண்க. (4)

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளு
மில்லமுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே' நல்லவர்களுடைய சினேகமும், தேவரீர் சிவபூசையில்விருப்பமும், ஞானமும் அல்லாமல்வேறொன்று ஆன்மாவிற்கு உறுதியைக்கொடுக்குநிலையுள்ளதானபொருள் உண்டோ, (இல்லை) வீடும், திரவியமும், மனைவியும், உறவினரும் புத்திரரும், உலகவாழ்க்கையும், அழகிய உடலும் இவைகளெல்லாம் புறம்பேயிருந்து மயக்கத்தக்கவைகளேயாம்.

(கு - ரை.) நல்லாரிணக்கமென்றது சங்கம வழிபாடு, நின்பூசைநேசம் என்றது இலிங்கவழிபாடு, ஞானமுமே என்றது ஆசாரியனை யடைதற்கேதுவாகிய ஞானவழிபாடு. இம்மூன்றுமேயொருவனுக்கு இன்றியமையாத உறுதிப்பயனைக்கொடுத்தற்கேதுவென்பார். 'வேறு நிலையுளதோ' என்றனர். அகமுதல் உடம்பு ஈறாகக் கூறப்பட்டன வெல்லாம் நம்மை யேமாற்றத் தக்கனவே யன்றி அவற்றாற் பிரயோசனமில்லை யென்பார். எல்லாம்வெளிமயக்கே, என்றனர். உபதேசகாண்டம், "மக்களை நிதியைப்பேதை மகளிரை மருங்குசூழ்ந்த, வொக்கலை நோக்கி யேமாந்துறுகதி நோற்கலாராய், மிக்கிழி நரகத்தாழ்வர் மென்சிறுபறவைகண்டந்தோ, தக்க வெஞ் சுழனுக்கண்டை கொண்டுவிண் டுயலாதன்றே" என்றதனாற் காண்க. (5)

பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை செல்லா தவனின் றிருவடிக்கன்
பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (அடியேன்) கொடியன், நல்வழியி னடவாதவன், பஞ்சேந்திரியங்களை யடைக்காதவன் (கற்கவேண்டிய கல்வியினைக் கற்காதவன், உண்மையடியாரிடம் சிநேகியாதவன்! மெய்யன்பதுரையாதவன், தேவரீர் திருவடியினிடத்து அன்பில்லாதவன் (இத்தகையன்) பூமிக்குப் (பாரமாக) என் பிறந்தேன்.

(கு-ரை.) யாவருக்கும் நல்லவனுயும், தருமவழியில் நடப்பவனுயும் இந்திரியங்களின் வழியே மனத்தினை விடாதவனுயும்,

கண்ட நூல்களைக் கற்றவனையும், சிவனடியார் கூட்டுறவினையுடையவனையும், சத்திய விரதனையும், சிவநேசமுடையவனையு மிருப்பவனே உலகத்தில் பிறந்ததனு லடையவேண்டிய பெரும் பிரசேயாணத்தையடைவ னென்பதாம். (6)

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன் கச்சி யேகம்பனே.

(பொ-ரை. காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (ஒருவன் உலகத்தில்) பிறக்கின்ற காலத்து (யாதொன்றையுந்தன்னுடன்(கொண்டுவந்ததில்லை, பிறந்து (வாழ்ந்து) உலகில் இறக்குங்காலத்து (தானிதுகாறுஞ் சம்பாதித்த பொருள், திக்குகளிலொன்றினையும்) கொண்டுபோவதில்லை, (பிறப்பிற்கும் இறப்பிற்கும்) மத்திபகாலத்தில் (அதாவது உலகில்வாழுங்காலத்தில் கிடைக்கும்செல்வம் சிவபெருமா னமக்குக் கொடுத்ததென்று எண்ணி இரப்பவர்க்குக்) கொடுக்காமல் இறந்துபோகும் பிரபஞ்ச அடிமைகட்கு நானென்னவென்றெடுத்துரைப்பேன்,

(கு-ரை.) பூர்வ சென்மத்திற் புண்ணியபலனுக்குத் தக்கபடி இச்சென்மத்தில் சிவபெருமான் வேண்டிய செல்வங் கொடுத்திருக்க இச்செல்வத்தினைக்கொண்டு இப்போது தானதருமங்களைச் செய்து அடுத்த சென்மத்திலு மிங்ஙனமே செல்வனாக வாழவேண்டுமென்று கருதாது சிறிதும் செலவழியாம லிருக்கும் உலோபர்கட்கு எடுத்துச் சொல்லியும் கேளாரென்பர் 'என சொல்லுவேன்' என்றனர். (7)

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலைபா விசாரநற் றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்ன ,விசாரம்வைத் தாயிறை வாகச்சி யேகம்பனே.

பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! (அடியேனுக்கு முதலுண்டாவது) உணவு சம்பந்தமாக வுண்டாகும் துக்கம் அதுவே யெப்போதும் நீடித்த துக்கம், அது நீங்கிய காலத்தில் திரவியந் தேடவேண்டு மென்னுந் துக்கம் நீங்காதுக்கம். (அது நீங்கியகாலத்தில் மாதர்களை நெருங்கி வாழவேண்டுமென்னுந் துக்கம் (இங்ஙனம்) எக்காலத்தும் துக்கமே, இத்தீய மனத்திற்கு என்ன துக்கம் வைத்தனை (இத்துக்கங்களினின்று நீங்குங்காலம் எக்காலமோ அறிகிலேன்.)

(கு-ரை-) சிவபெருமான் திருவருளினையடைதற் கேதுவாகிய சாதனங்களிற் சிறிதும் புத்தியைச் செலுத்தாது, உடலைக்காத்தலினும் போகங்களை யனுபவித்தலினும், சிற்றின்பம் நுகர்தலினும் சாதனமாயுள்ள வற்றிலேயே காலங்கழிக்கின் உய்வதெங்ஙனமென்பார். 'என்ன விசாரம்' வைத்தாய் என்றனர். (8)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! (கற்கவேண்டிய நூல்களை) கற்காத குற்றத்தினையும்,

அந்நூல்களை விரும்பாத குற்றத்தினையும், மனங்கசிந்து உருகியவ்வழி நில்லாத குற்றத்தினையும் தேவரீரது பஞ்சாக்கரத்தைச் செபியாக் குற்றத்தினையும், தோத்தரியாத குற்றத்தினையும் (மற்றுமெனையறியாது செயயும்) எல்லாக்குற்றங்களையும் மன்னித்துத் திருவருள் புரிந்தருளவேண்டும்.

(கு-ரை.) கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் உபாய நிஷ்டை இவற்றி லொன்றேனும் செய்யவில்லை யென்பார் முறையே "கல்லாப்பிழையும் * * * சொல்லாப் பிழையும் என்றனர். இந்நான்கினுந்தேர்ந்த பரமஞானிகளாய் விளங்குபவரும் சிவபெருமானைத் தோத்தரித்து வணங்க வேண்டுவது அவசிய மென்பார், "துதியாப்பிழையும் தொழாப்பிழையு மென்றனர்" தன்னையறியாமலும் சில சிவாபராத முண்டாமென்பார் "எல்லாப்பிழையும் பொறுத்தருள்வா" யென்றனர். (9)

மாயநட் போரையு மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயும தேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) அழகினைவாய்ந்த காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும்எகாம்பரநாதனே! (அடியேனைத் தடுத்தாட்கொண்டகுருநாத) மாயையென்னும் சினேகரையும், ஆணவமலமென்னும் மாதர்களையும், தன்னிடத்திலிருந்தும் அப்புறப்படுத்திச் சந்நியாசமடைந்து உண்மையான திருவருளாகும் தாயாருடன் தொடர்ந்து தந்தையாகிய சிவபெருமானை யடைந்து பின்னர் தாயினைமறந்து பொருந்தியிருப்பதே நிஷ்டையெனத் திருவாய்மலர்ந்தருளினன்.

(கு-ரை.) கன்மனத்தினை எங்ஙனமாயினும் அனுபவித்தே தீர வேண்டுமாதலினால் மாயாகாரியங்களிடத்துப்பற்றும் ஆணவமலத் தடிப்பும் நீங்கவே இதுகாறு மலத்துடன் விரவியிருந்த திரோதான சத்தி அருட்சத்தியாக விளங்க அவ்வருட்சத்தி மூலமாக முதல்வனுடனிரண்டறத் தியானிக்கும் சமயத்தில் திருவருட்டோற்றம் முனைந்து தோன்றுதாகலின் அந்தநிலையே நிற்விகற்ப சிவ ராஜயோக சமாதி யென்றனர். (10)

வரிக்கோல வேல்விழி யாரனு ராக மயக்கிற்சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ்சொ லேன்றமி யேனுடல
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
வெரிக்கோ விரையெதுக் கோவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) "இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்கின்ற ஏகாம்பரநாதனே! செவ்வண்டினையொத்த அழகிய வேலாயுதம்போன்ற மாதர்களுடைய ஆசையென்னும் மயக்கிற் சிக்கி (அவர்கள்) அழகினை வர்ணித்துக்கொண்டிருப்பேன். பஞ்சாக்கர மகா மந்திரத்தினைச்செபியேன் (இத்தகையனுடைய) உடல் நரியினுக்கோ, கழுகினுக்கோ, பருந்தினுக்கோ, கொடியநாயினுக்கோ, அக்கினிக்கோ, மற்றெவற்றிற்கோ இரையாய் விடும்.

(கு-ரை.) வேதவிருதயமாய் மந்திர ரத்தினமாக விளங்கும் பஞ்சாட்சர தியானத்தினைக் கைவிட்டு மாதர் மயக்கிற் கட்டுப் பட்டிருப்பவர்கள் உருவசித்தி, அருவசித்தி, அருவுருவசித்தி மூன்றிலொன்றையடையாது தங்கள் தேகத்தினை நரிமுதலிய வற்றிற்கு இரையாகும்படி செய்வார்கள். (11)

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்
ணெதிரே, மாதென்று சொல்லிவருமாயை தன்னை மறலிவிட்ட,
தூதென்றெண் ணாமற் சுகமென்று நாடுமித் தூர்ப்புத்தியை, யே
தென் றெடுத்துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்கும் எகாம்பர நாதனே! காதுகளெனவும், மூக்கெனவும், கண்களெனவும் என் கண்முன்னே காட்டி (இவையனைத்தையுமுடைய பெண்ணென்று சொல்லிவருகின்ற மாயையாகிய வடிவினை எமன் என்முன்னனுப்பியதென்றுநினையாமல் இன்பங்கொடுக்கத்தகுந்த உருவமென விரும்பும் எனக்குண்டாகி யிருக்கும் கெடுதனையான புத்தியின் றன்மையை யென்னவென் றெடுத்துரைப்பேன்.

(கு-ரை.) பேரின்பத்தினையடைவதற் கேதுவாயுள்ள விடயங்களில் மனத்தினைச்சிறிதுஞ் செலுத்தாமல், சிற்றின்பத்தினையடைவதற்கேதுவாயுள்ள மாதரிடத்துப் புத்தியினைச் செலுத்தி யதிலழுந்தி கிடக்கின் இயமன் தூதுவர் அஞ்சாது வந்து இலேசாக அழைத்துக்கொண்டுபோய் விடுவரென்பதாம். (12)

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் எகாம்பர நாதனே! ஊரும் நித்தியமன்று, சுற்றத்தாரு நித்தியமன்று விரும்பிப் பெற்றெடுத்த தாய் தந்தையரும் நித்தியமன்று, மனைவியரு

நித்தியமன்று, புத்திரர்களும் உலகத்தி லனுபவிக்கும் சிறப்புக ளும் நித்தியமன்று, திரவியமும் நித்தியமன்று இவ்வுலகிலே எத்த கையரு நித்தியமன்று (எல்லாமனித்தியமே) தேவரீர் திருவடியே நித்திய மானது.

(கு-ரை.) ஈண்டுகுறித்தவற்றுள் ஆன்மாக்களியாவரும்இறப்பி லும் பிறப்பிலும் கட்டுப்பட்டுக் கிடத்தலினாலும் பதார்த்தங்கள் யாவும் மாயாகாரியங்களா யிருத்தலினாலும் இவையெல்லாம் சத மல்லவென்றார். இறப்பினும் பிறப்பினுங் கட்டுப்படாது என்று நித்தியனா யுள்ளவன் சிவபெருமா னொருவனேயாகலின் அவன் திருவடியே சதமென்றனர். (13)

சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினால்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண்டி லேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக் கும் ஏகாம்பர நாதனே! கொடுமையினை விளைவிக்கும் வினையான து ஒரு பெண்ணின் வடிவினையெடுத்து (அப்பெண்ணிடம்) திர ண்டு உருண்டுகுவித்த நுனியும்மாமிசத்திரட்சியினாலு(மமைந்தத னத்தின்) கொடுமையினையும், மலம்வரும் (குதத்தினுக்குச் சமீபத் தில் உதிரம்வழியும் (நீச்சக்குழியாகிய) பெரிய குழியினையும் விட் டு நீங்கியடையும் கரையொன்றினையும் கண்டேனில்லை.

(கு-ரை.) பிரபஞ்சமுகமாக மனத்தினைச் செலுத்தியுள்ள எத்தகையினரையும், மாதர்கள் அங்கங்களுக்குள்சிறந்து விளங்கித் தம் வயமாக விழுத்துத் தங்களிடத்து மயங்கச்செய்வன தனமும் நீச்ச விஷயமாய் யிருத்தலினுங் அவையிரண்டினையு மாத்திரம் குறித்தனர். (14)

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோ
லருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத் தருங்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! செல்வமுடையவர்களை அவர்களுடைய் (தருமச்) செய்கைகளாலும், வீரமுடையவர்களை அவர்களுடைய (தீர) யுத்தத்தினாலும் அறிவுடையோர்களை அவர்களுடைய (நல்ல) முகக்குறியினாலும் தேர்ந்து தெரிந்து கொள்வதுபோல, திருவருளுடைய பெரியோர்களை அவர்கள் தவத்தினாலும, குணத்தினாலும்,கிருபையினாலும், அன்பினாலும், குற்றமற்ற வசனத்தாலும் தெரிந்து கொள்ளலாம்.

(கு-ரை) உலகில் ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் செய்யுங் காரியங்களைக்கண்டு அக்காரியங்கட்குக் காரணமாயுள்ள கருத்தாக்களின் உண்மைத்தன்மையை கண்டு தெரிந்து கொள்ளலாம் என்றனர். (15)

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்கத்தங்க
டிருத்திக் கறுசுவை போடுகின் றார்துறந் தோர்தமக்கு
வருத்தி யமுதிட மாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேனிருந் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! பஞ்சின் மூட்டையினைப்போலுள்ளவயிறு

நாளுக்குநாள் தொப்பையிட்டு அதிகப்பட (ஒவ்வொருவரும்) தங்கள் தோற்பைக்கு அறுசுவையுடன் கூடியபண்டங்களை யிடுகின்றார் (இங்ஙன மின்றி.) துறவிகட்கு (அன்புடன்வலிய) வரவழைத்து அன்னம் படைக்கமாட்டார் அத்தகைய உலோபர்களை இப்பெரிய பூமியில் ஏன்வைத்துக் கொண்டிருக்கின்றனை.

(கு - ரை) "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கு நல்லாற்றினின்றதுணை" என்ற தருமநூலுக்கு விரோதமாக நடக்கின்றவன் உலகிலிருந்தால் அவன் பழக்கத்தால் பலருங் கெடுவராகலின் அத்தகையினரைச் சீக்கிரம் இவ்வுலகத்தினின்றும் அப்புறப்படுத்த வேண்டுமென்றனர். (16)

பொல்லா விருளகற் றுங்கதிர் கூகைபென் புட்கண்ணினுக்
கல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டா
யெல்லாம் விழிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சிபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! அதிகமான இருளையகற்றும் சூரியன் கிரணம் கூகையென்று சொல்லப்படுகின்ற பட்சியின்கண்ணுக்கு இருளாகவே யிருந்திடுந்தன்மையினை யொக்கும் அறிவாளிகள் தமது உள்ளத்தில் அகவிழிகொண்டு பார்க்க வல்லவராகலின் அவர்கள் தம் கண்ணால் (ஞானசூரியனை) அறிவது அறியாதவர்கட்கு (அறியாமையாகிய) மயக்கம் காரணமாயிருப்பதும் (ஆலோசிக்குமிடத்து) இவையனைத்தும் கண்மயக்கேயாம்.

(கு-ரை) பூதசூரியன் எல்லார் கண்களுக்கும் உபயோகமாகவிருக்கினும் கூகையின்கண்களுக்குஉபயோகப்படுமாறில்லைபோல

ஞானசூரியன் எல்லார் உள்ளங்களிலும் பிரகாசிக்கினும் அறியாமை வாய்ந்தார் உள்ளத்தில் பிரகாசியா னென்பதாம். (17)

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்குரைப்பர்
தீதுக் குதவியுஞ் செய்திடு வர்தினந் தேடியொன்று
மாதுக் களித்து மயங்கிடு வார்விதி மாளுமட்டு
மேதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! (இவ்வுலகினர்) தங்கள் ஆயுள்நாள்பரியந் தம் வீண்தருக்கம் புரியவும் போர்புரியவும் போவதும் வருவதுமாயிருப்பர்கள் (வீண்) வழக்குத்தொடுப்பர் தீமையானகாரியங்கட்கு வேண்டிய உதவி புரிவார்கள் பிரதிதினமு மலைந்து (திரவியஞ் சேகரித்து) ஒரு பெண்ணுக்குக் கொடுத்து மயங்கி யிருந்திடுவர் எதன்பொருட்டு இவ்வுலகிலிவர், பிறந்தார்.

(கு-ரை) சாகிறவரைக்கும் பகிர்முகமாயுள்ள விவகாரங்களிற் பிரவேசித்து வீணாள் கழிந்து ஒரு பயனையு மடையாது போகின்றனரேயன்றி அந்தர்முகமாக விருந்து மறுமைக் கடையவேண்டிய புண்ணிய சாதனங்களி லொன்றையும் சேகரித்துக் கொண்டாரில்லை யென்றனர். (18)

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறர்க்குப காரஞ் செயார்தம்மை யண்டினர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீ புரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! (உலகத்திற் பெரும்பாலோர் எப்போதும் பொய்பேசிக்

கொண்டேயிருப்பர், நல்லவர்களை தூஷிப்பர் அனேகமான தவங்களைச்செய்து பெற்றெடுத்ததாயினை நிந்தைசெய்வார் அனேகமான வஞ்சகங்களைச் செய்வர், உண்மைச் சாத்திரங்களை ஆராயார், அந்நியர்கட்குபகாரம் செய்யார், தம்மையடுத்து யாசித்தவர்கட்கு ஒருசிறிது மீயார்(இத்தகையினர்) உலகத்தில்வாழ்ந்தென்ன இறந்தென்ன இரண்டு மொன்றே.

(கு-ரை) தாங்கள் தீமையினைச்செய்து கொண்டிருப்பதன்றி தங்கட்கு யாதொரு சம்பந்த மில்லாரைவைவதாலும்,பலபிரகாரத்தாலு தமக்கு நன்மைசெய்தாரை நிந்தித்தாலும், தாமடையவேண்டியவற்றை யடையாமலும் இப்பிரகாரமாக எவ்விதத்திலு நன்மை செய்யாது தீமையினையே செய்துகொண்டிருப்பவர் உலகிலிருந்து வாழ்தலிலும் இறத்தலே நன்றென்றார். (19)

அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பாயிந்
தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினற்
செப்பில பக்குவம் பக்குவ மாயுள்ள சீவனிலு
மிப்படி யேநிற்ப னெந்தை பிரான்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) எமது தந்தையாகிய பெருமானும்! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனுமானவனே! நீரானது எக்காலத்தும் வெண்மைநிறத்தினையுடைய தாயினும் உலகில்பூமியின் சம்பந்தத்தால் தன்னிடத்திலே குற்றமின்றி அடுத்த நிலத்தின் சார்பால் பல நிறத்தினைப் பெறுதலைப்போல, ஆராயுங்கால் பக்குவம்அபக்குவமான வேற்றுமையுள்ள சீவன்களிடத்தும் அவ்வாறே யிருப்பன்.

(கு-ரை) சிவபெருமான் சர்வவியாபகனாய் ஆன்மாக்களோடும் இரண்டறக்கலந்து எக்காலத்துமிருக்குந் தன்மையுடையனு

யினும் அவன் திருவருள் பக்குவரிடத்துவெளிப்பட்டும், அபக்குவரிடத்து மறைந்தும் சீவத்தன்மைகளுக்குத் தக்கவாறு விளங்குவனென்றனர். (20)

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி னராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
வீயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நாய் சென்மமாகப் பிறந்திட்டால் தக்க வேட்டையினைச்செய்து (தன் எசமானனுக்கு) நன்மையினைசெய்யும், தாயினது வயிற்றில்மனிதர்களாகப்பிறந்து பிறகு செல்வர்களாய் (வாழ்ந்து காய்காய்க்காத மரத்தினைப்போலவும், சலம்வற்றிய குளத்தினைப் போலவும், கல்லினாற்செய்த பசுவினைப்போலவும், தன்னையடுத்த தற்கு ஒன்று) கொடாதாரை யேனுண்டாக்கினை.

(கு-ரை.) காயாமரமும், வறண்டகுளம், கல்லாவும்யார்க்கு முபயோகமில்லாதவாறுஉலோபிகளாலியாதும் பிரயோசனமில்லையென்பதாம். திருமந்திரம், "எட்டிபழுத்த விருங்கனி வீழ்ந்தனவொட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம், வட்டி கொண்டாட்டியே மண்ணின் முகந்திடும், பட்டப் பதகா பயனறியாரே" என்றதனாற் காண்க, உலோபிகள் ஏழைகள் வந்தால் நாய்போலக் குலைப்ப ரென்பர் நாயினைக் குறிப்பாற் கூறினர். (21)

ஆற்றிற் கரைத்த புளியாக்கி டாமலென் னன்பையெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளுந் தாளுடை யாய்குன்ற வில்லுடைய
யேற்றுக் கொடியுடை யாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! திரிபுரங்களையும் தகித்தும், இயமனையடிமை கொளும் திருவடிகளையுடையானே! மேருமலையினை வில்லாகவுடையானே! இடபக்கொடியை யுடையவனே! (தேவரீர் இடத்து அடியேன் வைத்திருக்கும்) அன்பனைத்தையும் ஆற்றிலேகரைத்து விட்ட புளியினைப்போலச்செய்திடாமல் காத்து (அடிமையாக்கிக் கொள்ள) சித்தம் வைக்கவேண்டு மையனே.

(கு-ரை.) ஆற்றிலே கரைத்த புளியினால் நீருக்கு யாதொரு பிரயோசன மில்லாதவாறுபோல, தேவரீர் திருவருளாகியாதியிற் கலக்கும் அடியேன் பிரயோசனமற்றுப் போகாதபடி அன்பிற்குத் தகுந்த அருள் செய்யபபடி கருணைவைத்தல்வேண்டுமென்பதாம். (22)

பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையான் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப் பொருள்பறிக்க
வெண்ணா துனைமறந் தேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சிபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! மாயை யென்று சொல்லப்படுகின்ற பேயானது பெண்ணுரு வெடுத்துவந்து என்னைப்பிடித்துக்கொண்டு அதன்கண்களினாலேமருளச்செய்து, 'தனங்களால்மயங்கச்செய்து மிக விசாலமான புண்ணென்று சொல்லும்படியான (நீச்சம்) என்னும் பள்ளத்தில் தள்ளி என்னுடை அறிவினைக் கிரகித்துக் கொள்ள தேவரீரை நினையாது மறந்துவிட்டேன்.

(கு-வுரை.) மாதர்கள் மையலாகிய மருளிலே மயக்குண்டார் சிந்தை தெளிவதில்லையாகலின் 'உனை மறந்தேன்' என்றனர் திருமந்திரம் "பொருள்கொண்ட கண்டனும் போதகையாரும், இருள்கொண்ட பின்வெளிகொண்டு நின்றோரு, மருள்கொண்டமாதர் மயலுறுவார்கள், மருள்கொண்ட சிந்தையை மாற்றகில்லாரே என்றதனாற் காண்க. (23)

நாவார வேண்டு மிதஞ்சொல்லு வாருனை நான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந் தொக்கவுண் பார்கள்கை தான்வறண்டாற்
போய்வாரு மென்று நடுத்தலைக் கேகுட்டும் பூவையருக்
கீவார் தலைவிதி யோவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! ஒருவனிடத்தில் செல்வமிருக்கும்பொழுது விலை மாதர்கள்) நாவினால் நல்லவார்த்தைகளனைத்தையும் சொல்லுவார்கள் உன்னை விட்டுப் பிரிந்துவிடின் உடனே இறந்துவிடுவேனென்று உடனிருந்து கலந்துண்பார்கள், செல்வம் குறைந்துவிட இவ்விடம் விட்டுப்போய் வாருமெனச் சிரசிற்குட்டியனுப்பும் (மாதர்கட்குத் திரவியம்) கொடுப்பது அவர்கட்குத் தலைவிதியோ (அறியேன்.)

(கு-ரை.) விலைமாதர்கள் சொல்வதனைத்தும் பொருள்பறிக்கின்ற வார்த்தையென்பார் 'குட்டும் பூவையர்' என்றனர் 'வெம்புவாள் விழுவாள் பொய்யோ மேல்விழுந் தழுவாள்பொய்யே, தம்பலம் தின்பாள் பொய்யே சாகின்றேனென்பாள் பொய்யே, அம்பினுங்கொடியகண்ணா ளாயிரஞ் சிந்தையாளை, நம்பின பேர்களெல்லா நாயினுங்கடையாவாரே என்றதனாற் காண்க. (24)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங் கொடார்குரு சொன்னபடி
நில்லா ரறத்தை நினையார்நின் னாம நினைவிற்சற்று
மில்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! சிவபெருமான் சரித்திரங்களைப்படியார், நல்லவர் தமக்குக் கனவனிடத்தும் உண்மையினைப்பேசார், பட்டினிகிடப்பார்க்கு அன்னங்கொடார், ஆசாரியர் சொன்னபடிநில்லார் தருமஞ் செய்ய எண்ணார் தேவரீருடைய திருநாமத்தினை நெஞ்சினினையார் (இத்தகையினர் உலகில் இருந்தென்ன இறந்தென்ன.

(கு-ரை.) சிவபுராணங்களைப் படித்தலும், சிவனடியாரிடத்து உண்மை பேசுதலும், சிவனடியார்க் கன்னமிடுதலும், சிவதருமங்களைச் செய்தலும், சிவநாமங்களை யுச்சரித்தலும், ஆசாரியர் கட்டளையிற் கட்டுப்படுதலும் மனிதசென்ம மெடுத்தலினாலுண்டாம் பிரயோசன மென்றனர். (25)

வானமு தத்தின் சுவையறி யாதவர் வண்கனியின்
றேனமு தத்தின் சுவையெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் றெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
கூனமு தச்சுவை நன்றல்ல வோகச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! தேவாமிர்தத்தின் சுவையினைத் தெரியாதவர்கள் வண்மைபொருந்திய பழத்தினுடைய சுவையினை நாடுதல்போல், தனித்தனியாகத் தேன் சுவையினும் பாலின் சுவையினும்மிகுந்துள்ள (சிவ) ஞானசுவையினைச் சிறிது மறியாதவர்கட்கு (கடல்) ஈந்த அமுதச்சுவை நன்றாகத் தோன்றுமல்லவா!

(கு-ரை) நரைதிரையினைப் போக்கடிக்கத்தகுந்த தேவாமிர்தத்தினை நாடாது சிலர்பழங்களைநாடித் திருப்தியடைதல்போல, முதல்வனுடன் இரண்டறக்கலந்து அனுபவிக்கும் சிவானந்தத்தினை நடாதவர் தேவாமிர்தத்தினை நாட எண்ணுவர் எனவே கனியினைநோக்க அமுதஞ்சிறந்த தாயினும், ஞானத்தினைநோக்க அமுதம் தாழ்ந்ததேயாம். (26)

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நாறுகின்ற உடலினை, பொய்நிறைந்த ஒதுக்கிடத்தினை, மாமிசம் தங்கிய கிழிந்துள்ள துருத்தியினை, சாதத்தினை யடைக்கும் தோற்பையினை, சொல்லற்கரியகாற்று நிறைந்துள்ள நிலையில்லாப் பாண்டத்தினை விருப்பங்கொண்டே தாங்கி யுலவினேன்.

(கு-ரை) எவ்விதத்தும் சிறிதுங்கௌரவமில்லாத உடலினைத் தாங்கிவாழுதலிலென்ன பிரயோசனமென்றனர். ஒன்றுமலச்செடி லொன்பது பிறவ்வொன்பதிலு, நின்றுமலச்செடில் வீசும்மெந் நேரமு நீர்வட்டன்றைக்கன்று தடைப்பினும்போகாது பார்த்த வருவருப்பையென்று தடைப்பனால கேசரகமிதிலுநன்றே, என்றதனாற் காண்க. (27)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநா

லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! நான் வார்த்தைசொல்லும்போது சொற்களால் நேரிடுங் குற்றங்களை, எண்ணும்போது மனத்தால் நேரிடுங்குற்றங்களையும், உடலாற் காரியங்களைச் செய்யும்போது விளைந்தகுற்றங்களையும், கண்ணுல் விளைந்த குற்றங்களையும், பாபநூல்கள் படித்தலினுல் வருங் குற்றங்களையும் முதலியவற்றோடும், மற்றும் பற்பலவகை யால் நேரிடுங் குற்றங்களையும் பொறுத்தருளவேண்டும்.

(கு-ரை) சொல், சிந்தனை தீவினை என்றதனுல் மனம்வாக்குக் காயங்களால் நேரிடுங்குற்றங்கள். புண்ணியநூலென்றது பதிநூலினை அல்லாத கேள்வியென்றது பசுபாசநூல்களை, குற்றங்கள் அறிந்தும் அறியாமலும் செய்வது ஆன்ம சுபாவமாகலின்பொறுத் தருள வேண்டுமென்றனர். (28)

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை யோலை விளக்கியிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக் கேசெயும் பாவையர்மே
லிட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! நல்லமஞ்சளினை நல்லெண்ணெயுடன் கலந்து முகத்திற்பூசிக்கொண்டு மினுக்கி (கால்களிலென்றும்) மோதிரந்தரித்து, (முகத்தில்) திலதமிட்டு, (காதில்) பித்தளைச் சுருளைத் துலக்கிப்பூண்டு, பகற்காலத்திலேயே வெளிமயக்கத்தையுண்டாக்கும் மாதர்கள் மேல் வைத்திருக்கும் ஆசையினைத் தேவரீர் தவிர்த்தருளவேண்டும்.

(கு-ரை) பெண்ணொருத்தி குரூபியாக விருந்திடினும் தன்னை யலங்கரித்துக்கொண்டு அவ்வேடத்தால் பகற்காலத்திலேயே விடநாயகர்களை மயக்குவதுண்மையின் அவர்பால் நேசம்வைத்தல் தகாதென்பர், இட்டத்தை நீதவிர்ப்பா யென்றனர். (29)

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேன்மைய லாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன் றேதடு மாறிப்பொன் றேடிப்பாவையர்க்கீந்
திறந்திட வோபணித் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! இவ்வுலகில்பிறந்து பலநோய்களையு மனுபவித்தும் பேரானந்தத்தை மறந்து, சிற்றின்பத்தில் மயக்குண்டு அற்பமாதர் கூட்டத்திற் சென்று திரிந்து தடுமாறி அவர்பொருட்டுத் திரவியம் சம்பாதித்து அம்மாதர்கட்குக்கொடுத்து (வீணுக) இறந்து விடத்தானோ கட்டளை யிட்டனை.

(கு-ரை) பிறந்தநாள்முதலாக இருக்கும் நாள்வரையில் அநுபவமாக அனுபவித்தயாவும் சிறிது பிரயோசன முடையனவாகாமலும் இவற்றைக்கொண்டு அடையும்பலனு மொன்றுமில்லாதிருத்தலினலும் இத்தகையவற்றில் காலத்தை வீணுகக் கழித்தேனென்பார், இறந்திடவோ பணித்தாய் என்றனர். (30)

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முனற்றுக்

காதங் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே
யேதங் களைந்திருப் பேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! ஐம்பொறிநீங்கி, பொருந்திய ஐம்புலன்கள் நீங்கி, மாறுபட்டகுணங்கள் நீங்கி பேரவாநீங்கி, கேவலசகலம் நீங்கி மயக்கும் அந்தக் கரணங்கள் நீங்கி முடிவில் தோன்றும் சிவானந்த தரிசனத்தில் குற்றமின்றி வாழ்வேன்.

(கு-ரை) பூதமுதலியவற்று என்றதனால்அவ்வவ்தத்துவங்கள் பிரபஞ்சமுமாகச் செலுத்தும் காரியங்களினின்றும் ஒடுங்கி என்பதாம், பின் முன் என்றதுமறைப்பு நினைப்பாகிய சகல கேவலத்தினை, ஏதங்களென்றது பலகாரியங்களை, தத்துவச் சேஷ்டைகளொடுங்கிய அவசரத்து அகமுகத்திலே விளைவது சிவானந்தமாகலின் ஆனந்தக் காட்சி என்றனர். (31)

நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருள் ஞானமிலாப்
பொல்லா வினைக்கொன்று போடும் பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லார்நற் கோயி னியமம் பலவதைத் தோத்திரமு
மெல்லா முடிந்தபின் கொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! நல்ல தாய்போன்றவரே! எனக்கு விண்ணப்பமொன்றுளது அது கொடுத்தருளவேண்டும் அதாவது) ஞானமின்மையால் பொல்லாதவனாயிருக்கின்ற அடியேனைக் (கன்மத்திற்குத் தகுந்தபடி) கொல்லும்போது அழகியசிவபூசை, பஞ்சாட்சரசெபம், புகழ் வாய்ந்த நல்லசிவாலயத்தில் தெய்வவழிபாடு, பலவகையானதோத்திரங்கள் யாவு முடிவாயின பின்னர் கொல்லுதல் வேண்டும்.

(கு-ரை.) பலவகைத் தோத்திரமாயின பன்னிரு திருமுறைகளிலுள்ளவை பூசையாதி தொழில்கள் விவகாரத்திற் கன்றிப்பாரமார்த்திகத்தில் வேண்டுவதில்லை யென்பாரை மறுத்து, எக்காலத்தும் வேண்டுமென்பார் சர்வசங்க பரித்தியாக முற்ற பரமஞானியாகிய திருவெண்காடரே 'எல்லா முடிந்தபின் சொல்லுகண்டாய் என்றதனால் சாம்பரியந்தம் சிவநாமங்களை விடம்படாதென்பதாயிற்று. (32)

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித் துக்கொண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படக்கடித் தின்றுழல் வார்க டமைக்கரம் பற்றிநம
னிடக்கடிக் கும்பொழு தேதுசெய் வார்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! உடலாகிய பாண்டத்திற்கு ஆகாரம் தேடிப் பற்பலஉயிர்களைக்கொன்று (அவற்றின் மாமிசங்களை அன்னத்துடன்) பதார்த்தமாகக்கொண்டு கருவித்து வாயில்வைத்த மாமிசம் மிருதுவாகும்படி (பற்களினால்) கடித்துத் (தின்று) இக்காலத்தில் அலைகின்றவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு இயமன் முரட்டுத்தனமாக அடிக்கும்போது என்னசெய்வர். (பாவம்)

(கு-ரை.) உயிரைக்கொன்று தின்னும் பாவிகளை அவசியம் இயமன் கட்டாயமாக வந்து பிடித்துத் தண்டிப்பானென்பார் 'கரம்பற்றி நமனிடக்கடிக்கும்', என்றனர். எத்தகைய பாவஞ்செய்வாரைக்காட்டிலும், புலாலுண்பாரைமாத்திரம் அதிகமாகத் துன்பம் செய்வானென்பார் 'இடக்கடிக்கும்' என்றனர். சிவஞானதீபம். "எவ்வுயிரு மும்முயிரா மென்றுநோக்கி இரங்காது கொன்றருந்து பிழிவினோரை, வல்வியமரருந் தண்டஞ்செய்து வல்லிரும்பை

புருக்கிரைய வாயில் வார்த்துச், செவ்வியச்செம்பு நாகில் வீழ்த்தி மாறுசெய்வினைகள் செய்வரென வேதமோதும்" என்றதற் காண்க.

நாறு முடலை நரிப்பொதிச் சோற்றினை நான்றினமுஞ்
சோறுங் கறியு நிரப்பிய பாண்டத்தைச் சோரவிட்டுக்
கூறு மலமு மிரத்தமுஞ் சேருங் குழியில்வீழா
தேறும் படியருள் வாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை.) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நாற்றமெடுக்கின்ற தேகத்தை, நரிகளுண்ணத் தகுந்த உணவான சோறுடைக்கத் தகுந்ததனை! நான் தினந் தோறும் சோற்றினையும் பதார்த்தத்தினையும் போட்டு அடைத்த பாண்டத்தினை, மாதர்களுடைய மலமும் இரத்தமும் சேர்தற்கேது வான பள்ளத்தில் விழாதபடி (முத்தியக்கரை) ஏறும்படி கிருபைசெய்வாய்.

(கு-ரை.) "தொழியென்பாய்ச்சிக் குடிலையல்லவோ இத்தொழி யென்பவருக் கென்னோருமிதே" என்றதற்கேற்ப மாதர் கருப்பத் தினைக் குழியென்றனர். (34)

சொக்கிட் டரண்மனை புக்குத் திருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைச் சேர்வது போற்சிவ சிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கம பத்திக்கு விட்டுச்சிக்கு
மொக்கும் பெருந்தவர்க் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! அரசன் அரண்மனைப்புகுந்து மயக்கமிட்டுத் திருடிய துட்டர்கள் (மறுபடியும்) எட்டுத்திக்கும் கீர்த்திபெற்ற அரசரை

யாசகங்கேட்பதுபோல, சிவபெருமானை சிந்தித்து அறிவிற்சிறந்த குருலிங்க சங்கமர்களையடைந்து பின்னர் மோட்சவீட்டிற்கும் இச்சிக்கும் வயிறு பெருத்தவர்க்கு என்னவென்று சொல்லுவேன்.

(கு-ரை.) சிவபெருமானை ஆன்மாவாகிய தானேயென்றும் குருலிங்க சங்கமங்கள் விவகாரத்தில் மாத்திரம் வழிபடத்தக்கவர்களென்று கூறித்திரிந்து மறுபடியும் சிவாலயத்திற்சென்று மோட்சமடைய விரும்புவாரடையுங்கதி நரகமாகலின் ‘அவர்க்கென் சொல்லுவேன்’ என்றனர். (35)

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் னாமத்தைப்போற்றித்த
மருந்தா முலைபங்க ரென்னாத பாதக ரம்புவியி
லிருந்தாவ தேதுகண் டாயிறை வாகச்சி யேகம்பனே.

(கு-ரை.) இறைவனே! காஞ்சிபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! நீதேடி அதிதியாக வந்தவர்களுக்கு அன்னம் வேண்டிய அளவுகொடுக்க மனங்கொள்ளார், (தாங்கள்மாத்திரம்) செல்வமிகவுண்டாக வாழ்ந்துவருவர், தேவரீர் திருப்பெயரினைச் சொல்லி உண்ணாமுலைப்பாகத்தி லெழுந்தருளியிருக்கும் அண்ணாமலையானேயென்னா அத்தகையபாவிகள் உலகத்தில்வாழ்ந்து வருதலினாலென்ன பிரயோசனம்.

(கு-ரை.) திருக்குறள் ‘விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று’, திருமந்திரம், ‘சிவசிவவென்கிலர் தீவினையாளர்” என்றவற்றிற்கு மாறுப்பாவிகள் விருந்தினையு மோம்பார் சிவநாம முச்சரியார் இத்தகையினர் தாங்களும் பிரயோசனமடையாது உலகிற்கு முபயோக மல்லாதிருப்பராகலின் ‘அம்புவியிலிருந்தாவ தேதுகண்டாய்’, என்றனர். (36)

எல்லா மறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லா னறிந்துள னென்றுணா ராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்பி
னெல்லாஞ் சிவன்செய லேயென்பர் காண்கச்சி யேகம்பனே.

(பொ-ரை.) காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனே! எல்லா நூல்களையும் தெரிந்து படித்தேயிருந்தும் நமக்கேற்பட்டிருக்கின்ற அளவினை எல்லாம்வல்ல சிவபெருமான் தெரிந்து கொண்டிருக்கிறு னென்பதனை யறியாது, புத்திகெட்டு இலவுகீகச் சொற்களால் மருண்டு, உற்றவிதியின்படி துக்கமடைந்து பின்னர் எல்லாம் சிவன்செயலென்று தோர்வர் (இஃதென்ன) அறியாமை.)

(கு-ரை.) எவ்வளவ் கற்றவர்களாயிருக்கினும் அவரவர்கள் கன்மத்திற்குத் தருந்தபடி யச்சிவபெருமான் கூட்டிவைப்பதல்லது நமது மியற்சியாலியாது நடப்பதன்றெனத் தோராது செல்வச் செருக்கால் மறந்து வாழ்ந்து, தரித்திரமுற்றபின் யாவும் சிவன்செயலாலே வருமெனவறிவர். (37)

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர் பூவையன்ன
டன்னை நினைந்து வெகுவா யுருகுவர் தாரணியி
லுன்னை நினைந்திங் குனைப்பூசி யாத வுலுத்தரெல்லா
மென்னை யிருந்துகண் டாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! திரவியத்தின் மேலாசையை வைத்து அதைச் சேகரிக்கப் பெருமுயற்சிசெய்து சம்பாதிப்பார், இலக்குமிக்குச்சமான வாழ்க்கை வாய்ந்த பெண்ணினை எண்ணி அதிக

மாக மனமுருகுவர் பூமியின் கண்ணே தேவரீரைத் தியானித்துத் தேவரீரைப் பூசியாத உலோபிகளாகிய இவரெல்லாம் உலகிலிருந்து என்ன பிரயோசனம்.

(கு-ரை.) உலகத்தில் பகிர்முகமாக அனுபவிக்க வேண்டிய இன்பங்கட்கேதுவாயுள்ள அநித்திய சாதனங்களில் நாட்டங்கொண்டிருக்கிறார்களே யன்றி அந்தர்முகமாக அனுபவிக்கவேண்டிய பேரின்பத்தினுக் கேதுவாகவுள்ள நித்தியசாதனங்களி ல்நாட்டங் கொண்டிலரென்பதாம். (38

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவ மேசெயு நிர்மூடர் தம்மைக் குவலயத்து
னெடும்பனை போல வளர்ந்துநல் லோர்த நெறியறியா
விடும்பரை யேன்வகுத் தாயிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! (எந்நேரமும்) கடிந்து பேசுகின்ற வம்பு வார்த்தையுடையவரை சீலம் சிறிது மில்லாரை, கோட்சொல்பவரை, காமாந்தகாரரை, கொடியபாவச் செயல்களையே செய்யும் புத்தியில்லாதவரை இத்தகையரை (இவ்வுலகில்) நீண்ட பனைமரம் போல் வளர்ந்து நல்லவர்களுடைய நன்னெறியினைச் சிறிதுமறியாத செருக்கினரை என் மனிதவகுப்பிலுண்டாக்கினை.

(கு-ரை) மனிதசென்மமெடுத்து நீதிநூல்களிற் கூறிவைத்த நன்னெறியிற் சிறிதும் நடவாது முற்று மாறாக நடந்து தன்னையடுத்த அனேகருக்குத் தீங்குகளையே விளைவிப்பவர் உலகத்தில் யாதொரு பிரயோசனமுமில்லை யென்பார், இடும்பரையேன் வகுத்தாய் என்றனர். (39)

கொன்றே னனேக முயிரையெல் லாம்பின்பு கொன்றுகொன்று
தின்றே னதன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கவென்றே
நின்றேனின் சன்னிதிக் கேயத னாற்குற்ற நீபொறுப்பா
யென்றே யுனைநம்பி னேனிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! எண்ணிலாவுயிர்களை (ஆகாரத்தின் பொருட்டுக்) கொன்றேன், அவற்றை யெல்லாம் இம்சைசெய்து இம்சை செய்துபுசித்தேன், அல்லாமலும் (அனேக வுயிர்கட்குத்) தீங்கு செய்தேன், இப்பாவ மனைத்தினையும் போக்கடித்துக் கொள்ள வேண்டித் தேவரீர் சன்னிதானத்தி லிருந்தேன் ஆகலின் தேவரை எனது குற்றங்களைப் பொறுத்தருள்வாயென்றெண்ணித் தேவரீரை நம்பினேன்.

(கு-ரை) கொல்லுதலினாலேயும் அவற்றைத் தின்னுதலினாலேயும் பெரும்பாவம் விளையுமென அறியாக்காலத்தி லெல்லாம் இங்ஙனம் செய்துவந்தேன். நூலாராய்ச்சியாலும் நல்லோர் சார்பாலும் பாவமென வறிந்தபின் தேவரீரை கோயிலையடைந்தேன். பாவத்தினைப் போக்கியாள வேண்டுமென்பதாம். (10)

ஊரிருந் தென்னநல் லோரிருந் தென்னுப காரமுள்ள
பேரிருந் தென்பெற்ற தாயிருந் தென்கடப் பெண்கொடியாள்
சீரிருந் தென்னநற் சிறப்பிருந் தென்னவித் தேபததினி
லேரிருந் தென்வல்ல வாவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) இறைவனே! காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பர நாதனே! இவ்வுலகில் ஒரு ஊர் சொந்தமாக விருந்தென்ன, நல்லவர்க ளிருந்தென்ன உபசரிக்கும் பேரிருந்தென்ன

ஈன்றதாயிருந்தென்ன, அழகினைவாய்ந்த கொடிபோன்ற பெண்ணும் அவர் கொண்டுவந்த சீதனமிருந்தென்ன, நல்ல புகழ்ச்சியிருந்தென்ன, அழகு மிருந்தென்ன எல்லாம் வல்லவனே (தேவரீர் அருள் சிறிதுமில்லையே.)

(கு-ரை.) உலகின்கண்ணே யனுபவிக்கவேண்டிய போகங்கட்குரித்தானசுகமனைத்தும் ஏராளமாயிருக்கினும் சிவபெருமான் திருவருளில்லாதபோது ஒன்றும் பிரயோசனமில்லையென்பதாம்.

வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பா லடிக்கக் களிவண்டுகூர்ந்
தல்லார் பொழிற்றில்லை யம்பல வாணர்க்கோ ரன்னைபிதா
வில்லாத தாலல்ல வோவிறை வாகச்சி யேகம்பனே.

(பொ.ரை) இறைவனே! காஞ்சிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரநாதனே! ஒருவன் வில்லினால் அடிக்கவும், ஒருவன் செருப்பினாலுதைக்கவும், ஒருவன் கோபித்துக் கல்லாலெறியவும், ஒருவன் பிரம்பினாலடிக்கவும் (நேர்ந்ததெல்லாம்) மதுவையுண்ணும் வண்டுகள் தங்கி, மேகங்கள் தவழப்பெற்ற சோலைசூழ்ந்த திருத்தில்லையம் பதியிலே கனகசபையிலே நிர்த்தனம்பண்ணும் பெருமானுக்குத் தாய்தந்தைமாரிருந்து கேளாததினாலல்லவா.

(கு-ரை) வில்லாலடித்தவன் அருச்சுனன், செருப்பாலுதைத்தவன் கண்ணப்பநாயனார், கல்லாலெறிந்தவன் சாக்கியநாயனார், பிரம்பாலடித்தவன் அரிமர்த்தனபாண்டியன், சிவபெருமான் தாய்தந்தையரில்லாது நித்தியனாயுள்ளவனாகலின் இங்ஙனம் அடியார்க்கெளியனாயிருந்து இங்ஙனம் பாடுபட்டு அடியார்களை யாட்கொண்டு தமது சர்வஞ்ஞத்துவத்தை நிறுத்தினர். தாய்தந்தையரை வாய்ந்த மற்றைய தேவர்களிங்ஙனம் செய்யாரென்பதாம். (42)

திருவேகம்பம்

எண்சீர் விருத்தம்.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதனே! (இதுகாறுமெடுத்த கோடானுகோடி சென்மங்களில் வாய்த்த) தாய்மார்கள் எத்தனைபேர்களோ, தந்தையர்கள் எத்தனைபேர்களோ, மனைவிமார்கள் எத்தனைபேர்களோ, புத்திரர்கள் புத்திரிகள் எத்தனைபேரோ இதற்கு முன்பேயெடுத்த சென்மங்கள் எத்தனையோ, மூடனாகிய சிறியேனுந் தெரிந்தேனில்லை, இனிமேல் வரும் சென்மங்கள் எத்தனையோ; இவற்றை யொழித்தற்கென்ன உபாயஞ் செய்வேன்.

(கு-ரை.) இதுகாறு மெடுத்துள்ள எண்ணில்லாத சென்மங்களினும், இனியெடுக்கும் அளவில்லா சென்மங்களினும், மேற்படிச் சுற்றத்தினர்கட்கு இவ்வளவென்றுத் தொகைதெரிந்து சொல்வது கூடாதாகலின் எத்தனை எத்தனை யென்றனர். இனிமேலுமொரு தாய்வயிற்றிற் பிறவாதபடி செய்தருளவேண்டுமென்பது குறிப்பு.

திருத்தில்லை.

கட்டளைக்கலித்துறை.

காம்பிணங் கும்பலைத் தோளார்க்கும்
　　பொன்னுக்குங் காசினுக்கும்
நாம்பிணங் கும்பல வாசையும் விட்டுத்
　　தனித்துச் செத்தார்
போம்பிணந் தன்னைத் திரளாகக் கூடிப்
　　புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதையோவென்
　　செய்வேன்றில்லைச் சங்கரனே.

(பொ-ரை) திருத்தில்லையில் எழுந்தருளியிருக்கும் சங்கரனே! மூங்கிலினையொத்த பெருத்ததோளையுடையமாதர்கட்கும், பூமிக்கும் தாம்பொருக்கும் பற்பல அவாவினையும் நீக்கித்தனியாக இறந்துபோகின்ற பிணந்தன்னைச் (சூழ்ந்து) கூட்டமாகச்சேர்ந்து மேல்விழுந்து புரண்டு இனிமேல்சாகப்போகிற பிணங்கள் புலம்புகின்றன அந்தோ இந்த வறியாமைக் சென்செய்வேன்.)

(கு-ரை) மரணம் நிச்சயமாகலினாலும், இறந்துபட்டவர்கள் போலவே நாமும் சிற்சிலநாளிலிறக்கவேண்டியது திண்ணமாகலினாலும், ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலு மாண்டார்வருவாரிலவாகலாலும் அறியாமையால் வீணே கூக்குரலிடுவதினாலென்ன பயன் என்று இரங்கிக் கூறுவார் 'என் செய்வேன் என்றனர். (1)

சோறிடு நாடு துணிதருங் குப்பைகொண் டன்பரைக்கண்
டேறிடுங் கைக ளிறுங்கிடுந் தீவினை யெப்பொழுது

நீறிடு மேனியர் சிற்றம் பலர்நிருத் தங்கண்டா
லூறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்ளமுமே.

(பொ-ரை) எக்காலத்தும் திருநீறு பூத்த திருமேனியாய் சிற்றம்பலத்திலே செய்தருளும் ஆனந்தநிர்த்தனத்தினைத் தரிசித்தால் உலகத்தினர் அன்னமளிப்பர், குப்பை வஸ்திரங்கொடுக்கும், சிவத்தொண்டு செய்யும் அடியாரைக்கண்டு இரண்டு கரங்களும் கூப்பும், தீவினைகளொழியும், கண்களினின்றும் (ஆனந்தக்) கண்ணீர் ஊற்றெடுக்கும் என்னெஞ்சமும்உள்ளமும்நரைந்துருகும்.

(கு-ரை) தில்லைச் சிற்றம்பலத்திலே ஆனந்தநிர்த்தனமிடும் நடராஜப்பிரபுவினைத் தரிசித்த மாத்திரத்தில் உடலினுக்குவேண்டியன பிறர்தாட்சன்னியமின்றிக் கிடைப்பதுடன் சிவபத்திவிளைவதற் கேதுவாகிய சாதனங்களும் நிகழுமென்பதாம். (2)

அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப்பொன் னம்பலத்தார்
நிழலுக்கு ணின்று தவமுஞற் றுமனிட் டூரமின்னார்
குழலுக் கிசைந்த வகைமாலைக் கொண்டுகுற் றேவல்செய்து
விழலுக்கு முத்துலை யிட்டிறைத் தேனென் விதிவசமே.

(பொ-ரை) பொன்னம்பலத்திலே தாண்டவம் செய்தருளும் பெருமானாரது திருவருணிழல் பரவும் சிதம்பராலயத்தில் இருந்து அக்கினியிற்பட்ட வெண்ணெபென மனமுருகித் (திருத்தொண்டாகிய) தவத்தினைச்செய்யாமல், கொடுமை வார்த்தைகளைப்பேசி பெண்களின் கூந்தலுக்கு பொருந்திய விதமான புட்பமாலைதந்து அவர்கட்கு வேண்டிய சிறிய வேலைகளைச்செய்து, விழற்புல் விளைவதற்கு மூன்றுதுலா வைத்துச் சலமிறைத்தவனை நிகர்த்தேன் என் தலைவிதியே.

(சூ-ரை) மோட்ச வீட்டிற்கு வேண்டிய பேரின்பத்தையனு
பவித்தற் கேதுவாகயுள்ள சிவாலயத் தொண்டினைச் செய்து கால
த்தை வீணாய்க்கழித்தே னென்பார் 'விழலுக்குமுத்துலையிட்டி
றைத்தேன்' என்றனர். (3)

ஓடாமற் பாழுக் குழைபாம லோ முறைப்பவர்பாற்
கூடாம னல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபநெஞ்சிர
றோடாம னன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கின்ற (ஆசாரிய
மூர்த்தியாகிய (பெருமானே! (வயிற்றினிமித்தம் அங்கு மிங்கும் (ஓ
டாமல் பிரயோசனமற்ற காரியங்கட்கு உழைக்காமல் வஞ்சகவார்
த்தைப் பேசுபவர்பால் நேசியாமல், அடியார்க்கூட்டம் பிரியா
மல், கொடிய கோபத்தினை மனத்தில் வையாமல், நன்மைகளைச்
செய்யாமல், இன்றைக்கென்செய்வது நாளைக்கென்செய்வதென்று
(துக்கித்துத் திரவியம் தேடாமல் (நினது திருவருட்) செல்வம்
தந்தருளுவாயாக.

(கு-ரை.) உலகத்தின்கண்ணே உடலை காத்தலின் பொருட்டு
எத்தனையோ விதமாக முயற்சிசெய்யவேண்டியிருக்கின்றது. செய்
யாம லிருத்தற்கும் கூடவில்லை. தேவரீர் திருவருட் செல்வம்
படைத்துவிடும் பட்சத்தில் இம்முயற்சி யனைத்தும் தாமே நழுவி
விடுமென்பதாம்.

பாராம லேற்பவர்க் கில்லையென் னாமற் பழுதுசொல்லி
வாராமற் பாவங்கள் வந்தணு காமன் மனமயர்ந்து
பேராமற் சேவை பிரியாம லன்பு பெறுதவரைச்
சேராமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தி லெழுந்தருளி யிருக்கும் (ஆசாரி
மூர்த்தியாகிய) பெருமானே! உயர்வு தாழ்வு பாராமல், பிச்சை
யென வந்தவர்கட்கு இல்லை யென்று சொல்லாமல், பிறருக்கு
குற்றஞ்சொல்லித் திரிடாமல், பாவத்துக்கேதுவான செயல்க
செய்யாமல் மனமானது (நல்ல முயற்சியில்) சோர்வடைந்து வி
ழாமல், சிவதரிசனம் விடாமல் சிவனிடத்து அன்பில்லாதவரை
சேராமல் இருக்கும்படியான திருவருட் செல்வத்தினை தந்தரு
வாய்.

(கு-ரை.) பிரபஞ்சத்தில் திரவியம் சேகரித்துச் செலவு செ
யாதிருக்கவேண்டிய முயற்சியில் மனமெவ்வெவ்வகையிற் போ
மோ அவைகளை யெல்லாந்தடுத்து, திருவடிச் செல்வம் அடை
வேண்டிய முயற்சியிலேயே யிருக்கவேண்டு மென்பதாம். (

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கொள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கும் (ஆசா
மூர்த்தியாகிய பெருமானே! (ஒரு வுயிரையும்) கொல்லாமல்) அ
னம்) கொன்றதனைப் புசியாமல், வஞ்சனை, புறக்கூறல், திரு
டுக்கற்றுக்கொள்ளாமல் வஞ்சகருடன் கூடாமல் மனதிலேனு
பொய்சொல்லாமல் பிறர்ப்பொய்ச் சொற்களைக்கேளாமல், மயி
ரோபன்ற சாயையுடைய மாதர்கள் மயக்கத்திலே சிக்காமல் தே
நீர் திருவருட் செல்வந்தந்தருள வேண்டும்.

(கு-ரை) இவ்வுலகில் தீமையான காரியங்கள் எவ்வளவோ அவ்வளவு மென்னைவிட்டு விலகவேண்டுமாயின் தேவரீரது திருவருட் செல்வம் கிடைத்தாலல்லது வேறுவழியி னீங்காதாகலின் திருவருள்புரிய வேண்டுமென்றனர். (6)

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

(பொ-ரை) முடிதரித்த அரசர்களும், மற்று மனேகமான உயர்ந்த பதவியிலுள்ள அவர்களும் (இறந்து சுடுகாட்டி லெரிகிற போது) ஒரு கைப்பிடி சாம்பலாகி வெந்து பின்னர் மண்ணாய் (பிரத்தி யட்சமாகப்) பார்த்திருந்தும் மேலும் இவ்வுலகத்தின் வாழ்வினையே நாடுவ தல்லாமல் பொன்மயமாகிய அம்பலத்தி லெழுந்தருளி யிருக்கும்பெருமான் திருவடியினையடைந்து நாமனைவரும் பிழைக்கவேண்டுமென்று தெரிந்து கொள்ளுவாரில்லை.

(கு-ரை) இவ்வுலகில் எத்தகையினரும் முடிவில் சாம்பலாகி விடுவதனைப் பிரத்தியட்சமாகத் தெரிந்திருந்தும் அஞ்ஞானமேயழிதற்கேது வாகவுள்ள பிரபஞ்ச வாழ்வினை நாடி யலைகின்றனரே யன்றிச் சாம்பலாகாத வாழ்வின் [illegible] வை நாடுகின்றார்களில்லையே என்செய்வ னென்பதாம். (7)

காலை யுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சால வுபாதி பசிதாக மாகுமுற் சஞ்சிதமா
மாலை யுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
பால முசர்க்கரு ளம்பல வாவென்னை யாண்டருளே.

(பொ-ரை) ஆலகாலவிஷத்தினை விரும்பியுண்டருளியபொன் னம்பல நாதனே! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருநாளும்) காலையி லுண்டாகின்ற உபத்திரவம் மலசலப் பிரவர்த்தியாம் அல்லாமல் நடுப்பகலில் மிகுந்த உபத்திரவம் பசியெடுத்தலும் தாகம்வேண்டு தலுமாம் மாலைக்காலத்தின் உபத்திரவம் பூர்வவினைக்குத் தகுந்த படி தூக்கமும் பெண்போகமுமாம். இவற்றை நீக்கியாண்டருள வேண்டும்.

(கு-ரை.) எழுந்தது முதல் தூங்கும் வரையில் பற்பல இன்றி யமையாத துன்பங்களிற்கட்டுப்பட்டிருத்தலினால் இவற்றினின்று நீங்கி நிருவிகற்பச மாதியிலிருந்து நித்தியானந்த சுகமனுபவிக்கும் தன்மையை யளித்தருள வேண்டுமென்பதாம். (8)

ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாண ரருகிற்சென்றாற்
பாயு மிடபங் கடிக்கு மரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங் கணமும் பெருந்தலைப் பூதமும் பின்றொடர
போமென்செய் வாய்மன மேபிணக் காடவர் போமிடமே.

(பொ-ரை) மனமே! எவராலும் ஆராயப்படுகின்ற புகழினை வாய்ந்த திருத்தில்லை யம்பலநாதர் சமீபத்திலடைந்தால் மாடொ ன்றுமுட்டவரும், பாம்பகடிக்கவரும், பின்பாகத்திற் சென்றாலோ பேயும் வேதாளமும், பெரியதலையினையுடைய பூதமும் நின்று பின்னேதொடர்ந்து (மருட்டு) அவர்போகும் இடமெல்லாம்பிணங் கள் நிறைந்த காடாக விருக்கும (அத்தகையரிடத்து) நீ போ யென்ன செய்குவை.

(கு-ரை) இத்திருச்செய்யுள் நிந்தாத்துதிமாடு தருமசொரூப மெனவும், பாம்பு மாயை சொரூபமெனவும், பேய் முதலிய தெய்வ சொரூபங்க ளெனவும், பிணக்காடு சர்வசங்கார காலத்திலுலக

ருக்குந் தன்மையெனவும் உணரப்பெறாத அறிவிலிகட்குச் சமா
ய மாடுபோலவும், பாரம்புபோலவும், பேய்முதலிய போலவும்
டுகொடுபோலவும் தோன்றுமாகலின் இத்தகையினர் கோயிற்லி
ச் சென்று என்னபிரயோசன மென்பார். 'போயென் செய்ாய்'
ன்றனர். (9)

டுமெ டுத்தத ளாடையுஞ் சுற்றி யுலாவிமெள்ள
டுக டோறும் பலிவாங்கி யேவிதி யற்றவர்போ
டும ருட்கொண்டிங் கம்பலத் தேநிற்கு மாண்டிதன்னைத்
தடுங் கணக்கென்ன காண்சிவ காம சவுந்தரியே

(பொ-ரை) (சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கும் (சிவகாம
வுந்தரியே! (பிச்சையெடுக்கும்பொருட்டு) ஓடும்தாங்கி, (மேற்
பார்வைக்கு) தோலாடையும் பூண்டு, இங்குமங்குந் திரிந்து மெ
வாக வீடுகள் தோறும் பிச்சைவாங்கி, திக்கற்றவர்போலமருட்
வாய்ந்து வெட்ட வெளியினிற்கும் ஆண்டியினை நாடும்விதமென்
வோ (அறிகிலேன்.)

(கு - ரை.) சிவபெருமான் ஓடு எடுத்தது பிரமன் சிரச் சேத
த்தையும், தோலாடை கொண்டது, கஜயுத்தத்தையும், பிச்சை
ங்கியது தாருவனக்குரீடா விலாசத்தையும் அம்பலத்தேநிற்பது
தா நிருத்தத்தினையுமாகலின் இவ்வுண்மை சிவகாம சௌந்தரி
ய யறிவாளாகலின், 'தேடுங்கணக்கென்னகாண்' என்றனர். (10)

ட்டுவிப் பானு முறங்குவிப் பானுமிங் கொன்றொடொன்றை
ட்டுவிப் பானு மூபங்குவிப் பானு முயன்றவினை
ட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
ட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.

(பொ-ரை) (ஆன்மகோடிகளை) உண்பிக்கின்றவனும், தூங்கு
விக்கின்றவனும், ஒருபொருளுடன் மற்றொருபொருளைச் சேர்ப்
பிக்கின்றவனும், தொழில் செய்விப்பவனும், அதன் பிரயோசன
த்தைக் காட்டுவிப்பவனும், பாசக்கயிற்றின் வழியாட்டு விப்பவ
னும் தில்லைச் சிற்றம்பலத்தே சிவபெருமானொருவனுண்டு.

(பொ-ரை) ஆன்மாக்கள் சுதந்தர வீனராகலின் தாங்களே
பாசத்தைப் பற்றாராகலினாலும், பாசம் சடமாகலின் தானே ஆன்
மாக்களைச் சேராவாகலினாலும், ஆனால் கன்மத்திற்குத் தக்கபடி
ஆன்மாக்கள் பாசத்தினை யனுபவிக்கவேண்டிய அவசியமாகலி
னாலும் பசுபாசங்களைக் கடந்த வொருபதியாகிய சுதந்தரன் சந்நி
தானத்திலேயே யாவும் நிகழுமாகலின், 'ஒருவனுண்டே' என்ற
னர். தில்லையம்பலமென்று குறித்ததனால் அவ்வம்பலத்தில் நட
ராஜப்பிரபு ஆடப் பிரபஞ்சமனைத்தும் போகத்தில் ஆடுமென்பதா
யிற்று, திருமந்திரம்; "தத்துவமாடச் சதாசிவந்தானாட, சித்தமு
மாடச் சிவசத்தி தானாட, வைத்த சராசரமாட மறையாட, வத்
தனுமாடினா னானந்தக்கூத்தே" என்பதனாற் காண்க. (11)

அடியார்க் கெளியவ ரம்பல வாண ரடிபணிந்தால்
மடியாமற் செல்வ வரம்பெற லாம்வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணா நித்த நிமலனருட்
குடிகாணு நாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே.

(பொ-ரை.) (சிவபெருமான்) சிவனடியார்கட்கு எளிய தன்
மை வாய்ந்தவர், பொன்னம்பலத்திலே நடனஞ்செய்பவர், அவர்
திருவடியைப் பணிந்தால் அழியாமல் திருவருட்செல்வமனுபவிக்
கும்படியான வரத்தினைப்பெறலாம், ஏழுலகத்தினையும் திருவடிய

வளர்ந்த நெடுமாலும் பிரமாவும் கண்டறியாத நித்தியனாகிய நின்மலனுடைய திருவருளையனுபவிக்கும் நாம் அவர்க்கு அடிமையாகிய குடிகள், அவர் எங்கட்கு ஆண்டானாகிய குலதெய்வமாம்.

(கு-ரை) தங்கட்கெனவொரு சுதந்தரமில்லாது உடல்பொருள் ஆவி மூன்றினையும் ஆசாரியனிட மொப்புவித்த சிவனடியார்கள் வேண்டியவற்றைச் சிவபெருமான் வலிய வந்தளித்து ஆட்கொள்வனென்பர். 'அடியார்க்கெளியவர்' என்றனர் "அடியார்க்கெளியவன் சிற்றம்பலவன்" என்றதனாற்காண்க, திருவடியால் வரம்பெறலாமென்பது "திருவடிஞான மேதிண் சித்திமுத்தியே" எனுந் திருமந்திரத்தாலும், ஆண்டானடிமையென்பது "எல்லாமுன்னடிமையே எல்லாமுன்னுடைமையே எல்லாமுனது செயலே" எனுந் தாயுமானவர் திருவாக்கானுமறிக. (12)

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங் கேமண்ட லீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே.

(பொ-ரை.) தெய்வத்தன்மைவாய்ந்த சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கும் தேவனே! தேவரீர் மனமானது ஆன்மாக்களிடத்திராது சிறிது திரும்பிவிடில் நிலையில்லாததும் கனவுபோன்றதுமான அரசர்கள் வாழ்வும் அவர் ஆளும்பூமியும் என்னவாகும், உண்மையென்றுநம்பியுள்ள செல்வமென்னவாகும்,சக்கிரவர்த்திகளின் உப்பரிகை யென்னவாகும், அலங்கரித்துள்ள நடனசாலைகள் என்னவாகும், இவையனைத்தும் கண்களுக்குண்டாகும் காட்சியேயாகும்.

(கு-ரை.) சிதம்பரேசன் பிரபஞ்சமுகமாகச்சிருஷ்டி, திதி திரோபவம், அனுக்கிரகமென்னும் நான்குகிருத்தியங்களை நடத்துகிறகாலத்தில் மாத்திரம் பிரபஞ்சவாழ்வனைத்தும் உண்டு போலத் தோன்றுமேயன்றிச் சங்காரமுகமாகத்திரும்புகிறகாலத்தில் வாழ்வனைத்தும் கண்மயக்காகமுடியுமேயல்லது வேறில்லை என்பதாம்.

உடுப்பானும் பாலனை முண்பானு முய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானு மேதென்று கேள்விசெய் வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென் றேற்பானு மேற்கக் கெடாமனின்று
தடுப்பானு நீயல்லை யோதில்லை யானந்தத் தாண்டவனே.

(பொ-ரை.) தில்லைச்சிற்றம்பலத்தின் கண்ணே ஆனந்தத்தாண்டலம் புரிந்தருளுபவனே! ஆடையுடுப்பவனும் பாலுடன் அன்னங்கலந்து உண்பவனும், பிழைப்பித்து ஒருவரைக்கெடுப்பவனும் என்னவென்று வினவுபவனும், திருப்தியாய்க்கொடுப்பவனும் இல்லையெனயாசிப்பவனும், யாசிக்கக்கொடுக்க வொட்டாமல்தடுப்பவனுந் தேவரீரேயல்லவோ.

(கு-ரை.) ஆன்மாக்களின் உள்ளும் புறம்புமாகக்கலந்து அத்துவிதமாகவிருந்து அவரவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி பிரேரேபிப்பவன் சிவபெருமானே யாகலின் 'நீயல்லையோ' வென்றனர். காரைக்காலம்மையார் "அறிவானுந்தானே, யறிவிப்பான்றானே, யறிவாய்நின்றான்றானே—யறிகின்ற மெய்ப்பொருளுந்தானே விரிசுடர் பாராகாச, மப்பொருளுந்தானேயவன்" என்றதனாற்காண்க.

வித்தாரம் பேசினுஞ் சோங்கேறி னுங்கம்ப மீதிருந்து
தத்தாவென் றோதிப் பவுரிகொண் டாடினுந் தம்முன்றம்பி

பொத்தாசை பேசினு மாவதுண் டோதில்லை யுண்ணிறைந்த
கர்த்தாவின் சொற்படி யல்லாது வேறில்லை கன்மங்களே.

(பொ-ரை) மகாவிற்பன்னமாகப் பேசினும், மரக்கலமேறி னும், மூங்கிலின்மீதிருந்து தாதாவெனக்கூறிக் கூத்தாடினும், தம் முடைய தமையன் தம்பி துணையாகப்பேசினும், ஏதாவதுண்டா குமோ, சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கிற நடராஜப்பிரபு செய் விக்கும் செயற்படியல்லாது செயல்களொன்றுமில்லை.

(கு-ரை) ஆன்மாக்கள் தங்கள் சுதந்தரங்கொண்டு எவ்வகை முயற்சிசெய்யினும் அதுகூடிவருவது சிவபெருமான் திருவருளி ருந்தாலல்லது காலத்திரயத்தும் கூடிவராதென்பார், 'சொற்படி யல்லாது வேறில்லை' யென்றனர் "அவரவருக்குள்ளபடி யீசனரு ளாலே யவரவரைக்கொண்டியற்று மானு லவரவரை, நல்லார் பொல்லாரென்று நாடுவதேனெஞ்சமே, எல்லாஞ்சிவன்செயலென் றெண்" என்றதனாற்காண்க தாதாவென்றது எதுகைநோக்கித் தத்தாவென்றாயது. (15)

பிறவா திருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
வறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே.

(பொ-ரை) மனமே! உலகத்திலே பிறவாதிருக்கும்படி சிவ பெருமான் வரமளித்தல் வேண்டும் அங்ஙனம்பெறாது உலகில் பிற ந்துவிடில் மறுபடி பிறவாதபடியிருக்க மருந்தொன்றுண்டு அது எப்படியோவெனில் தருமம்வளராநின்ற புகழோடுங்கூடிய தில்லை

யம்பலத்திலே வாழ்கின்ற நடராஜப்பிரபுவின் திருவடிக்கமலத்தினை மறவாமலிரு அதுவே நல்ல மருந்து உன்றனக்காம்.

(கு-ரை.) சிவபெருமான் திருவடி மருந்தாகி ஆன்மாக்களுக்குண்டாகும் பிறவிப்பிணியைத் தீர்க்கத்தகுந்ததாகலின் 'அதுகாணன் மருந்துனக்கே' என்றனர். தேவாரம் "மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவடி" என்றதனுற்காண்க. (16)

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞான கரனைப் புராந்தகனை
யவியா விளக்கைப்பொன் னம்பலத் தாடியை யைந்தெழுத்தாற்
செவியாம னீசெபித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே.

(பொ-ரை.) மனமே! அலையாமலிரு, சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை, உலகமுழுவதும் வியாபித்திருக்கின்ற ஞானசொரூபனை, திரிபுரமெரித்தவனை, என்றுங்கெடாததீபம்போன்றவனை பொன்னம்பலத்திலேநிர்த்தனம்பண்ணுபவனைபஞ்சாட்சர மந்திரத்தினுல் வாயால்செபியாதபடி மனத்தாலாவது செபித்துவந்தால் பிறவாத முத்தியானது உண்டாகும்.

(கு-ரை) ஒவ்வொருவரின் பிறப்பினை யொழித்தற்கேதுவாகவிருப்பது பஞ்சாக்கர மகாமந்திரமானதால் 'பிறவாமுத்திசித்திக்குமே' என்றனர். திருக்கடைக்காப்பு "வீடும பிறப்பை வறுத்துமெச்சினர், யீடை கெடுப்பன பின்னைநாடொறு, மாடுகொடுப்பன 'மன்னுமாடை,மாடியுகப்பனவஞ்செழுத்துமே" என்றதனுற்காண்க செபியாமற் செபித்தலாவது தற்போதமுன்னிட்டுச்செபிக்காமல்அருட்போதமுன்னிட்டுச்செபிக்கவேண்டுமென்பதுமொன்று.

நாலின் மறைப்பொரு ளம்பல வாணரை நம்பியவர்
பாலி லொருதரஞ் சேவிக்கொ ணாதிருப் பார்க்கருங்கன்
மேலி லெடுத்தவர் கையிலங் கைத்தைப்பர் மீண்டுமொரு
காலி னிறுத்துவர் கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே.

(பொ-ரை) நான்குவேதங்களிலும் உட்பொருளாய் விளங்கும் பொன்னம்பலத்திலே எழுந்தருளியிருக்கும் நடராஜபிரபுவை (அவரே தெய்வமென) நம்பி அவர் சந்நிதானத்தில் ஒருதரமாகிலும் வணங்காதிருப்பவர்கட்கு (என்னகதியெனில்) கருங்கல்லினை யவர்மேல் வைத்து இருகரங்கட்கும் விளங்கிடுவர், மறுபடியும் ஒற்றைக்காலினிற்கும்படி செய்வர், மறுபடியும் நெருங்கியவர் மற்றைய உறுப்புக்களையும் கட்டிடுவார்.

(கு-ரை) சிவபெருமானைத் தமது ஆயுட்குள் ஒருதரமாகிலும் வணங்காது இறந்தவர்களை எமலோகத்தில் பலவகையாகப் பல துன்பங்களினைச்செய்வர். எனவே சிவநாமங்களை ஏகதேசம் ஒருதரம் சொல்லினும் ஒருதரம்தரிசிக்கினும் புண்ணியமுண்டென்பதாம்.

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தம்மைப்
போற்றா தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச் சுற்றந் துணியுமற்றே
யேற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பார்களே.

(பொ-ரை) கங்காநதியுடனே தும்பை மலரினைத் தரித்து நிர்த்தனஞ்செய்யும் பொன்னம்பலவாணரை தோத்திரம் செய்யாதவர்கட்கு அடையாளங்களுண்டு அவை யென்னவென்றால் இவ்வுலகிலேசோறுவாசனையுங்கிடையாமல்,நன்மைகளையிழந்துஉடுக்க

வஸ்திரமின்றி, வீடுந்தோறும் போய் கையேற்றாலும் பிச்சை யிடுவாரின்றித் தாழ்ந்திருப்பார்கள்.

(கு-ரை.) ஆன்மாக்களுக்கு வேண்டிய போகங்களனைத்தையும் கூட்டிவைப்பவன்சிவபெருமானேயென்று நன்றியினைநினைந்து அவனைவணங்கி வாழ்பவர்க்கே சோறுமுதலிய யெல்லா நலனுந் தடையின்றி இம்மையிலும் அனுபவிக்க நேரிடுமென்பதாம். திருப்பாட்டு "இம்மையே தரும் சோறும் கூறையுமேத்தலாந் துயர்கெடலுமாம்" என்றதனாற்காண்க. (19)

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாம சுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்க
ளெத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே.

(பொ-ரை) நமது தந்தையை, முப்பத்துமுக்கோடி தேவர்கட்குத்தலைவனாகிய மகாதேவனை, நித்தியமாயுள்ளவனை, நமது தாயாகிய சிவகாமசுந்தரியினிடத்தில் நேசமுடையவனை, எம்முடையகருத்தினை,பொன்னம்பலத்தில் நிர்த்தனஞ்செய்யுமையனைத் தரிசிக்க (நம்முடைய) நேத்திரங்கள் எண்ணிலாதகாலம் தவம் செய்திருக்கின்றன.

(கு-ரை.) அனேக ஜென்மாந்திரங்களில் செய்த புண்ணியத்தாலன்றி நடராஜ தரிசனம் கிடையதாகலினாலும், கண்களாற் காண்டற்குரியபயன் அவன்றிருவடிதரிசனமேயாகலினாலும், "காணக் கண்களெத்தனையோ கோடியுகமோ தவஞ் செய்திருக்கின்றனவே" என்றனர் தேவாரம் "பொருவிடை பொன்றுடைப் புண்ணியமூர்த்தி புலியதள, னுருவுடையம்மலை மங்கைமணாளனுலகுக்

கெல்லார், திருவுடையந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலன் றிருவடியைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்றே" என்றதனாற் காண்க. (20)

திருச்செங்காடு.

நெருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
யிருப்பார் திருவுள மெப்படியோவின்ன மென்னையன்னைக்
கருப்பா சயக்குழிக் கேதள்ளு மோகண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ தெரியாது சிவன்செயலே.

(பொ-ரை) அக்கினிப் பிழம்புபோன்ற திருமேனியினையுடையவர், திருச்செங் கோடென்னுந் தலத்தில் ஆத்திமரத்தினிழலில் எழுந்தருளியிருப்பவர் (இவர்) திருவுள்ப்பாங்கு எத்தன்மைத்தோ? இனிமேலும்அடியேனையொருதாயின்வயிற்றினிடத்துத்தள்ளுவரோ (அல்லது) நாரணன் காண்டற்கரிய திருவடியினையே தந்து விடுவரோ அறியேன் (எல்லாம்) சிவன்செயலேயாம்.

(கு-ரை) பிறப்பதும் மோட்சமடைவதும் ஆன்மாக்களின் இச்சைவழியல்லவாகையாலும், அவரவர்கள் கன்மத்தின்வழிநடக்குமாகையாலும், அக்கன்மத்தை யூட்டுவிப்பவன் கடவுளேயாகையாலும் 'சிவன்செயலே' என்றனர். தாயுமானவரும் "சிவன்செயலாலே யாதும் வருமெனத்தேரேன் நாளும்" என்றனர். (1)

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகிவிடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்

செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

(பொ-ரை) எல்லாஞ் செய்யவல்ல திருவொற்றி யூரிலெழுந் தருளியிருக்கும் பெருமானே! சிலேட்டுமமேலிட்டு, கண்விழிகள் உள்ளடங்கி, அறிவுகெட்டு, மெய்யாகியதேகம் பொய்யென்று சொல்லும்படியான நிலையினையடைந்தபோது யான் ஒருகாரியத்தை விரும்புகிறேன் (அஃதென்னவெனில் என்னுடைய நெற்றியின்கண்ணே விபூதிதரித்து இரண்டு கரங்களும் அஞ்சலியாக விருக்கப்பண்ணி, பஞ்சாட்சரத்தைச் செபிக்கவும்செயவித்தருள வேண்டும்.

(கு-ரை) தேகத்தை விடுகிற காலத்தில் சிலதானங்களும் சிவத்தியானமும் கொண்டிருக்க வேண்டுமென்பதாம். பற்றற்பரம ஞானியாகிய பட்டினத்தடிகள் தான் சிவலிங்கவடிவாகவிளங்கும் திருவருளைப் பூரணமாக வடைந்திருந்தும் உலகத்தினை விட்டு மறையுமளவும் திருநீறு முதலிய சாதனங்களுடனிருக்க வேண்டு மென விரும்புவாராயின், தற்காலத்துச்சிலர் தாங்கள் ஞானிகளாய் விட்டோம் விபூதிமுதலிய வேண்டியதில்லையெனப்பேசி யுளறித் திரிபவர்களுடையும் கதி யென்னமோ அறியகில்லோம். (1)

சுடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படு மாமதிற் றென்னொற்றி யூான் றெருப்பரப்பி
னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே.

(பொ-ரை) மனமே! முப்புரங்களையும் எரித்தபெருமானாகிய வலிமைபொருந்திய பெரிய மதில்களாற்சூழப்பட்ட அழகிய திரு

வொற்றியூரனுடைய விசாலமான வீதியில் நடப்பவர்களது அழகிய திருவடி நம்முடைய தலையின்மேற்படும்படி நல்லபடியுருண்டு கிடப்பதுவே, பிரமனால் எழுதப்பட்டு (நமக்கெனவேற்பட்டுள்ள) எட்டினைக்கிழிக்கத்தக்கதாம். எரிக்கப்பட்டுப்போகும் சாமான்னியர் களிவ்வுண்மை யறியார்.

(கு-ரை.) திருவொற்றியூர் மோட்சபூமியாகலின் அத்தலத்தினை நாடிவந்து அவ்வீதியிலுலவும் உத்தமச்சிவனடியார்கள்திருவடிப் பரிசத்தால் மோட்சமுண்டாமென்றார். திருவொத்தியூர்வீதிசிறந்தென்பது "ஆதிமாலகழ்ந்து மண்ணையறிவரும் செய்யாதளாதந், நீதிலாவொற்றியூரிற் நீண்டுதெற்கறியபெம்மான், ஒதிநேரிழையாற்றாதங் குலகுய்யநடர்தாலந்த, வீதியின் பெருமைதன்னை யாவர் தாம் விளம்பவல்லார்" என்றதனாற் காண்க. (2)

திருவிடைமருதூர்.

காடே திரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன் பிலாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

(பொ-ரை) ।(சிவபெருமானிடத்துஉள்ளபடி) அன்பிலாதவர்கள்காட்டினிடத்தே சஞ்சாரம் செய்தென்ன, காற்றினையுணவாக்கொண்டென்ன, கந்தற்றுணிகளைத்தரித்து ஓடுகொண்டு பிச்சையெடுத்தென்ன, ஒரு பிரயோசனமுமில்லை ஓங்கியதேவர்கள் நாட்டினையொத்த திருவிடைமருதூர் பெருமானுக்கு மெய்யன்பையுடையார் மாதர்களுடன் வீட்டிலேயிருந்து கொண்டிருந்தாலும் உண்மை ஞானத்தால் விளையும் மோட்சானந்தம் அடைகுவர்.

(கு-ரை) இல்லறத்திருக்கினும், துறவறமடையினும் அன்பு காரணமாகத் திருவருளுண்டாமன்றி வேறு ஆசிரமங்களால் பிரயோசனமில்லை யென்பார், 'அன்பர் மேவுவரே' என்றனர். தாயுமானவர். "மத்தமத கரிமுகிற்குலமென்ன நின்றிலகுவாயிலுடன் மதியகடுதோய் மாடகூடச்சிகர மொய்த்தசந்திரகாந்த மணிமேடை யுச்சிமீது, முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகையார்களொடு முத்து முத்தாய்க்குலவி, மோகத்திருந்துமென் யோகத்தி னிலைநின்று மூச்சைப் பிடித்தடைத்துக், கைத்தலநகம்படை விரித்த புலி சிங்கமொடு கரடி நுழை நூழைகொண்ட, கானமலை யுச்சியிற் குகையூடிருந்துமென் கரதலாமலகமென்னச் சத்தமறமோன நிலை பெற்றவர்களுய்வார்காண் சனகாதிதுணிவிதன்றோ, சர்வபரி பூரணவகண்ட தத்துவமான சச்சிதானந்தசிவமே." என்றதனுற் காண்க. (1)

தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுறவோரும் பகையிச் செகமும்பகை
யாயும் பொழுதி லருஞ்செல்வ நீங்கிலிங் காதலினாற்
றோயுநெஞ் சேமரு தீசர்பொற் பாதஞ் சுதந்திரமே.

(பொ-ரை) பிரபஞ்சத்திலழுந்திகிடக்கும் மனதே! ஆராயுங் காலத்தில் அருமையான செல்வம் நம்மைவிட்டு நீங்கிவிடில், அருமையாகப்பெற்றெடுத்த அன்னையும்பகையாவள், விவாகஞ்செய்து கொண்டமனைவியும் பெரிய பகையாவள், தனது பிள்ளைகளும் பகையாவர் சுற்றத்தினரும் பகையாவர்இவ்வுலகத்தினரும் பகையாவர் ஆகையால் இவ்விடத்தில் திருவிடைமருதூர் பரமசிவன் அழகிய திருவடியே நமக்குச் சுதந்திரமாகும்.

(கு-ரை) செலவமுற்றகாலத்தில் உடனிருந்து சகலநன்மைகளையும்அனுபவித்துவாழ்ந்தார் எத்தகையினரும் அச்செல்வம்நீங்

கிய காலத்தில் நெருங்கிய வாழ்தலின்றிப் பகையினையும் கொள் வார் என்பார் யாரும் பகை என்றார் ஔவையார். "கல்லானேயா யிடினுங் கைப்பொரு ளங்குண்டாயின், எல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை, இல்லாளும்வேண்டாள்மற்றீன் றெடுத்த தாய்வேண்டாள் செல்லாதவன் வாயிற்சொல்" என்றதனாற் காண்க. (2)

திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புற மோகன மேமிருக்க
நாடோ நகரோ நகர்நடு வோநல மேமிருந்த
வீடோ புறந்திண்ணை யோதமி யேனுடல் வீழுமிட
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்துணை நின்பதமே.

(பொ-ரை) உயர்ந்திருக்கின்ற திருக்கழுக்குன்றத்தி லெழுந் தருளியிருக்கும் வேதாசலனே! அடியேனதுதேகம்விழுமிடம்வன த்திலோ, மரத்தடியிலோ, சமுத்திர தீரத்திலோ, மேகந்தவழும் நாட்டினிலோ, பட்டணத்திலோ, அப்பட்டணத்தின்மத்தியிலோ நன்மை மிகுந்த வீட்டிலோ, வெளித்திண்ணையிலோ (அறியேன்) தேவரீர திருப்பதமே (அக்காலத்தில்) என்னுயிருக்குத்துணையாக விருத்தல் வேண்டும்

(கு-ரை) மரணமடைவது நிச்சயம் அது இன்னகாலத்தில் இன்னவிடத்திலென அறியவாராதாகலின் அக்காலத்தில் அறிவு நிலை இங்ஙனமிருக்குமென அறிதலில்லை ஆகையினால் அவ்வமயம் என்மனத்தின் கண்ணே தேவரீர் திருவடிக்காட்சிக் கொடுத்தருள வேண்டுமென்பதாம். (1)

திருக்காளத்தி.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே.

(பொ-ரை.) கயிலையென்று சொல்லும்படியான காளத்தியி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! (தாயின்வயற்றில்)பத்து மாதம் வரையிலிருந்து, உலகில் வெளிவந்து, வயதடைந்து, பட்டு முதலிய வஸ்திரங்கள் உடுத்து, முத்தாபரணங்களும், பவளமாலை களும் தரித்து அங்குமிங்குமோடி விளையாடி (உலக அனுபவமுழு தும்) அனுபவித்தபின்பு இறந்து பூமியில் கிடக்கும் சவத்தின்சமீ பத்திலே இனி இறக்கும்பிணங்கள் சூழ்ந்துகொண்டு அழும் கார ணமென்னையோ.

(கு-ரை) தம்முளொருவனாகவிருந்தான்மாண்டு பிரத்தியட்ச மாகக்கிடப்பதைக்கண்டு தாமுமிவ்வாறு மாளவேண்டியது நிச் சயமாகலின் இனியடையவேண்டியவற்றை யடைவதற்குப் பிர யோசனமென்னவென்பார், 'கத்துங்கணக்கென்னகாண்' என்ற னர் ஔவையார் "ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலு, மாண் டார் வருவரோ மானிலத்தில்—வேண்டாம், நமக்கு மதுவழியே நாம்போமளவும், எமக்கென்னென்றிட்டுண்டிரும்" என்றதனுற் காண்க. (1)

பொன்னைப் ப்ரயோசனம் பொன்படைத் தார்க்குண்டு
பொன்படைத்தோன்

தன்னாற்ப்ர யோசனம் பொன்னுக்கங் கேதுண்டத்
தன்மையைப்போ
லுன்னாற்ப்ர யோசனம் வேணதெல் லாமுண்
டுனைப்பணியு
மென்னாற்ப்ர யோசன மேதுண்டு காளத்தி
யீச்சுரனே.

(பொ-ரை) காளத்தியிலெழுந் தருளியிருக்கும் சிவபெருமானே! பொன்னினாலடைய வேண்டிய பிரயோசனம் பொன்னினையுடையாருக்குண்டு, பொன் தன்மையினைப்போல, தேவரீரால் பிரயோசனம் அடியேனுக்கு அனேகமாகவுண்டு, தேவரீரை வணங்கும் அடியேனால் பிரயோசனம் தேவரீருக்கென்னவுண்டு (ஒன்றுமில்லை.)

(கு-ரை.) பொன்னினை யொருவன்போற்றி வருவானேயானால் அப்பொன்னினால் அவனுக்கு இம்மையிலனுபவிக்க வேண்டிய போகமனைத்துக்கும் எதுவாக விருந்து வெகுபுகழினையும் உண்டாக்கும் அப்பொன்னுக்கு அவனாலனுபவிக்கவேண்டியதொன்றுமில்லை யதுபோல திருவருளினை யொருவன் போற்றி வருவானேயானால் அத்திருவருளினுக்கு அவனாற் செய்யவேண்டியதொன்றுமில்லை என்பதாம். (2)

வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து

நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல ஞானிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே.

(பொ - ரை.) வாளைக்கொண்டு (தாயுந் தந்தையும் சம்மதித்துத் தமது) பிள்ளையினை யறுத்துப்படைத்ததுபோலச்செய்தேனல்லேன். மனைவி சொன்ன ஆணையிற்கட்டுப்பட்டு யௌவனபருவத்தைக்கழித்ததுபோல செய்வேனல்லேன், சிவப்பணி ஆறுநாள்வரையிற்செய்து கண்ணையகழ்ந்து அப்பியதுபோலச் செய்வேனல்லேன் இத்தகையான திருக்காளத்திப் பெருமானுக்கு அடிமையாகும் விதம எப்படி.

(கு - ரை,) வாளான் மகவரிந்தவர் சிறுத்தொண்டநாயனார் இளமை துறந்தவர் திருநீலகண்டநாயனார், கண்ணிடந்தப்பியவர் கண்ணப்பநாயனார். செயற்கரிய செயல்களைச்செய்து முத்தியைப் பெற்ற நாயன்மார்களிலொருவரை யொத்துவாழாத நான்கடைத் தேறுவ தெப்படி யென்பார் ஆளாவதெப்படியோ என்றனர். (3)

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ திளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக் கப்பட வும்மமைத் தாயையனே
யெப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சுரனே.

(பொ-ரை.) திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! ஒரு நாளைக்கு மூன்றுவேளை சாப்பிடவும், பின்பு தூங்கவும், பின் காமவிச்சையால் செப்புக்கிண்ணத்தினை யொத்தசிறுதனத்தியருடன் அணையவும் (காலங்கழித்து) உயிர்விடுந் தருணத்தில் கண்கலங்கியழவும் செய்தனை (இத்தகையான்) ஐயனே! எக்காலத்திலுனைத் தரிசிக்க வல்லவனாவேன்.

(கு-ரை) பிரபஞ்ச போகமே நித்தியமெனவெண்ணி உண்ணுவதிலேயும், உறங்குவதிலேயும், ஊடலிலேயும்மரணத்தருவாயலில் அந்தோ வாழ்நாளை வீணாகக்கழித்துவிட்டோமேயென ஊளையிடுதலிலேயுமாக விருக்கும்படி எனக்குக் கன்மத்தினை யூட்டிவைப்பாயேல், தேவரீரைத்தரிசித்து உய்யும் வண்ணம் எங்ஙனம் என்பார் எப்போது காணவல்லேன், என்றனர். (4)

இரைக்கே யிரவும் வகலுந் திரிந்திங் கிளைத்துமின்னு
ரைக்கே யவலக் குழியரு கேபசும் பார்த்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள் பொன்முகலிக்
கரைக்கே கல்லா நிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே.

(பொ-ரை) பொன்முகலி நதி தீரத்திலும், கல்லாலவிருட்சத்தின் கீழலிலும் எழுந்தருளியிருக்கும் திருக்காளத்தி நாதனே! ஆகாரத்தின் பொருட்டே இரவுகாலத்திலேயும் பகற்காலத்திலேயும் அலைந்து வாடி மின்னற்கொடிபோன்ற மாதர் அரையினிடத்து அப்பிரயோசனமான பள்ளத்தின் சமீபத்தில் வழுக்குநிலம்போன்ற இடத்தினின்று (நீர்முதலிய) வடியும் குழிப்புண்ணுக்கே (நாடித்) திரியும் அடியேனைத் தடுத்தாண்டருளவேண்டும்.

(கு-ரை.) பகற்காலமாத்திரமேயன்றி, இரவு காலத்திலேயும் வயிற்றினிமித்தம் ஓடியுழன்று அதனால்தேகமிளைத்தும், மாதர்கள் நிதம்பத்திலே நாட்டத்தையு முடையவனாகிப் பிரபஞ்சமுகமாக விருக்கின்றவென்னைக், குருமூர்த்தியாகி எழுந்தருளி அனேகரை முந்தியகாலத்திலாண்டு கொண்டதுபோல அடியேனையும் தடுத்தாண்டு கொண்டருளவேண்டுமென்பார், 'ஆண்டருள் கல்லாநிழற்கீழமர்ந்தருள் காளத்தியே' என்றனர். (5)

நாறுங் குருதிச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சீ
யூறு மலக்குழி காமத் துவார மொளிந்திடும்புண்
டேறுந் தசைப்பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம் விட்
டேறும் பதந்தரு வாய் திருக் காளத்தி யீச்சுரனே.

(பொ-ரை) திருக்காளத்தியி லெழுந்தருளியிருக்கும் நாதனே! நாற்றத்தினை வாய்ந்த இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிற நீர்க்காங், தோலால் அமைந்த புண்குழி, பிரதிதினமும் சீழ் ததும்பும் மலநிறைந்தபள்ளம் ஆசைவழி (புடைவையில்) மறைந்திருக்கும் இரணம், மதர்த்த தசையுடன் கூடிய பிளப்பு இரகசியமாக வனுபவிக்கவேண்டிய அற்பஇன்பம் இத்தகையதனை நீங்கி முத்தியடைதற்கேதுவுள்ள திருவடியினைத் தந்தருளுவாய்.

(கு-ரை) விரும்புதற் கேதுவான ஒரு சிறிது நன்மையின்றி முற்றும் அருவருக்கத் தகுந்த நிலையுடன்கூடிய நீச்சம் ஆகிய கடலில் தடுமாறுமடியேன் முத்தியென்னுங் கரையினையுடைய தேவரீர் திருவடியாகிய புணையைத் தந்தருள வேண்டுமென்பார். 'பதந் தருவாய்' என்றனர். (6)

கைலாயம்.

கான்சாயும் வெள்ளி மலைக் கரசேநின் கழனம்பினே
னூன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய்கர வூரக்கா
மான்சாயச் சொனுக்கை மழுவலஞ் சாய வணிந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே.

(பொ-ரை.) சிவமணம் வீசும் வெள்ளிமலையி லெழுந்தருளியிருக்கும் தலைவனே! மாமிசம்பொருந்திய (அடியேன்) பிறவியினை

நீக்கிடுவாய, திருக்கரவூர்ச்சிவசருமரின்பொருட்டு அழகிய இடது கரத்திலுள்ள மான்சாயவும், வலதுகரத்திலுள்ள மழுசாயவும் பிரணவம்போலும் வளைந்த கொன்றையிலுள்ள தேன்சொட்டவும் அழகிய திருமேனிசாய்ந்த சிவக்கொழுந்தே.

(கு-ரை.) கரவூர் என்பது திருவிருஞ்சிபுரம் அத்தலத்தில் திருமஞ்சனம் செய்கையில் திருமுடி எட்டாததுபற்றிக் குந்திக் குந்தி வருந்திய சிவசருமரென்னும் ஆதிசைவச் சிறுவர்க்காக சிவபெருமான் திருமுடியை வளைத்தருளினார். இவ்வருமைச்சரித்திரம் ஷை விரிஞ்சைத் தலபுராணத்தில் பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கத்தாலுணர்க. (1)

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துதின்று
பல்லுங் கறைபற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே.

(பொ-ரை.) திருக்கைலையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இல்லறத்திலிருந்து, நீங்கி, பசியெடுத்தகாலத்தில் பிச்சையெடுத்துப்புசித்த பல்லுகளில் (தாம்பூலந்தரித்தலாலுண்டாகிய) கறையின்றி வெண்மையானவாயாகி ஒருபதார்த்தத்திலும் பற்றுயில்லாமல், சொல்லினும் அச்சொல்லின் பொருளினும் விசாரமில்லாமல் சுகத்தினையே கொடுப்பதான சிவானந்த நித்திரையிலே எக்காலமும் தங்கி வாழ்தலெக்காலமோ (அறியகில்லேன்.)

(கு-ரை.) தேகமுள்ளளவும் பசிப்பிணி யுண்டாகுமாதலின் அப்பிணியை நிவர்த்தி செய்வதற்கு மாத்திரம் வேண்டியவொரு சிறியமுயற்சிசெய்துகொண்டு மற்றையவித்தகைய விவகாரங்க

ளிலும் செல்லாது சுகத்தினையனுபவித்துக்கொண்டிருக்கவேண்டுமென்பதாம். (2)

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனுய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே.

(பொ-ரை.) தந்தையே! திருக்கைலயி லெழுந்தருளி யிருப்பவனே! கோபநீங்கி, ஆசைநீங்கி, செயல்நீங்கி, நினைவுநீங்கி, மறைவுநீங்கி, யாதொரு எண்ணமுமிலலாமல், தனித்தவிடத்திலே தங்கி சிவானந்த நித்திரையாகிய உறக்கத்திலே வாழ்ந்து கொண்டிருப்பேன்.

(கு - ரை,) அனர்த்தத்திற்கு ஏதுவாகவுள்ள எந்த விஷயங்களிலும் மனத்தினைச் செலுத்தாமல் ஏகாந்த ஸ்தானத்தி லிருந்து கொண்டு சிவானுபவமாக விருந்து கொண்டிருப்பனென்பதாம்.

கையரா வேற்றுநின் றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்துநின் சந்நிதிக் கேவந்து சந்ததமு
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென் றோல மிடுவதென் றோகயி லாயத்தனே.

(பொ-ரை.) திருக்கைலயி லெழுந்தருளுயிருப்பவனே! கையினைநீட்டிப் பிச்சையெடுத்து அப்படியே புசித்துக் (குப்பையிற்கிடக்கும்) கரித்துணியிலுள்ள (கிழித்தலைத்) தையாது தரித்துச் சிவாலயத்தையடைந்து எப்போதும், தேகம் பூமியிற் படும்பட

பணிந்து மனத்துள்ளே (விளையுமானந்தத்தினாலே) மயிர்க்குச்செறிய ஐயனே என்றேயழுது கூப்பிடுவதென்நாளோ.

(கு-ரை.) அன்னத்திற்கும் ஆடைக்கும் பிரயாசையெடாது ஐயமேற்றும் அறமிசசியாத டாடையுடுத்தும் வாழுநிலையினை யடைந்திடினும் சிவாலயம் செல்லுதலிலும் சாஷ்டாங்கமாகப் பணிதலிலும், ஆனந்தமுறுதலிலும், தோத்திரம் செய்தலிலும் நீங்கக்கூடாதென்றனர். (4)

நீறுர்த்த மேனி யுரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே.

(பொ-ரை.) திருக்கைலையி லெழுந்தருளி யிருப்பவனே! விபூதி சண்ணிக்கப்பட்ட தேகமானது மயிர்க்கூச்செறியவும், மனம் நெகிழ்ந்து சேற்றினைப்போல வுருகித்தளர்ந்து தேவரீர் திருவடியிலே மாறுபடாத தியானம்வைத்துச் சிவானந்தமேற் கொண்டு மார்பினிடத்தே கண்களினின்றும் ஆற்றினைப்போல வெள்ளம் பெருக்கெடுப்பது என்நாளோ.

(கு-ரை.) விபூதிபூசிக் கண்ணீருங் கம்பலையுமாகநின்று சிவத்தியானமுடன் வாழும் பத்திநிலையே சிறந்ததென்பார் 'கிடப்பதென்றோ' என்றனர். (5)

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புக்கிட வேகாந்த மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே.

(பொ-ரை.) தந்தையே! திருக்கைலையி லெழுந்தருளி யிருப்பவனே! திரவியமுடையார் பின்னாலேபோய்த் தனக்குண்டாயிருக்கும் கஷ்டங்களை யெடுத்துச் சொல்லிப் பிரதிதினமும், பல் தெரியும்படிக் கெஞ்சித் தவியாதபடிச் சிவானந்தமனுபவிக்கு மிடத்தில் புகுந்து தன்னந்தனியனாய் எனக்குரிய இடத்திலே கவலையற்று என்றிருப்பேன்.

(கு-ரை.) வயிற்றினிமித்தம் பிறர்பாற்சென்று அவதிப்படாமல் அந்தர்முகமாக வி[illegible]ந்தானந்தங் கொண்டிருப்ப தெந்நாளோ வென்றனர். (6)

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழக்கறிந்துஞ்
சிந்திக்குஞ் சிந்தையு மானென்செய் வேனெனைத் தீதகற்றி
புந்திப் பரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போ
லெந்தைக் குரியவன் காணத்த னேகயி லாயத்தனே.

(பொ-ரை.) தந்தையே! திருக்கைலையி லெழுந்தருளியிருப்பவனே! யான் தாயாகிய குரங்கினை வலியவது தன்மடியைத் தாவிப் பிடித்துக்கொள்ளும் அதன் குட்டியினை யொத்திருப்பேனல்லன், நாயினேன் அப்பியாசத்தினைத் தெரிந்திருந்தும் (பாகியமான) விஷயங்களையே யெண்ணிக்கொண் டுருக்கும் மனத்தினைத் தடுக்க யான் என்ன செய்திடுவேன் அடியேனைத் தீமையினின்று நீக்கி எனது புத்தியானது ஆசையினால் தனது குட்டியினை வலியத்தாவுகின்ற பூனையினைப்போல வாட்கொள்ள என்றந்தையாகிய நினைக்கு உரியவனாக விருக்கின்றேன்.

(கு-ரை.) மர்க்கட நியாயத்தின்படி நானே தேவரீரை வந்து பற்றிக் கொள்வதற்குச் சக்தனல்லனாகலினாலே, மார்ச்சால நியாய

ப்படி தேவரீரே வலியவந்து என்னைத்தடுத்தாட்கொள்ள வேண்டும் என்றனர். (7)

வருந்தேன் பிறந்து யிறந்து மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தே னரகிற் புகுகின் றிலேன்புகழ் வாரிடத்தி
லிருந்தே னினியவர் கூட்டம் விடேனிய லஞ்செழுத்தா
மருந்தே யநுதின நின்னரு ளாற்கயி லாயத்தனே.

(பொ-ரை) திருக்கைலைமலையி லெழுந்தருளி யிருப்பவனே! தேவரீர் திருவருளினாலே இனி இறப்பினிலும் பிறப்பினிலும்வரு ந்தமாட்டேன், மயக்குகின்ற பஞ்சேந்திரியங்களின் வழியாகத்தங் கேன், நரகினிற்சேரேன் தேவரீரையே தோத்தரிப்பாரிடத்தில் சேர்ந்தேன் அத்தகையார் கூட்டத்தினின்றும் விலகேன் அழகு பொருந்திய பஞ்சாட்சரமாகிய அரியதேனினையுண்பேன்.

(கு-ரை) திருவருளினை வாய்க்கப்பெற்றார்க்குச் செனனமரண மும், பஞ்சேந்திரிய சேட்டையும், நிரயத் துன்பமும் நீங்கப்பெற் றுச் சிவனடியார்க்கூட்டுறவும் பஞ்சாட்சரதியானமும் உண்டா மென்பதாம். (8)

மதுரை.

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனந்
திடப்படு மோநின் னருளின்றி யேதின மேமலையக்
கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப்
படப்படு மோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே.

(பொ-ரை.) சொக்கலிங்கப்பெருமானே! சோமசுந்தரப் பாண் டியனே தேவரீருடைய திருவருளினை யடைதலில்லாமலே, இவ்

வுலகவாழ்க்கையானது என்றால் நீங்கமுடியுமோ அங்ஙனம் விடினும் மனந்தானுறுதிப்படுமோ இல்லை, ஆகலின் நான் எந்நாளும் அங்குமிங்கு மலைதலையின்றி நீங்குவனே, அறிவில்லார் தெருவாயவிலேசென்று கண்ணீர்வடியத் துன்பமனுபவிக்க முடியுமோ முடியாது ஆட்கொள்ளுவாயாக.

(கு-ரை.) சிவபெருமானுடைய திருவருள் கிடைத்தாலல்லாமல் பிரபஞ்சவாசனை நீங்காது, மனமொருவழிப்படாது அதுகிடையாதாதலினாலே வயிற்றினிமித்தம் கண்ணீர்த்ததும்ப அற்பர்கள் வீடுதோறும் சென்று கெஞ்சிப்பிழைக்க வேண்டுமென்பதாயிற்று.

பொது.

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம முண்டிந்த மேதினியிற்[றைக்கே.
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பி

(பொ-ரை.) இவ்வுலகிலே, உடுத்தற்குக் கவுபீனமுளது, நித்திரைசெய்ய வெளித்திண்ணைகளுளது உண்ணுவதற்கு இலைசாக அடையத்தகுந்த காய் இலைபுளகுடிக்கத்தண்ணீருளது அரிய மோட்சவழிக்குச்சாதனமாக இடபவாகனத்தின் மேலெழுந்தருளும் சிவபெருமான் திருப்பெயருளது (ஆகலின்) ஆகாயத்திலுலாவும் சந்திரனுக்குவடக்குமுனை உயர்ந்தென்ன தென்முனை சாய்ந்தென்ன இரண்டுமொன்றே.

(கு-ரை) உலகத்தின்கண்ணே யின்றியமையாது ஒருவன் அனுபவிக்க வேண்டியன மானத்தைக்காத்தலும் நித்திரைசெய்த

லும், ஆகாரமுண்ணுதலுமாகலின் இவற்றின்பொருட்டு விலையுயர்ந்த பீதாம்பர முதலிய வாடைகளையும், பஞ்சணையிட்ட மஞ்சமும் கிருதகுள பாயாசன்னமும் நாடாமல் ஒரு கோவணத்துண்டும், தெருத்திண்ணையும், சருகுமுதலியவும் போதுமென்றனர். "சிவ சிவவென்னச் சிவகதிதாமே" எனத் திருமந்திரங் கூறுதலினால் துணைக்கே திருநாமமுண்டு என்றனர் சந்திரனுனி வடதிசை புயரின் உலகத்தினுக்கு க்ஷேமமும், தென்றிசைதாழின் உலகத்தினுக்கு க்ஷாமமுமாம். உலகத்தினைக் கருதார்க்கு அக்குறி என்ன பிரயோசனமென்றனர் மணிவாசகர் "எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோரெம்பாவாய்" என்றது மிக்கருத்துக்கொண்டேயாம். (1)

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
வோடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்குசெல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
யீடு நமக்குச் சொலவே பொருவரு மிங்கில்லையே.

(பொ.ரை) நல்லமனதே; நமக்கு மோட்சவீடு திருவாலங்காட்டுத்தலம், என்றுங் குறைவுபடாத பாத்திரம் சிவபெருமான் தந்த ஓடு, விரும்பினவற்றையெல்லாம் கொடுக்கச் செல்வமிருந்த பட்டினமுண்டு, நமக்குச்சமத்துவமான வரைச்சொல்ல இவ்வுலகிலொருவரில்லை.

(கு-ரை.) ஒருவன் அத்தியாவசியமாக அனுபவிக்கவேண்டிய பலன்கள் மறுமைக்குச் சிவபோகமும், இம்மைக்குச் சீவபோகமுமாம், சிவபோகத்திற்குக்காடும், சீவபோகத்திற்கு ஓடும் நாடுபிரத்தியட்சமாகவும் இலேசாகவும் இருத்தலின் அவற்றையே நாடியிருப்பவர்தன்னைவிட வேறொருவரில்லையாகலின் ஒருவரும்மில்லையென்றனர். மோட்சவீடாகத் திருவாலங்காட்டினைக் குறித்ததெ

ன்னேயோவெனின்? இவ்வுலகில் இதுகாறுமியாரும் மோட்சமடைந்து சிவபோகமனுபவித்துக் கொண்டிருத்தல் அவ்வுலகிலேயே அது அப்பிரத்தியட்சம்: நாம் காரைக்காலம்மையார் சிவலோகமனுபவிப்பது இவ்வுலகில் திருவாலங்காட்டிலேயே இது பிரத்தியட்சம் ஆகலின் இத்தலத்தினைக் குறித்தா ரென்க. (2)

நாடிக்கொண் டீசரை நாட்டமுற் றுயிலை நாதரடி
தேடிக்கொண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயைவந்து
மூடிக்கொண் டோமென்றுங் காமா யுதங்கண் முனிந்தவென்
றீடிப்பை யோநெஞ்ச மேயுனைப் போலிலைப் பித்தர்களே.[றும்

(பொ-ரை) மனமே பிரபஞ்ச மாயையானது நம்மிடம்வந்து நம்மை மூடிக்கொண்டன வென்றும், மன்மத பாணங்கள் நம்மை பீடிக்கின்றவென்றும் இரங்கிப் பேசுகின்றனை இவையுண்டாகாதபடி சிவபெருமானைத் தேடி விசாரித்து அவர்பால் எண்ணம்வைத்தாயில்லை, அப்பெருமானுடைய திருவடியினைநாடிச் சந்தோஷித்துத் தெரிவினை யடைந்தாயில்லை அந்தோ! உன்னைப்போலப் பித்தம் பிடித்தவர்கள் (உலகில்) இல்லை.

(கு-ரை.) பிரபஞ்ச மாயா காரியங்களாலுண்டாகிற பற்றும் மாதர் மயக்கால் வரும் இச்சையுமாகிய பாகம் சிவபெருமானை யடையவேண்டிய கதியினை விசாரித்துத் தேர்ந்தார்க்குத் தாக்காதென்பதனை யறிந்தாயில்லை யென்பார் 'நெஞ்சமேயுனைப் போலிலைப் பித்தர்களே' என்றனர் திருமந்திரம் "பிரிந்தேன் பிரமன் பிணித்தோர்பாசம் தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை யறிந்தேன் வினையை யயில்மணவாளன் முரிந்தேன் புத்திரனை முந்துகின்றேனே" என்றதனுற் காண்க. (3)

கைபொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு, மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பு மியான், செய்கின்ற பூசையெவ் வாறு கொள் வாய்வினை தீர்த் தவனே.

(பொ-ரை) (அடியார்களுடைய) தீவினையையொழித்த சிவ பெருமானே! கைகளானவை (புட்பங்களைக்கொண்டு சிவபெருமா னையருச்சிக்கின்ற காலத்தில்) நேத்திரமானவை (அப்பெருமானை பாராது) வேறு பதார்த்தங்களைப் பார்க்கவும் மனமானது அப் பெருமானைச் சிந்தியாது) யாதாமொரு விஷயத்தினையெண்ணிக் கொண்டிருக்கவும், திருவோடு கூடிய வஞ்சகமாகிய நாவானது (அப்பெருமான் திருநாமங்களைச் சொல்லிக்கொண்டிராமல் (வேறு வீண்வார்த்தைகளைப் பேசவும் புலால் நாற்றத்தினுடைய தேக மானது (தனித்திருக்காமல் சாமான்யருடன்) பரிசித்துக்கொண் டிருக்கவும், காதுகளானவை (தாம் சொல்லு மந்திரங்களைக் கே ளாமல் அந்நியர் வார்த்தைகளைக் கேட்கவும் விரும்பிச்செய்கின்ற சிவபூசையினைத் தேவரீர் எங்ஙனமேற்றுக் கொள்ளுவீர்,

(கு-ரை.) சிவபூசை செய்கின்ற காலத்தில் அகக்கரணங்களும் புறக்கரணங்களும் ஒத்திருந்தாலன்றிப் பூசையால் விளையும் புண் ணியம் கைகூடாதென்பதாம். பெரியபுராணம் "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ளவளப்பருங் கரணங்கணன்குஞ், சிந்தையேயாக க்குணமொரு மூன்றுந் திருந்து சாத்துவிகமேயாக, இந்துவாழ் சடையானாடுமானந்த வெல்லையிறனிப்பெருங்கூத்தின், வந்தபேரி ன்ப வெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என்றதனாற் காண்க. (4)

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே
மண்ணுண்டு போகுதையா கெடுவீ ரிந்த மானிடமே.

(பொ - ரை.) (செகத்தீரே! சிவாலயத்தி லெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானைத்) தரிசனஞ் செய்திடற்குக் கண்ணுண்டு, தியானிக்க மனமுண்டு தேவார திருவாசகங்களை) மனமுருகிப் பாடப்பண்களுண்டு, அவற்றைக்கேட்கச் செவிகளுண்டு அப்பெருமான் திருவடியிலருச்சிக்கப் பச்சிலைகளுண்டு, (இவ்வளவும் செய்யச்சந்தோஷித்தும்) பிரத்தியட்சமாகச் சிவபெருமானிருந்துகொண்டிருக்கையில் (இவற்றிலொருகாரியமும் செய்யாமல்) இந்தத்தேகம் (மடிந்து) மண்ணாகிப்போகின்றது ஐயோ! கெட்டுப்போவீர்கள்.

(கு-ரை.) மானிடப்பிறப்பு வாய்ந்தார்க்கு இந்திரியங்களனைத்தும் சுகமாவிருக்கவும், பூசைக்குஏற்றசாதனங்கள் இலேசாகக்கிடைக்கத்தக்கனவைகளாகவிருக்கவும் இவற்றைக்கொண்டு சிவபூசைசெய்யப் பிரத்தியட்சமாகப் பெருமானைத்தரிசியாது வீணாக மடிந்து போகின்றார்களென்பார் 'மண்ணுண்டு போகுதையோ' என்றனர். தேவாரம் "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணலாரது கண்டருள் செய்யாநிற்கும் எண்ணிலிபாவிகளீதுணராமலே நண்ணி வீணாக நழுவுகின்றாரே" என்றதனாற் காண்க. (5)

சொல்லினுஞ் சொலின் முடிவிலும் வேதச் சுருதியிலு
மல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோ
ரில்லிலு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடங்
கல்லிலுஞ் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே.

(பொ-ரை.) எம்முடைய திரிநேத்திர தாரியாகிய சிவபெரு
ான் சிலையினும் விக்கிரகத்திலு மாத்திரந்தானே எழுந்தருளியிரு
பான் (அங்ஙனமன்று அவற்றில் மாத்திரமேயல்லாமல்) மந்திர
மாழியிலும், அம்மந்திரமொழியின் சித்தியிலும், வேதங்களிலும்
ஆணவமலத்தினைக் (காரியப்படுத்தலின்) அவ்வாணவமாகிய இரு
லேயும் (சுத்தமாயையினைக்) (காரியப்படுத்தலின்) மாயாகாரிய
ாகிய வாகாய வெளியிலும், மெய்கண்டசாத்திரங்களை) ஆராய்
து (பிரபஞ்சப்பற்றினை) நீங்கினோர் வீட்டிலும், அடியாரிதயத்
லும் சிவபெருமானிருக்கும் இடங்களாகும்.

(பொ-ரை.) ஓகார இடைச்சொற்குறிய எட்டுவகைப்பொருள்
ளில் ஈண்டு வினாவுதற்பொருளைத்தந்தது. !முதல்வன், உருவமே
யெனச்சாதிப்பாரையும் அருவமேயெனச்சாதிப்பாரையும் மறுத்து
அருவமாயும் உருவமாயு மிருப்பனென்றும் உண்மையினைவிருத்
ச் செய்யுள் விளக்கியது. சிலர் இத்திருச் செய்யுளைக்கொண்டு
விக்கிரகவாராதனையை மறுக்கமுன் வருவர் அந்தோ! அவர்கள்
நெற்றியிலே கண்ணினையுடைய திருவுருவத்தினைத் தெரிவிக்கும்
கண்ணுதல் என்னும் அரிய பெரியப்பிரயோகத்தினை யறியாதவ
ராயாவர், இத்தகையர் பொருட்டேயன்றே, ஆசிரியர் அத்தகைய
ரயோகம் செய்து வைத்தனர். அன்றியும் அவர்கள் முன்னுள்
ளனவும் பின்னுள்ளனவுமாகிய செய்யுள் சம்பந்தங்களை யாராவது
டா லீட நியாயமாகப் பேசிச்சருவ வியாபகலட்சணந் தேராத
ராவர். (6)

னைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற்
னைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
னைப்போரை மேவு நினையாரை நீங்கி நெறியினின்று
னைப்போ லொருவருண் டோமன மேயெனக் குற்றவரே.

(பொ-ரை.) மனமே! இத்தேகமானது (கன்மவினையின் காரியத்தாலாகியது அக்கன்மத்தினையனுபவித்து ஒழிந்தால் பின்னர் அத்தேகம் ஒருசிறிது நேரமுமிராது (இங்ஙனமானதால்) சிவபெருமானினுடைய திருவடியினைத்தியானஞ்செய். அங்ஙனம் செய்வாருடன் கூடியிரு, அங்ஙனம் செய்யாரைவிட்டு விலகு, (இச்சன்மார்க்க) வழியில்நடப்பையேல் எனக்குரியத்துணையாவார் உன்னைப்போலொருவரெனக்குக் கிடைப்பரோ? (கிடையார்)

(கு-ரை) பிராரத்துவவினையினை யனுபவிப்பதற்கே இத்தேகமோருருவாகி வந்திருக்கின்றது அவ்வினையனுபவித்துமுடியின் தேகம் நழுவிவிடும். அங்ஙனம் நழுவுவதற்கு முந்தியே அடுத்த செனனத்திற்குப் பிராரத்துவமாகவரும் ஆகாமியமேறுதபடிசிவத்தியானமும் சிவனடியார் கூட்டுறவுங்கிடைக்கப்பெறின் மறுசெனனமுண்டாகா தென்பதாம். (7)

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழலாள்கையில் முன்கொடுத்
கட்டி யிருந்த கனமாயக் காரிகன் காமமெல்லாம் [துக்
விட்டுப் பிரியவென் றேவிங்ங னேசிவன் மீண்டதுவே.

(பொ-ரை,) பட்டுவஸ்திரத்தினைக்கிழித்து (அதிலொருதுண்டெடுத்துக்கொண்டு) ஒருபெரிய ஊசியினை யாவலுடனெடுத்து (அத்துண்டினில்) பொருந்தச்சுருட்டி என்னுடையநெருங்கிய கூந்தலினையுடைய (மனைவியின்) கரத்திலேதந்து சம்பந்தித்திருந்த பெருத்த மாயாசத்தியின் இச்சையனைத்தும் என்னைவிட்டு நீங்கவேண்டுமென்றேஇப்பிரகாரம் சிவபெருமான் எழுந்தருளிவந்தது

(கு-ரை.) மருதவாணர் திருவெண்காட்டடிகட்குப் புத்திராகவிருந்து வளர்ந்து வருகையில் அவருடைய பரிபக்குவம் கண்



் அவர் துறவடையும்படிக் குறிப்பாகத் தெரிவிக்கும்பொருட்டு
ாதற்ற வூசியினைப்பட்டிற் சுருட்டிக்கொடுத்து மறைந்தபோது
திருவாய் மலர்ந்தருளிய திருச்செய்யுளீது (8)

ந்துற்ற கொங்கையு மாதர் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தாற்
தீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியுந் தந்துவிட் டானென்றன் கைதனிலே.

(பொ-ரை.) (சொக்கட்டான் காயினையொத்த தனமும் பெண்களுடைய ஆலிங்கனமும், சூழ்ந்துள்ள (பிரபஞ்ச பதார்த்தங்களும் எப்போதும் செய்துக்கொண்டிருக்கிற துன்பத்திற்கு என்ன செய்வது? (பூர்வசென்மத்திற்செய்த புண்ணியவசத்தினால் மாசற்றமருதவாணன் (எனது) மனத்தினின்றும் (உண்மை) தெரிந்துகொள்ளும் பொருட்டோ காதொடிந்த ஊசியினை எனது கரத்தினில் கொடுத்துவிட்டனன்.

(கு-ரை.) சொல்கேட்டான் என்னும் பதங்கள் சொக்கட்டானெனத்திரிந்துவழங்குகிறது. காதற்றஊசியானது நூலினைக்கொண்டு ஆடையைத் தைப்பதற்கு உபயோகப்படாததுபோல மாயாகாரியமாகிய பிரபஞ்சப்பொருளும் அப்பொருளால்வரும் போகமும் ஒரு நன்மையினையுமடையப் பிரயோசனப் படாதென்பதாயிற்று. (9)

வாதுற்ற திண்புய ரண்ணா மலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்திற்
தீதுற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

(பொ-ரை.) யுத்தம் செய்யத்தகுந்த வலிமைபொருந்திய புயத்தினைவாய்ந்த திருவண்ணாமலைக்கடவுள் தாமரைபோன்ற திருவடியினைப் புட்பங்களைக் கொண்டருச்சித்து எக்காலமும் தோத்தரிக்கும் மனமே இவ்வுலகினில் குற்றமுறுதற்கேதுவாகிய செல்வத்தினாலென்ன பிரயோசனம்? அச்செல்வத்தினைச் சம்பாதித்துப் புதைத்துவைத்துப் பிரயோசனமென்ன? சாகிற காலத்திலே காதுடைந்த ஒரு ஊசியும் உடன்வராது.

(கு-ரை.) தனக்கென எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தேடும் திரவியமும் அப்படித்தேடிய திரவியத்தைப்பத்திரப்படுத்தவேண்டுமெனும் பாதுகாப்பும் ஆகிய முயற்சியனைத்தும் அப்பிரயோசனமாகி இறந்துபோகும் காலத்தில் ஒரு சிறிதும் கொண்டுபோவதற்கு அச்செல்வத்தி லுபயோகப்படாதென்பதாம். (10)

வேதத்தி னுட்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப், போதித்த வன்மொழி கேட்டிலை யோசெய்த புண்ணியந்தா, லாதித்தன் சந்திரன் போலே வெளிச்சம தாம்பொழுது, காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

(பொ-ரை.) பூமியில் வைத்த விருப்பமும், பெண்களின்மீது வைத்தவிருப்பமும் ஒழித்துவிடுதலே வேதத்தினுட்கருத்தென்ன உபதேசஞ்செய்த ஆச்சாரியமூர்த்தியின் வார்த்தையினைக்கேட்டதில்லையோ பூர்வத்திற்செய்த புண்ணிய விசேஷத்தால் சூரியப் பிரகாசத்தினையும் ஒத்து உயிர்விளங்குகிற கிரணகாலத்தில் காதுமுறிந்த ஊசியும் உடன்வராது.

(கு-ரை.) மண்பெண்ணாகியபற்றிலுள்ள போகத்தினையொழித்தாலன்றிப் புண்ணியஞ் சித்தியாதென வுபதேசித்த ஆசாரியமூ

ர்த்திபின் வார்த்தைபிற்கட்டுப்படின் தேகம்நீக்கியகாலத்தில்ஆதரவாக இருப்பது தருமமேயன்றிப் பிரபஞ்ச பதார்த்தத்திலொரு சிறிது மில்லையென்பதாம். இருளிலும் ஒளியிலும் கட்டுப்பட்டுக் கிடந்தஆன்மாத்தேகத்தினின்று நீங்குகிறகாலத்தில் மாறுதலின்றி யொரேவெளிச்சமாகத் தோன்றுவது சுபாவசித்தமாதலின் 'ஆதித்தன்சந்திரன்போலே வெளிச்சம்' என்றனர். புண்ணியத்தாலென்றதனால் இத்தகைய வெளிச்சம் புண்ணியம்செய்து வாழ்ந்தாருக்கேயன்றிப் பாவம்புரிந்து வாழ்ந்தார்க்குத் தோன்றாதென்பதுமாம்.

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாசன்மட்டே.
இனமான சுற்ற மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே.

(பொ-ரை.) (இறந்தபின் தேகத்தைப் பிறர்தாங்கிச் செல்கின்ற காலத்தில்) மனைவியும், புத்திரர்களும், போகமும், செல்வமும், தன்னுடைய வீட்டிலேயே யிருந்துவிடும், இனமாகியசுற்றத்தினர்கள் மயானம்வரையில் வருவர், உயிர்போம் வழிக்கு என்ன துணையுண்டு (ஒன்றும் இல்லை) ஒரு தினையளவாவது ஒரு எள்ளளவாவது பூர்வம்செய்த தவத்தினையனுபவிக்க அது சிவலோகத்தையடைய கைவல்லியமாம் இது சரதமாம்.

(கு-ரை) மனைவியும், புத்திரரும், போகமும் செல்வமு உடலுக்கு ஆனந்தத்தினை விளைவித்துக்கொண்டு அதற்குபகாரமாக இருந்தனவேயன்றி ஆன்மாவிற்கன்று ஆன்மாவினுக்கு உற்றத்துணையாகவிருந்து புண்ணியத்தினையூட்டுவித்துப் பெரும்பிரயோசத்தினை விளைவிப்பது தவமொன்றேயாகும். (12)

அந்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

(பொ-ரை) திரவியமும் போகமும் வீட்டளவிலேயே, கண்களினின்றும் நீர்சிந்தப் புலம்பும் மெல்லியமாதர் தெருவாயற்படியிலேயே, தேம்பித்தேம்பி இரண்டுகரங்களையும் தலைமேல்வைத்துக் கொண்டு துக்கிக்கும் புத்திரர்கள் சுடுகாடு வரையிலேயே (நின்று விடுவர்) துணையாகவருவது இரண்டு வினைகளாகிய புண்ணியமும் பாவமுமாம்.

(கு-ரை) ஒருவன் இவ்வுலகில் புண்ணியஞ் செய்துகொண்டிருப்பானாயின் அவனிறந்தபின் அப்புண்ணியம் அவனுயிருடன் சென்று தெய்வலோகத்தில் சேர்க்கும். பாவஞ்செய்து கொண்டிருப்பானாயின் அப்பாவம் அவனுயிருடன்சென்று நரலோகத்தில் சேர்க்கும். இவ்விரண்டிற்கும் அன்னியமாகவிசுவாசித்திருந்தயாவும் வீட்டளவு சிலவும், வீதியளவு சிலவும், சுடுகாட்டளவு சிலவும், தங்கிவிடும். (13)

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் சொறிந்தெழுந்து
பாயும் புடைவையொன் றில்லாத போது பகலிரவா
யீயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகன்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே.

(பொ-ரை) (மாதர்கட்குப்) புடைவை மாத்திரமில்லா திருக்கின் சீயும், இரத்தமும், நிறைந்த மூத்திரத்துடன் அழுக்கும் நயங்கி வழிந்தோடவும், எப்போதும் (அவற்றின் துர்நாற்றத்தினைக்கண்டு

ஈயெறும்பும் நுழைகின்ற நிதம்பத்திற்குச் சதாகாலமும் (மோகம் வைத்து) மாளும் மனிதர்களை (அங்ஙனம்) மாயாமல்வைக்க மருந் தொன்றில்லையே.

(கு-ரை.) சிவபெருமான் திருவருளாகிய அவிழ்தம் கிடைத் தாலன்றி மாதர்மயக்கம் தீராதென்பதாம். மாதரை ஆசிரியர் இங் ஙனமிழித்துக் கூறியது என்னையோவெனின்? சாத்திரஆராய்ச்சி சிறிதுமில்லாதசிலமந்தமதிகள் இதுபோன்ற திருச்செய்யுள்களைப் படித்தபின்னராயினும் சிறிது ஆலோசித்து மாதர்களின் அங்கங் களில் வைத்திருக்கும் மயக்கத்தினின்று நீங்குவரென்னும்காருண் யத்தினாலேயாம். (14)

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை தினமிரந்து
நீதய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினைவெழுந்தால்
வீதிக்கு நல்ல விலைமாத ருண்டிந்த மேதினியி
லேதுக்கு நீசலித் தாய்மன மேயென்றும் புண்படவே.

(பொ-ரை) நெஞ்சமே! குளிர்ந்த பனியினை (நீக்கிக்கொள்ளு வதற்கு) இலேசாகக் கந்தையுண்டு, பிரதிதினம் யாசித்து நீ சாப் பிடசாதம் வீடுதோறுமுண்டு, காமவிச்சை எழுந்தால் தெருவில் நல்ல பொதுமகளிருண்டு, ஆகையால் இவ்வுலகில் எதன்பொருட்டு மனம் புண்படும்படிச் சலிக்கின்றனை.

(கு-ரை) குளிருக்குக் கந்தையும், வயிற்றுக்குச் சோறும் காம விச்சைக்கு மாதரும் இலேசாககிடைக்கக் கூடியவைகளாக விருக் கக் கவலையேதுக் கென்பதாம். தேகமுள்ள அளவும் அத்தேகத் தின் இந்திரியங்கட்குச்சுபாவமாக அமைந்துள்ள அழுக்கினைநீக்கிக் கொள்ளவேண்டியது தருமமாக விருத்தலினால் கண்ணினின்றும் பீளையினையும், காதினின்றும் குறும்பியினையும் மூக்கினின்று சளி

யினையும் வாயினின்று எச்சிலினையும், குறம்பினின்று நீரினையும் குதத்தினின்றும் மலத்தினையும்நீக்கிக்கொள்ளுதல்போல்சுக்கிலத்தினையுமொழித்துக்கொள்ள வேண்டுமென்பார் விலைமாதருண்டு என்றார் இம்மாதர்கள் ஒருவர் சுதந்தரத்தி லில்லாமல் யாவருக்கும் பொதுவாக இருந்து விலைக்குத்தகுந்தபடிப் பிறர்சுக்கில உபத்திரவத்தையொழிப்பவர்களாகலின் அம்மாதரைக் குறிப்பித்தார். நல்ல விலைமாதர்என்றது வேசிகளினின்றும் பிரிக்க. துறவிக்கு இங்ஙனம் நிகழ்ச்சியுண்டாதல் தருமமோவெனின் இந்நிகழ்வுமாதரைப் புணர்ந்து இன்பம்அனுபவிக்க வேண்டுமென்னும் கருத்துக்கொண்டன்று தேகத்தியற்கையாக வுண்டாகும் சேஷ்டையினைநிவர்த்தித்துக்கொண்டு நிஷ்டைக்குப் பங்கம்வராதிருக்க வேண்டுமென்பதே. மாதரைக் கொண்டேயன்றி வேறுவயையாக நிவர்த்திசெய்துகொள்ளக் கூடாதோவெனின் பெரியோர் சுக்கிலம் அப்பிரயோஜனமாகப் படாதென்பது தருமம் துறவிகட்கு இங்ஙனம் இச்சை நிகழ்தலில்லை ஒருக்கால் தேச தருமமாத்திரமாக நிகழின் இங்ஙனம் பரிகரித்துக் கொள்ளலா மென்பதாயிற்று, (15)

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்த
மாறுண்டு லாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே.

(பொ-ரை.) பிரதிதினமும் விகாரங் கொண்டு சஞ்சரித்து மயங்குகின்ற மனமே! (குளிக்க) நதியுண்டு, (விடாய்தீர) தோப்புண்டு (தங்கியிருக்க) அழகிய தெருக்களில் பொது இடமுண்டு, (தரித்துக்கொள்ள) விபூதியுண்டு, (உடுக்க) நீண்ட கந்தையாகிய கவுபீனமுண்டு, (புசிக்க) வீடுகள்தோறும் சோறுண்டு, இவ்வளவும் அனுபவித்தபின் தூங்கியெழுந்தபின் நிஷ்டை கூடியிருக்கச் சுகமுமுண்டே.

(கு - ரை) இன்றியமையாது வேண்டிய தேக சுகத்திற்குப் பலவற்றை வருந்தித்தேடாமல் இலேசாக யாவற்றையும்அனுபவிக்கலா மென்பதாயிற்று. யாவற்றையு மனுபவித்த பின்னர் தன்னந் தனியாக இருந்து சிவயோக நிஷ்டையிலும் கூடிச் சுகமனுபவிக்கலாமென்பார் 'சும்மாவிருக்கச் சுகமுமுண்டே' என்றனர். சிவயோகசாரம் "அருளறிந்து தானு மறிவர்க்கே யாங்குப், பொருளறிந்து தானடங்கிப்போத விருளகல, விம்மா திறந்து விகற்பமற வொன்றாகிச், சும்மாவிருக்கச் சுகம்" என்றதனாற் காண்க. இத்திருச்செய்யுள்சர்வசங்க பரித்தியாகமுற்ற சந்நியாசியாயினும் திருநீற்றினை விடப்படாதெனவும் ஞானிக்கு விபூதி வேண்டுவதில்லை யென்னும் ஏகான்ம வாதியரை மறுத்துக் கூறிற்று. (16)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொடுங்கி வந்தாற்
றடுக்கப் பழைய வொருவேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறத்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறையில்லையே.

(பொ - ரை.) மனமே! தரித்துக்கொள்வதற்கும், போர்த்துக்கொள்வதற்கும், குளிர்ந்த காற்றினுக்கும் வெய்யிலினுக்கும்வருந்தி வந்தால் அவற்றை நீக்கிக்கொள்ள பழமையான ஒரு வஸ்திரமுண்டு, படுத்துக்கொள்ள வேண்டுமானல் உலகமுழுவதும் வெளித்திண்ணைகள் எவ்விடங்களிலுமுண்டு, பசியுடன்வந்திடில்சோறு கொடுப்பிக்கச் சிவபெருமானுண்டு, நமக்கு வேறுவிதமான குறை யொன்றுமில்லையே.

(கு-ரை) உடலைக்காத்திடற்கு இன்றியமையாது ஒருபழைய வஸ்திரமே போது மென்பார் 'ஒரு வேட்டியுண்டு' என்றனர். இப்

புண்ணியதேயங்களில் தாங்கள் தாங்கள் வீடுகட்டுங் காலத்திலே யே அனுதரவுடைய அன்னியர் படுக்கவே தெருத்திண்ணையமைப் பது சாம்பிரதாயமாகலின் அத்திண்ணையைக் குறித்தனர். இப்பெருந்தருமம் வடதேயத்தி லில்லாமலே யிருப்பது பெருங்குறை ,ஊட்டு வித்தா லாரொருவ ருண்ணு தாரே' என்ற தேவாரத்திருவாக்கினுக்கேற்பக் 'கொடுக்கச் சிவனுண்டு' என்றனர். (17)

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டெ னும்படி கேட்டுவிட் டோமினிக் கேண்மனமே
யோடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே.

(பொ-ரை):மாடுகள் கன்றுகள் இருக்கின்றன மக்களிருக்கிறார்கள் என்று சந்தோஷிப்பதெல்லாம் (ஒருகாலத்தில்)கேட்டியுனையுமெனப்(பெரியோர்களால்) தெரிந்து கொண்டோம். (ஆகையால்) இனிச் சொல்கின்றேன் மனமே! கேட்பாயாக. பிச்சையெடுக்க ஓடு உளது, உடுத்துக்கொள்ள கந்தையுளது, மனத்திலே தியானிக்கப் பஞ்சாக்கரமுளது, குண்டல மணிந்த நீலகண்டருடைய அடியார்கள் நமக்கு உதவியுமுண்டு இவைகளைக் கேட்டனையா.

(கு - ரை.) முன்குறித்தன இம்மையில் நிலையுற்றனவு மன்று, அவற்றால் மறுமைக்கு உதவி செய்வனவுமன்று, பின்குறித்தல்இம்மையில் நிலையுற்றன இவற்றால் மறுமைக்கு உதவியுமுண்டென்பதாம்பற்றற்றபரம சன்னியாசியாயினும்பஞ்சாட்சரஜெபம் விடப்படாதெனவும் அச்செபம் மனதில் தியானமாக உபாம்ஸஜெயம் செய்யவேண்டுமெனவும் இத்திருச்செய்யுள் விளக்கியது. பாரமார்த்தி

கத்தில் செபமுதலிய வேண்டாமென்னும் ஏகான்ம வாதியரை மறுத்துக் கூறியது. (18)

மாத்தா னவத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோநித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே.

(பொ-ரை.) பெரிய பிரபஞ்சத்தால் விளையும் அவத்தையினையும் மாயையினால் காரியப்பட்ட உடலால் விளையும் மயக்கத்தினையும் நீக்கினவர்கட்குச் சதா செய்து கொண்டிருக்கவேண்டிய நிஷ்டையொன்றுளதோ, வேண்டுவதில்லை நித்தியனாயுள்ள சிவபெருமானிடத்து அன்பு பூண்டு வேர்த்தபோது ஸ்நானஞ் செய்து பசியெடுத்தபோது அன்னமுண்டும், நித்திரை வந்தபோது தூங்கியும், பார்க்கின்றவர்கட்கு உலகத்தினரைப்போலவே வாழ்ந்து வருவர் பிரபஞ்ச பற்றில்லாதவர்கள்.

(கு-ரை.) "நெக்கு நெக்குள்ளுருகி யுருகிநின்று விருந்துங்கிடந்து மெழுந்து, நக்கு மழுதுந் தொழுதும் வாழ்த்தி நானா விதத்தாற் கூத்துநவிற்றிச், செக்கர் போலுந் திருமேனித் திகழநோக்கிச் சிலிர்சிலிர்த்துப், புக்கு நிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணியைப் புணர்ந்தே" என்ற திருவாசகத்தின்படி உலகத்தவர் போலிருப்பர் 'பற்றற்றவரே' என்றனர். (19)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயிர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

(பொ-ரை) மனமே! தெய்வமானது ஒன்றெனவே யெண்ணி யிரு, அத்தெய்வம் எந்நாளுமுண்டெனவே யெண்ணியிரு, மிகுந்த செல்வமனைத்தும் நிலையற்றதென வெண்ணியிரு, பசித்துவந்தவர் முகத்தைப்பார்த்து (அன்னமிடு) நல்லதருமமும், சிநேகமும் நன்மையென் வெண்ணியிரு, நடுவு நிலைமையினின் றுங் கோணாமல் நமக்குத் (பூர்வசென்மத்தில்) விதித்தபடி (கிடைக்கு) மென்றிரு இதுவே யுனக்கு உபதேசமாம்.

(கு-ரை) திருவாசகம் 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகிய' என்றபடி தெய்வமென்பதுண்டு எனக்கொள்வது துல்லபமாகலின் 'தெய்வமுண்டென்றிரு' எனவும், அங்ஙனம் கொள்ளினும் இரண்டு மூன்று தெய்வங்களெண்ணாது, 'ஏகோருத்ரோ நத்விதீயா'' என்ற அதர்வசிகோபநிடதத்தின்படி ஒரே தெய்வமெனக் கொள்வது அதிகத் துல்லபமாகலின் 'ஒன்றென்றிரு' எனவும், "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ண" மென்றபடி, உயர் செல்வமெல்லா மன்றென்றிரு" எனவும், "அறஞ்செய விரும்பு" "பெரியாரைத் துணைக்கொள்" என்றபடி, "நல்லறமுநட்புநன்றென்றிரு' எனவும், ஓரஞ்சொல்லேல் என்றபடி, நடுநீங்காமலே, எனவும், சென்மாந்தர வினையை யனுபவிக்க வேண்டுவது கட்டாயமாகலின், நமக்கிட்டபடி யென்றென்றிரு, எனவும் கூறிப் போந்தனர். (20)

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே.

(பொ-ரை) மனமே! சற்குருவின் றிருவருளடைவதற் கிலக்கென்றிரு, உபயோகமற்ற தேகத்தை வீணாக நம்புகின்ற பொம்



மைக்கூத்தென்றிரு, சுற்றத்தினரை நெருங்கிய சந்தைக்காலத் தில்மாத்திரம் கூடிப்பிரிந்து போய்விடும் கூட்டமெனவிரு, பிர பஞ்ச) வாழ்வினை நீர்ப்பாண்டம் கவிழ்த்தலால் ஓடுகின்ற நீரோட் டமெனவிரு இதுவே உனக்குபதேசமாகும்.

(கு-ரை.) உபதேசகாண்டம், "மக்களை நிதியைப் பேதை மக ளிரை மருவசூழ்ந்து, லொக்கலை நோக்கியே மாந்துறுகதி நோற் லாராய் மிக்கிழி நரகத் தாழ்வார் மென்சிறு பறவைகண்டந் தா, கக்கவெஞ்சுழலுக்கண்டைகொண்டு விண்டுயலாதென்றே' என்ற தற்கேற்ப, உடல், சுற்றம் வாழ்வுயாவும் நிலையல்லன வென் னர். திருமந்திரம் "குருவே சிவமெனக் கூறின நந்தி, குருவேசிவ மென்பது குறித்த தோரார். குருவே சிவனுமாய்க் கோனுமாய்நிற் கும், குருவே யுரை யுணர்வற்றதோர் கோவே' என்றதனல், நாட் டமென்றேயிரு சற்குரு பாதத்தை நம்பு என்றனர்." (21)

என்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.

(பொ-ரை) (இவ்வுலகில்) சுதந்தரமாக என் செயலினாலே காரியம் விளைவது சிறிதுமில்லை, இனிமேல் கடவுளே (எல்லாம் விளைவது தேவரீர் செயலினாலேயே என்று தெரிந்துகொண் டேன்,) இந்தத்தேகம் எடுத்த பிற்பாடு (இவ்வுலகில் நான்)செய்த பொல்லாவினை யாதொன்றுங்கிடையா (தென்பதனை நானறி

வேன்) பிறப்பதற்குமுன் (பூர்வசென்மத்தினில் செய்துகொண்ட பாவகர்மமோ என்னைக்கழுவிலேறும்படி) இந்தப் பிரகாரம் விளைந்து விட்டது.

(கு-ரை.) பத்திரகிரி யரசனின் மந்திரி யேவியபடி வெண்காட்டைக் காவலாளர்கள் கழுவேற்ற அக்கழுமரத்தினைச் சமீபித்தபோது திருவாய் மலர்ந்தருளிய திருச்செய்யுளீது, ஆன்மா பரதந்திரனும் பரமான்மா சுதந்திரனுமாகலான் தன்செயலின்றி எல்லாம் அவன் செயலென்றனர் "சிவன் செயலாலே யாதும் வருமெனத்தேரேனும்" என்றனர் தாயுமானவரும். (22)

திருவேட மாகித் தெருவிற் பயின்றென்னைத் தேடிவந்து
பரிவாகப் பிச்சை பகருமென் றுன்னைப் பதம்பணிந்தேன்
கருவாகு மேவக் கடற்கரை மேவக் கருதுமென்னை
யுருவாக்கி கொள்ளவல் லோவிங்ங னேசிவ னுற்றதுவே.

(பொ-ரை) சிவவேடங்கொண்டு வீதியிலுலவி அடியேனை விசாரித்து வந்து ஆசையாகப் பிச்சைகேட்ட வொருவனது திருவடியினைப் பணிந்தேன். பிறப்பென்றும் துன்ப சமுத்திரத்தில் விழவெண்ணி யிருக்கும் அடியேனை அடிமை யாக்கிக்கொள்ளவன்றோ சிவபெருமான் (அங்ஙனம்) வந்ததுவே.

(கு-ரை.) தன்னைப் பிறவிக் கடலினின்று மெடுத்து ஆட்கொள்ளும் பொருட்டே சிவனடியார் வேடங் கொண்டுவந்து தன்பாலிரந்தனனென்பார் 'இங்ஙனே சிவனுற்றதுவே' என்றனர்.(23)

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமி ரேன்மெய் கெடாதநிலை

தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்றொல்லை நான்மறைக்கு
மெட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங் கெய்தியதே.

(பொ-ரை.) உலகப்பற்றினை நீங்கினன், நல்வினை தீவினை ரண்டினையும் விரும்பேன், (சிவநாமமல்லாத) வீண்வார்த்தை ளைப்பேசுவாரை நெருங்கேன், அவர் வார்த்தைகளைச் செவியிற் கேட்டுத் தரியேன், தேகமழியாத சித்தியினை யடைந்தேன். இன்ப துன்பங்களை யிழந்தேன் பழமையாகிய நான்கு வேதங் ட்குஎட்டுதலில்லையென்று சொல்லும்படியான சிவம் என்னிடத் நடைந்தது.

(கு-ரை.) மலத்தடிப்பால் மறைந்து கிடந்த சிவம் என்னி டத்து வெளிப்பட்ட மாத்திரத்துப் பிரபஞ்ச முகமாக வறிய வேண்டியதாகிய விஷய மனைத்திலும் இனி மனம் செல்லுதலில் லையாம். (24)

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தையைந்தும்
விட்டேறிப் போன வெளிதனி லேவியப் பொன்றுகண்டேன்
பட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே.

(பொ-ரை.) எட்டுவித அங்கயோகங்களையும், ஆறுவகையான ஆதாரங்களையும், ஐந்துபேதமான அவத்தைகளையும் கழித்து கட து மேலே சென்ற திருவருள் வியாபகத்திலே ஒரு பொருளி னைத் தரிசித்தேன். (அவ்விடத்தில்) திரட்சியாகிய செவ்விய சந் திரனிடத்துண்டாகும் ஞானாமிர்தமுண்டு களித்திருக்க (ஒருவரும்) எட்டுதற்கரிய சிவானந்த வின்பமென்றனை யுட்கொண்டு இருக் கின்றது.

(கு-ரை.) யோகம் எட்டாவன: இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சாமாதிஆதா

ரம் ஆறுவன:—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை. அவத்தை ஐந்தாவன:-சாத்திரகம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். இவற்றைக் கடந்தோர் திருவருண்மயமாகச் சிவராஜயோக நிஷ்டையிலிருந்து கொண்டு ஞானுழிர்த முண்டிருப்பரென்பதாம். (25)

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும் புன்னு யெனக்கென்னு மிந் நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேனித னலென்ன பேறெனக்கே.

(பொ-ரை.) உயிரினின்று நீங்கிய உடனே நாற்றத்திற்கேதுவா யுள்ள இச்சரீரத்தினை நெருப்புக்கொளுத்திவிடும், புழுக்களுண்டாகி மேயும், மண்தின்றுவிடும், பருந்துகொத்தும், நரி பிடுங்கும், அற்பநாய்கடிக்கும் இவையனைத்தும் தனதெனப் பாராட்டும் இத்தகையதனை) அன்புடன் காத்துவந்தேன் இதனல் நானடைந்த இலாபமென்னையோ (ஒன்றுமில்லை.)

(கு-ரை.) திருமந்திரம், உடலாரழியி லுயிராரழிவர் திடம்படுஞானம் சேரவுமாட்டா, என்றபடி ஆன்மா ஞானமடைதற்குத் தேகமுமொரு சாதனமாக இருக்க இங்ஙனம் இழித்துச் சொற்றதென்னையோவெனின்? தேகமெடுத்தலினல் அடையவேண்டிய இலாபத்தினை யடையாதார் உடலினைக்குறித்துக் கூறியபடியேயாம். அங்ஙனமாயின் தன்மேலேற்றிக் கூறியதென்னையெனின்? இது சிவஞானிகள் வழக்கு. (26)

அண்ணா ரன் வீதி யரசிருப் பாரு மணிபடை யோர்
நன்ஞெருநாளொன்ப தாபவ வேளைலு நண்ணுமிவ்வூர்



ஆன்றொன் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமுமெல்லா
மெண்ணிலி காலமவமே விடுத்தனை யெண்ணிரிதே.

(பொ-ரை.) பொருந்திய (உடலாகிய) இவ்வூரில் ஆன்மாவாகிய அரசன் (இருதயத்தினை) அரசிருக்கையாகப் பெற்று (மூலாதாரமுதல் ஆஞ்ஞைவரையில் உலவும்) வீதியாகக்கொள்ள முப்பத்தாறு தத்துவங்களும் எவற்படைகளாக விருக்கக்கொண்டது. (அன்றியும் ஆன்மாவினுக்குப்) பசியுண்டானகாலத்து அதை நிவர்த்திக்கத்தகுந்த சமையல் வீடு. இச்சுகங்களை நோக்கி அளவற்ற காலம் வீணே கழித்தனன் அவற்றையெல்லாம் திரும்பவும் நினைத்துப் பார்க்க அருமையாகும்.

(கு-ரை.) ஆன்மா வனுபவித்தற் கேதுவாயுள்ள சுகங்களைப் பெரிதாக வெண்ணி யவற்றிலேயே யழுந்திக் கிடந்ததன்றி ஆன்மவனுபவத்திற் கன்னியமாக வோர் சிவானுபவத்தில் இலேசமும் பெற்றேனில்லை யென்பார் 'எண்ணிலிகாலமவமே விடுத்தனம்' என்றனர். (27)

என்பெற்ற தாயாரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தா
ருன்பற்றொழிய வொருபற்று மில்லை யுடையவனே.

(பொ-ரை.) என்னை (அருமையாகப்) பெற்றெடுத்த தாய்மாரும் என்னை (யாதொருவுபயோகத்திற்கும் வாராத) சவமென நீக்கிவிட்டனர். (இதுகாறும்) திரவியம் (என்னு) லனுபவித்து வந்த பெண்டிரும் விலகிப்போவெனக் கூறியழுதுவிட்டனர். வலிமையுடைய புத்திரர்களும் பின்பு சுற்றிவந்து நீர்க்குட முடைத்து விட்டனர்.

இனிமேல் தேவரீரிடத்து வைத்த அன்பேயன்றி வேறு பதார்த் தங்களில் அன்பு கிடையாது என்னை யடிமையாக வுடையவனே.

(கு-ரை.) ஏதோவொரு காரணம்பற்றி என்பால் அதிக விசுவாசம் வைத்தவரனைவரும் அக்காரணத்திற் கேது என்பால் நிகழாமைகண்டு முற்றும் வெறுத்து விட்டனர். தேவரீரை மறந்து அவர் பால் வைத்திருந்த பற்றானது இப்போது நீங்கிவிடவே நினை வந்தடைந்தேன் ஆட்கொள்வாயாக வென்பார் உன்பற்றொழிய வொருபற்றுமில்லை’ என்றனர் தாயார். மாதர், மைந்தரெனப் பன்மையிற் கூறினமையின் முன் சென்மங்களினடந்தவற்றை விளக்கினாராயிற்று. (28)

கறையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையுந்
தறையிற் கிடப்பு மிரந்துண்ணு மோடுஞ் சகமறியக்
குறைவற்ற செல்வமென் றேகோ லமாமறை கூப்பிடுமே.

(பொ-ரை.) (தாம்பூலம் தரித்தலால் விளையும்) கறையில்லாத பல்லும், அழுக்குத்துணியும், பொறுமை வாய்ந்த மனமும், சுவையில்லாத உணவும், வெளித்தெருத் திண்ணையும், பூமியின்மீதுபடுக்கையும், யாசித்து உண்ணுதற்கேற்ற மண்ணோடும் (இவை யனைத்தும்) உலகப்பிரசித்தமாக யாதொரு குறைவில்லாத செல்வமென்றே அழகிய வேதங்கள் முறையிடுவன.

(கு-ரை) முற்றுந்துறந்த பெரியோர்கள் தாங்கள் இன்றியமையாது அனுபவிக்க வேண்டியவை இலேசாகக் கிடைத்தற் குரியபதார்த்தங்களாகவே யிருக்கவேண்டுமென்றிப் பிரயாசப்பட்டுச் சேகரித்தற் குரியவைகளாக விருக்கப்படாதெனவும் அவையே சிறந்தவை யெனவும் கூறுவார் ‘குறைவற்ற செல்வமென்றே’ என்றனர். (29)

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்
முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பார் கருத்தில்வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே.

(பொ-ரை.) எட்டுத் திக்குகளினும், பதினாறு கோணங்களினும் எவ்விடத்தும் ஒரே தன்மை வாய்ந்து வியாபகமாக இருந்துயர்ந்த அருட்பெருஞ் சோதியினை, அறிவினர் யாவரும் (அப்பெருமானைப்பற்றிச் சொல்லும் நூல்களை) கயிற்றாற்கட்டிச் சுருட்டித் தங்கள் கக்கத்தில் வைப்பரே யல்லாமல் மனத்தில் வைக்கமாட்டார்கள் அத்தகையர் பட்டம் பகலை இரவென்னச் சாதிக்கும் பாவிகளே யாவர்கள்.

(கு-ரை.) சதாகாலமும் சாஸ்திரங்களைப் படித்து அவற்றைக் கையில் வைத்துக்கொண்டு மூடர்கள் திரிவரேயன்றி அச்சாஸ்திரங்களில் சிவபெருமான் ச்ர்வ வியாபகமாகவுள்ள தன்மையினைத்தெரிந்து மனத்துட்கொள்ளாது அப்பெருமான் ஏகதேசியெனவே சாதிப்பர் என்பதாம். (30)

வாய்நாறு மூழன் மயிர்சிக்கு நாறிடு மையிடுங்கண்
பீநாறு மங்கம் பிணவெடி நாறும் பெருங்குழிவாய்ச்
சீநாறும் யோனி யழுநாறு மிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறு மங்கையர்க் கோவிங்ங னேமனம் பற்றியதே.

(பொ-ரை.) வாயில் (ஊத்தை) நாற்றமெடுக்கும், சிக்குண்டமயிரினில் (அழுக்கு) நாற்றமெடுக்கும், மைதீட்டிய கண்களில் (பீளை) நாற்றமெடுக்கும், தேகத்தில் பிணநாற்றமெடுக்கும், பெரிய பள்ளமாகிய நீச்சக்குழியில் சீநாற்றமெடுக்கும், குறியில்வெண்மை நாற்றமெடுக்கும், அன்றியும் அதில்சுரோணிதம் சிதறியோடிநாற்ற

மெடுக்கும் இத்தகைய அங்கங்களைவாய்ந்த மாதர்களிடத்திலேயே அடியேன்' மனமானது இச்சைகொண்டது.

(கு-ரை.) புபூட்சுக்கள் பகிர்முக நோக்கமுடையார் முமூட்சுக்கள் அகமுகநோக்குடையார் ஆதலின் மாதர்கள் மேல்கொண்ட அலங்காரத்தால் மயங்கி அவர் பாலாசையுற்று வேறு சிந்தையின்றி மயங்கிக் கிடக்கின்றனர் புபூட்சுகள். அகமுகவிசாரணையில் வேடத்தால் மயங்காது அவ்வேடத்தினைக் கொண்டிருக்கிற தேகத்தின் அங்கங்களொன்றினையும் விசாரித்து அவற்றிலுள்ள குற்றங்களை நாடிவெறுப்பார்கள் முமூட்சுகள். ஆகவே 'மங்கையர்க்கோ விங்ஙனே மனம் பற்றியதே' என்றனர். (31)

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படியே
செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக்குப்பையிற்
றரிக்கக் கரித்துணி யாடையு முண்டெந்தச் சாதியிலு
மிரக்கத் துணிந்துகொண் டேன்குறை வேது மெனக்கில்லையே.

(பொ-ரை.) வாயாரச்செபித்தற்கு நன்மையான மகா பஞ்சாக்கர மந்திரமுளது, வேதத்தில் சொல்லியபடியே சந்தோஷித்துத் தரித்துக்கொள்ள திருநீறுளது, தரித்துக்கொள்ள வீதிக்குப்பைகளில் அழுக்குத் துண்டான ஆடையுண்டு, எத்தகைய சாதியினும் யாசிக்க தைரியங் கொண்டேன் இனி யாதொரு குறைவுமில்லை அடியேனுக்கு.

(கு-ரை.) ஒவ்வொருவரும் மனோவாக்குக் காயங்களைச் சுத்தி செய்து கொண்டால் அடையவேண்டிய சிவசாம்பிராச்சியமாகிய திருவருளினை யடைந்து விடலாம், அங்ஙனம் சுத்தி செய்வதற்கு இரண்டரிய பதார்த்தங்களைத் தெரிவித்தனர். மந்திரநாயகமாகிய

பஞ்சாக்கர மகா மந்திரத்தினை மனத்தாலெண்ணி வாக்கால் செபிக்கவே மனமும் வாக்கும் சுத்தியாய் விட்டன. காயத்தில் வேதபடிதமாயுள்ள விபூதிதரிக்கவே காயம் சுத்தியாய்விட்டது. ஆகலே 'திருவெழுத்தைந்துண்டு,' திருநீறுமுண்டு, என்றனர். இன்றியமையாது தரிக்கவேண்டிய கௌபீனத்திற்குக்கரித்துணியைக் குறிப்பித்தனர். சாதியிரண்டொழிய வேறில்லை, என்ற பூலோக சரஸ்வதியின் வாக்கியத்தினை மேற்கொண்டு 'எந்தச்சாதியிலு மிரக்கத்துணிந்து கொண்டேன் என்றனர். (32)

எதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி தென்றறிந்து
போதப்பட் டாயில்லை நல்லோ ரிடஞ்சென்று புல்லறிவால்
வாதைப்பட் டாய்மட மாதர் கலவி மயக்கத்திலே
பேதைப்பட் டாய்நெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தருமே.

(பொ-ரை.) மனமே! உலகத்துன்பினையடைந்தாய், பெரியோரிடம் நாடி இனிமேலடையப்போகும் துன்பங்கள் இன்னதெனத் தெரிந்துகொண்டு அறிவிற் கொண்டாயில்லை. அற்பவறிவினால் துக்கமடைந்தனை. அறியாமையினையுடைய மாதர்கள் சையோக மயக்கத்தினாலே பேதையாயினை பித்தர்களுள் உன்னைப்போலொருவனுமில்லை.

(கு-ரை.) அறியாமையால் இதுகாறும் அனுபவித்த துன்பங்களத்தனையும் போக இனிமேலாகிலுந் துன்பங்களடையாதிருக்க வேண்டியதற்காகப் பரிகாரம் பெரியோரை யடுத்துத் தெரிந்து கொள்ளாமல் இன்னமும் மாதர் மயலில் மடக்குண்டு கிடக்கின்றுயாதலின் உனைப்போலில்லை பித்தருமே' என்றனர். (33)

கரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்று மங்கையர் கையிணக் கற்றுக் கவலையுற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடக்கப்
பரப்பற் றிருப்பதன் றோபர மரபர மானந்தமே.

(பொ-ரை.) பெருமானே! (நாணிவ்வுலகில்) வீண்வார்த்தை பேசுதலில்லாமல், தீயவினைகளடைதலில்லாமல், உறவினர்(நெருக்கம்) இல்லாமல், வஞ்சகமில்லாமல், மாதர்கள் சிநேகமில்லாமல் சஞ்சலமில்லாமல், அளவு கடந்து சிவபெருமானை வாய்நிரம்ப வாழ்த்துதலைச்செய்து மனமொடுங்கி அவாவில்லாமல் இருக்குந் தன்மையல்லவோ விசேஷ ஆனந்தநிலை.

(கு-ரை.) மாயாகாரிய ரூபமாகிய போகமனைத்தும் பிரபஞ்சத்தில் நழுவவிட்டாலன்றிச் சிவபெருமானை வாயாரவாழ்த்தி எத்துதற்கு அனுகூலமுண்டாகாதெனவும் அங்ஙனம் எத்துதலினாலே தான் பெருமானனந்த முண்டாமெனவும் விளக்கினாராயிற்று.

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே.

(பொ-ரை.) மெய்ஞ்ஞானம் உணர்ந்தவர்கள் பேய்பிடியுண்டவனைப்போலச் சஞ்சரித்து, சவம்போல அசைவின்றிக் கிடந்து, அந்நியர் கொடுக்கும் பிச்சையினைநாயினைப் போலுண்டு, நரியினைப் போல அலைந்து கற்புடைய மாதர்களை அன்னையர்போலெண்ணி சுற்றத்தினரைப்போல எவருக்கும் இதம்பேசி, 'புத்திரனைப்போல இருந்துக்கொண்டிருப்பர்.

(கு-ரை.) தனக்கென ஒருபயனை நாடாத பெரியோர் கண்ட கண்டவிடங்களிற்றிரியினுந்திரிவர், அசைவற்றிருப்பினுமிருப்பர், உண்ணினும் உண்பர், உண்ணுதிருப்பினுமிருப்பர், பேசினும்பேசுவர், பேசாதிருப்பினுமிருப்பர், பிதாவைப்போலிருப்பினுமிருப்பர் புத்திரனைப் போலிருப்பினு மிருப்பரென்பதாம், ஒரு தன்மை கூறவே அதற்கினமான வேறுதன்மையினையும் கூட்டி யுரைத்தல் சம்பிரதாயமாம். (35)

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணனிட்ட
முடக்கே புழுவந் துறையிட மேநல முற்றமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கே.

(பொ-ரை மாமிசபிண்டமே! பருந்துண்பதற்கேற்ற விருந்தே! கமண்டலத்தினையேந்திய வீணனாகியபிரமன்சிருஷ்டித்தவளையே! கிருமிகள் வாசம் செய்யுமிடமே! நன்மையென்பது சிறிதுமில்லாவுடலே! நரம்புதளர்ந்து பிணமாய் விடில் ஈன்றெடுத்த அன்னையும் நெருங்காத சம்பந்தமுடைய பொருளே! உன்னை யிதுகாறுந் தாங்கினேன் உன்னாலேது சுகமெனக்குண்டு.

(கு-ரை.) உலகிலொவ்வொருவரும் ஒரு பொருளைப் பரிப்பது அப்பொருளால் பின்னொருகாலத்தில் ஒருநன்மையினை யடையலாமெனக்கருதியேயாம். உடலாகிய நீ உனக்குரியமனம் வாக்குகாயங்களால் இன்றியமையாது செய்யவேண்டிய சிவத்தியானமும் சிவதோத்திரமும் சிவபூஜையு முறையேசெய்யாது வாழ்ந்தாயாதலின் உன்னைச்சுமந்து 'திரிந்ததினாலே என்னப்பிரயோசனங்கண்டேனென்பார், நின்னினேது சுகமெனக்கே என்றனர். (36)

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவரு மோசலி யாதிரென் னேழைநெஞ்சே.

(பொ-ரை.) அறியாமையினையுடைய மனமே! ஒரு துன்பம் வந்தடைந்த காலத்தில் அழுதலினாலே என்னப் பிரயோசனம், அப்போது துக்கித்தலினாலே யென்னப்பிரயோசனம். உன்னை வேறொருவர் மனநோகச் சொல்லினும் குற்றத்தைச் சிந்திப்பதி லென்ன இவற்றாலாவது ஒன்றுமில்லை பிரமனெழுதிய தலைவிதிப் படியல்லாது விளையுமோ இவற்றிலொன்றினுக்கும் சலியவேண் டுவதில்லை.

(கு-ரை.) அவரவர்கள் பூர்வ ஜென்மத்திற்குத் தக்கபடிசிவாஞ் ஞையை மேற்கொண்டு பிரமன் விதித்தவற்றை யநுபவித்துத் தீர வேண்டுமேயன்றி அதுபற்றி விசனமுதலிய அடைதலினால் சிறிது பிரயோசனமில்லையென்பார் 'ஆவதில்லை' என்றனர். (39)

ஊரீ ருமக்கோ ருபதேசங் கேளு முடம்படங்கப்
போரீர் சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வேரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே.

(பொ.ரை.) ஓஊரிலுள்ளவர்களே! உங்கட்கொரு உபதேசம் செய்கிறேன் (கவனமாய்க்) கேளுங்கள், (உங்களுடைய)தேகமுழு வதும் (மதுரையின்கண்ணே) சமணர்களைக்கழுவிலேற்றியதிருநீற் றினைப்பூசிக்கொள்ளுங்கள், (உங்களுடைய) சுற்றத்தினர்களினின் றும் பிரிந்து (பொதுவாயுள்ள) வெளித்திண்ணைகளில்சிவயோகசித்

நிரைசெய்து கொண்டிருப்பீர். உலகம் சிரிக்கச் சிவவேடமாகிய அழகினைக் கொள்வீர் (இங்ஙனஞ்செய்யின்) அப்பரமசிவமேஅவருடைய இரண்டு திருவடிகளைத் தந்திடுவர்.

(கு-ரை.) திருவெண்காடர்தாம் அனுபவித்துவரும் சாதனத்தினை உலகத்தாருக்கு தெரிந்து உய்யுப்பொருட்டுக் கருணைமிகுதியாம் உபதேசித்தருளினர். மதுரையின் கண்ணே கூன்பாண்டியனுக்குச்சரநோயுண்டாகஅது அப்பாண்டியன் ஆசிரியர்களாகியசமணமுனிவர்கள் பெரும்பிரயத்தனத்தால் தீராதிருக்க, திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி"மந்திரமாவதுநீறு" என்ற திருப்பதிகத்தேவாரத்தைப்பாடி விபூதியிட்டு அச்சுரநோயைத்தீர்த்து அப்பாண்டியனையும்சைவனாக்கினர். தோல்வியடைந்தசமணர்களைப்பாண்டியன்கழுவேற்றினன். அக்குறிப்பினை விளக்கி விபூதியின் மகிமையினை விளக்குவான் 'சமணைக்கழுவேற்று நீற்றை'என்றனர். (57)

நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தா யில்லை மாமறைநூ
லேற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டாய்
மாற்றிக் கிடந்துந் துறையறி யாமலலைகின்றதே.

(பொ-ரை.) மனமே! விபூதியினைத்தரித்தென்ன (கங்கை முதலிய ஆறுகளில்) தீர்த்தமாடுதற்குப் போயென்ன (எடுத்தவுடலை) மாற்றிஞானவானாய்ப்பிறக்க நல்லவகைதெரிந்து கொண்டாயில்லை பெரியவேதங்களில் எழுதிக்கிடக்கும் அனேக கோடான கோடி மந்திரங்களின்(உண்மையினை) என்னவென்று தெரிந்தாய்; பிரபஞ்ச நதியிலேயிருந்து (திருவருளின்) துறைதெரிந்து கொள்ளாமல் அலைகின்றனை.

(கு-ரை,) பிரபஞ்சத்தின் கண்ணே மாயாபோக விஷயங்களிற்கட்டுண்டு அதிலேயே யழுந்திக்கிடப்பவர்கட்கு, விபூதியினாலும், புண்ணிய தீர்த்தங்களினாலும் பிரயோசனமென்றனர். ஆகவே சாதனங்களை அன்புடனே செய்யவேண்டுமென்பதாம். (39)

ஓங்கார மாய்நின்ற வத்துவி லேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னாலுலகு
நீங்காம னீங்கி நிறையா நிறைந்து நிறையுருவா
யாங்கார மானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே.

(பொ-ரை.) பிரணவசொரூபமாகிய பொருளினிடத்தே ஒப்பற்ற (நாதமெனும்) விதையானது அழகாக உற்பவித்த பிரயோசனத்திலே யிருக்கினும் அறிவிலே தோன்றாதபடி நீங்கி, மாயா விஷயங்களில்) நிறையாமல் (திருவருளி) னிறைவில் நிறைந்து வியாபகமாய், அகங்காரசொரூபிகட்கு எட்டாத சிவமாங்கனியானதுகிடைக்கப்பெறும்.

(கு-ரை.) பிரணவத்தின் கண்ணே நாதமாத்திரமா யெழுமுண்மையினை விசாரித்தால் பிரபஞ்சசொரூபம் தோன்றாது அந்நாதத்திற்குக் காரணமாகிய சிவபெருமான் வெளிப்பட்டருளுவனென்பதாம். சுதந்தரவீனமுடையார்க்கே இப்பேறுஉண்டாமென்பார் 'ஆங்காரமானவர்க்கெட்டா' என்றனர் (40)

விதியார் படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்புநம் பாலணு காது பரானந்தமே
கதியாகக் கொண்டுமற் றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியா திருமன மேயிது காணன் மருந்துனக்கே.



மருதப்பிரான் வாணிபஞ் செய்ய கப்பலிற் செல்லல்.

(பொ-ரை.) மனமே! பிரமனுடைய சிருஷ்டிப்பும், விண்டுவி
னுடைய இரட்சிப்பும், பெருமை பொருந்திய கயிலைப்பெருயான்
சங்காரமும், நம்மிடத்து நிகழாத சிவானந்தமே துணையாகப்பெ
ற்று, மற்றப்பிரபஞ்ச போகமனைத்தும் தூக்கத்திற்கண்ட கனப்
பொருள்களைப் போலக் கருதாமலேயிரு. இதுவே உனக்கு நல்ல
மருந்தாகும்.

(கு-ரை.) பிரபஞ்ச காரியங்களைத் துச்சமெனக்கழித்துத்திரு
வருளையே ஆதாரமாகக்கொண்டு சிவானந்தத்தினை நாடியிருப்ப
வர்கள் முத்தொழிலிற் கட்டுப்படார்கள். அங்ஙனமுத்தொழிலில்
கட்டுப்படுதற்கே துவாயுள்ள வினை நோயை நீக்குதற்கு இச்சாதன
மே மருந்தாம். (41)

நாய்க்குண்டு தொண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னரு ணோக்கங்க ணோக்குதற்கே.

(பொ-ரை.) நாயானது (வீடுகடோறும் பெருக்கித்தின்பதற்கு)
இலைக்கட்டு உளது, நமது (ஊராரிடுகின்ற) பிச்சைச்சோறு உளது
இயமனை செயிப்பதற்குப் பஞ்சாட்சர மகாமந்திரம் வாயிலுளது,
மதியாமல் (எதிர்த்துவருகின்ற) பேயினுக்கு அதையோட்டவிபூதி
யுளது, பிரமிப்பையடைந்து, உள்ளஜென்மநோயாகிய பிணிக்கு
ஆசிரியனுடைய திருவருணோக்கமானது நம்மை நோக்குதற்கு
உளது.

(கு-ரை.) நாயக்கு எச்சிலை வீதிகடோறும் இலேசாகக்கிடப்
பது போலப் பிச்சைச்சோறும் நமக்குகிடைக்குமென்பார் நாயைக்
குறித்தனர். பஞ்சாட்சரமகாமந்திரம் செபத்தாலன்றி இயமபயம்,
நீங்காதென்பர். 'நமனைவெல்ல வாய்க்குண்டு மந்திரபஞ்சாட்சரம்

என்றனர். சாட்சி மார்க்கண்டேயர். ஔவையார். 'சிவாய நமவெ ன்று சிந்தித் திருப்போர்க்கு,அபாய மொருநாளு மில்லை—உபாயம் இதுவே மதியாகு மல்லாதவெல்லாம். 'விதியேமதியாய்விடும்' என் றதனாற் காண்க. எத்தகைய சமயத்தினரும் பேயாற் பிடியுண்டார் க்கு விபூதிப்பிரயோகமே செய்யவேண்டு மென்பார் 'பேய்க்குண்டு நீறு' என்றனர். எனவே, சிவனடியார்கட்குப் பேய்ப்பிடிப்பும்இயம பயமு மிராதென்பதாயிற்று. (42)

நேமங்க ணிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
யோமங்க டர்ப்பணஞ் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே.

(பொ-ஸ்ர.) நியமங்களை யனுஷ்டித்தல்களும், தியானம் கூடு தலும், வேதங்களைப்பாராயணஞ் செய்தலும், ஆகமங்களை யோது தலும், (இந்நூல்கள் சொன்னபடி, நியாய வழியிலிருத்தலும்ஓமங் கள்வளர்த்தலும், தர்ப்பணம் புரிதலும், சாந்தி நடத்தலும், செபம் பண்ணுதலும், மந்திரம் செபித்தலும், யோகநிலைகூடுதலும், தெய் வப் பெயர்களைச் சொல்லுதலும், சந்தனம் விபூதி தரித்தலும், நன்மையாகவே நாள் முழுவதும் இத்தகையர்புரியும் பூசைகளும் வஞ்சனையாகவே முடியும்.

(கு-ரை.) மனத்தினை யொருவழிப்படுத்தி வேறுசிந்தனை சிறி துமின்றிமேற் சொன்னவற்றைச் செய்யின் பலனுண்டாமேயன்றி மனத்தினைப் பலவழியிலலையவிட்டு என்ன செய்யினும் சிறிதும் பிரயோசனமில்லை யென்பார் 'சர்ப்பனையே' என்றனர். இவ்வாசிரி யரே கையொன்று செய்யவிழியொன்றுநாடக் கருத்தொன்றெண் ணப் பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும் மெய்யொன்றுசார செவியொன்று மெய்கேட்க விரும்புமியான்,

செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே,
என்றதனாற்காண்க. (43)

ஏனெனத் தனைபுத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
மேயெனிப் படிக்கெட் டுழலுகின் றாயினி யேதுமிலா
வானத்தின் மீதுனக்கு வன்றாண்டி லிட்ட வகையதுபோற்
போனத்தை மீள நினைக்கின் றனையென்ன புத்தியிதே.

(பொ-ரை.) நல்லமனமே! நான் எத்தனை அறிவுகளைச்சொல்லிடினும் கேட்டுத் தெரிந்தாயில்லை, காரணமென்ன? இவ்வகையாக விபரீதப்பட்டுப் (பிரபஞ்ச) விடயங்களில் திரிகிறாய், ஆகாயத்திலுள்ள விண்மீனாகிய நட்சத்திரங்கட்கு தூண்டில் எறிந்த (அறிவில்லாத) வகையைப்போல் இனியாதொரு சம்பந்தமுமில்லாமல் நீங்கிய பொருளினை விரும்புகின்றனை. இது எவ்வகையான அறிவு.

(கு-ரை.) உலகிலொருவன் சென்ற விஷயங்களைப்பற்றி மறுபடியும் எண்ணி எண்ணித் துக்கித்தல் ஆகாயத்திலுள்ள விண்மீனைப் பிடிக்கவேண்டு மெனக்கருதிப் பூமியிலிருந்தபடி தூண்டிமுள்ளைப்போடக் கருதும் அறிவீனத்தினையொக்கு மென்பதாம்.

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனாம்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே.

(பொ-ரை.) பஞ்சாட்சரமென்று சொல்லப்படும் கோடாலியினால் இவ்வைம்புலன்களுந் தோன்றுகிற வஞ்சகத்தையுடைய கட்டையை முதலறும்படிவெட்டி அந்நிலத்தினைக் கொழுமையாக்கி

அதிகமாகத் திருத்தஞ்செய்து சதாசிவம் என்று சொல்லப்படுகின்றவிதையை நட்டுக்கூட்டமாகிய களைகளைப்பறித்தேனாகிச் சிவபோகமென்னும் பயிரை வளர்த்தேன்.

(கு-ரை.) ஒருவனுக்குப் பஞ்சாட்சரத்தியான மந்திரம் இருந்து கொண்டிருக்குமாகில் ஐம்புல சேஷ்டைகள்ஒடுங்கிப்போகும். அவையொடுங்கவே, மனநிலையுறும். நிலையுறவே, சதாசிவத்தியானத்திற் கேதுவாகும். எதுவாகவே சிவபோகம் விளையுமென்பதாம்.

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ணீயாரு நானு ரெனப்பகர் வாரந்த நேரத்திலே
நோயாரும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயுமொரு
பாயாரு நீயுமல் லாற் பின்னை யேதுநட் பாமுடலே.

(பொ-ரை.) உடம்பே! (உன்னை வருந்திப்பெற்றெடுத்த தாயாரும் உனைச் சூழ்ந்துகொண்டிருந்த (உறவினரும், உன்பால் நேசம் வைத்திருந்த) மனைவியரும் (உனக்கெனவொரு) செயலில்லாமலிருக்கும் மரணகாலத்தில் நீயார் நானார் எனப்பேசுவார்கள். அக்காலத்திலே வியாதியும் வந்து தலையெடுக்கும் (கடைசியாக) நிலையுற்ற நோயும் படுத்த பாயும்நீயுமல்லாது வேறு எந்தபொருள் உன்னோடு பிரியா சிநேகமாயிருக்கும்.

(கு-ரை.) சகல சம்பத்துடன் சௌக்கியமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் எல்லாரும் வலியவந்து உறவாகுவர் (நோயும்பாயுமாகக்கிடக்கிற) மரணகாலத்தில் ஒருவருநெருங்கார்.

ஆயும் பொழுது மயிர்க்கால்க டோறு மருங்கிருமி
தோயு மலக்குட்டை யாகிய காயத்தைச் சுட்டுவிட்டாற்

பேயு நடன மிடுங்கட மாமென்று பேசுவதை
நீயு மறிந்திலை யோபொருட் டேட நினைந்தனையே.

(பொ-ரை.) (ஓ மனமே) ஆராயுங்காலத்தில் ஒவ்வொருமயிர்க் காலினும் மிகச்சிறிய புழுக்கள் மடிந்றுள்ள மலநிறைந்த குட்டையாகிய இத்தேகத்தைச் சுட்டால்பேய்களும் (மேலேறிக்) கூத்தாடுகின்ற (இத்தேகமானது) குடமாகும் இங்ஙனமென) அறிவுடையோர் பேசுவதை நீயுங்கேட்டு அறிந்தாயில்லையோ (இந்நிலையைக் கருதாது) பொருளைத்தேட நினைத்தாயே இது ஆச்சரியம்.

(கு-ரை.) இவ்வுடலின் நிலையாமையினைப்பற்றி அறிஞர்கள் நன்கு சொல்லியிருந்தும் அதனை சிறிதும் கவனியாது அவ்வுடலினைப் போற்றி வளர்க்கப் பொருளைத் தேடியலைதல் அறியாமையென்பதாம். (47.)

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குந் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.

(பொ-ரை.) தரித்துக்கொள்ளும்ஆபரணங்களைக்குறித்தல்ல, பொன்னினைக் குறித்தல்ல, நிலத்தினைக் கண்டு சந்தோஷிக்கும் படியல்ல, மாதர்கள்நிமித்தமல்ல, நன்மையாகிய சிறப்பினை நினைத்தல்ல, ஆகாயத்தினையும் கடந்த சிவபெருமானுடைய திருவடிக்கல்ல, என்மனமானது தன்னிலையினின்றும் கெட்டு வயிறாகிய சாண் உறுப்பினையும் பசியாறச்செய்ய அடியேன் அனுபவிக்கும் துன்பம் சிறிதல்ல அபாரமாகும்.

(கு-ரை.) திருவெண்காட்டடிகள் கொங்குதேயத்தில் வாசம் செய்துகொண்டிருக்கும் காலத்தில் மவுனநிலையுற் றிருந்தாராக லின் ஒருநாள் ஒருவீட்டின் தலைவாயினின்று கைதட்டிப் பிச்சை யேற்க அவ்வீட்டுமூடன் அவரைக்கள்வனென வுன்னிப்புடைக்கும் சமயத்தி லயலாரோடிவந்து கண்டு சிவயோகி யென்றுணர்ந்து வேண்டிய உபசாரம் செய்தபோது பாடியதிருச்செய்யுளீது. பசி நோய் யாவற்றினும் கொடிய தென்பார் 'படுந்துயர் சற்றல்லவே, என்றனர். ஔவையார்'மானங்குணங்கல்வி வண்மையறிவுடைமை, தானந்த தவமுயற்சி தாளாண்மை—தேனின், கசிவந்தசொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம். (18)

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூஜையன் றோகுரு நாதன் மொழிந்ததுவே.

(பொ-ரை) செப்புத்தகட்டிலேசெதுக்காத யந்திரமும், வாயி னாலே செபியாதமந்திரமும், மற்றவர்கட்கு எட்டிப்றிக்கக்கூடாத மலரும், தருப்பணம் செய்யாத தீர்த்தமும். பெட்டகத்தில் கட்டி வையாத இலிங்கமும், தற்போதமுன்னிட்டு நினையாத மனமும், உள்ளத்தில்காலவரையல்லாத பூஜைஅல்லவோ ஆசாரியன்உபதே சித்தது.

(கு-ரை.) புறப்பூசைகட்கு இடம்பொருளேவல் இன்றியமை யாது வேண்டியிருத்தலினாலும், ஒவ்வொருகாலத்தில் அவைகட்கு முட்டுப்பாடு வருமானபடியாலும் அங்ஙன நேர்ந்த காலத்தில் திரு வுளக்கேடு உண்டாமாகலினாலும் இத்தகையபூசை இல்றத்தினர் கட்கே யனுகூலமாக இருக்குமான படியாலும், துறவியாகிய தனக்கு அத்தகைய சாதனம் நீங்கி அந்தர்முகபூசை எக்காலத்தும்

றுமை கூறின்றி நடத்தும்படி தனதாசிரியர் உபதேசித் தருளினு ரென்பார், 'குருநாதன் மொழிந்ததுவே' என்றனர். (49)

எருமுட்டை பிட்கி னுதிர்ந்திடுஞ் சொல்லுக் கெவரழுவார்
கருமுட்டை புக்குக் கழலகன் றீர்கண்ட துக்கமதாய்ப்
பெருமுட்டுப் பட்டவர் போலெழும் பேதையிர் பேதுறுகிற்
றொருமுட்டும் வீட்டு மரனா மென்றைக்கும் போதுமினே.

(பொ-ரை) 'ஜெகத்தீரே!, தாயினுடைய கருப்பமாகிய முட்டையுள்ளே பிரவேசித்துச் 'சிவபெருமானுடைய, திருவடிகளை நீங்கினீர், இந்நீக்கத்துக்காகத் துக்கப்படாமல் இவ்வுடல் நீங்கியதின் பொருட்டிருந்த துன்பமுடையவர்களாய்ப்பெரிய இடரையடைந்தவர்போல அழுகின்ற மூடர்களே! 'ஏன், கலக்கம் கொள்ளுகிறீர், ஒருகுறைவும் வாராதபடி செய்யும் பரமசிவன் திருநாமங்களை எக்காலமும் தோத்திரம் செய்யுங்கள். எருமுட்டையினைப் பிதிர்த்தால் அதிலிருந்து உதிர்கின்ற செல்லுக்கு எவர்அழுபவர்கள்(ஒருவரும் அழார்.).

(கு-ரை.) இறந்துபட்ட பலதேகங்கள் எருமுட்டைப் புழுக்களுக்குச் சமானமாகும் ஆகலின் சென்றபிறப்புகளை எண்ணிஎண்ணித் துன்பப்படுதலில்சிறிதும் பிரயோசனமில்லை, சிவபெருமான் திருவடியினை மறந்தோமோவென வேக்கங்கொண்டிருக்கின் அதனால் பெரும பிரயோசனம் விளையுமென்பதாம். (50)

மைபாரி கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தி
மைபாரின் மாமை புருமெவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்ப்பா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்ப்பாப் பழங்கதை யாய்க்கன வாய்மெல்லப் போனதுவே.

(பொ-ரை.) சிவந்த தீயினைக் கரத்திலேந்திய ஐயனே! மையினைத்தீட்டிய கண்களைவாய்ந்த மனைவியும், புத்திரரும், பிரபஞ்ச வாழ்வும், வாழ்க்கைவீடும் தேவரீருடைய மாயாகாரியங்களாம், இவ்வுலகிலே முதலில் சத்தியாகத் தோன்றியது காலங்கழியக் கழிய முழுவதும் பொய்யாகிப்பழமையானக் கட்டுக்கதைகளாய்க் கனவு கண்டது போலாகி மெதுவாக நீங்கியது.

(கு - ரை.) பிரபஞ்சசோதனை பண்ணுது பகிர்முக நாட்டத்துடனே வாழுகிற காலத்தில் எல்லாம் நிலையுள்ள சத்தியப்பொருளாகவே தோன்றின. நாளுக்கு நாள் தத்துவசோதனைப் பண்ணிக்கொண்டுவருகிற காலத்தில் அவர்கள் கன்மத்தினுக்குத் தக்கபடி சிவபெருமான் மாயையினின்றும் காரியப்படுத்திவைத்த பதார்த்தங்களாகவே தோன்றுதலும் அவற்றினிடத்துப் பற்று நீங்கவே அவைமறுபடியும் சத்தியமாகத் தோன்றுத வில்லையாகலின் மெல்லப்போனதுவே' என்றனர். (51)

ஆயாய்ப் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயா கிலுமுண்மை யைத்தெரிந் தாயில்லை பூதலத்தில்
வேயார்ந்த தோளியர் காம விகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய் விழிக்கின் றனைமன மேயென்ன பித்துனக்கே.

(பொ-ரை.) மனமே! பலவாகிய சாஸ்திங்களை விசாரியாய், விசாரித்தறிந்த பரிசுத்தம் பொருந்திய தவத்தில் மிகுந்தவரிடத்துச் சென்றாயினும் உண்மை யின்னதெனத் தெரிந்துகொண்டாயில்லை, உலகின் கண்ணே மூங்கிலினை யொத்த தோளைவாய்ந்த மாதர்களின் காமவிகாரமாகிய சமுத்திரத்தில் விழுந்து முழுகிப் பேய்போல விழிக்கின்றனை, உனக்கென்ன பித்தநோயிது.

(கு - ரை.) மெய்கண்ட சாத்திரங்கள் பலவற்றைக் கற்றலும் கேட்டலுமாகிய இருஞானம் கிடைக்கப்பெறின் தெளிதலும் நிட்டைகூடுதலுமாகிய இருஞானம் இலேசாகக் கிடைக்குமாகலின் முன்னிரண்டினைமாத்திரம் குறித்தனர். மெய்கண்ட செல்வரிடம் போய் அடுத்தே கேட்க வேண்டுமென்பார் போயாகிலுமென்றனர், மாதர்மயக்கிற் பட்டார்கட்குச் சாஸ்திர ஆராய்ச்சி கிட்டாதென்பார், 'என்னப்பித்துனக்கே' என்றனர். ஈண்டு உண்மையென்றது ஆன்மாவின் பெத்த நிலையாகிய பொதுவினை விசாரியாது, ஆன்ம தரிசனம் சிவதரிசனமாகவுள்ள விசேடங்களையறிகை. பொது இலக்கணம் கூறுவது வேதம், உண்மையாகிய சிறப்பு இலக்கணங்களைக் கூறுவது ஆகமம், ஆகவே ஆகமங்களை விசாரித்தாயில்லை யென்பார் 'உண்மையைத் தெரிந்தாயில்லை யென்றனர், சிவஞானசித்தியார், ஆரணநூற் பொதுச் சைவமருஞ் சிறப்பு நூலாம்." என்றதனாற் காண்க. (52)

அடியா குறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியா லடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே.

(பொ-ரை.) சிவனடியார்கள் சிநேகமும், சிவபூசையில்விருப்பமும், பத்தியுமில்லாமல் இவ்வுலகில் (ஒருவனுக்குப்) பயன் கொடுக்கும் செயல் வேறுண்டாமோ பிரமன் சிருஷ்டித்த குடியிற் பிறந்த உறவினரும், மனைவியும், பிரபஞ்ச வாழ்க்கையும் குயவனாற் செய்யப்பட்ட பாண்டங்கள் தடியினாலடிப்பட்ட வகையாக ஒத்திருக்குமென்னவெண்ணி (மேற்படி) சிவனடியாராகிய னத்தினைச்இசார்ந்தாரில்லையே.

(கு-ரை.) ஒருவன் இன்றியமையாது அனுபவிக்க வேண்டிய பெரும்பயன் அடியார் உறவும், அரன்பூசையும், அன்பும் ஆகிய இவற்றாலன்றி வேறுவிதத்தால் முடியாதென்பார் 'வேறு பயனுளதோ, என்றனர். சிவபெருமான் தொண்டர்களிடத்தும் சிவலிங்கத்தினிடத்தும் எழுந்தருளியிருப்பது சத்தியமாகலின் 'அடியாருறவும் அரன் பூசையும்' வேண்டுமென்றனர். அந்நேசமும் பூசையும் மனங்கசியச் செய்யவேண்டுமென்பார் 'அன்பும்' என்றனர். சிவப்பிரகாசம் "தொண்டர்களிடத்தும் வானோர் தொழுந்திருமேனிதானும், மண்டருங் கண்டிலாத வண்ணலேயென வணங்கி, வெண்டாளங்கள் சிந்த வழிமொழி குழறிமெய்யே, கண்டுகொண்டிருப்பர் ஞானக் கடலமுதருந்தினரே." என்றதனாற் காண்க.(53)

ஆங்காரப் பொங்கிஷங் கோபக்களஞ்சிய மாணவத்தடை
னீங்கா வரண்மனை பொய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காம விலாசமித் தேகங்கந்தல்
பாங்கா யுனைப்பணிந் தெப்படி ஞானம் பலிப்பதுவே.

(பொ-ரை.) அகங்காரத்தினுக்கு ஒரு பொக்கிஷமாயும், கோபத்தினுக்கு ஒரு களஞ்சியமாகவும், ஆணவமானது என்றும் ஒழியாத காவல் வீடாயும், பொய், அமைந்துள்ள கூடமாயும், ஆகாயத்தினை யோங்கி வளர்ந்து நிறைந்துள்ள கூடமாயும், ஆகாயத்தினை யோங்கி வளர்ந்து நிறைந்துள்ள பெரிய மதில் சூழ்ந்த காமசபையாயும், (உள்ள) நவத்துவாரங்களை வாய்ந்த தேகக் கந்தலே! பக்குவமாக வுன்னை உபசரித்து வந்தால் எந்தவிதமாக ஞானங் கைகூடிவரும்.

(கு-ரை.) அகங்காரம், கோபம், ஆணவம், பொய், காமம்ஆகியவற்றிற்கு இடமாயுள்ள தேகத்தினைப் போஷித்து வருதலிலேயே

காலத்தைக்கழித்துவரின் ஞானம் சித்தியாதென்பார் 'எப்படி ஞானம் பலிப்பதுவே, என்றனர். இதனால் அகங்காராதிகளை யொழிக்கவே ஞானமடைதற்குத் தேகம் சாதனமாக விருக்குமாகலின், அப்போது உடலைப்பேணி வருவதினால் கெடுதலில்லை யென்பதாம். (54)

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப் பதவிக் கவுடதங் கேட்டி யநாதியனை
மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்திலுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மி யழுநன்மை வேண்டுமென்றே.

(பொ-ரை.) நீங்குதலில்லாத எண்ணிலாத ஜென்மங்களை யெடுத்து அழுது அழுது அலைந்தமனமே! எக்காலத்திலும் அழியாத மோட்ச வீட்டிற்கு மருந்து (சொல்வேன்) கேட்பாயாக என்றுமுள்ளவனை, மழுவினையும், மானினையும் ஏந்திய கரங்களையுடையானை, பெருமாள் மாட்டையுடையானை, அழியாத பதவி வேண்டுமென்று மனத்தே தியானித்து கண்களில் ஆனந்தக்கண்ணீர் சிந்தித் தேம்பியழு (இதுவே மருந்தாம்.)

(கு-ரை.) அழியாத பதவிக்கு அழியாததெய்வத்தை வணங்க வேண்டுமென்பார் 'அழியாப்பதவி, அநாதியனை' என்றனர். கண்ணீரும் கம்பலையுமாக நின்றவர்க்கே நன்மையுண்டாகு மாகலின் விம்மியழு என்றனர். திருவாசகம் "மெய்தானரும்பி விதிவிதிர்த்துன் விரையார் கழற்கென், கைதான்றலை வைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி," எனவும், அழுதாலுன்னைப் பெறலாமே' எனவும் வருவனவற்றாற் காண்க. (55)

நாய்க்கொரு சூலு மதற்கோர் மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொரு ஞானம் பிடிபடு மோபெருங் காஞ்சிரங்கா

யாக்குவ ரார தருந்துவ ராரது போலுடம்பு
தீக்கிரை யாவதல் லாலேதுக் காமிதைச் செப்புமினே.

(பொ-ரை.) நாயினுக்கு ஒரு கர்ப்பமும் அக்கருப்பத்தினுக்கு ஒரு வைத்தியமும் இவ்வுலகிலுளதோ, பேயினுக்கு ஒரு ஞானம் பற்றுமோ, பெரிய எட்டிக்காயை வளர்ப்பவர் யாவர். அக்காயினை யுண்பவர்யாவர். அதுபோல இத்தேகம் நெருப்பினுக்கு இரையாய் விடுவதல்லாமல் எதற்குப் பிரயோசனம் சொல்லுங்கள்.

(கு-ரை.) பத்திரகிரியர் தன்னை வணங்கி நின்றபோது அவர்க்கோருறுதி யுண்டாகும்படி அருளிச்செய்த திருச்செய்யுளீது. நாயினுக்கு மருத்துவம் செய்ய யாரும் ஏற்படார் போலப் பேய்போல அலைபவனுக்கு ஞானம்போதியாரெனவும், காஞ்சிரங்காயாருக்கும் உபயோகப்படாததுபோலத் தேகமும் பிரயோசனமில்லை யென்றனர். இதனுல் கசப்பினைத்தரும மரத்தினை நீக்கி உருசியைத்தரும் மரத்தினை வளர்த்து வருதல் வழக்கத்திலிருத்தல் போல, பாவத்தினுக்கேதுவாகிய உடலினைப்போஷியாது புண்ணியத்திற்கேதுவான உடலினைப் போஷித்தல் நலமென வேற்பட்டது. (56)

கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள்பட்டே
யிச்சித் திருக்கின்ற பேதைநெஞ் சேயிம வான்பயந்த
பச்சைப் பசுங்கொடி யுண்ணு மலைபங்கர் பாதத்திலே
தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே.

(பொ-ரை.) இறுக்கிக்கட்டிய கச்சியினுக்குள் தங்கியிருக்கும் பெருத்ததனங்களிலே உன்னுடைய கடைக்கண் பார்வைபட்டதினுலே, அத்தனத்தினைவாய்ந்த மாதர்களிடத்து ஆசை வைத்துக் கிடக்கின்ற அறியாமையுடைய மனமே! மலைபரசன்பெற்றெடுத்த [illegible] உண்ணுமலை [illegible]

தேவியினை வாமபாகத்தில் உடையாரது திருவடிகளிலே ஊன்றி
திருமனமே ஒரு காலத்திலும் எனக்குத்தவறுதல் உண்டாகாது.
சிவகதி கிடைக்கும்.)

(கு-ரை.) மாதர்கள் தன்மயலில் மாந்தர்கள் சிக்குண்சி கிடப்
து சகசமாகலின் 'தளத்தில்—இச்சித்திருக்கின்ற வேண்ழ நெஞ்
ச'என்றனர். பயோதரப்பத்து, "மைந்தர்கள் மனஞ்சூறையிட்டு"
என்றதினாற் காண்க. திருவடிஞானமே சிவகதிக்கு எதுவாகலின்
பாதத்தலே தைச்சுக்கிட, என்றனர். திருமந்திரம் "திருவடி யே
சிவ மாவது தேரிற், திருவடி யேசிவ லோகஞ் சித்திக்கிற்,திருவடி
யெசெல் கதியது செப்பிற், திருவடி யேதஞ்ச முட்டெளி வார்க்
க" என்றதனாற் காண்க. (57)

ாணார் விழியைக் கடந்தேறி வந்தனன் வாழ்குருவுங்
காணகி யென்னைக் குடியேறிக் கொண்டனன் குற்றமில்லை
பானாலும் பேறிருந் தாலுநற் பேறிது பொய்யன்றுகா
றுணாலு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே.

(பொ-ரை.) மாதர்களுடைய கண்ணாகிய வலையினைக் கடந்து
ந்தனன், சிவானந்தத்தில் வாழ்கின்ற ஆச்சாரியனும் நாயகனாகி
அடியேனைத் தனது திருவருட் பூமியில் குடியாக ஏற்றுக்கொண்ட
னன், இனியெனக்கு யாதொருகுற்றமில்லை (இனி) இவ்வுடல்நீங்கி
னாலும் இலாபமுண்டு, உலகிலேயே வாழ்ந்தாலும் நல்ல இலாபமு
து இது சத்தியம், ஆனாலும், இந்த உடலுடனிருப்பது மாத்தி
ம் அருவருக்கத்தக்கதாகும்.

(கு-ரை) அதிகத்துன்பத்திற்கேதுவாகிய மாதர்கள் மோகத்
தினின்று நீக்கி யடைவேண்டிய குருகடாட்சம் படைந்து விட்ட

படியால் இனி உடல் இறக்கினும் நன்மையேயாம் ஆயினும் திருவருட்பெறாதவரையில் உடற்பற்றால் யாதொருபிரயோசனமுமில்லையென்பர்' 'உடம்போடிருப்ப தருவருப்பே' என்றனர். (58)

சற்றாகி லுந்தன்னைத் தானறி யாய்தன்னை யாய்ந்தவரை
யுற்றா கிலுமுரைக் கப்பொருந் தாயுனக் கானநிலை
பற்றாய் குருவைப் பணியாய் பரத்தையர் பாலிற்சென்றென்
பெற்றாய் மடநெஞ்ச மேயுனைப் போலில்லை பித்தனுமே.

(பொ-ரை.) சிறிதேனும் உன்னிலைமையினை நீயறியமாட்டாய் தன்னை விசாரித்துத் தேர்ந்தவரை அடைந்தாயினும் அவர்கள் (நல்ல விஷயங்களை யெடுத்து) சொல்ல (அவற்றைக்கேட்கப்) பொருந்தமாட்டாய், உனக்குத்தகுந்த நிலையானது இன்னதெனக் கைக்கொள்வாய், ஆசாரியரைவணங்காய், வேசிகளிடத்தில்போய் என்ன இலாபமடைந்தாய் அறியாமையினை வாய்ந்த மனமே! உன்னைப்போல வொருபித்தன் (இவ்வுலகில்) இல்லை.'

(கு - ரை) தன்னைத்தானறிதலாவது ஆன்மா சுதந்தரனல்லனென்றும், எந்நாளும் ஆண்டவனுக்கு அடிமையென்றும், கன்மத்திற்குத் தக்கபடி முதல்வனறிவித்தாலன்றி யொன்றையு மறியாதென்றும் தெரிந்து கொள்ளுதல். தன்னையாய்ந்தவர் என்பது ஆன்மவிசாரம் செய்தவர். உனக்கான நிலையென்பது திருவருளைப்பற்றிக்கிடத்தல். குருவைப்பணியாய் என்றது இவையனைத்தும் தேர்தற்குக்காரணமாயிருப்பது ஆசாரிய வழிபாடு என்பதாம். (59)

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூக்தையுறப்
புளியிட்ட செம்பையும் போற்றாகி லேனுயர் பொன்னெனவே

பாளியிட்ட தாளிரண் டுள்ளே யிருத்துவ தன்மையென்று
வளியிட் டடைத்துவைத் தேனினி மேலொன் றும் வேண்டி-
[லேனே.

(பொ-ரை) இரும்பு உளியினால் செதுக்கப்பட்ட கற்சிலையினை
, அங்கங்கள் ஒழுங்குறவமைந்த சுன்னச் சாந்தினாற்செய்யப்
ட்ட உருவத்தையும், புளியிட்டுத்துலக்கிய செம்புவிக்கிரகத்தை
ம் துதித்து வணங்கேன், உயர்ந்த பொன்னுக்குச் சமானமென
வபிரகாசியாநின்ற (சிவபெருமானுடைய) இரண்டு திருவடிகளை
னத்தினுள்ளே வைப்பது (கூடுமான) நன்னிலையென்று சொல்
த்தியானத்தில் வைத்துக்கொண்டேன். இனிமேலென்றைக்கும்
ருபொருளும் வேண்டியதில்லை.

(கு - ரை.) பகிர்முகத்தில் கற்சிலையினையும், சாந்துருவத்தினை
ம், பொற்சிலையினையும் தரிசிக்கிறகாலத்தில் அவ்வவ்வுருவங்க
ாக தோன்றுவதேயன்றித் தெய்வவடிவாகக் கிரகிப்பதற்குப்
க்குவமில்லேனாகலின் அப்பாவனையால் அபசாரப்படாது, அந்தர்
கத்தில் சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துய்வேனென்ற
ர். விக்கிரகங்களைத் தெய்வமாகப்பாவியாது தெய்வத்தை விக்கிர
கப் பார்க்கவேண்டு மாகலினாலும், அது அதிதீவிரப் பக்குவமு
டயார்க்கே விளங்குமாகலினாலும், அங்ஙனம்பக்குவம் விளையாத
றி மனத்தியானத்திலேயே திருப்தியடையவேண்டியது தாகலினா
ம், 'இனிமேலொன்றும் வேண்டிலேன்' என்றனர். இங்ஙனம்
பாருள்கொள்ளாது சிலர் ஆசிரியர் விக்கிரகாராதனையை மறுத்
க்கூறினரென்பார். அந்தோ அவர்கள் 'தாளிரண்டு' எனத் திரு
டியைக்குறித்த உண்மையைத் தேராதராவர். 'தாள்' உருவத்திற்
ன்றி அருவத்திற்கின்றென்பது யாருமறிந்ததே, 'தாள்' என்ப
ற்கு வேறு பொருள்கூறி இடர்ப்படுவாருமுளர். அவர்கள் லீலா
ட நியாயமாக உரை கொள்பவரேயாம். (69)

கல்லா லெறியுண்டுங் காலா லுதையுண்டுங் கால்லைகயில்
வில்லா லடியுண்டு மூன்றோள் விடமுண்டு மேலிளித்துப்
பல்லாற் புரமெரி யேகம்ப வாணர் பதாம்புயத்தின்
சொல்லார் செவியினிற் கேளா திருக்கதென் றொல்வினையே.

(பொ-ரை) கல்லினாலே யெறிபட்டும், காலினால் உதைபட்டும், (ஒரு) ஆண்மகன்கை வில்லாலடியுண்டும், பூர்வத்தில்விஷயத்தினை யுட்கொண்டும் அதற்குமேல் சிரித்துப் பல்லினால் திரிபுரத்தினை யெரித்த ஏகாம்பரநாதர் திருவடித்தாமரையின் தோத்திரத்தினை (என்) காதாரக் கொள்ளாதிருந்ததற்குக் காரணம் என்னுடைய பண்டைய வினையேயாம்.

(கு-ரை.) கல்லாலெறிந்தவர் சாக்கியநாயனார், காலினாலுதைத் தவர் கண்ணப்பநாயனார், வில்லாலடித்தவர் அருச்சுனன், விஷம் சாப்பிட்டது தேவர்கள்மேலுமார்த்தம், திரிபுரமெரித்தது சிவபூஜை யினின்றும் வழுவியநிமித்தம், காஞ்சி ஏகாம்பரநாதன் பெரும்புகழ் தனது காதினுக் கெட்டாதிருந்தது தொல்வினையே காரணமென் றனர். (61)

ஒருநான்கு சாதிக்கு மூவகைத் தேவர்க்கு முடம்பாதக்குந்
திருநாளுந் தீர்த்தமும் வேறுள தோவத் திசைமுகனால்
வருநாளில் வந்திடு மக்கக்கள் ஞானன் வகுப்பொழியக்
குருநாத னேகன் டேர்பின்னை யேதிக் குவலயத்தே.

(பொ-ரை) (உலகில் திகழும்) ஒரு நான்காகப் பிரிந்துள்ள சாதியில் (வந்தபெரியோர்கட்கும்) மூன்றுவகைப்பட்ட தேவர்கட்கும் தேவர்களுக்கும் உண்டாயிருக்கின்ற திருவிழாக்களும், தீர்த்தங்களும் (சிவபெருமானுக்கு அன்னியமாக) வேறுமுண்டோ? இல்லை.

—மூகனூல் வகுக்கப்பட்ட காலங்களில் வருவன வர்த்த வினையம் கத்தவை வறுமையபிமென்வகித்தகிரமங்களை யனுபவித்தொழிக் ஆசாரியன் கட்டளையுண்டாம் இவ்விரண்டினுக்கும் வேறு ன்மையிரண்டின் கண்ணே.

(சு-ரை.) சிவஞானக்கிரகம் பெற்ற வவைபெ உலகம் சொன்ன மகிழுமாகலின் அப்பெருமானுக் கன்னியமாக வேறென்ற லையென்பார் வேறன்றோவென்றனர் அவரவர்கள்கன்மத்திற் ஞானத்தபமபிரமன் விதித்துள்ளபோகக்களையனுபவித்தொழிக்க னவிரதிருவருள்பதியக்குருவடாட்சமுண்டாகலின் பிரபஞ்ச கத்தில் திருவருளனுபவமும், திருவருளனுபவத்தில் பிரபஞ் னுபவமும் விளையா தென்பதாம். (62)

எண்சீர் விருத்தம்.

செல்வப் பெரும்பொருள் நவந்தியந் தேடி
வைமொன்று மறியாத காரியரைக் கூடிப்
வளைக்க வருகின்ற புத்திசன் போலப்
புலன்வினைக் கனகனைப் புதல்வர்களைப் பெறுவர்
பதற்றும் வைகபரிலீர் கைவிடவு மாட்டீர்
கைட்டித்தொடைய மைத்தினையிற் காணுறைத்துக் கொண்டே
பதனை யனைத்தவிட்ட குரங்கதனைப் போல
வைப்பட்டீர் கிடந்தழுல வகப்பட்டீரே.

(பொ-ரை.) காவலனை பிகர்த்து போதுப்படிப் பொய்மார்த் தினைப் பேசி தவதிரவியத்தைச் சம்பாதனை செய்து தன்மை

யென்பது சிறிதுமில்லாத பெண்களைப்புணர்ந்து, பூமியானது பிளந்துபோகும்படி எழுகின்ற புற்றிலிருந்துவரும் ஈசலினம்போலப் புலபுலவெனவும் கலகலவெனவும் பிள்ளைகளைப்பெற்றிடுவீர் அப்பிள்ளைகளை காப்பாற்றுதற்கும் வகையேதுமறியீர் அவர்களைக்கைவிட்டிருக்கவுமாட்டீர் கிளையுடன்கூடிய பழையவொரு மரத்தின் பிளவில் காலை துருத்துக்கொண்டு (அப்பிளவினுக்குத் தச்சன் வைத்துப்போன) ஆப்பினையசைத்து பிடுங்கிவிட்டபின் (தனது காலை மாட்டிக்கொண்டு துன்பப்படும்) குரங்கினைப்போல இப்பிரபஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்டீரே.

(கு - ரை) திருவாரூரில்தன்னையடுத்திருந்தவிசுவாசத்துடனிருந்த ஒருவனுக்கு விவாகம் நடந்த காலத்தில் அவன் வேண்டுகோளுக்கியைந்து அவன் மணப்பந்தலுக்குச் சென்று அவனுக்கு இனி நேரிடுங் காரியத்தைக் கூறவேண்டி இச்செய்யுளைப் பாடிச் சேஷையிட்டு ஆசீர்வதித்துச் சென்றனர் தச்சனொருவன் ஒருநெடு மரத்தினை வாளால்சிறிதுதூரம் அறுத்து அப்பிளவிற்குஆப்புவைத்து விட்டுப் போன சமயத்தில் குரங்கோடிவந்து அப்பிளவில் காலை விட்டு ஆப்பினைப்பிடுங்கியபின்சால்மாட்டிக்கொண்டு துன்பமுற்றதுபோல, உலகமின்னதெனச் சிறிதுமாராயாது அம்பிரபஞ்சமயமாய் விலாகம் முடித்துக்கொண்டு பின் திண்டாட்டம் பெறுவரென்பதாம்.

அறுசீர் விருத்தம்.

மத்தளை தயிருண் டானு மலர்மிசை மன்னி னானும்
நித்தமுந் தேடிக் காணா நிமலனே நீயின் றிரங்கிச்
செய்த்தலை கயல்பாய் நாங்கூர் சேர்ந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டு ளானே.



(பொ-ரை.) மத்தினாலே கடையப்பட்ட தயிரினைத் திருடியுண்டவனாகிய கிருஷ்ணனான நாராயணனும், தாமரைமலரின்மேல் நிலைபெற்றவனாகிய பிரமனும் பிரதினமும் தேடியும் அவர்கட்குக் காணப்படாதுநின்ற மலரகிதனே தேவரீர் இன்றையதினம்சென்று கழுனிகளிடத்தில் கயற்கண்டைகளோடியுலாவும்நாங்கூர்சேர்ந்தன் என்பவனை அரசன்போட்டுவித்த கைவிலங்கினைத் தறித்து எனக்கு முன்னே அவனைக்காட்டவேண்டும் திருவெண்காட்டி விருப்பவனே.

(கு-ரை.) திருவெண்காடர் துறவடைந்தபின் தனது காரியஸ்தரை அரசன் சிறையிட்டிருப்பதனைக் கேள்வியுற்று அவனை விலங்கினின்றும் நீக்கித் தன்முன்னே கொண்டுவரும்படி பாடிய திருச்செய்யுளிது. 65

தாயாருக்குத் தகனகிரியைசெய்கையிற் பாடிய

நேரிசைவெண்பா.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென் றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

(பொ-ரை) பத்துமாதங்களாக (வயிற்றிற்) சுமந்து உடம்பு முழுவதும் நொந்துபெற்றெடுத்த (அயலிலுள்ளவர்கள்) ஆண்குழந்தையென்றவுடனே, ஆசையுடனெடுத்துச் செவ்விய இரண்டுகைகளினு மேந்திக்கொண்டு பொன்மலைபோன்ற முலையினின்றும் பாலினையுண்பித்தவளை இனியெந்தச் சன்மத்தில் காணப்போகிறேன்.

(கு-ரை.) ஒருத்தி தனது பிரசவக்காலத்தில் எவ்வளவு துன்பமடைந்து மூர்ச்சித்திருக்கினும் பிறர்வந்து ஆண்குழந்தை யென்ற மாத்திரத்து அத்துன்பமனைத்தையும் ஒருபொருட்டாக மதியாது அப்பிள்ளையினிடத்து மிக அன்பு பாராட்டுவா ளென்ப தாம். பெண்குழந்தையினிடத்து அவ்வளவு அன்பு நிகழாது என் பது குறிப்பால் விளங்குகிறது. 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
வெரியத் தழல்மூட்டு வேன்.

(பொ-ரை) (கருப்பம்வாய்ப்பதற்கு) முன்னே அநேகமான விரதங்களை யெல்லாம் அனுஷ்டித்து, (கருப்பம் வாய்ந்த பிறகு முந்நூறுநாட்கள் வரையில் இரவும் பகலும் (தனது கருப்பத்தி னுக்கு யாதொரு பங்கமும் (வராதபடி) சிவபெருமானை வழிபட்டு வயிறுசரியக் சுமந்தீன்ற (என்னுடைய) தாயினுக்கோ நெருப்பெ ரிய மூள்விப்பேன்.

(கு-ரை.) தன்து அன்னை இறந்தவுடன் தனது சுற்றத்தினர் சுடுகாட்டிற்குத் தூக்கிக்கொண்டுவர அவர்களைக் கல்லாலெறிந்து துரத்திவிட்டுத் தானே தன்தாயினை யெடுத்துக் கொண்டுபோய்ப் பச்சைவாழை மரங்களின்மீது வளர்த்தித் துன்பமுற்றுப் பாடிய திருச்செய்யுள்கள் முந்தியது முதல்பின்னேழும். 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டர்

சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

(கு-ரை.) வஸ்திரத்தினாற் செய்யப்பட்ட ஏணையிலும், மரத் தொட்டிலும், தனது மாரின்மீதும், தோளின்மீதும், மஞ்சத்திலும், என்னை வளர்த்தி, விரும்பி முழுதும் இடுப்பில் வைத்துக் காப்பாற்றிச் சிறப்புச்செய்யும் தாயாரையோ விறகின்மீதிட்டு நெருப்பை மூள்விப்பேன்.

(கு-ரை.) குழந்தைகள் அழுகிற காலத்தில் அக்குழந்தைகளின்நோக்கத்தினைத் தெரிந்துகொள்வதற்குக் கூடாமல் அவ்வழுகையினைமாற்றவும், சுகமாக நித்திரை செய்விக்கவும் பலவிடங்களில் வைத்துவைத்துச் சுகப்படுத்துவது தாய்மார் வழக்கமென்பதாம். (3)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

(பொ-ரை) (அதிகப்) பிரயாசையுடன் வயிற்றில் (பத்துமாதம் வரையில்) தாங்கிப் பின்பெற்றெடுத்து வளர்த்து விருத்தியடைவித்து (எனைத்தனியே) விட்டுத் தாங்கியிராமல் இரவும்பகலும்தனது கையினிடத்தே எந்திக்கொண்டு என்னைக் காப்பாற்றின தாயினுக்கோ உடம்பின்கண்ணே நெருப்பை மூட்டுவிப்பேன்.

(கு-ரை) தான் எனது நிமித்தம் எவ்வளவு துன்பமடையினும் அதனைப்பாராட்டாது எனக்கொரு சிறிது துன்பமும்வாராதபடி பாதுகாத்துவந்த அருமைத்தாயின் உடலில் அக்கினிபடும்படி எங்ஙனம் மனந்துணிவேனென்றனர். (4)

அரிசியோ நானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்—உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

(பொ-ரை.) அன்னையினுக்கு வரிசை வைத்துப் பார்த்துச் சந்தோஷிக்காமல்சுவைவாய்ந்ததேனே, தேவாமிர்தமே,செல்வச் சம்பத்தினைவாய்ந்த மகனே, என (அன்புடனேஅழைத்து) வந்த வாயினுக்கு நான் அரிசியினையோ போடுவேன்.

(கு-ரை.) பற்பல இனிய சொற்களினால் அன்புடனே என்னை யழைத்துவந்த எனது அன்னையின் வாயினுக்கு அத்தகைய இனிமையான பதார்த்தங்களைக் கொடுத்து சன்மானிக்காமல் அவ்வாயில் வாய்க்கரிசி போடும்படி நேரிட்டது என்தலைவிதியோ வென்றனர். (5)

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

(பொ-ரை.) (ஆசைமிகுதியாய்) மிருதுவாக என்முகத்தின் மீது தன்முகத்தினைவைத்து முத்தமிட்டு எனதுமகனே யென்றழைத்த வாயினுக்கு வாய்க்கரிசையையோ அள்ளிப்போடுவது தாயினுடைய சிரசின்மேலே கைகூசாமல்கொள்ளியினையிடுவேனோ.

(கு-ரை.) பேரானந்தத்துடனணைத்து முத்தமிட்ட எனது அன்னையின் சிரசில் அக்கினியையும், மிகுந்த உருக்கமுடன் என் மகனே என்றழைத்த வாயினுக்கு வாய்க்கரிசியும் போடும்படி நேரிட்டுவிட்டதும் கன்மமேயெனத் துக்கித்தபடியாம். (6)

கலி விருத்தம்.

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையி
லன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே.

(பொ-ரை.) முதலில் (சிவபெருமானால்) இடப்பட்ட நெருப்பு மூப்புரத்தின்கண்ணே (மூண்டெரிந்தது) பிற்பாடு (அநுமானால்) இடப்பட்ட நெருப்பு தென்னிலங்கைநகரில் (மூண்டெரிந்தது) (இப்போது) என்தாயாரால் இடப்பட்ட நெருப்பு என்னுடைய அடிவயிற்றில் (மூண்டெரிகின்றது) (அங்ஙனமாக) யானும்தாயாருடம்பில் இட்டநெருப்பு மூண்டெரிக மூண்டெரிக.

(கு-ரை.) பெருநெருப்பு விஷயமாகப் பிரஸ்தாபிப்பது முப்புரத்திலேயும் இலங்கையிலேயுமாகலின் அவ்விரண்டினையுங்கூறினர். முப்புரத்திலே யுண்டானதுபோல என்வயிற்றி லுண்டாயதென்றும், அநுமார் மூட்டியதுபோல நான்மூட்டினேனென்றும் குறிப்பித்தனர். அதாவது தனக்குண்டாயதுக்கம் இவ்வளவிற்றெனக் கூறமுடியாதெனவும் தானிடவேண்டியது இன்றியமையாத செயலெனவும் தெரிந்தனர். 7

நேரிசை வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ—மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(பொ-ரை.) ஆகாயத்தில் பறக்கின்ற பறவைகள் (எனக்கு நேராகமேலே) பறவாதபடி என்னைப்பாராட்டி (மனத்திலே அன்

புடனே) எண்ணிவளர்த்தெடுத்த கையானது நெருப்பில் வேகா நிற்கிறதே, வெந்து நுண்ணியசாம்பலாகிறதே ஐயகோ தீவினையேன் எங்ஙனம் பார்த்துக்கொண்டிருப்பேன்.

(கு-ரை.) ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகட்குநேரே காலைமாலைகளில் சிறுகுழந்தைகள் நேர்படில் பட்சிதோடமுண்டாமென்பது சாஸ்திர வழக்காகலின் 'குருவிபறவாமல்' என்றனர். இம்மைக்கு வேண்டியவற்றையெல்லாம் உதவி, மறுமையில் புத்தென்னும் நரகத்திற்கும்போகாதபடி தடத்துமோட்சத்தையடைதற்கு வேண்டிய வைதீக சாதனங்களையும் நடத்திவருவானென்று தாயெண்ணியிருந்தாளாதலால் 'கருதி' என்றனர். 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்து வரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

(பொ - ரை.) திருவண்ணமலையி லெழுந்தருளி யிருக்கின்ற ஞானவடிவானவனே! எப்போது தேவரீரையே நாடி மகிழ்ச்சியுடன் வரம்பெறவேண்டித்தங்கி என்னைப்பெற்றெடுத்ததாயானவள் வெந்துபோயினளோ, உன்திருவடியில் வந்துசேர்ந்தனளோ என்னை மறந்துவிட்டனளோ.

(கு-ரை.) திருவெண்காடரைப்போன்ற சற்புத்திரனைப் பெறுதற்குச் சிவபெருமானை நோக்கி அரியதவங் கிடந்திருந்தாலன்றிப்பலியாதாகலின், 'வரங்கிடந்து' என்றனர். சர்வசங்கப்பரித்தியாகமடையத்தக்க ஒரு புத்திரனைப்பெற்றவள் உடனே மோட்சமடைவள் என்பது சாஸ்திர நிச்சயமாகலின் 'நின்பதத்தில் வந்தாளோ' என்றனர். (9)

வீற்றிருந் தாளன்னை வீதி தனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காமெ
லெல்லாஞ் சிவமயமே யாம்.

(பொ-ரை.) (எனது) தாயானவள் (சுகமாக) விருந்துகொண்டிருந்தாள் வீதியிலு (முலாவிக்) கொண்டிருந்தாள். நேற்று (சீவிதையுட) னிருந்தாள் இன்றையதினம் (நெருப்பில்) வெந்து சாம்பலாயினாள், இதென்ன ஆச்சரியமென்று (மனம்) இரங்காமல் பால் தெளிக்கும் பொருட்டு நீவிரெல்லோரும் வாருங்கள் எல்லாம் சிவமயமேயாகும்.

(கு-ரை.) எனதுதாயார் தகனக்கிரியையின் முன்னிலையாக உலகநிலையாமையினைக்குறிப்பித்தனர். இத்தகையசெயல் பிரபஞ்சத்தில் நிகழ்வது சகசமாம் என்பர் 'ஏதென்றிரங்காமல்' என்றனர். தோன்றுதலும்வாழ்த்தலும் இறத்தலும் நமதுவிருப்பத்தின்படி சிறிதும் நடவாது பூர்வகன்மத்திற்குத்தக்கபடி சிவன்கூட்டிவைப்பானென்பார். எல்லாம் சிவமயமே, என்றனர். (10)

திருவிடைமருதூர்.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(பொ-ரை) என்தலைவனே! நன்மையினை நினையாதவர்களுடைய முப்புரங்களையும் பெருநெருப்பினால் சாம்பலாக்கினதிருவிடைமருதூர்ப்பிரானே! தேவரீருடையசந்நிதியிலேவந்து ஆகாரத்தி

னையென்று உட்கொண்டு தாகவிடாய் தணிந்து கொள்ளும்பொருட்டு நீரினைத்தேடுந்தொழிலானது எக்காலத்தில் எனக்குமுடிவு பெறும்.

(கு-ரை.) திருவருண்மயமாக விளங்குஞ் சிவாலயத்திலேயேயிருந்துகொண்டு, பசியின்பொருட்டுப் பிறரைநாடி ஆகாரத்திற்கு வேண்டியவற்றைக் கொள்ளாதிருக்கும்நாள் எக்காலம் சிந்திக்குமென்பார் 'என்றுவிடியும்' என்றனர். 1

திருவொற்றியூர்.

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டலத்தைப் போல வழகியதாங்—தொண்ட
ருடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(பொ-ரை.) புகழானது ஓங்கிய திருவொற்றியூரின் சமுத்திரத் தீரத்திலேயிருக்கும் கரும்பானது கண்டம்கருமையானதாம், மூன்றுநேத்திரங்களையுடையதாம், ஆகாயத்தினைப்போல அழகினையுடையதாம், சிவனடியார்கள் திருமேனியானந்திக்கத்தித்துக்கொண்டிருக்கும்.

(கு-ரை.) சிவனடியார்கள் திருவொற்றியூர்ப் படம்பக்கநாதரைத் தியானிக்குந்தோறும் அவர்கள்மனதில் பேரானந்தசுவை விளைந்துகொண்டிருக்குமாகலின் அந்நாதரைக் கரும்பு என்றனர்.

ஒடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்துங்

தவாதி தேவன் றிருவொற்றி யூர்த்தெருவிற்
பாவா ரடியிற் பொடி.

(பொ-ரை.) கட்டிகள் உண்டாகிச் சீப்பாயாநின்ற ஒன்பது
வாரங்களுள்ள உடலினுக்கு இட்டு அதனைப் பரிகரிக்கத்தகுந்
அவுடதத்தினை நான் தெரிந்துகொண்டேன் அதென்னெனின்
ஞ்சினையுண்ட தேவாதிதேவனுடைய திருவொற்றியூர்த் தெரு
ன்கண்ணே நடப்பவர்களுடைய திருவடியினதுகளேயாம்.

(கு-ரை.) சிவனடியார்கள்நெருங்கி எக்காலத்துமுலவும் திரு
வொற்றியூர் மாடவீதியிலுள்ள மண்ணிற் சிறிதினையொருவன் சிர
ற்றரித்துக் கொள்ளுவானேல் அவன்பிறப்பு எடுத்தற்கேற்றவி
னயானது நீங்கிவிடுமென்பதாம். இது முத்திக்ஷேத்திரமாகலின்
வ்வுண்மை நமது திருவெண்காடர் தெரிந்தன்றோ, பற்றற்றமு
த்தியாகிய அவர் உலகத்தின்கண்ணே பற்பலக்ஷேத்திரங்களை
ம் விரும்பாது இத்தலத்தினையடைந்து ஞானசமாதிகொலுதந்
வீற்றிருந்தருளினர். 3

ாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
வனங்க ளெல்லாங் கணநாதர்—பூவுலகி
து சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
பாதுந் திருவொற்றி யூர்.

(பொ-ரை.) இது இவ்வுலகிலுள்ள சிவலோகமாகும் என்று
லதரம் தோத்தரித்து மெய்கண்ட தவத்தினை யுடையவர்கள் பு
ழ்ந்துகொண்டிருக்கும் திருவொற்றியூரிலுள்ள தடாகங்களியா
ம்புண்ணியதீர்த்தங்களாம், மணல்முழுவதும் திருவெண்ணீறும்,
சாலைகளெல்லாம், சிவகணங்களாம்.

(கு-ரை.) திருவொற்றியூர்ப் பூலோக கைலாசமென்னச் சிவ ஞானிகள் சொல்லுவதால் உண்மைச்சிவனடியார்கட்கு அத்தலத் துத் தடாகங்கள் புண்ணியதீர்த்தமாகவும், மணல் விபூதியாகவும், விருட்சங்கள் சிவகணங்களாகவும் தோன்றுமென்பதாம். ஆகவே, திருவெண்காடர் தாம்கண்ட அனுபவ உண்மையை யிங்ஙனம்கூ றினர். 4

திருவாரூர்.

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றாரூர்க டோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்காள் நீவீர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர்.

(பொ-ரை.) திருவாரூருடையார் இவ்விடத்திலிருக்க (இத்த லத்தினைக்கடந்து) அந்தஊரில் திருநாளென்றும் எல்லாவூர்களி னும் சென்று அலைபவர்களே நேராகமனக்கருத்தையறியாத மூக கங்களே! நீங்கள் தீபம் இருக்க நெருப்பைத்தேடுவீர்கள்.

(கு-ரை.) 'புகழுமூவரி லுருத்திரமூர்த்தி பொங்கொளியிற்றி கழுஞாயிறு வகைகளிற் செம்பொன் சிலம்பு, பகருமந்திரத்தஞ் செழுத் தென்னவே பலவா, நகரின் மேன்மைபெற்றது கமலால யநகரம்'' என்றபடி இத்தலத்தில் திருவிழாவைத்தரிசித்தபின்வே றுதலத்தின் திருவிழாவைத்தரிசிக்கமனம்வாராதாகலின், ஊரூர்க் கடோறுமுழலுவீர், என்றனர். 5

எருவாய்க் கிருவிரன்மே லேறுண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலங்கப் பட்டாய்—திருவாரூர்த்

தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்கே நீ.

(பொ-ரை.) மலத்துவாரத்திற்கு இரண்டங்குலத்திற்குமே
லே எறியபுழுக்கூடாகிய பிறப்பிடத்திற்குக் கண்கலங்கினை, திரு
வாரூரின்கண் தேரோடும்திருவீதியில் நீ நீரோடும் வழியின்பொ
ருட்டு மாண்டுகிடந்தாயே.

(கு-ரை.) தன்னையடுத்திருந்த ஒருநல்லடியார் தன்கட்டளைப்
படி விவாகஞ்செய்து வாழ்ந்துகொண்டிருக்கையில் பெண்சம்பந்
தமான சுகஜன்னிகண்டு மாண்டுபோக அதுதெரிந்து அவனைச்
சமீபித்து இத்திருச்செய்யுளைப்பாடி எழுப்பிவிட்டனர். 6

திருக்காளத்தி

பொய்யை யொழியாப் புலாலைவிடாய் காளத்தி
யையரை யெண்ணா யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(பொ-ரை.) மனமே! பொய்பேசாதிராய், புலாலுண்ணுதலி
னின்றும் நீங்காய், திருக்காளத்திநாதரை நினைக்கமாட்டாய், சிவ
தருமத்தினைச் செய்யாய், கொடியகோபத்தினை நீங்காய், அழகிய
பஞ்சாட்சரத்தினைச் செபியாய், உனக்கென்ன பெருமையுண்டா
போகிறது.

(கு-ரை.) ஒருவன் மனிதப்பிறப்பை யெடுத்து அதனாலடை
யவேண்டிய அரியபாக்கியத்தை யடையவேண்டுமாயின் நீக்கவே
ண்டுவன சில, கொள்ளவேண்டுவன சில, அவையாவன பொய்,

புலால் கோபம் இவற்றையொழித்தல் வேண்டும். சிவசிந்தனை, சிவதருமசிந்தனை, பஞ்சாட்சரதியானம் இவற்றைப்பெறவேண்டும்.

திருக்காஞ்சி.

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபே ரிட்டழைக்க வேனென்றே—னித்தம்
எனக்குக் களையாற்றாயே கம்பா கம்பா
வுனக்குத் திருவிளையாட் டோ.

(பொ-ரை.) திருவேகம்பமுடையானே! கம்பாநதி யுடையானே! எத்தனை ஊர்கள் எத்தனை வீடுகள், எத்தனை தாய்மார்கள் ஈன்றோர்கள், எத்தனை பேர்வைத்தழைக்க என் என்று விடை கொடுத்தேன், நாள்தோறும் அடியேனுக்கு விடாய்தணியாய் தேவரீருக்கு இது ஒரு திருவிளையாட்டா யிருக்கிறதோ.

(கு-ரை.) எடுத்த செனனங்கட்கு எண்ணிக்கை இவ்வளவெனக் கணக்கிட முடியாதாகலினாலும், அந்தந்த சென்மங்கள் தோறும் அனுபவித்ததுன்பங்கட்கு அளவில்லையாகலினாலும் அதனால் விடாயுற்றிருக்குமெனக்கு இச்சென்மத்திலாவது அக்கவலை தீர்த்து இனிசென்மமெடாதபடி செய்வாயென்பார். 'களையாற்றாய், என்றனர் 'திருவிளையாட்டோ' எனச் சந்தேகித்ததனால் திருவிளையாட்டன்று எனது கன்மமென்றபடியாம். (8)

திருவிருப்பையூர்.

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

(பொ-ரை.) என்னைப்பெற்ற) தாயானவள் உடம்பு தளர்ந் ாள், வலியவினையையுடைய நான் கால் ஒய்ந்துவிட்டேன், பிர னும் கைதளர்ந்துவிட்டான், தலைவனே திருவிருப்பையூரில் வா கின்றசிவபெருமானே இனிமேலும் ஒருதாயினுடைய கருப்பை ாகிய ஊரில்வந்து பொருந்தாமல் என்னைக்காத்தருள்வாயாக.

(கு-ரை.) எடுத்தசென்மங்கட்கு அளவில்லையாகலின் அவ்வளவு சன்மங்களிலும் என்னைப்பெற்ற தாய்மாரும், சிருட்டித்த பிர னும், கொன்ற இயமனும் சலித்து விட்டனர்களாகலின் இனி வர்கட்குச்சிறிது ஆறுதலுண்டாகும்படி என்னைப்படையாதிருக்க வண்டுமென்றனர்.

திருக்கச்சிக்காரோணம்.

த்தி முத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குந்
த்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்
சிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
சிக்குதையா காரோண ரே.

(பொ-ரை.) யானைமுதலாகஎறும்பு ஈறாகவுள்ள எல்லா உயிர் ட்கும் மனமகிழ்ந்து அவைகள் வேண்டியவற்றைக் கொடுக்கி ற ஆசாரியனே! மிகவும் பசிக்கின்றது ஐயனே! பாவியாகிய ன்னுடைய பாழாகிய உதரத்தைப்பற்றி இழுக்கின்றது கடவு ள திருக்காரோணத்தி லிருப்பவரே!

(கு-ரை.) ஆன்மகோடிகட்கெல்லாம் அவரவர்கள் கன்மத் ற்குத் தக்கபடி உணவு ஊட்டிக்காத்துவருபவன் நீயேயாகலின் வ்வான்மகோடிகளுள் ஒருவனாகிய நான் மாத்திரம் இங்ஙனம் யால் துக்கப்படலாமோ உடனே தணிக்கவெண்டுமென்பர். 10

திருக்குற்றாலம்.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

(பொ-ரை.) எமன் நெருங்குவதற்குமுந்தியே, கண்பஞ்சடைவதற்கு முந்தியே, பாலுண்டகடைவாய்ப்பல் விழுவதற்கு முந்தியே, உறவினர் மேலே விழுந்து அழுவதற்குமுந்தியே, ஊரிலுள்ளார் மயானத்திற்குக்கொண்டுபோய்ச் சுடுவதற்குமுந்தியே, திருக்குற்றாலத்திலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் துதிப்பாயாக.

(கு-ரை.) மரணத்தருவாயில் இந்திரியங்கள் கலங்கிவிடுமாகலின் அச்சமயத்தில் நினைப்பதற்கேதுவாகிய கரணங்களும் அங்ஙனமேயாகும். ஆதலின் அறிவானது தெளிவாகவிருக்கிறகாலத்திலே சிவத்தியானம் பண்ணுதல் வேண்டுமென்றார். 11

திருவையாறு.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
வெண்ணரிய தாயு மிளைப்பாற பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாற வுங்கண்பா
ரையா திருவையா று.

(பொ-ரை) என்தந்தையே! திருவையாற்றி லெழுந்தருளியிருப்பவனே! பூமியானது (தன்னுடைய) அனல் அடங்கும்படியாகவும், ஆகாயமானது (தன்னுடைய) புகையடங்கும்படியாகவும் (என்னைச்செனனங்கள்தோறும் பெற்றெடுத்த) அநேகதாய்மார்கள்

ளைப்பாறும்படியாகவும், சிருஷ்டிசெய்யும் பிரமன்கையாறும்படி
கவும் அடியேனுடையகால்கள் ஆறும்படியாகவும் திருநோக்கம்
வைத் தருளவேண்டும்.

(கு-ரை.) எடுத்தசெனனங்கட்குக் கணக்கில்லையாகலின் அவ்
செனனங்கடோறும் மரணகாலத்தில் கொளுத்தியபோது
ண்டாகிய நெருப்பும்புகையும், பிறந்தகாலத்தில் தாய்மார்க்குண்
கிய நோயும், பிரபஞ்சபோகத்தினை யனுபவிக்கும்படி பிரமன்
ழுதிவந்ததையும், அங்ஙனம் போகங்களை யனுபவிக்கிறகாலத்
உலகமெங்குந் திரிந்தலுத்தகாலும் இளைப்பாற எனவே அதா
இனிச்செனனம் வாராதபடி திருவடியிற் சேர்த்துக்கொள்ள
ண்டு மென்பதாம். 12

சிதம்பரம்.

றம்பலமுஞ் சிவனு மருகிருக்க
ற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
ந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சே
ந்திடத்தை நாடுதே கண்.

(பொ-றை.) திருச்சிற்றம்பலமும் (அவ்வம்பலத்தில் ஆனந்த
த்தம் செய்தருளும்) நடராஜப்பிரபுவும் சமீபத்திலிருக்க வெறு
யாகிய அம்பலத்தைத் தேடிக்கொண்டோமே(என்னெனின்)
யாமையினையும் மடமையினையும் வாய்ந்த மனமானது எந்நா
தான் பிறந்தவிடத்தினையே தேடாநின்றதே, கண்ணனது
ன் (பால்) உண்ட இடத்தினையே நாடாநின்றதே.

(கு-ரை.) பிறப்பதற்கிடமாயுள்ள நிதம்பமும் பாலுண்பதற்கு
மாயுள்ள தனமும் ஒவ்வொருவரையும் மயக்கிக் காமத்தை
டுவதற்கேதுவாகப் பிரபஞ்சத்திலிருந்து கொண்டிருத்தலினு

ல், அம்மயக்கிற் சிக்காது உலகத்திலுள்ள மாதரனைவரையும் தாய் மார்களாகப் பாவித்து வாழவேண்டுமென்பதாம். 13

போது.

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு—நாடிநீ
என்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனுன்
உன்னை நினைத்தா லுதை.

(பொ-ரை.) இதழானது விரியாநின்ற புட்பமாலையினைத் தரித்தபெண்ணே! உன்னை இப்போது தேடினவர் போய்விட்டார். மனந்தெளிந்திரு, நீஎன்னை விரும்பி நினைத்தாயாயின், நானுன்னை இடுப்பிலுதைப்பேன், உன்னை நினைத்தேனாயின் நீஎன்னையுதை

(கு-ரை.) அநேககோடி சென்மாந்தரங்களினும்மாதருடன் கலந்துகலந்து மயங்கிக்கிடந்த மனமானது ஒரேவழி தன்னையறியாது எதிரிட்டமாதொருவள்பால் நாடி அவளை வசியம் செய்துவிட உடனே தன்மனத்தைத் தன்வழித் திருப்பிக்கொண்டு அம்மாதினை நிக்கிரகித்தபடியாம். சாமான்னியர் மனத்தின்வழி அறிவினைவிட்டுமயங்குவர் அறிஞர் அம்மனத்தினை அறிவால் தன்வயப்படுத்திடுவர் எத்தகையினராயினும் பிராரத்துவத்தை யனுபவித்தேதீரவேண்டும், ஆனால் அபக்குவர்கட்கு அநுபவமாயும் பக்குவர்கட்கு வாசனை மாத்திரமாயும் நிகழும், ஈண்டுச்சுவாமிகள் பால் நேர்ந்தது பூர்வ்வாசனையேயாம். 14

வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்

ட்டிறந்த காலமெலாம் போதும் பரமேட்டி
ட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(பொ-ரை.) பெருமையிற் சிறந்த பெருமானே! நான் வாசற் படியைக்கடந்து தாண்டிக்கொண்டுவந்து இடாத பிச்சையினுக்கு இப்போது ஆசைப்படுவதில்லை (அங்ஙனம்) அப்பிச்சையினுக்கு ஆசைகொண்டிருந்து கழிந்தகால மனைத்தும் போதும், இனிக்கு றித்துச் சொல்லுதற்கேலாத ஞானோபதேசம் செய்தருளுவாய்.

(கு-ரை.) ஒன்றினைச்சுட்டில் சுட்டுவானாகிய ஞாதுருவும், மன மாகிய ஞானமும், சுட்டப்படும் பொருளாகிய ஞேயமும்மூன்று மொன்றாமாகலின், சுட்டிறந்த ஞானவேண்டும் என்றனர். ஞான மனமாலை. "என்னுணை மாணவகா வீதென்று சுட்டாதே, பன்னு நுண்மைதனைப் பாராதே—நின்னாலே, யொன்றலது வொன்று தங் குன்னுணையொன்றாயே, லொன்றிரண்டல்லாத வொன்று" என்றதனாற் காண்க. 2

ச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுதிருவு
பிச்சையிலே தானங் கிருப்பதும்—பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(பொ-ரை.) விடத்தினையுடைய பாம்பினைத் தரித்தபரமசி வனை நன்றாக வணங்குவதும், தன்னிஷடப்படி யிருந்துகொண் டிருப்பதும், பிச்சையெடுப்பதும், சாப்பிடுவதும், வந்து சிவாலய வாயற்படியிலேயே நித்திரைசெய்வதும் தானே இன்பமாகும்.

(கு-ரை.) இன்பியலாமையா துண்டாகும் பசியினை மாத்திரம் தணித்தற்குப் பிச்சையேற்றுண்டு சிவாலயதரிசனம் செய்தபின்

அக்கோயில் வாயற்படியிற் கிடத்தலே சுகமென்றனர். அதனால் எத்தகையினர்கட்கும் சிவாலய வழிபாடொன்றே மோட்சந் தருமென்பதாம். இதுபற்றியன்றோ, "திருக்கோயிலில்லாத திருவில் ஊரும்" எனவும், ',ஆலயம் தொழுவது சாலவுநன்று" எனவும், "கோயிலில்லாதவூரில் குடியிருக்க வேண்டா மெனவும்" பெரியோர் பணித்துள்ளார். 3

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி.

(பொ-ரை.) சிவபெருமானே! நானிருக்கும் இடத்தினைத் தேடி என்பசியினைத் தணித்திடற்கு அன்னத்தினைப் பரிவுடனே கொண்டுவந்தால் புசிப்பேன் அங்ஙனம் செய்யாமல் மிகவும் வருந்தி யழைத்தாலும் போகமாட்டேன் எனது தேகமெலிந்தாலும் இனிப்போகமாட்டேன்.

(கு-ரை.) பசியைத் தணித்தலின் பொருட்டு அன்னத்திற்கென வெளிவரின் வீதிகடோறும் ஒவ்வொரு வீட்டிலும் செல்லவேண்டியிருக்கின்றது, அவ்வவ்வீட்டிலுள்ள சாமான்யரை யெல்லாம் கெஞ்சவேண்டியு மிருக்கிறது. அவ்வமயம் மெய்-வாய்-கண் மூக்குச் செவி முதலிய வற்றிற்குப் பிரபஞ்சவேடிக்கை விளைகின்றது அவ்விளைவின் வழியே மனம் செல்லுகிறது. செல்லவே இச்சை விளைகின்றது இச்சை விளையவே அவ்விச்சையினை யனுபவிக்க முயற்சி யுண்டாகின்றது, அம்முயற்சியில் இன்பதுன்பம் விளைகின்றன. அவை புண்ணிய பாவங்கட் கிடமாய்ப் பிறப்பினுக்கேது உண்டாகின்ற இத்தகையவிபரீதங்கட் கிடங்கொடாதபடியிருந்த விடத்திலே யிருத்தலே நலமென்பார். "போகேனினி" என்றனர்.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேனதுவே சுகம்.

(பொ - ரை.) ஜகத்திரே! உயிரானது உடலைவிட்டு நீங்கப் போகிறது விட்டவுடன் சரீரத்தினை உறவினர் சுட்டுவிடப்போகின்றார். ஆகையால் என்னபாடு பட்டாயினும் எப்பொழுதும் சிவபெருமானைத்துதியுங்கள் வணங்குங்கள் சொல்லிவிட்டேன் அதுவே சுகமானது.

(கு-ரை.) உலகத்திலே ஒருவன் நற்கதியினை யடையவேண்டியதற்கேற்ற சாதனங்கள் உடலுடன் உடல் கூடியிருக்குங்காலத்திலேயே சம்பாதித்துக்கொள்ளவேண்டும். உடலோ அடுத்தகணம் நமது வசத்திலிருப்பது துல்லபம் ஆகலின் உடலோடிருக்கும் காலமெல்லாம் ஒவ்வொரு கணந்தோறும் சிவசிந்தனையுடனிருக்கவேண்டுமென்பார் "எந்நேரமும் சிவனை யேத்துங்கள்" என்றனர்.

5
ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

(பொ-ரை.) அறியாமை வாய்ந்த மனமே! உயிருடன் கூடிய சரீரமானது அழிந்துபோனாலும் உலகத்திலே பாவியென்றபேரினைப் படைக்காதே, பொருந்திய சிறப்பினைவாய்ந்த விஸ்தாரவார்த்தையும் உலகவுறவும் உனக்கு வேண்டாம் மாண்டவர்போலத் திரிவாயாக.

(கு-ரை.) உலகத்தில் விவகாரமுள்ளவரையில் நன்மை தீமைக்கேதுவாகிய விஷயங்களுள் சிக்குண்ணவரும் அங்ஙனம் சிக்

கவே எவ்வழியிலாவது பாவியென்றே பேருண்டாம் ஆகலின் மவு
னம்பூண்டு நடைபிணம்போ லிருந்து கொண்டிருத்தலே யுத்தம
மென்றனர். "பாவியென்ற பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்,
ஆவிநின்ற சூத்திரத்தை யறிவதினி யெக்காலம்" என்றனர் பத்
திரகிரியாரும். 6

பின்முடுகுநேரிசை வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்க வாயின் மனையிருக்கச்—சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு.

(பொ-ரை.) மனமே! செல்வமிருக்க, வீடும் மனைவியுமிருக்க
கனவினைப்போல நிலையிலதாகி விக்கலெடுத்து பற்கள்கிட்டிவிட,
கண்கள் மிகவும், பஞ்சடைந்து நீரையும் கோழையையும் கக்கி,
இறந்துசாப்பறை யடித்தலைக்கண்டிருந்தும் இந்தச்சென்மத்தினை
நம்பியிருப்பரோ (அறிவுடையோர்கள்.)

(கு-ரை.) அனுபவிக்க வேண்டிய சகல போகங்களும் குறை
வறவிருக்க அவற்றையெல்லாம் விட்டுக் கணத்திலிருந்துவிடும்
உண்மையினைப் பிரத்தியட்சமாகத் தினமும் கண்டும் இவ்வுடலில்
அபிமானம் வைத்துக்கொண்டு பெருமானைமறந்திருப்பது தகுதி
யாமோ என்றனர். 7

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீல மறிந்திலையே சிந்தையே—கால்கைக்குக்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக் குத்திமொத் தப்பட்டுடை
கட்டையிட்டுச் சுட்டவிடக் கண்டு.

(பொ-ரை.) மனமே! கால்கைகளுக்குச் சிறுதுண்டுகளை வை
ந்து உடலுக்கு மெத்தைகள் வைத்து (அடிமைகள் வாயுவின் நிமி
த்தம்) குத்திய துக்கப்பட்ட உடலை விறகிலிட்டுச் சுட்டுவிடப்
பார்த்தும் இனி மேலுமிருக்க விரும்பினையே, வெள்ளிய இடப
வாகனத்தையுடைய பரமசிவனது கல்யாண குணங்களை யறிந்
திலையே.

(கு-ரை.) பற்பல வகையினும் உபசரித்து வைத்துக்கொண்
டிருந்த உடலைப் பிரத்தியட்சமாக நெருப்பிலிடுவதைக் கண்ணார
க் கண்டிருந்தும், நித்தியனாகிய சிவபெருமான் திருவருளினைநாடா
து உடலுடனே வாழவே விரும்புகின்றனை யென்ன பிரயோசன
மடைவா யென்பதாம். 8

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
ள்த்தித்தத் திச்சட்டைத் தட்டிக்கட் டிப்பிட்டுக்
குத்திக்குத் தித்தின்னக் கண்டு.

(பொ-ரை.) மனமே! வலிமைபொருந்திய கழுக்கள் குதித்து
குதித்து இறகுகளைத்தட்டிமூடி உடலைச் சிறுகூறுகளாக்கி இரை
ச்சலிட்டு மூக்கினல் குத்தித் தின்னப்பார்த்தும் ஒன்பதுவாயில்க
ளையுடையதோற்பையாகிய உடலின்பொருட்டு எந்நாளுமே அன்
பு வைத்துத் திரிந்தாயே.

(கு-ரை.) கழுகு முதலியவைகள் தமது பசியாற்றும் பொரு
ட்டுப்பிடுங்கித் தின்னுதற்கேதுவாக உடலிருந்துகொண்டிருத்தல்
பிரத்தியட்ச மாகலின் அங்ஙனம் அவற்றிற்கு உடலிறையாகாத
படித் திருவருளிற்கலந்துகொள்ள முயற்சிக்கவேண்டுமென்பதாம்

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை—முன்ன
மெரிந்தகட்டை மீது விணைக்கோ வணத்தை
யுரிந்துருட்டிப் போட்டது கண்டு.

(பொ-ரை.) மனமே! அரசர்கள் இவர் என்று சொல்லப்பட்டிருந்து வாழ்ந்தாரை முன்னம் (வேறொருபிணம்) எரிந்தமேட்டின்பேரில் ஆண்மைக்குத் துணையாகவிருந்த கௌபீனத்தையும் உரிந்துகொண்டு எருமுட்டைகளின்மேல் வளர்த்திவிட்டதைப் பாாத்தும் இனிமேலும் பிறப்பதற்கு இணங்குவையோ.

(கு-ரை) பிறருக்கு எவ்விதத்தும் பிரயோசனப்படாத அல்பத் துண்டாகிய கௌபீனத்தினையும், தன்னுடன் வைத்துக்கொள்ளுத்துதற்கு இயலாதிருக்க அருமையெனை நாம் பாராட்டியனுபவித்துவந்த பொருள்களுக்கு நமக்குமென்ன சம்பந்தமுண்டென்பதை யாலோசித்து அவற்றிற் பற்றுவையாது பிறப்பினுக்கும் எதுவுண்டாக்கிக் கொள்ளாதிருக்க வேண்டுமென்பதாம். 10

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுசங்க நல்விலங்கு பூட்டுங்—கடைசங்க
மாம்போ தனவூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(பொ-ரை.) முதலிலுண்டாகிய சங்குபாலை யூட்டும், மாதர்களுடைய ஆசைகாரணமாக உண்டாகிற நடுச்சங்கமானது உறுதியான விலங்கு பூணும்படிசெய்யும், கடைசிகாலத்தில் உண்டாகிற சங்கானது இறந்துபோகும் காலத்தினுக் குரியதாகி ஊதப்படும் நாம்உலகத்தில்வாழ்ந்தசுகம்அவ்வளவோஇவ்வளவோ அறியோம்.

(கு-ரை.) குழந்தைப்பருவத்தில் பாலூட்ட உபயோகப்படுத்துவது முதற்சங்கு (பாலாடை) விவாகமகோற்சவகாலத்தில் ஊதுவது நடுச்சங்குமயானத்திற்கு எடுத்துக்கொண்டு போம்போது ஊதுவது கடைச்சங்கு. (11)

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப்போ மே.

(பொ-ரை.) இவைகள் எத்தனைநாள் சேர்த்தெடுத்த உடம்புகள் அவ்வளவும் மண்ணுண்பதல்லவோ கடவுளின் திருவடியினை மெல்லப்பற்றி இராப்பகலற்ற இடத்திலே மேன்மைக் குடியாகவிருப்போம்.

(கு-ரை.) புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாய் மிருகமாய் பறவையாய் பாம்பாய் கல்லாய் மனிதராய் என்றபடி எத்தனையோசென்மங்களெடுத்தபின்னர்மனிதப்பிறப்பை யெடுக்கப்பெற்றும் அம்மனிதப்பிறப்பை மண்ணுக்கு வீடாகக் கொடுக்காமல் அப்பிறப்பிலேயே சிவபெருமான் திருவடித்தியானம் செய்துமோட்சவீடடைதலே தகுதியென்றனர். (12)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீ—ரெச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்தநி ராமயமா மே.

(பொ-ரை.) சிற்சில வஸ்துக்களை எச்சிலென்று இகழ்ந்துரைத்து நன்மை தீமைகள் பேசவேண்டாம், எச்சிலிருக்குமிடந்த

னைத் தெரிந்தீரில்லை, எச்சிலை யூகித்திருந்து பார்த்தால் ஒற்றுமை வெளியாகும் பிறகு மனத்துன்ப மற்றதாகும்.

(கு-ரை.) ஒருவன் இருவினை எச்சிலென்று நீக்கில் எச்சிலில்லாதஒன்றில் விருப்பமுண்டாம்' ஆகவே ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புநிகழும் அது ஏதுவாக சுகதுக்கம்விளைந்து புண்ணியபாவங்கட் குட்பட்டுச் செனனமரணங்களில்அலைதல் வேண்டிவரும், ஆகலின் உலகிலுள்ள எல்லாப்பதார்த்தங்களினிடத்தும் சமபுத்தி பாராட்டி இருவினையற்றிருக்கவேண்டுமென்பார் 'இதமகிதம் பேசாதே'என்றனர். எச்சிலுண்டாமிடத்திலேயே எச்சிலில்லாததும் உண்டாகுமென்பதனைத் தெரிந்தீரில்லையென்பார், 'இடமறியீர்' என்றனர். ஈண்டு எச்சிலென்றது வாய்நீரையன்று நிக்கிரஷ்டவஸ்துக்களை. (13)

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

(பொ-ரை.) எத்தனைபேர் தங்கள்தங்கள் கோசத்தினை நாட்டிய பள்ளம், எத்தனை பேர் தங்கள் தங்கள் கரங்களினால் பிடித்த தனம், எத்தனைபேர், தங்கள் தங்கள் பற்களால் கடித்து இழுத்த கீழுதடு, ஆகையால் அடா தினந்தோறும் பொய்யினையே பேசுகின்ற உலகிலுள்ள ,அறியாமையுடன்கூடிய மாதர்களினின்று நீங்கிப் பிழையேடா பிழையேடா பிழை.

(கு-ரை.) ஈண்டு மாதரை எனப்பொதுப்படக்கூறினும்வேசிகளையேகுறித்ததொன்றும். நாளொன்றுக்குப் பற்பலஆடவர்களையணைந்து அவ்வவர்கட்குத் தக்கபடி அவரவர்கள் நம்புமாறு உண்

மையான வார்த்தைகளைப் போலவே இதமாகப் பொய்பேசிப் பொருளைக்கவர்ந்துகொண்டு அவர்களைவிலகிவிடுவார்களாகலின் அத்தகையர் கூட்டுறவு எக்காலத்தும் கூடாதென்பார் 'உய்யடா' வெனப பலதரம் வற்புறுத்திக் கூறினர். (14)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினைநீ யுன்னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய் கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

(பொ-ரை.) மனமே! உலகிலிருப்பதுபொய், இறந்துபோவதுமெய்யென்று ஆலோசித்து ஒருவர்க்காயினும் கெடுதிநினையாதே பெருத்தவயிறுனது நம்முடைதென்று நாமிருக்க, நாயும் நரியும் பேயும் கழுகும் தம்முடையதென்று தாமிருக்கும்.

(கு-ரை.) உலகின்கண்ணே பிறந்துவிடுவது பிரத்தியட்ச சாட்சியாகலின் அதனையடிக்கடி நினைத்துக்கொண்டு எவர்பாலும் தீங்குசெய்யாதிருந்தால் நாயாதிகளுக்கு இறையாகாமல் மோட்சமடையலாம், தீங்குசெய்யின் நாயாதிகட்கு இறையாகவேண்டுவது நிச்சயமென்றனர். (15)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(பொ-ரை.) அதி உல்லாசமாக அசைந்து விளையாடிக்கொண்டு இரண்டுகைகளை வீசிவரினும் பெண்ணின் மனமானதுதன்தலையின்மீதுள்ள நீர்க்குடத்தின் கண்ணதேயாகும். அதுபோலஎந்

தத்தொழிலைச் செய்யினும் எந்தஅவஸ்தையநுபவித்தாலும் முத்தர்களுடைய மனமானது மவுனநிலையிலேயேயிருக்கும்.

(கு-ரை.) பெரியோர்கள் உலகத்திலே ஆடுவாரோடாடியும், பாடுவாரோடுபாடியும், பெண்டுபிள்ளை சுற்றத்தினர் மத்தியிலிருந்தும் பகிர்முகவிவகாரங்கள் எவ்வளவுசெய்யினும் அந்தர்முகத்தியானத்தினை ஒரு இம்மிநேரமும்விட்டு நீங்கார். இதுவே சிவராஜயோக நிலையாம். (16)

மாலைப் பொழுதினறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலை மினக்கிட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானு லென்செய்வாள் பின்.

(பொ - ரை.) மாலைக்காலத்திலே மணத்துடன்கூடிய மஞ்சளினையரைத்துப் பூசிக்குளித்து வேலைமெனக்கிட்டுக் கண்விழித்திருந்து கர்ப்பமாகி (ஒருபிள்ளையினை யீன்றெடுத்தாள் பெயருமிட்டாள் அங்ஙனம்பெற்ற பிள்ளையானது பித்தனாகிவிட்டால் பிறகு அவள்யாதுசெய்வாள்.

(கு-ரை.) உலகில் ஒருவன் ஒருகாரியத்தைப் பலவகையால் வெகுபிரயாசையுடன்முடிக்க எத்தனிக்கினும் அது அவனிஷ்டப்படிவராது வேறுவிதமாக முடியினுமுடியும் ஆகலின் அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி திருவருள் கூட்டிவைக்குமேயல்லது தமது சுதந்தரத்தாலொன்றும் நடவாதென்பதாம். (17)

பட்டினத்துப்பிள்ளையார் பாடலும்,

ஞானார்த்ததீபவுரையும்,

முற்றுப்பெற்றது.

உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதானா

ஒருமட மாது மொருவனு மாகி யின்ப சுகந்தரு
மன்பு பொருந்தி யுணர்வு கலங்கி யொழுகி யவிந்து
ஊறு சுரோணித மீது கலந்து—

(பொ-ரை.) ஒரு அழகியபெண்ணும், ஒரு வாலிபனுங் கூடி இன்பமாகிய சுகத்தினைக்கொடுத்தற்கேதுவாகிய அன்பினையடைந்து (கலவியில்) அவசமாகியபோது வெளிப்பட்ட சுக்கிலம்பெண்ணிடத்துதித்த சுரோணிதத்துடன் கலந்து.

பனியிலொர் பாதி சிறுதுளி மாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதும வரும்பு கமடமி தென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற

(பொ-ரை.) பனித்துளியில் பாதித் துளி யளவாகி மாதினுடையவயிற்றிற் பிரவேசித்துத் திரட்சியாகத் தாமரைமொக்கினை நிகர்த்து ஆமையுருவெனவாகிக் கண். உடல், வாய், காது, கால் கைகளென்று சொல்லத்தகுந்த.

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்றநி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில் விழுந்து
யோகமு வாரமு நாளு மறிந்து

(பொ-ரை.) உருவத்தினையு மடைந்து உயிர்விருத்தியாதற்குப் பத்துமாதங்கள் பூர்த்தியாகி அம்மாதின் வயிற்றினின்று வந்து பூமியில்விழுந்து (அச்சமயம் இன்ன) யோகம் இன்னவாரம் இன்ன நட்சத்திரமெனத் தேர்ந்து.

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்பட வுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில் கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—

(பொ-ரை.) மகளிர்கூட்டம் எணையில் வளர்த்த (இவ்வேளையிலிருந்தும்) பூமியில் நாவியும் காலை யுதைத்துக்கொண்டு கவிழ்ந்து மயில்போன்ற சாயலையுடைய (தனது தாயின்) முலைப்பாலைக் குடித்து சிறிது சிறிதாக அறிவு வளர வளர்ந்து.

ஒளிநகையூற லிதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்பட—

(பொ-ரை.) பிரகாசிக்கின்ற பற்களுடன் ஊறும் உதட்டினையுடைய மாதர்வந்து முத்தமிடத்தவழ்ந்து தாயின் மடியிலிருந்துகொண்டு குதலை வார்த்தைகளைச்சொல்லி வா போவென இரண்டொரு சொற்களைக்கூறி.

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே—

(பொ-ரை.) உடுக்கத்தகுந்த ஆபரணங்களும் வஸ்திரத்துடன் அரைஞாண் அசைய(அன்னம்) சாப்பிடுவோருடனும்(பலகாரம்) தின்பவருடனும் புசித்து வீதிக்குவந்து புழுதியினைப் பூசிக்கொண்டு நாடிவரும் மற்றைப்பிள்ளைகளுடன் ஓடிநடந்து ஐந்துவயது வரையில் இங்ஙனம் விளையாடியே. ($\frac{1}{4}$)

உயர்தரு ஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து—

(பொ-ரை.) உயர்வாகிய ஞானாசிரியரிடம் உபதேசமும், தமிழ்ச்சாத்திரங்களில் அளவு தெரிந்து வளர்பிறையென்று யாரும் சொல்லப் பதினாறு வயதடைந்து.

மயிர்முடி கோதி யறுபதநீல வண்டிமிர் தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

(பொ-ரை.) தலைமயிர் கோதிமுடித்து வண்டுகள் தங்கிப்பாடும் குளிர்ச்சி பொருந்திய மாலைகளைத் தலையிற்றரித்து இரத்தினங்களிழைத்த பொன்னாற்செய்த ஆபரணங்கள் பூண்டு மாகதர் போகதர் ஆகிய பாடகர்கள் சேர்ந்து புகழ்ந்து வணங்க.

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும
ருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

(பொ-ரை.) மன்மதன் போன்ற வடிவனிவனென்ன காமமாதர்கள் பார்த்து மன்மருண்டு கூடி வண்டுகளையொத்த விழிகளினால் மருட்டி அழகிய அவர் மயிலன்ன சாயலுடன் நடப்பதனைப் பார்த்து.

மனதுபொருமலவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

(பொ-ரை.) மனந்தாளாது அமளாதர் பின்னுலோடி மங்கலமான செவ்விய கலசத்தினையொத்த தனங்களையணைத்து மயங்கி அதரபானம்பண்ணித் தாம் சம்பாதித்த செல்வ முழுவதையும் ஒருங்கே கொடுத்து;

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

(பொ-ரை.) ஒருமுதற் பொருளாகவும் அபாரமாகவுமிருந்த செல்வமுழுதும் வீணுகச் செலவழித்து மதனலீலை விசனத்திற் கேதுவென்று வாலிபபருவத்தினின்றும் வேறுபட்டு.

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே—

(பொ-ரை.) அழகுகெட்டு, இளமைகெட்டு, வலியபற்கள் உதிர்ந்து; இரண்டு நேத்திரங்களும் மறைந்து, மூப்படைந்து நரையுந்திரையும் அதிகப்பட வாதநோயும் யாவரையும் விரோதிக்கும் கோபமும்பெற்று செவ்வியகரத்தினிடத்தில் ஒருதடிபிடித்துமே.

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன் மொழிந்து—

(பொ-ரை.) ஒருமுதுகு கூனுடன் வருவதும்போவதுமாகி குரங்கினைப்போலக் குந்திக்குந்தி நடந்து அறிவுகெட்டுச் செவிடு பட்டு இன்னது சொல்லியதென்றறியாமல் எந்நேரமும்பேசி;

துயில்வருநேர மிருமல்பொருமு தொண்டையுநெஞ்சமு
லர்ந்துவறண்டு துகிலுமிழந்து அணையுமழிந்து
கோதையர்பாலர்கள் கோரணிகொண்டு

(பொ-ரை.) தூங்குகின்ற சமயத்தில் இருமல் சகிக்க முடியாமல் தொண்டையும் மார்பும் உலர்ந்து வறண்டு இடுப்பிலுள்ள வஸ்திரம் நழுவச் சுரணையின்றி மாதரும் பிள்ளைகளும் கோளாறு செய்யப் பெற்று;

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து—

(பொ-ரை.) இக்கலியிலே இவர் தன்மையினைப் பாருமெனச்சொல்பவர்கட்குத் துன்பமதிகரிக்கக் கலகலவென மலமும்சலமும்பெருகிக் கால்வழியாகவும் தேகமேலும் பொருந்த வழிந்து;

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதனைநொந்து—

(பொ-ரை.) மனந்தெளிவின்றிக் குளறுபடி வார்த்தையடைந்து மனமும் எண்ணமும் அலைந்து நல்லஆதரவு இக்காலத்திலது இல்லை யென வருந்தி,

மறைப்வன்வேத னெழுதியவாறு வந்தது கண்டமு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியென தொந்த
மேதினிவாழ்வுநி லாதினி நின்ற—

(பொ-ரை.) வேதங்களுக்குரிய பிரமன் தலையில் எழுதிய விதி நெருங்கிவிட்டது, இனியமரணகெண்டமெனத்தெரிந்து இலைதக்காட்டிலும் வேறு கண்டமேது இனியெனச் சம்பந்தமுளது இனி வுலக வாழ்வு நில்லாது பாக்கியாகவிருக்கும்.

கடன்முறைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொருந்து கவைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேருமே—

(பொ-ரை.) கடன் முதலியவற்றைப்பற்றி எதாவது எற்பாடுசெய்யவேண்டுமெனின் பேசுவீரென்று சொல்லிக்கொண்டிருந்த நாவானது குளறி யிழுத்துக்கொள்ள, கைகளினாலே சாடைகாட்டி வாயில்வார்க்கும் கஞ்சி பக்கங்களின் ஒழுகிவிட பஞ்சபூதங்களும் விடுகின்ற பிராணவாயுவும் குறைய மனத்தடுமாற்ற முண்டான காலத்தே.

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும் விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து—

(பொ-ரை.) வளர்கின்ற சந்திரனது கலையினைப்போலப்பற்களும் மயிருஞ்சடையும் சிறுகுடுமியும் காண கடினமனதும் இருண்ட உருவமும் தோன்றபெரிய மலையினைப்போல இயமதூதுவர்கள்வந்து.

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும் வந்துகு
னிந்தழநொந்து மடியில் விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து:—

(பொ-ரை.) வலையினை விசிறி உயிரைப் பிடித்துக்கொண்டு போகவே புத்திரரும் ஓடிவந்து குனிந்து துக்கப்பட வருத்தமாக மடிமேல்விழுந்து மனைவிபுலம்ப இறந்துவிட்டனரே;

பழையவர்காணு மெனுமய லார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று:—

(பொ-ரை.) இக்காலத்தினைக்கேட்டு இவர் மிக வயோதிகரென நினைத்து அயலார்கள் உடனே யோடிவந்து பந்தர் முதலியதிடச்செய்து மேளமுதலிய அடிப்பித்து பிணத்தினைக் கொண்டுபோக விசாரியுங்களென்று;

பலரையுமேவி முதியவர்தாமி ருந்தசவங்கழு
வுஞ்சிலரென்று மனுதுகிறெங்கல் களபமணிந்து
பாவகபேசெய்து நாறமுடம்பை:—

(பொ-ரை.) பலரையுமனுப்பிக் கேட்டுப் பெரியோர்சிலரைக் கொண்டு பிணத்தினை யலம்பச்செய்து ஆபரணம், வஸ்திரம், மாலை, வாசனை தரித்துத் தோற்றமாகச்செய்து துர்வாசனையுடைய தேகத்தை.

வரிசைகெட்டாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலே யடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து:—

(பொ-ரை.) கிராமமாகத்தூக்கு மெனயாரும் ஓடிவந்து இளமையான பிள்ளைகள் குனிந்து தாக்கிச் சீக்கிரம் நடந்து சுடுகாட்டை நெருங்கி இவ்வளவுதானோ மனிதவாழ்வென வருந்தி;

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை:—
நம்புமடியேனை யினியாளுமே.

(பொ-ரை.) விறகு அடிக்கி மூடி நெருப்பு மூட்டிவிட்ட பிணம் வெந்து விழுந்து முறிந்து கொழுப்பு உருகி உடம்புகருத்துத் தீயடங்கி ஒரு கைப்பிடிசாம்பலுக்கு ஆகாத தேகத்தினை நம்பி கிடக்கின்ற அடியேனை ஆட்கொள்ள வேண்டும்.

(கு-ரை.) பிறப்பு, பாலியம், யவ்வனம், மூப்பு, மரணம் முதலிய நிச்சயமாகலினாலும், பிரத்தியட்ச மாகலினாலும், இத்தகைய அவஸ்தைகள் இனி யுண்டாகாதபடி இப்பிறப்பிலேயே உண்மை விசாரித்துத்திருவருளினைத்தேர்ந்து பெருமானுடன் இரண்டறக் கலந்துவாழும் பாக்கியத்தை யடையவேண்டுமே யொழியஇவ்வுடலினை நம்பி வாழுதல் அப்பிரயோசனமென்பர் 'நம்பு மடியேனை யினியாளுமே' என்றனர்.

பட்டினத்துப்பிள்ளையார் உடற்கூற்றுவண்ணமும்.
ஞானார்த்ததீப வுரையும்
முற்றியது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

அருட்புலம்பலும்

ஞானார்த்ததீபவுரையும்.

முதல்வன் முறையீடு.

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரை ாநகரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

(கு-ரை.) பாண்டிநாட்டு மலயத்துவஜ பாண்டியற்குங்காஞ்சன ாலைக்கும் பார்வதி புத்திரியாக அவதாரம் செய்து தனது கன் ிப்பருவத்தே தான் அரசாட்சி செய்த நாடானதால் கன்னிநாடு ன மதுரைக்கு ஒரு பெயராயது.

மூல மறியேன் முடியு முடிவறியேன்
ஞாலத்துட் பட்டதுயர் நாட நடக்குதடா.

(பொ-ரை.) உற்பத்தியறியேன், அவ்வுற்பத்தி யந்தமாகும் ர்மானமறியேன், உலகத்தில் நேர்ந்த துன்பம் எனைச்சாரநடந்து ருகிறது.

(கு-ரை.) வினையுற்பத்திக்கும் அவ்வினையைப் போக்கடித்துக்கொள்வதற்கும் தக்க விசாரம் செய்து தெரிந்துகொள்ளாததால் அவ்வினையா லனுபவிக்கவேண்டிய துன்பம் பீடிக்கிறதென்பாம்

அறியாமை யாமலத்தா லறிவுமுதற் கெட்டனடா
பிரியா வினைப்பயனாற் பித்துப் பிடித்தனடா.

(பொ-ரை.) அறியாமையினைச் செய்கின்ற மலத்தினால்எனது அறிவுமயங்கினேன், தேகமுள்ளளவும் பிரிதற்கேலாத வினையினால் பயித்தியங்கொண்டவன் போலாயினேன்.

(கு-ரை.) ஆன்மாக்களுக்கு அறியாமையினைச் செய்வது ஆணவவினை, பிரியாதிருப்பது பிராரத்துவவினை, ஆணவமலத்தினைத் திருவருளைக்கொண்டு நீக்கிக்கொள்ளினும், பிராரத்துவம் அனுபவித்தே தீரவேண்டுமாதலால் இதனைப் 'பிரியாவினை' என்றனர். 2

தனுவாதி நான்குந் தானாய் மயங்கினன்டா
மனுவாதி சக்தி வலையிலகப் பட்டனடா.

(பொ-ரை.) தேகமுதலாகச் சொல்லப்பட்ட நான்கினிலும் அம்மயமாகவே யிருந்து மயங்கினேன், முதன்மையான திரோதான சத்தியாகிய வலையில் அகப்பட்டேன்.

(கு-ரை.) தனுவாதியாவன தேகம், கரணம், புவனம், போகம் ஆன்மா இவற்றிற் கட்டுப்பட்டு மயங்கி இவற்றிற்கு அன்னியமாகத் தானிருப்பதாகத் தெரிந்துகொள்ளாதிருத்தலின் 'தானாய் மயங்கினேன்' என்றனர். உண்மையினை விசாரிக்கவொட்டாது அக்கம மறைவு உண்டாவது திரோதானசத்தியாலாகலின் 'சத்திவலையிலகப்பட்டேன்' என்றனர். (3)

மாமாயை யென்னும் வனந்தி லலைகிறண்டா
தாமா யுலகினைத்துந் தாது கலங்கிறண்டா.

(பொ-ரை.) பெரிய மாயையென்று சொல்லப்படுகின்ற காட்டில் அலைகின்றனன். தாமாகப் பிரபஞ்சத்தில் மனக்கலக்க முற்றிருக்கிறேன்.

(கு-ரை.) உலக மனைத்தும் மாயாகாரியப்பாடாகலின் அக்காரியத்திற்சிக்குண்டார் அம்மாயையைக்கடத்தல் அசாத்தியமாகலின் உலகினை வனமென்றனர். (4)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை.) கன்னி வனமென்று சொல்லப்படுகிற மதுரையம் பெருமானே.

மண்ணாசை பட்டேனை மண்ணுண்டு போட்டதடா
பொன்னாசை பெண்ணாசை போகேனே யென்குதே.

(பொ-ரை.) பூமியினிடத்தில் ஆசைவைத்திருந்த என்னைப்பூமியே சாப்பிட்டு விட்டது. பொன்னாலாகிய விருப்பமும் பெண்ணாலாகிய விருப்பமும் நீக்கக்கூடவில்லை.

(கு-ரை.) மண்ணிலதிக விருப்பத்தை வைத்திருத்தலின் இவ்வுடல் மூவணைச்சித்தியிலொன்றை யடையாமல் மண்ணில் புதைக்கும்படியான தன்மையை யடைகிறது மற்றைய பொன்மோகமும் பெண்மோகமும் தேகமுள்ளளவும் தாக்குமென்பதாம்.

மக்கள்சுற் றத்தாசை மறக்கேனே யென்குதே
திக்கரசா மாசையது தீரேனே யென்குதே.

(பொ-ரை.) புத்திரரிடத்தும், உறவினரிடத்தும் வைத்துள்ள ஆசையானது மறக்கக்கூடவில்லை, திக்கனைத்தும் அரசாட்சி செய்யும்படியான ஆசையானது நீங்கினதில்லை.

(கு-ரை.) 'கடந்துளோர்களும் கடப்பரோர் மக்கள்மேல் காதல்' என்றதானும், 'கடன்மீதிலே ஆணைசெலவே நினைவர்' என்றதானும் புத்திரர்மேல் விருப்பமும், அரசாட்சியில் விருப்பமும் நீங்காதென்பதாம். (6)

வித்தைகற்கு மாசையது விட்டொழியே னென்குதே
சித்துகற்கு மாசை சிதையேனே யென்குதே.

(பொ-ரை) கல்வியில்பயிலும் விருப்பம்நீங்குவதில்லை, சித்திகளையடையுமாசை யொழிவதில்லை.

(கு-ரை.) கல்விக்கு அளவில்லையாகலின் கற்குந்தோறும் மேலும் மேலும் விருத்தியடைவதற்கே முயற்சியுண்டாம்' ஆன்மார்த்தமாகப் பிரயோசனமில்லையாயினும் உலகத்தை மிரட்டுதற்கு உபயோகமாகலின் சித்தியில் அவா அதிகவரிக்கிறதென்பதாம்.' அஷ்டமா சித்தியுலேன் செய், என்றனர் தாயுமானவர். (7)

மந்திரத்தி லாசை மறக்கேனே யென்குதே
சுந்தரத்தி லாசை துறக்கேனே யென்குதே.

(பொ-ரை.) மந்திரத்தில் வைத்துள்ள விருப்பம் மறப்பதில்லை. அழகில் வைத்துள்ள ஆசை நீங்குவதில்லை.

(கு-ரை.) பஞ்சாட்சர முதலிய மகாமந்திரங்களைச் செபிக்க வேண்டிய தின்றியமையாத கடமையேயாயினும், திருவருளைப் பூரணமா யடைதற்குச் செபிக்காமல் யாதாமொரு உலகசித்தி, யடைய வேண்டுமெனச் செபித்தல் கூடாதாகலின் 'மறக்கேனே என்றனர் (8)

கட்டுவர்க்கத் தாசை கழலேனே யென்குதே
செட்டுதனி லாசை சிதையேனே யென்குதே.

(பொ-ரை.) பலவகையான ஆடைகளில் ஆசை நீக்குதலில்லை திரவிய சிக்கனத்தில் ஆசைகுறைதலில்லை.

(கு-ரை.) குளிர் முதலியவற்றிற்கு அவசியமாக ஒரு ஆடையுடனிருக்கத் திருப்தியடையாமல் மேலும் மேலும் சித்திர விசித்திரமான பீதாம்பர முதலிய உடைகளிலும், முக்கியமாகச் செய்ய வேண்டிய தருமங்களிலும் பொருளைச் செலவிடாமல் சேகரித்து வைப்பதிலும் ஆசை நீங்கவில்லை யென்பதாம். (9)

மாற்றுஞ் சலவை மறக்கேனே மென்குதே
சோற்றுக் குழியுமின்னுந் தூரேனே யென்குதே.

(பொ-ரை.)அடிக்கடி மாற்றிச் சலவைவஸ்திரங்களைத் தரிப்பதில் மறப்புண்டாவதில்லை, சோற்றினை யடைதற்கேதுவாகவுள்ள வயிறாகிய பள்ளம் இன்பம் அடையவில்லை.

(கு-ரை.) ஒரு வஸ்திரத்தினையே தோய்த்துக் கட்டிக்கொள்ளநினையாது, அடிக்கடி சலவைத்துணிகளையே அணிய விரும்புவதினால் 'மறக்கேன்' உணவும் உண்ணுந்தோறும் பசியெடுத்துக் கொண்டிருத்தலினால் (தூரேனே) எனவும் கூறினர். (10)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகிற மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

ஐந்து புலனு மடங்கேனே யென்குதே
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே.

(பொ-ரை.) பஞ்சேந்திரிய வுணர்ச்சி யடங்கினபாடில்லை, மனமுமொடுங்கினபாடில்லை.

(கு-ரை.) சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்களும் தாம்செய்யும் சேட்டைகளினின்று நீங்கினாலன்றிமனவியாபாரம் குறையாதென்பார் 'அடங்கேனே' 'தேறேனே' என்றனர். (11)

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே
நாமே யரசென்று நாடோறு மெண்ணுதே.

(பொ-ரை.) காமமும் கோபமும்விட்டு நீங்குவதில்லை. நாமே தலைமை பெற்றிருக்கவேண்டுமென எந்நாளும் தோன்றுகிறது.

(கு-ரை.) காமம், குரோதம, லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய இவைகளை நீங்கினாலன்றி அடியார்க் கடிமையாதல் இல்லை. அங்ஙனம் ஆகாதிருக்கவே தலைமை வாய்ந்திருக்கவேண்டுமென்கிற இறுமாப்புண்டாம் என்பார்,'கடக்கேனே' எனவும்'எண்ணுதே' எனவும் கூறினர். (12)

அச்சமாங் கார மடங்கேனே யென்குதே
கைச்சுமின்னு மானங் கழலேலே யென்குதே.

(பொ-ரை.) அச்சமும். அகங்காரமும்,'அடங்கினதில்லை, உலகத்தினை வெறுத்தும் பின்னும் மனமானது நீங்கினதில்லை.

(கு-ரை.) உலகர் தாட்சண்ணியத்தின் பொருட்டு அச்சங்கொள்ளுதலும், கருவித்தலும் சன்மார்க்க நடைக்கு இடையூ

ாதலாலும், மானத்தை விட்டாலன்றிப் பிரபஞ்சவாஞ்சை நீங்கா
ாகலினலும் 'அடங்கேனே' எனவும் 'கழலேனே' எனவுங் கூறி
னார். (13)

நீர்க்குமிழி யாடமுலை நித்தியமா யெண்ணுதே
ஆர்க்குமுய ராசை யழியேனே யென்குதே.

(பொ-ரை.) நீரினிடத்தே தோன்றி உடனே மாறும் குமிழி
னையொத்த தேகத்தை நித்தியமெனவும், எத்தகையினர்க்கும்
ிருத்தியாகின்ற அவா நீங்காமலு மிருந்து கொண்டிருக்கிறது.

(கு-ரை.) பசுபாச விசாரணை தக்கபடி சாஸ்திர மூலமாக
ிசாரியாத குறைவினல் உடல் நித்தியமெனவும், அது சம்பந்த
ான ஆசை நீங்காமலும் இருக்கநினைவு விளைகிற தென்பதாம்.

கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில்வே கக்கண்டும்
எண்ணுந் திரமா யிருப்போமென் றெண்ணுதே.

(பொ-ரை.) பிரத்தியட்சமாக உடலானது கட்டையின்மேலி
ருந்து எரிவதனைக் கண்டும் நெடுநாளைக்கிருப்போ மெனவே
ண்ணம் விளைகின்றது.

(கு-ரை.) நித்தியம் தன்கண் முன்னே பலவயதுடன் கூடிய
டல்கள் சுடுகாட்டில் வேகக்கண்டும் அங்ஙனம் தனக்கும் எண்
ணுத நேரத்தில் உண்டாகுமென்பதை யாலோசிப்பதில்லை. (15)

அநித்தியத்தை நித்தியமென் றுதரவா யெண்ணுதே
தனித்திருக்கே னென்குதே தன்னைமறக்கேனென்குதே.

(பொ-ரை.) அனித்தியமாக வுள்ளவற்றை நித்தியமாக
ிருக்கு மென்றெண்ணி யவற்றினிடத்தில் ஆசையுண்டாகிறது.
காந்தமாக இருக்கவும் தன்னை மறந்திருக்கவும் கூடவில்லை.

(கு-ரை.) உலகம் மாயாகாரியமாகலினாலும் அக்காரியமொரு காலத்து மாறிவிடுமாகலினாலும் அத்தகைய வற்றிலவா வைத்தல் அப்பிரயோசன மென்பார் 'ஆதரவாயெண்ணுதே' என்றனர். தனித்திருத்தல் பிரபஞ்சபோகம் அனுபவியா திருத்தல்தனை மறத்தலாவது சிவராஜயோக நிஷ்டை கூடியிருத்தல். (16)

நரகக் குழியுமின்னு நான்புசிப்பே னென்குதே
உரகப் படத்தல்கு லுனைக்கெடுப்பே னென்குதே.

(பொ-ரை.) நரககுழியானது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பாம்பின் படம்போன்ற நிதம்பம் தன் வசப்படுத்கிதுறது.

(கு-ரை.) நரகத்திற்கே துவான பாவத்தொழில்களே மேலும் மேலும் விளைந்துகொண்டிருக்கின்றன. மாதர் ஆசையும் நீங்கினதில்லை யென்பதாம். (17)

குரும்பை முலையுங் குடிகெடுப்பே னென்குதே
அரும்பு விழியுமெந்த னாவியுண்பே னென்குதே.

(பொ-ரை.) தென்னங் குரும்பையொத்த தனம் மயக்குகின்றது. நீலோற் பலத்தினையொத்த நேத்திரம் உயிரை விழுங்குகின்றது.

(கு-ரை.) மாதர்கள் கண்களும் தனங்களும் கண்டு மருண்டார் மறுபடியும் அவர் மீளுதல் அசாத்தியமாகலின் 'ஆவியுண்பேன்' 'குடிகெடுப்பேன்' என்கிறதென்றனர். (18)

மாதருருக் கொண்டு மறலிவஞ்ச மென்னுதே
ஆதரவு மற்றிங் கரக்கா யுருகிறண்டா.

(பொ-ரை.) இயமனனவன் பெண்ணுரு வாய்ந்து வஞ்சிக்கின்றது. அதனால் யாதொரு ஆதாரமில்லாமல் நெருப்பிலிட்ட அரக்கினைப்போல வுருகுகின்றேன்.

(கு-ரை.) "வீடுகள்தோறும் பெண்களைப்படைத்து இயமனை யென்செயப் படைத்தா" என்றபடி இயமனே பெண்களாய் மாறி யுள்ளாரெனவும் அவரினின்றும் தப்பித்துக் கொள்ளுதற்கேற்ற சிவசாதனமான ஆதரவொன்றும் தேடிக்கொள்ள வில்லை யெனவும் கூறினர். (19)

கந்தனை யீன்றருளுங் கன்னி வனநாதா
எந்த விதத்தினு னேறிப் படருவேண்டா.

(பொ-ரை.) கந்தப்பெருமானைப் பெற்றெடுத்த மதுரைப்பெருமானே! எந்த வகையினால் தேவரீர் திருவடியினை யடைந்து வாழுவேன்.

(கு-ரை.) திருவடியினை யடைதற்கேற்ற சிவசாதனங்களிலொன்றைக் கைக்கொண்டு இதுகாறும் பழகியறியேனுக்லின்எங்ஙனம் ஏறிப்படருவேன் என்றனர். (21)

புல்லாகிப் பூண்டாய்ப் புலர்ந்தநாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ.

(பொ-ரை.) புல்லாகியும், பூண்டாகியு மிருந்து பலநாள் கழிந்ததும் கல்லாய் மரமாயு மிருந்து பலநாள் கழிந்ததும்போதாதோ

(கு-ரை.) கன்மத்திற்குத் தருந்தபடி எடுத்த செனனங்களில் சிலகாலம் ஓரறிவு மீரறிவுமாகி வாழ்ந்தது முண்டென்பதாம். ()

கிரியாய்க் கீடமாய்க் கெட்டநாள் போதாதோ
நீரியா யூர்வனமாய் நின்றநாள் போதாதோ.

(பொ-ரை.) கிரிப்பிள்ளையாகியும் புழுவாகியும் அறிவு கெட்டிருந்த நாள்களும், நீர் வாழ்வனவாயும், ஊர்கின்ற பாம்பு முதலிய செந்துக்களாயும் வாழ்ந்தநாளும் போதாதோ.

(கு-ரை.) எடுத்த அளவில்லாத செனனங்களுள்மூவறியுயிரான செந்துக்களாகச் சிலகாலம் வாழ்ந்தது முண்டென்பதாம். (22)

பூதமொடு தேவருமாய்ப் போனநாள் போதாதோ
வேதனைசெய் தானவராய் வீழ்ந்தநாள் போதாதோ.

(பொ-ரை.) பூதங்களுடனே தேவர்களுமாகி வாழ்ந்தநாள்களுடன், துன்பத்தினைச் செய்கின்ற அசுரர்களாய் தங்கிய நாள்கள் போதாதோ.

(கு-ரை.) உயர்ந்த பிறப்புகளுள் ஐயறிவுடன் கூடியசென்மங்களாய்ப் பிறந்து வாழ்ந்த நாள்களும் பலவுண்டென்பதாம். (23)

அன்னை வயிற்றி லழிந்தநாள் போதாதோ
மன்னவனாய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ.

(பொ-ரை.) தாயின் வயிற்றிலுற்பத்தியாகி யழிந்த நாள்களுடன் அரசனாக வாழ்ந்து இறந்தநாள்கள் போதாதோ.

(கு-ரை.) கர்ப்பத்தி லுற்பத்தியாகி வெளிவருவதற்கு முந்தியுள்ள பத்து மாதங்களுள் ஒரு நாளிலே இறந்தும், பிறந்தபின் அரசனாயிருக்கும் வாழ்வைப்பெற்றும் மரணமடைதற் கேதுவுண்டென்பதாம். (24)

தாயாகித் தாரமாய்த் தாழ்ந்தநாள் போதாதோ
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ.

(பொ-ரை.) ஒருவனுக்குத் தாயாகியும், ஒருவனுக்கு மனைவியாகியும் தங்கிவாழ்ந்த நாள்களுடன் ஒருவனுக்குக் குழந்தையாம் ஒருவனுக்குப் புருஷனும் தங்கியநாள் போதாதோ.

(கு-ரை.) எடுத்த பிறப்புகளில் கன்மத்திற்குத் தக்கபடி ஆணாகியும் பெண்ணாகியும் மாறிமாறிப் பிறந்தநாள்களு முண்டென்பதாம். (25)

நோயுண்ண வேமெலிந்து நொந்தநாள் போதாதோ
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ.

(பொ-ரை.) பல நோய்கள் உண்டாக அதனால் மெலிவடைந்து துன்பமனுபவித்தநாள்களுடன் அறியாமை வாய்ந்தபேயாய்ப் பிறந்த நாள்கள் போதாதோ.

(கு-ரை.) எடுத்த செனனங்கள்தோறும் வந்தூதாக்க அனுபவித்த பிணிகளுக்கோ அளவில்லை. யாவரும் வெறுக்கத்தகுந்த பேயாய்ப் பிறந்தது முண்டென்பதாம். (26)

ஊனவுடல்கூன் குருடா யுற்றநாள் போதாதோ
ஈனப் புசிப்பி லிளைத்தநாள் போதாதோ.

(பொ-ரை.) மாமிசவுடலில் கூனும், குருடும் அடைந்த நாளுடன் அற்ப உணவினிமித்தம் தேடியலைந்த நாள் போதாதோ.

(கு-ரை.) மனிதசெனன மெடுக்கத்தக்க புண்ணியம் பெற்றும் அச்சென்மங்களில் அங்கவீன மடைந்ததுடன், வயிற்றினிமித்தம் பிறரைத் தேடியலைந்து அதனால்தேகம்வாடியது முண்டென்பதாம். (27)

பட்ட களையும் ப்ரதவிப்பும் போதாதோ
கெட்டநாள் கெட்டேனென்று கேளாதும் போதாதோ.

(பொ-ரை.) எண்ணிலாத செனனங்களால்உண்டாகியஇளைப்பும் பரதவிப்பு முண்டானதுடன் வீணாகக் கழிந்தநாள் கழிந்துவிட்டது. இனியேனும் பிறர்வார்த்தை கேட்கவேண்டுமென்று, கேளா திருந்ததும் போதாதோ.

(கு-ரை.) எடுத்த செனனங்கள் எண்ணிலவற்றுள் மொத்துண்டதனால் விளைந்த இளைப்புடன் உண்மைதேராது காலங்கழித்தது போகப் பின்னராவது உண்மையறிந்தாரையடைந்து உண்மையைத்தெரிந்து கொள்ளவில்லை யென்பதாம். (28)

நில்லாமைக் கேயழுது நின்றநாள் போதாதோ
எல்லாரு மென்பார மெடுத்தநாள் போதாதோ.

(பொ-ரை.) உலகம் நிலையற்றதாக விருக்கிறதேயென்று வியசனப்பட்டதுடன், என் தேகத்தைச் செனனங்க டோறும் பலதாய் மார் சுமந்தது போதாதோ.

(கு-ரை.) தேகம் இறந்துவிடுமே என்று துக்கமனுபவித்ததேயன்றி அது நிலைபெறச் செய்து கொண்டேனில்லை. ஒவ்வொரு தாய்மார்கள் கர்ப்பத்திலு மிருந்து அவர்கட்குச் சிரமங் கொடுத்ததிலும் கணக்கில்லையாம். (29)

காமன் கணையாற் கடைபட்டால் போதாதோ
ஏமன் கரத்தா லிடியுண்டல் போதாதோ.

(பொ-ரை.) மன்மதன் பாணத்தில் துன்பமடைந்ததுடன் இயமன்கையினால் இடிப்பட்டதும் போதாதோ.

(கு-ரை.) செனனந்தோறும் காமாந்தகாரனாயிருந்து அந்தந்தச் சென்மங்களினும் இயமனாலும் துன்பமடைய நேர்ந்ததென்பதாம். (30)

நான்முகன் பட்டோலை நறுக்குண்டல் போதாதோ
தேன்றுளபத் தானேமி தேக்குண்டல் போதாதோ.

(பொ-ரை.) நான்முகக்கடவுள் விதியேட்டினைக் கிழித்ததும் தேன்ததும்பும் துளபமாலையுடைய விஷ்ணுவின் ஆக்ஞா சக்கரத்தின் கீழலைப்புண்டதும் போதாதோ.

(கு-ரை.) ஒவ்வொரு சென்மத்திலும் இறக்கும்போது பிரமன் தான் விதித்திருந்த எட்டினைக் கிழித்துவிடுவான் என்பார் 'நறுக்குண்டல்' எனவும் விஷ்ணுமூர்த்தியின் இரட்சிப்பிலடங்கி யுணவுக்குத் திண்டாடின துண்டென்பார். 'தேக்குண்டல்' என்றனர்.

உருத்திரனுர் சங்காரத் துற்றநாள் போதாதோ
வருத்த மரிந்தையிலை வாவென் றழைத்தையிலை.

(பொ-ரை.) உருத்திரமூர்த்தியின் சங்காரத்தில் பொருந்திய நாள் போதாதோ, என்னுடைய துன்பத்தை யறிந்தாயில்லை, என்னை வாவென் றழைத்தாயிலை.

(கு-ரை.) சிருட்டியிலும் திதியிலும் சங்காரத்திலும் கட்டுப்பட்டலைந்து அளவில்லாத துன்பத்தினையடைந்த வென்னை யருகழைத்து அனுக்கிரகம் செய்தாயில்லையே யென்றனர். (32)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகிற மதுரையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!

பிறப்பைத் தவிர்ந்தையிலை பின்னைக் கொண்டையிலை
இறப்பைத் தவிர்ந்தையிலை யென்னென்று கேட்டையிலை.

(பொ-ரை.) பிறப்பினை நீக்கினையில்லை, பின்பு ஆட்கொண்டா யில்லை,இறப்பினை நீக்கினையில்லை, என்னவெனவிசாரித்தாயில்லை.

(கு-ரை,) இறப்பினின்றும் பிறப்பினின்றும் நீக்கி இனிச் சென்மம்வராதபடிசெய்து திருவருள்புரிந் தனுக்கிரகிக்கவேண்டு மென்பதாம். (33)

பாச மெரித்தையிலை பரதவிப்பைத் தீர்த்தையிலை
பூசிய நீற்றைப் புனையென் றளித்தையிலை.

(பொ-ரை.) மலத்தினை யொழித்தாயில்லை துன்பத்தினைநீக்கி னையில்லை, அணியத்தகுந்த விபூதியினைத் தரித்துக்கொள்ளஈந்தா யில்லை.

(கு-ரை.) ஈண்டு எரித்தாயென்றதனால் பாசமென்றது சஞ்சி தத்தினை ஆச்சாரியன் ஞானாக்கினியால் சஞ்சிதத்தை யெரித்தாலன் றி [illegible] புநீங்காதாகலின் அங்ஙனம் கூறினர். விபூதியானது பவ ரோக நின்மூல அருமருந்தாகலின் 'அளித்தையிலை' என்றார். (34)

அடிமையென்று சொன்னையிலை யக்கமணி தந்தையிலை
விடுமுலகம் போக்கியுன்றன் வேட மளித்தையிலை.

(பொ-ரை.) (அடியேனைத் தேவரீருக்கு) அடிமையென்று சொ ன்னையில்லை, உருத்திராக்கக்கண்டிகை யளித்தாயிலை,நீங்கத்தகுந்த பிரபஞ்ச வாழ்க்கையினை நீங்கித்தேவரீர் திருவேடத்தினைத்தந் தாயிலை.

(கு-ரை.) ஆச்சாரியகோலம் கொண்டுவந்து அடிமையாக்கிக் கொண்டு, சிவமாங்கல்யம் தரித்துச் சிவவேடம் பொலியச் செய்ய வில்லை யென்பார். 'தந்தையிலை' 'அளித்தையிலை' என்றனர். (35)

உன்னி லழைத்தையிலை யொன்றாக்கிக் கொண்டையிலை
நின்னடியார் கூட்டத்தி னியடைத்துவைத்தையிலை.

(பொ-ரை.) தேவரீருக்குச் சமீபத்தில் அழைத்தாயில்லை, இரண்டறக்கலந்து வாழச்செய்தாயில்லை. அல்லது தேவரீருடைய அடியார்கள் கூட்டத்திலொருவனாக விருக்கச் செய்தாயில்லை.

(கு-ரை.) 'உன்னிலழைத்தையிலை' என்பது சிவசாரூபத்தினையும், 'ஒன்றாக்கிக்கொண்டையிலை' என்பது சிவசாயுச்சியத்தினையும் குறித்தபடியாம், அந்நிலையடையப் பக்குவமிலையேல் அந்நிலையினை அடைதற் கேதுவாகிய சிவனடியார் கூட்டுறவினையாகிலும் செய்வாயென்பார், 'அழைத்துவைத்தையிலை' என்றார். (36)

ஓங்கு பரத்து ளொளிக்கவடி யார்க்கடியான்
ஈங்கோ ரடியா னெமக்கென் றுரைத்தையிலை.

(பொ-ரை.) ஓங்கிய சிவபரத்துள் பிரகாசிக்கின்ற சிவனடியார்களுக்கு அடியானாகிய இவனும் இவ்வுலகில் ஒரு அடிமைத் தேவரீருக்கு என்று திருவாய்மலர்ந்தருளினீரில்லை.

(கு-ரை.) சிவசாம்பிராச்சிய திருவருளடைந்துள்ள சிவனடியார்கள் திருக்கூட்டத்தி லொருவன் என்னும் பக்குவமடையவும் அபக்குவ மடைந்தனனெனத் தேவரீர் கடைக்கணிக்கவும் உண்டாவதென்றோ யென்பார், 'உரைத்தையிலை' என்றனர். (37)

நாமந் தரித்தையிலை நாவொழிய நின்றையிலை
சேம வருளிலெனைச் சிந்தித் தழைத்தையிலை.

(பொ-ரை.) சிவனடியானென்னும் பெயரை யளித்தாயில்லை நான் என்னும் ஆங்காரம் நீங்காச்செய்தாயில்லை, திருவருட் பொக்கிஷத்தை அடியேனு மனுபவிக்கும்படி நினைத்தாயில்லை.

(கு-ரை.) சிவனடியான் என்னும் பெயருக்கு இலக்கானாலன்றி அகங்கார மடங்குவது கூடாதாகலினாலும் அது அடங்கினாலன்றித் திருவருளடைய முடியாதாகலினாலும் மூன்றையும் முறையே கூறி வைத்தனர். (38)

முத்தி யளித்திலையிலை மோனங் கொடுத்தையிலை
சித்தி யளித்தையிலை சீராட்டிக் கொண்டையிலை.

(பொ-ரை.) சிவசாம்பிராச்சியம் அளித்தாயில்லை, மவுனநிலையினில் வைத்தாயில்லை, அருட்சித்தியினைக் கொடுத்தாயில்லை அன்பனாகக் கொண்டாயில்லை.

(கு-ரை.) அன்பினால் திருவருளும், திருவருளினால் மவுனநிலையும், மவுன நிலையினால் சிவசாயுச்சியமும் உண்டாகுமாகலின் முறையே கூறினர். (39)

தவிர்ப்பைத் தவிர்த்தையிலை தானாகிக் கொண்டையிலை
அவிப்பரியத் தீயாமென் னாசைத் தவிர்த்தையிலை.

(பொ-ரை.) எனக்குண்டாயிருக்கும் பரிதபவிர்ப்பினை நீக்கினாயில்லை, சிவமாந்தன்மை செய்தாயில்லை, கெடுத்தற்கரிய நெருப்பினையொத்த அவாவினை யொருத்தாயில்லை.

(கு - ரை) தவிர்ப்பாவது திருவருள் என்று கிடைக்குமோ வென்ற பெரிய ஏக்கமாம், தானாகிக்கொள்ளுதலாவது அத்துவித நிலை கூடி நிற்றலாம், இவ்வளவு மடைதற்குத் தடையாயிருப்

பது பிரபஞ்ச ஆசை, இவ்வாசையினின்றும் விலகுவது அசாத்தியமென்பார், 'அவிப்பரிய தீயாமென்னுசை' என்றனர். (40)

நின்ற நிலையி னிறுத்தியெனை வைத்தைதயிலே
துன்றுங் கரணமொடு தொக்கழியப் பார்த்தைதயிலே.

(பொ-ரை.) திருவருளைப் பற்றுகக்கொண்டு நின்றிருக்கும்நிலையினிலே சலனப்படாதபடி அடியேனை நிறுத்திவைத்தாயில்லை பொருந்திய அந்தக்கரணம் புறக்கரணங்களுடன் கூடிய கூட்டத்தினை நீக்கத் திருஷ்டித்தாயில்லை.

(கு-ரை.) ஒரேவழி திருவருள் கிட்டியகாலத்தும் பூர்வ சென்மாந்தரவினையால் மாயாசாலங்கள் வந்து மயக்குமாகலின்அவ்வண மயங்காதபடி செய்யவேண்டுமென்பார்'வைத்தைதயிலே' என்றார்கரணமொடுதொக்கு என்றது தத்துவக்கூட்டத்தினை. (41)

கட்டவுல கக்காட்சிக் கட்டொழியப் பார்த்தைதயிலே
நிட்டையிலே நில்லென்று நீநிறுத்திக் கொண்டையிலே.

(பொ-ரை.) வினையினிற் கட்டத்தகுந்த பிரபஞ்ச மாயாக்காட்சிகளின் சம்பந்தம் நீங்க நீட்சித்தாயில்லை, சிவராஜயோகசமாதியினில் நிறுத்தினுயில்லை.

(கு-ரை.) திருநோக்கல் தீட்சைசெய்தா லல்லாமல் பிரபஞ்ச முகமாயுள்ள பார்வை நீங்காதென்பார் 'பார்த்தைதயிலே' என்றனர். அல்லதூஉம் சிவஞானயோக நிட்டையிலேனும் நிலைபெறச் செய்வாயென்பார் 'நிறுத்திக்கொண்டையிலே' என்றனர். (42)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா.)

(பொ-ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரையம்பெருமானே!

கடைக்க ணருள்தாடா கன்னி வனநாதா
கெடுக்கு மலமொருக்கிக் கிட்டிவரப் பாரேடா.

(பொ-ரை.) மதுரையம்பெருமானே ! திருக்கடைக்கண்ணல் திருவருளைத்தருக, அழித்தற்கேதுவாயுள்ள ஆணவத்தைக்குறைத்துத் தேவரீர் சமீபத்தில் வருதற் கேதுவினைச்செய்க.

(கு-ரை.) திருவருட் சந்நிதானத்தினை யடைதற்குத்தடையாயிருப்பது ஆணவமலமே யாகலினாலும் அம்மலம் பெருமான் திருவருள்நோக்காலன்றித் தீராதாகலினாலும், 'தா வரப்பார்' என்றனர்.

காதல் தணியேனோ கண்டு மகிழேனோ
காதல் தவிரேனோ சங்கடந்தான் தீரேனோ.

(பொ-ரை.) பெருமானே ! தேவரீர் திருவருள் அடியேனுக்கு கிடைக்கில் பிரபஞ்ச ஆசையை நீங்கிக்கொள்ளேனோ, தேவரீரைத் தரிசித்துச் சந்தோஷியேனோ, இறப்பினின்றும் நீங்கேனோ, துன்பத்தினின்றும் நீங்கேனோ.

(கு-ரை.) பிரபஞ்சப்பற்றை யொழித்தற்கும், சிவதரிசனம் செய்தற்கும் மரணத்தை நீங்கிக்கொள்ளற்கும், துன்பம்நீங்கற்கும் திருவருள் வேண்டுமென்பதாம். (44)

உன்னைத் துதியேனோ வூர்நாடி வாரேனோ
பொன்னடியைப் பாரேனோ பூரித்து நில்லேனோ.

(பொ-ரை.) தேவரீர் திருவருள் கிடைக்கின் தேவரைப்புகழ்ந்து பாடேனோ, சிவத்தலங்கள்தோறும் வாரேனோ, திருநடதரிசனம் செய்யேனோ, சிவானந்தமடையேனோ.

(கு-ரை.) சிவாலயங்கள் தோறும் செல்லுதலும், சிவ பெருமான் திருவடியினைத் தரிசித்தலும், வாயாரப்பாடித் தோத் தரித்தலும், சிவானந்தத்துத் திளைத்தலுமே சிறப்பென்றனர்.(45)

ஓங்காரப் பொற்சிலம்பி னுல்லாசம் பாரேனே
பாங்கான தண்டை பலபணியும் பாரேனே.

(பொ-ரை.) ஓங்காரமே சொரூபமாகிய அழகான சிலம்பி னது அழகினையும், அலங்காரமான தண்டையுடன் கூடிய பல திருவடியின் ஆபரணங்களையும் தரிசியேனே.

(கு-ரை.) பரமேஸ்வரனுக்கு வேதமே சிலம்பாய்கிடந்து நாத வொலியைச் செய்துகொண்டிருத்தலின் ' ஓங்காரப்பொற்சிலம்பு, என்றனர். ஈண்டு பிரணவம் வேதத்தைக்குறித்து நின்றது.(46)

வீரகண் டாமணியின் வெற்றிதனைப் பாரேனே
சூரர்கண்டு போற்றுமந்தச் சுந்தரத்தைப் பாரேனே.

(பொ-ரை.) ஜெயத்தைக்குறிக்கும் வீரகண்டாமணி யென் னும் ஆபரணத்தினையும், அதி பராக்கிரமசாலிகள் தோத்தரிக்கும் திருமேனியின் அழகினையும் தரிசியேனே

(கு-ரை.) பிரமமுதல் பிபீலிகை பரியந்தமுள்ள ஆன்மகோடி களையெல்லாம் ஜெயித்துவரும் இயமனை எட்டியுதைத்த திருவடி யில் பூண்ட ஆபரணத்தினை வீரகண்டாமணி யென்றனர். (47)

இடையில் புலித்தோ லிருந்தநலம் பாரேனே
விடையி லெழுந்தருளும் வெற்றி யனைபாரேனே

(பொ-ரை.) அரையிலே புலித்தோலினையணிந்து அழகினையும் இடபவாகனத்தின்மேலெழுந்தருளும்செயத்தினையும் தரிசியேனே.

(கு-ரை.) புலித்தோலையுடுத்த அவசரமாவது, தாருவன முனிவர் செய்த அபிசாரவோமத்தினின்றும் வெளிவந்து தன்னையெதிர்த்த புலியினது சருமத்தினையுரித்துத் தரித்த சார்தூல அரமூர்த்தியானது. (48)

ஆனையுரி போர்த்த வழகுதனைப் பாரேனே
மானைப் பிடித்தேந்து மலர்க்கரத்தைப் பாரேனே.

(பொ-ரை.) ஆனையினது தோலினைப் போர்த்துக்கொண்டுள்ள அழகினையும், மானைத் திருகரத்திலேந்தி யதனையும் தரிசியேனே.

(கு-ரை.) ஆனையின்தோல்தரித்த அவசரமாவது கயாசுரனாகிய யானையைத் தேவர் மானவர் துயர்தீர்த்தற்பொருட்டுப் போர்புரிந்து சங்கரித்துக் கஜயுத்த மூர்த்தியானது. மானையேந்தியது தாருவனத்தர் ஏவியதாம். (49)

மாண்டார் தலைப்பூண்ட மார்பழகைப் பாரேனே
ஆண்டார் நமக்கென் றறைந்து திரியேனே.

(பொ-ரை.) இறந்த தேவர்களின் தலைகளை மலையாகத் தரித்த மார்பினுடைய அழகினையும் சிவபெருமானே நம்மையடிமையாக ஆட்கொண்ட ஆண்டவரென்று சொல்லித்திரியேனே.

(கு-ரை.) சர்வசங்காரகாலத்தில் இறந்துபோன பிரமாதி தேவர்களின் தலைமாலைகளைத் தரிப்பது மறு சிரிஷ்டியில் வரும் பிரமாதி தேவர்கள் அம்மாலையினைக்கண்டு செருக்கடையாது வாழுநிமித்தம். (50)

கண்டங் கருத்துநின்ற காரணத்தைப் பாரேனே
தொண்டர் குழுவிநின்ற தோற்றமதைப் பாரேனே.

(பொ-ரை.) கண்டமானது கருமைநிறத்துடன் கூடியிருந்த காரணத்தையும் சிவனடியார்களெல்லாம் ஒருங்குகூடியிருந்த காட்சியினையுங் காணேனோ,

(கு-ரை.) திருப்பாற்கடலிலுண்டாகிய விஷத்தினால் தேவர்கள் இறந்துபோகாதபடி அவ்விஷத்தினைக் கண்டத்திலடக்கி விஷாபஅசண மூர்த்தியாய் எழுந்தருளினமையின் 'கண்டங் கருத்துநின்ற' என்றனர். (51)

அருள்பழுத்த மாமதியா மானனத்தைப் பாரேனே
திருநயனச் சடையொளிருஞ் செழுங்கொழுமைப் பாரேனே.

(பொ-ரை.) திருவருள் ததும்பிய சந்திரனைப்போன்ற திருமுகத்தினையும் அழகிய நேத்திரங்களின் அருட்பிரகாசமாகியசெவ்விய வளமையினையும் தரிசிப்பேனோ.

(கு-ரை.) தன்னையடுத்த சிவனடியார்பால் குளிர்ச்சியாகியகருணையெந்நேரமும் ததும்பிக்கொண்டிருக்கு முகமென்பார் 'மதியானனம்' எனவும், கிருபையுடனே நோக்கும் விழியென்பார் 'நயனச்சடை' எனவும் கூறினார். (52)

செங்குமிழின் றண்டம்வளர் சிங்காரம் பாரேனே
அங்கனியை வென்ற வதரத்தைப் பாரேனே.

(பொ-ரை.) செவ்விய குமிழம்பூவினையொத்த நாசியிலுண்டானஅழகினையும், அழகிய கொவ்வைப் பழத்தினைக்காட்டிலுமழகினைவாய்ந்த அதரத்தினையும் தரிசியேனே.

(கு-ரை.) பெருமான் அங்கங்கள் உவமையற்றதாயினும்உலக நடைநோக்கி அலங்காரம் செய்யும்பொருட்டு உவமித்துக்கூறினர்.

முல்லை நிலவெறிக்கு மூரலொளி பாரேனே
அல்லார் புருவத் தழகுதனைப் பாரேனே.

(பொ-ரை.) முல்லைமொக்கின் அழகினையொத்த பற்களின் பிரகாசத்தினையும், இருண்டபுருவத்தின் அழகினையும் தரிசியேனே.

(கு-ரை.) புருவத்திலுள்ள உரோமம் அதிக நெருக்கங்கொண்டு கருமைவாய்ந்திருக்குமாகலின் 'அல்லார்' என்றனர் மூரலைப் பல்லெனக் கொண்டமையின் அதற்கேற்பமுல்லை மொக்கு எனக் கூறப்பட்டது. (54)

மகரங் கிடந்தொளிரும் வண்மைதனைப் பாரேனே
சிகர முடியழகுஞ் செஞ்சடையும் பாரேனே.

(பொ-ரை.) மகரமானது தங்கிப்பிரகாசிக்கும் அழகதனையும் சிரசின் முடியழகினையும் செஞ்சடையினையும் தரிசியேனே.

(கு-ரை.) மகரமென்பது முதலைவடிவாய்ச்செய்து காதிலிடும் ஆபரணம் சிகரமெனினும் முடியெனினும் ஒன்றேயாயினும் சிகரமென்பதற்குச் சிரசெனவும் முடியென்பதற்கு மயிர் முடிசசெனவும் கொள்ளவேண்டும். (55)

கங்கையொடு திங்கணின்ற காட்சிதனைப் பாரேனே
பொங்கரவைத் தான்சடையில் பூண்டவிதம் பாரேனே.

(பொ-ரை.) கங்காநதியுடனே சந்திரன்றங்கிய அழகினையும் மிகுதியான சர்ப்பங்களைச் சடாபாரத்தில் தரித்த தன்மையினை யும் தரிசியேனே.

(கு-ரை.) கங்கை நதியேயாயினும் அக்கங்கை இமயமலையர சன்பத்தினியாகிய மேனைக்கு இரண்டாவது புத்திரியேகங்கையை வடிவாய் விளங்கியதனால் அக்கங்கை யொரு பெண்ணாகச் சொல் வதுமுண்டு. (56)

சரக்கொன்றை பூத்த சடைக்காட்டைப் பாரேனே
எருக்கறுகூ மத்தையணி யேகாந்தம் பாரேனே.

(பொ-ரை.) தொங்குகின்ற கொன்றை மலர்கள் பூத்துள்ள சடைக்காட்டினையும், எருக்கு ஊமத்தை, அறுகுதரித்துள்ள தனிக்கோலத்தினையும் தரிசியேனே

(கு-ரை.) கொன்றையென்பது பிரணவாகாரமாயுள்ள வொரு சிறந்த புட்பமாகலின் அது பெருமானுக்கு அதிக உரித்தாகியது. சடையின் அதிக செருக்கத்தினை நோக்கிக்காடென்றனர். (57)

கொக்கிறகு சூடிநின்ற கொண்டாட்டம் பாரேனே
அக்கினியை யேந்திநின்ற வானந்தம் பாரேனே.

(பொ-ரை.) கொக்கின் இறகுகளைத்தரித்திருக்கும் சந்தோ ஷத்தையும் மழுவினையேந்தியுள்ள களிப்பினையும் தரிசியேனே.

(கு-ரை.) அற்பபட்சியாகிய கொக்கினை யாட்கொள்ளும் பொருட்டு அதன் இறகினையும், கரத்தால் எந்தக்கூடாத அக்கினி யையும் தரித்த அருமையினைப்பற்றி 'ஆனந்தம்' என்றனர். (58)

தூக்கிய காலுந் துடியடியும் பாரேனோ
தாக்கு முயலகன்மேற் றாண்டவத்தைப் பாரேனோ.

(பொ-ரை.) மேலேயெடுத்த திருவடியும், கரத்திற்றாங்கிய துடியின் ஓசையையும், முயல்கள்மேல் வைத்துள்ள நடனத்தையும் தரிசியேனோ.

(கு-ரை) தூக்கியகால் குஞ்சிபாதம். துடியடி வலக்கையிலுள்ள உடுக்கையிற் பிறக்கும் நாதவொலி, தாண்டவம் சிற்சபையில் செய்யும் ஆனந்தத்தாண்டவம், (59)

வீசு கரமும் விகசிதமும் பாரேனோ
ஆசை யளிக்கு மபயகரம் பாரேனோ.

(பொ-ரை) வீசுகின்ற கரத்தினையும், மந்தகாசத்தையும், ஆசையினை யுண்டாக்கும் அபயாஸ்தத்தினையும் தரிசியேனோ.

(கு-ரை) வீசியகரமாவது திருவடியைக் காட்டிக்கொண்டிருக்கும் திருக்கரம், அபயகரமாவது ஆட்கொள்வேமெனும் குறிப்பினைக் காட்டும் திருக்கரம், மந்தகாசமாவது திருமுகத்துவாயில் உண்டாகும் புஞ்சிரிப்பு. (60)

அரிபிரமர் போற்ற வமரர் சயசயெனப்
பெரியம்மை பாகம்வளர் பேரழகைப் பாரேனோ.

(பொ-ரை) விண்டுவும், பிரமனும் எத்த தேவர்கள் சய சய என்ன அம்பாள் இடதுபாகத்தி லெழுந்தருளியிருக்க உண்டாகுமழகினைத் தரிசியேனோ.

(கு-ரை) அரிபிரமர் போற்றவென்றது நடராஜப்பிரபுவின் ஆனந்தத் தாண்டவ காலத்தில் அரிமத்தளம் போடவும் பிரமன்

தாளத்தட்டவுமாய் நின்றதன்மை. பெரியம்மை யென்றது சிவகாமித்தாயினை. (61)

சுந்தர நீற்றின் சொகுசுதனைப் பாரேனே
சந்திர சேகரனைத் தயவுசெய்தல் பாரேனே.

(பொ-ரை.) அழகிய விபூதியின் விநோதத்தினையும், சந்திர சூடனையெழுந்தருளிக் காட்சிசெய்தலையுந் தரிசியேனே.

(கு-ரை.) 'பூசப்பூசப் பொன்னிறம்' என்றதற்கேற்ப விபூதி திருமேனியில் அழகைக்கொடுக்குந் தன்மையால் 'சுந்தரநீறு' என்றனர். திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகளும் 'சுந்தரமாவது நீறு' என்றனர். தட்சனால் சாபமேற்று அடைக்கலம் புகுந்த சந்திரனை யாட்கொண்ட அவசரம் சந்திர சேகரமூர்த்தி. (62)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை.) கன்னிவனமென்று சொல்லப்படுகின்ற மதுரை எம்பெருமானே!

கெட்ட நாள் கெட்டாலுங் கிருபையினிப் பாரேடா
பட்டநாள் பட்டாலும் பதமெனக்குக் கிட்டாதோ.

(பொ-ரை.) தேவரீரைத் துதியாது கெட்டுப்போன நாள்கள் கெட்டுப் போனாலும் இனியேனும் கருணை செய்யப்பாராய், துன்பம் அடைந்த நாள்கள் பலவுண்டானாலும் இனியேனும் தேவரீர் திருவடி யெனக்குக் கிடையாதோ.

(கு-ரை.) அறியாமை மேலீட்டினால் இதுகாறும் துதியாது கெட்டேன் அதனால் பலதுன்பங்களை யனுபவித்தேன் இனியங்ங

ணம் நேராதபடி கருணைசெய்து திருவடிதந்தருளவேண்டு மென்றனன். (63)

நற்பருவ மாக்குமந்த நாளெனக்குக் கிட்டாதோ
எப்பருவ முங்கழன்ற வேதாந்தங் கிட்டாதோ.

(பொ-ரை.) தேவரீரை யடைதற்கேற்ற பரிபக்குவகாலம் எனக்குண்டாகாதோ, எத்தகைய பக்குவங்களையும் கடந்த ஏகாந்தநிலை 'தனியேயிருப்பதற் கெண்ணினேன்எண்ணமது சாமிநீயறியாததோ' என்றனர் தாயுமானவரும்.

(கு-ரை.) பக்குவகாலமாவது மலத்தடிப்புகுறைந்த அவசாரம் ஏகாந்தமாவது தனியேயிருந்தது சிவராஜயோக நிஷ்டை கூடும் நிலை, 'தனியேயிருப்பதற் கெண்ணினேன்எண்ணமது சாமிநீயறியாததோ' என்றனர், தாயுமானவரும். (64)

வாக்கிறந்து நின்ற மவுனமது கிட்டாதோ
தாக்கிறந்து நிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ.

(பொ-ரை.) பேச்சற்ற நிலையாகிய மவுனநிஷ்டை உண்டாகாதோ, பிரபஞ்ச சம்பந்தமில்லாது நிற்கும் ஒப்பற்ற சுத்தமாந்தன்மை உண்டாகாதோ.

(கு-ரை) மனோவாக்குக்காயங்களால் உண்டாகும் பிரபஞ்ச சேஷ்டைகளைக் கடந்து அந்தர் முகமாக விருந்துசெய்யும் தியானம் மவுனநிலை விவகாரத்திசைலேயியே சதாகால மிருக் கினும் அதிற்பற்றி யிருக்குந்தன்மை தற்சுத்தி. (65)

வெந்துயரைத் தீர்க்குமந்த வெட்டவெளி கிட்டாதோ
சிந்தையையுந் தீர்க்குமந்தத் தேறலது கிட்டாதோ.

(பொ-ரை) கொடியதுன்பத்தினை நீக்குமந்தச் சிதாகாயமுண்டாகாதோ, எண்ணிய எண்ணத்தை முடிக்குமந்த திருவருட்டேன் உண்டாகாதோ.

(கு-ரை) வெட்டவெளியாவது சிதம்பரரகசியம் அது தரிசித்தார்க்கு வெந்துயர் நீங்குமென்பதாம் சிவனடியார்கள் சிந்தையில் திருவருள் தேன்போலினிக்குமாகலின் 'தேறல்' என்றனர் (66)

ஆன வடியார்க் கடிமைகொளக் கிட்டாதோ
ஊனமற வென்னை யுணர்த்துவித்தல் கிட்டாதோ.

(பொ-ரை) தேவரீருக்கான சிவனடியார்கட்கு அடிமைபூண்டு வாழும்படி உண்டாகாதோ குற்றமற அடியேற்குத் திருவருளைத் தெரிவித்தல் உண்டாகாதோ

(கு-ரை) அடியார்க் கடிமையாய் வாழ்தலோர் சிறந்த சாதனமானதால் 'அடிமைகொள்' என்றார் 'அறிவித்தாலன்றி அறியா உளங்கள்' என்றதற்கேற்பத் திருவருளைக் கூட்டிவைக்க வேண்டுமென்பார், 'உணர்த்துவித்தல்' என்றனர் (67)

என்னென்று சொல்லுவண்டா வென்குருவே கேளடா
பின்னை யென்க்குநீ யல்லாற் பிறிதிலையே.

(பொ-ரை) அடியேனை யடிமையாக ஆட்கொண்ட ஆச்சாரியனே! (எனது துன்பமனைத்தினையும்) என்னவென வெடுத்து விசாரிப்பேன், தேவரீரையல்லாமல் வேறு எனக்குத் துணை யேது

(கு-ரை) அனுபவிக்கும் துன்பம் சிறிதாகவிருக்கின் சந்நிதானத்தில் விண்ணப்பிக்கக்கூடும், அளவில்லாத துன்பத்திற் கட்டுப்பட்டுக்கிடத்தலின் 'என்னென்று சொல்லுவேன்' என்றனர் தேவ

நீர் சந்நிதானத்தில் விண்ணப்பித்தால் பரிகாரமுண்டேயன்றி வேறொருவரிடத்திற் சொல்லியதிற் பிரயோசனமென்னவென்பார் 'நீயல்லாற் பிறிதில்லையே' என்றனர் (68)

(கன்னிவனநாதா கன்னிவனநாதா)

(பொ-ரை) கன்னிவனமென்று சொல்லப்படுகிற மதுரையின் கண்ணே யெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே!

அன்ன விசாரமது வற்றவிடங் கிட்டாதோ
சொன்ன விசாரந் தொலைந்தவிடங் கிட்டாதோ.

(பொ-ரை) ஆகாரவிஷயமாக விளைகின்ற விசாரமொழிந்த நிலையும், பொன்னைத் தேடியலைகின்ற விசாரமொழிந்த நிலையும் எனக்கு வாராதோ.

(கு-ரை) இன்றியமையாது விளையும் பசியும் அதனைப் பரிகரிக்கப் பொன்னும் தேடியலைகின்றதாகிய முயற்சியுமற்ற நிலையேவேண்டுமென்பதாம் (69)

உலக விசார மொழிந்தவிடங் கிட்டாதோ
மலக்குழுவின் மின்னார் வசிபாதுங் கிட்டாதோ.

(பொ-ரை) பிரபஞ்சமுகமாகவிளையும் விசாரம் நீங்கிய நிலையும் மலக்கூட்டத்தினையொத்த மாதர்களினின்று நீங்கிய நிலையும் வாராதோ.

(கு-ரை) உலகசம்பந்தமாக அலையும் முயற்சியும், மாதர்கள் சாவகாசமும் நீங்கின் மவுனநிலையும் பேரின்ப இச்சையும் உண்டாமென்பதாம். (70)

ஒப்புவமை பற்றோ டொழிந்தவிடங் கிட்டாதோ.
செப்புதற்கு மெட்டாத் தெளிந்தவிடங் கிட்டாதோ.

(பொ-ரை) சமானம், திருட்டாந்தம், பந்தம் இவை நீங்கிய நிலையும், வாக்கினாற் சொல்லுதற் கரிதாகிய சந்தேகமற்ற நிலையும் வாராதோ.

(கு-ரை) திருவருளினுக்குச் சமானமுதலிய எந்தவகையினும் இல்லையென்பார் 'ஒப்புவமைபற்றோ டொழித்தவிடம் எனவும், வைகரிவாக்கிற் கெட்டாதென்பார். செப்புதற்குமெட்டா'எனவும் கூறினர்

வாக்கு மனாதீத வகோசரத்திற் செல்லவெனைத்
தாக்குமருட் குருவேநின் றாளிணைக்கே யான்போற்றி.

(பொ-ரை) வாக்கினுக்கும் மனத்தினுக்கும் எட்டாஇடத்தில் அடையும்படி அடியேனைக்கூட்டிவைத்த திருவருட்சொரூபமாகிய! ஆசாரியனே தேவரீர்இரண்டுதிருவடிக்கே துதிசெய்கின்றேன்

(கு-ரை) சிவபோகநிலையானது ஆச்சாரியன் திருவருளை முன்னிட்டேயடைந்ததொன்றாகலினாலும்அத்திருவருளினிலையானது வைகரிவாக்கினாலும், தற்போதமனத்தினாலும் சொல்லுதற்குக் கூடாததானையினாலும் அவ்வரிய நிலையைக் கூட்டிவைத்தார்க்கு நன்றி காட்டுவார் 'போற்றி' என்றனர். (72)

பட்டினத்தார் முதல்வன்முறையீடு.

முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்

மகவே முன்னிலையாகத் திருவாய்மலர்ந்த

அருட்புலம்பல்.

ஐங்கரனைத் தெண்டனிட்டே னருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன் றற்சொருபங் காட்டியெனை.

(பொ-ரை) திருவருளினைப் பெறவேண்டுமென் றுஐந் துதிருக் கரங்களுடன் கூடிய விநாயகக்கடவுளை வணங்கினேன் தாமதியாமல் 'முதல்வன்' எழுந்தருளிவந்து தனது சொரூபத்தினைத் தரிசிப்பித்து அடியேனை

(கு-ரை) திருவருளினையடைதற்குப் பிரபஞ்சமுகமாக விக்கினம்வாராதபடி விநாயகரை வணங்கியவுடன்முதல்வன்றரிசனம் கிடைத்ததென்பார் 'சொரூபங்காட்டி' என்றனர் (1)

கொள்ளைப் பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி.

(பொ-ரை) கூட்டமாகிய சென்மங்களையொழிக்க ஆச்சாரிய மூர்த்தங்கொண்டு வஞ்சகமாயுள்ள புலன்களை வெல்துதற்கேதுவாய் வந்தனன்

(கு-ரை) முந்தியெடுத்துள்ள பிறப்புகட்குஅளவிலவென்பார் கொள்ளைபிறப்பு, என்றனர்ஆச்சாரியர் தரிசனத்தால்இந்திரியங்களின்சேஷ்டையொடுங்குமென்பார் 'கள்ளப்புலனறுக்க' என்றனர்

'ஆதார மோராறு மைம்பத்தோ ரக்ஷரமும்
சூதான கோட்டையெல்லாஞ் சுட்டான் றரிசறவே.

(பொ-ரை) ஆறுதாறுங்களையும் அவ்வாறுதாரங்களிலுள்ள ஐம்பத்தோரெழுத்துகளையும் அவ்வாதார கோணங்களையும் ஆகிய எல்லாவற்றையும் ஆச்சாரியன் தனதுநேத்திரத்தால் ஒழித்தனன்.

(கு-ரை) ஆறுதாரமாவன:—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஐம்பத்தோரட்சரமாவன—அவ் வவ்வாராதாரங்களிலுள்ள எழுத்துக்கள். கோட்டையாவன— அவ்வாதாரங்களின் கோணங்கள். (3)

மெத்த விகாரம் விளங்கும் பலபலவாம்
தத்துவங்க ளெல்லாந் தலைகெட்டு வந்ததடி.

(பொ-ரை) ஆச்சாரியன்அனுக்கிரகித்ததனால்பற்பலவிகாரங் களைச்செய்யும் பற்பலவாம் தத்துவங்களெல்லாம் ஒடுங்கி விட்டன.

(கு-ரை) ஆச்சாரியர் உபதேசத்தெளிவினால்தத்துவங்களின் உண்மையினை விசாரிக்க அவை சடமென நிச்சயித்தவுடன் அவற் றால்விளைந்த காரியப்பாடு நின்றுவிட்டன என்பார் 'தலைகெட் டுவந்தது' என்றனர். (4)

என்னோடு பிறந்தா ரெல்லாரும் பட்டார்கள்
தன்னந் தனியே தரித்திருக்க மாட்டேண்டி.

(பொ-ரை) அடியேனுடன் பிறந்தவர்களாகிய தத்துவங்கள் எல்லாரும் நீங்கினர்கள் இனி நான் தனித்திருந்து வாழேன்.

(கு-ரை) ஆன்மா தேகமெடுத்தபொழுதே தத்துவங்கூடின வாகலின் 'உடன்பிறந்தார்'என்றனர். ஆச்சாரிய ரனுக்கிரகத்தால்

தத்துவங்களின் சேஷ்டை யெழிந்ததென்பார் 'எல்லாரும் பட்டார்கள்' என்றனர்.

எல்லோரும் பட்டகள மென்று தொலையுமடி
சொல்லி யழுதாற் றுயரமெனக் காறுமடி.

(பொ-ரை) எல்லாத் தத்துவங்களும் ஒடுங்கிய இடம் எந்நாளில் நீங்கும், எனது துன்பங்களை வாயாரச்சொல்லியழுதால் என்றுயரமொழியும்.

(கு-ரை) தத்துவங்கள் காரியப்படாமல் நிற்க வாய்ந்த உடலைக் 'களம்'என்றனர். அவ்வுடல் அங்ஙனமேயிருக்கின் ஒருக்கால் மறுபடியும் அவ்வுடல் ஏதுவாகத் தத்துவங்கள் காரியப்படுமென்பார் 'களமென்று தொலையும் என்றனர். (6)

மண்முதலா மைம்பூத மாண்டுவிழக் கண்டேண்டி
விண்முதலா மைம்பொறிகள் வெந்துவிழக் கண்டேண்டி.

(பொ-ரை) மண், நீர், தீ, காற்று, வெளி யனைத்துமாகிய பூதங்கள் தம் காரியங்களிற் குறையவும், சுவை. ஒளி, ஊறு,ஓசை நாற்றம் ஆகிய புலன்களின் சேட்டைக ளொடுங்கவும் தரிசித்தனன்.

(கு-ரை) ஆச்சாரியர் எதிரிட்டு அனுக்கிரகித்த உபதேசத்தினால் பஞ்சபூதங்களின் விகாரமும், ஐம்புலன்களின்சேட்டையும் நீங்கினவென்பார், 'மாண்டுவிழ' 'வெந்துவிழ' என்றனர். (7)

நீங்காப் புலன்களைந்து நீறாக வெந்ததடி
வாக்காதி யைவரையு மாண்டுவிழக் கண்டேண்டி

(பொ-ரை) எக்காலத்தும் நீங்குதற்கரிய மெய், வாய், கண் மூக்கு, செவி ஆகிய ஞானேந்திரியங்களும், வாக்கு, பாதம், பாணி

பாயுரு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களும் 'தத்தம் தொழில் களினின்றும், நீங்கின.

(கு-ரை) ஆச்சாரிய ரனுக்கிரகத்தால் விசாரித்தகாலத்து இந்திரியங்களின் செயலனைத்தும் நீங்கின என்பார். 'நீறுக் மாண்டு விழ' என்றனர். (8)

மனக்கரண மந்தனையும் வகைவகையே பட்டழிய
இனக்கரணத் தோடே யெரிந்துவிடக் கண்டேண்டி.

(பொ-ரை) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அவ்வளவும் கிரணமாக ஒழியவும், இவைகட்கு உபகரணமாக விருந்தனவும் அழிந்துவிடத் தரிசித்தேன்.

(கு-ரை) அந்தக்கரணங்களும் அவை விளைதற்கேதுவாகிய வாக்கு, காயங்களும் தத்தம்தொழிலற்றுக் கிடந்தனவென்பார், 'பட்டழிய! 'விழ' என்றனர். (9)

ஆத்தும தத்துவங்கள் அடுக்கழிய வெந்ததடி
போற்றும் வகை யெப்படியோ போத மிழந்தானை.

(பொ-ரை) ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கும் தமது வரிசையழிந்தன. இனித் தற்போதத்திற் கெட்டாத சிவபெரு மானை எத்தும்வித மெங்ஙனமோ அறிகிலேன்.

(கு-ரை) ஆன்ம தத்துவங்களாவன—ஞானேந்திரிய மைந் து, கன்மேந்திரியமைந்து, அந்தக்கரணம் நான்கு, தன்மாத்திரை யைந்து, பூதமைந்து. (10)

வித்தியா தத்துவங்கள் வெந்துவிழக் கண்டேண்டி
சுத்தவித்தை யைந்தினையுஞ் சுட்டான் றரிசறவே.

(பொ-ரை) வித்தியாதத்துவங்கள் எழும்வெந்துவிடவும் சுத்ததத்துவம் ஐந்தும் அங்ஙனமேயாகவும் ஆச்சாரியமூர்த்திதீட்சையினால் எறிந்தனன்.

(கு-ரை) வித்தியாதத்துவமாவன—கலை, காலம், நியதி, வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், பத்தி, சிவம். (11)

முன்று வகைக்கிளையு முப்பத் தறுவரையும்
கொன்றுவிழச்சுட்டுக் கருவே ரறுத்தாண்டி.

(பொ-ரை) மூவிதபாகுபா டமைந்த முப்பத்தாறு தத்துவங்களும் முற்றும் செயலற நாசமாக்கினன் ஆசாரியன்.

(கு-ரை) மூவகையாவன—ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சுத்ததத்துவம். இவையினியொருக்காலுந் தலையெடாதபடி அனைத்தையும் அடியோடே ஆச்சாரியன் களைந்துவிட்டனனென்பார் 'கருவேரறுத்தான்' என்றனர். (12)

குருவாகி வந்தானே குலமறுக்க வந்தானே
உருவாகி வந்தானே வுருவழிக்க வந்தானே.

(பொ-ரை) ஞானசிரியனாகி எழுந்தருளினனே, குலப்பற்றினையொழிக்க வெழுந்தருளினனே, சகளவடிவங்கொண்டெழுந்தருளினனே, எனது உடற்றடிப்பையொழிக்க வெழுந்தருளினனே, அறியேன்.

(கு-ரை) நிஷ்களமாகிய சிவம் சகளவடிவங்கொண்டு எழுந்தருளின் குலத்தின்கண்ணே விளையும் பெரும் பற்றும் தூலதேகச்செயலும் ஒழியுமென்பதாம். (13)

கேடுவரு மென்றறியேன் கெடுமதிகண் டோற்றாமல்
பாடுவரு மென்றறியேன் பதியாண் டிருந்தேண்டி.

(பொ-ரை.) அறிவீனத்தினால் நான் சிந்தியாதிருந்ததினால் இனி வருகின்ற கெடுதியினைப்பற்றித் தேர்ந்தேனில்லை பூமியினை நம்பி அதனையனுபவித்திருந்தேனே யல்லாமல் துன்பம் வருமென நினைத்தேனில்லை.

(கு-ரை.) அவ்வவ்வமயம் எனக்கு உண்டாயிருந்த செல்வச் செருக்கினால் பின்னால் வரும் துன்பத்தினைப்பற்றிச் சிறிதுஞ் சிந்தித்தேனில்லை என்பார் 'கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது, என்னும் பழமொழியை யுபயோகப்படுத்தினர். 14

எல்லாரும் பட்டகள மின்னவிட மென்றறியேன்
பொல்லாங்கு தீர்க்கும் பொறியிலியைக் கண்டேண்டி.

(பொ-ரை.) எல்லாத் தத்துவங்களும் ஒடுங்கிய உடலானது இன்னவிதமாயிற்றென்பதனை யறியேன், வினையினையொழிக்கும் சிவபெருமானைத் தரிசித்தேன்.

(கு-ரை.) தத்துவங்களனைத்தும்ஒடுங்கிய அவசரத்திலே உடலானது தோன்றாது சிவபெருமானே தோன்றினனென்பார்பொறியிலியைக் கண்டேன் என்றனர். 15

உட்கோட்டைக் குள்ளிருந்தா ரொக்க மடிந்தார்கள்
அக்கோட்டை குள்ளிருந்தா ரறுபதுபேர் பட்டார்கள்.

(பொ-ரை.) உள்கோட்டையாகிய தேகத்தினுள்ளேயிருந்தார்கள் எல்லாருமொழிந்தார்கள் 'அன்றியும்' அத்தேகத்திலேயேவாழ்ந்த அறுபதுபேர்களு மிறந்து பட்டனர்.

(கு-ரை.) உட்கோட்டைக்குள்ளிருந்தார் முப்பத்தாறுதத்து வங்கள் அத்தத்துவங்களுடனேயிருந்தார் மற்றைய அறுபது தத் துவங்கள முப்பத்தாறும் காரணதத்துவங்கள். அறுபதும் காரிய தத்துவங்கள். ஆகத்தொண்ணூற்றாறு. 16

ஒக்க மடிந்ததடி ஊடுருவ வந்ததடி
கற்கோட்டை யெல்லாங் கரிக்கோட்டை யாச்சுதடி.

(பொ-ரை.) தத்துவங்களனைத்தும் ஒன்றுசேரமடிந்தது அ வையாவும் சாம்பலாயின, இங்ஙனமாகவே கருங்கல்கோட்டையி னை யொத்திருந்ததும், கரிக்கோட்டைக்குச் சமானமாயது.

(குரை.) தேகமானதுதொண்ணூற்றாறுதத்துவங்களுடனே கூடி விளங்கிப்பலமானகோட்டைபோன்றிருந்தது. அத்தத்துவங் களழியவே அத்தேகம் அற்பமாய் விளங்கியதென்பார் கற்கோட் டை 'கரிக்கோட்டை' என்றனர். 17

தொண்ணூற் றறுவரையுஞ் சுட்டான் றரிசறவே
கண்ணீணு பட்டதடி கருவே ரறுத்தாண்டி.

(பொ-ரை.) தொண்ணூற்றாறு தத்துவங்களையும் குற்றமற எறித்தான். (அதனால்) நீறாகிவிட்டது இனியுண்டாதற்கும் ஏது வில்லாமற் செய்தனன்.

(கு-ரை.) ஆசாரியன், பிறப்பினுக்கேதுவாகிய தொண்ணூற் றாறு தத்துவங்களின் காரியப்பாட்டினை யழிக்கவே இனி வேறு உடலெடாதிருப்பதற்கும் ஏதுவாயிற்றென்பதாம். 18

ஓங்காரங் கெட்டதடி வுள்ளதெல்லாம் போச்சுதடி
ஆங்காரங் கெட்டதடி யடியோ டறுத்தாண்டி.

(பொ-ரை.) ஓங்கார சத்தத்திற் கேதுவாகிய நாதமானது குறைந்தது. அந்நாதத்தின் சம்பந்தமான எல்லாத்தத்துவங்களும் போயின. (அன்றியும்) ஆங்காரதத்துவமும் ஒழிந்தது அதற்காதாரமாயதும் நீக்கினன்.

(கு-ரை.) பிரபஞ்சவிவகாரங்கட்கு முக்கியவாதாரமாகியசத்தத்திற்கு உற்பத்தியோங்காரசொரூபமாகிய நாத தத்துவமாகலின் அதுகெட்டதென்றும், அச்சத்த சம்பந்தமாக அபரகலைஞான விவகார நீங்கியதென்பார் 'உள்ளதெல்லாம்போச்சு' எனவும் விபரீதகுணங்கட்கேதுவாயது ஆங்கார தத்துவமாகலின்அதுகெட்டதெனவும் கூறினர். 19

தரையாங் குடிலைமுதல் தட்டுருவ வெந்ததடி
இரையு மனத்திடும்பை யெல்லா மறுத்தாண்டி.

(பொ-ரை.) பூமியினைப்போல எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய சுத்தமாயை முதலாகிய தத்துவமனைத்தும் ஒடுங்கியது. விவகாரம் செய்துகொண்டேயிருக்கும் மனத்துன்பமனைத்தும் நீங்கியது.

(கு-ரை.) சகல தத்துவக்காரியப்பாட்டிற்குமஆதாரமாயிருப்பது மாயையாகலின் அதனை, 'தரை' என்றனர். பிரபஞ்சமுமாகப் பேசுவதனைத்திற்கும்காரணமனமாகலின்'இறையுமனம்'என்றனர்.

முன்னைவினை யெல்லாம் முழுது மறுத்தாண்டி
தன்னை யழியவே தானொருத்தி யானேண்டி.

(பொ-ரை.) பூர்வ சென்மவினை யனைத்தினையும் நீக்கினேன் பின்னர் ஆன்மாவாகிய வென்னை நான் தெரிந்துகொள்ளவே நான் தனித்திருந்தனன்.

(கு-ரை.) ஆச்சாரியன் முன்னை வினையாகிய சஞ்சிதத்தினை யொழிக்கவே இச்சென்மத்தி லனுபவிக்கவேண்டியவினையொன் றுமின்றி ஆன்மாவாகிய நான் தனித்துவிட்டேன் என்பார் 'ஒருத்தியானேன்' என்றனர். ஒருத்தியென்றது சிவபெருமானை நாயகனாகக்கொண்ட அவசரத்தில். 21

என்னையே நானறிய விருவினையு மீடழித்துத்
தன்னை யறியத் தலமெனக்குச் சொன்னண்டி.

(பொ-ரை) ஆன்மாவாகிய என்னையே நான் தெரிந்துகொள்ள நல்லவினையினையும் தீவினையினையும் கெடுத்துச் சிவபெருமானைத் தெரிந்துகொள்ளுமிடமெனக்கு உபதேசித்தான்.

(கு-ரை) ஆச்சாரியன் வினைக்கட்டறுத்து ஆன்மாவாகிய என்னையும் பரமான்மாவாகிய முதல்வனையும் அறிந்துகொள்ளும்படி அனுக்கிரகித்தருளினன். 22

தன்னை யறிந்தேண்டி தனிக்குமரி யானேண்டி
தன்னந் தனியே தனியிருக்கும் பக்குவமோ.

(பொ-ரை.) சிவபெருமானாகிய ஆன்மநாயகனைத் தெரிந்தேன். உடனே யவனையனுபவிக்கும் பக்குவமடைந்தேன். இனி நான் தனித்திருக்கும் பக்குவமுண்டானது போலும்.

(கு-ரை) கன்னிப்பருவமுடையபோது எல்லாருடனும் கூடிஆடிக்கொண்டிருந்த பெண், பக்குவமடைந்து நாயகனை யெதிர்கொண்டபின் யாரோடுங்கலவாது தனித்திடுவாள்போல, அறியாமை, மேலிட்ட காலத்து பலதெய்வ வழிபாடு கொண்டிருந்த

அறிவடைந்து சிவபெருமானைத் தரிசித்தபின் தனியே நிஷ்டை கூடினனென்பார் 'தனியிருக்கும் பக்குவமோ, என்றனர். (23)

வீட்டி லொருவரில்லை வெட்டவெளியானேண்டி
காட்டுக் கெறிந்தநிலா கனவாச்சே கண்டதெல்லாம்.

(பொ-ரை.) வீடாகிய உடலில் ஒருதத்துவமு மில்லையாகி வெறுவெளியாயினமையின், 'பிரபஞ்ச முழுவதும்' காட்டின்கண்ணே எரித்த நிலவினையொத்தும், நித்திரையிற்கண்ட கனவினையொத்தும் விளங்கியது.

(கு-ரை.) பிரபஞ்சமுகமாகவிருந்து அனுபவித்தபோகமனைத்தும், தத்துவங்களின் சேஷ்டையொடுங்கவே யாவும் பொய்யாகத் தோன்றினவென்பார் காட்டு நிலாவாகவும், கனவாகவும் ஆயிற்றென்றார். (24)

நகையாரோ கண்டவர்கள் நாட்டுக்குப் பாட்டல்லவோ
பகையாதோ கண்டவர்கள் பார்த்தாருக் கேச்சல்லவோ.

(பொ-ரை.) என்னுடைய துறவினைக் கண்டவர்கள் 'சிலர்' சிரியாரோ, நாடனைத்தும் பேச்சாக முடியாதோ, சிலர் பகைகொள்ளார்களோ, நேரேபார்த்தவர்கட்குப்பழிப்பாக முடியாதோ

(கு-ரை.) திடீரென அபாரசெல்வத்தினைவிட்டுத்துறவடைந்தமாத்திரத்தில் துறவினருமையினை யறியாச் சாமானியர் சிலர் நகைக்கவும், சிலர் வாயில் வந்தவாறு பேசவும், சிலர் பகைகொள்ளவும், சிலர் ஏசவும் இடமுண்டாயிற்றென்பதாம். 25

இந்நிலைமை கண்டாண்டி யெங்கு மிருந்தாண்டி
கன்னி யழித்தாண்டி கற்பைக் குலைத்தாண்டி.

(பொ-ரை.) இப்பக்குவ நிலைமையினை யுணர்ந்து, சர்வ வியாபகமாயிருந்த முதல்வன் (நாயகனு யெழுந்தருளிவந்து) கன்னிப் பருவத்தைக் கெடுத்துக் கற்பினை நீக்கினன்.

(கு-ரை.) கன்னியழித்தலாவது ஆன்மநாயகியுடன் சிவபெருமானாகிய நாயகன் கலந்து சிவானந்த இன்பத்தினை விளைவித்தலாம். கற்பைக்குலைத்தலாவது ஏகதேச அறிவுடனிருந்து பாசத்திற் கட்டுப்பட்டுக் கிடந்த தன்மையை நீக்கிப் பொதுவான அறிவுத்தன்மைத்தந்து எல்லாவற்றையும் சிவமாகப் பாவிக்கும் நினைவினைக்கூட்டி வைத்தலாம். 26

கற்புக் குலைத்தமையும் கருவே ரறுத்தமையும்
பொற்பு குலைத்தமையும் போத மிழந்தமையும்.

(பொ-ரை.) கற்பினை நீக்கினமையும், பிறப்பின் யொறுத்தமையும், அழகைக் கெடுத்தமையும், அறிவினையிழந்தமையும்.

(கு-ரை.) ஆச்சாரியனனுக்கிரகத்தினுல்ஏகதேசஅறிவுபொது அறிவாக விளங்கியது, இனிச் சென்மமெடாதபடி செய்தது இலௌகீக கோலமாறியது. தற்போதமிழந்தது என்பதாம். 27

எள்ளை வினைவருமோ வின்னமெனக் கென்றறியேன்
சொன்னசொல் லெல்லாம் பலித்ததடி சோர்வறவே.

(பொ-ரை.) நடந்ததுபோக இனிமேலும் என்னென்ன துன்பம் உண்டாகுமோ நானறியகில்லேன், 'ஆனுலும்'எனது ஆச்சாரி

யன் சொன்ன சொல்லெல்லாம் தவறாமல் பலித்துவருதலினால் வினை வாராதென்று நம்பிக்கையுண்டு.

(கு-ரை.) ஒருக்கால் ஏதாவது இனி துர்ப்பம் விளையுமோவெனச் சந்தேகிக்கினும், ஆசாரியர் அனுக்கிரகவார்த்தை இதுகாறும் பிரத்தியட்சமாகப் பலித்து வருதலினால் அவர் வாக்கின் படி யாதொருவினையும் வாராதென்றே தீர்மானிக்கின்றேனென்பதாம்

கங்குல்பக லற்றிடத்தே காட்டிக் கொடுத்தாண்டி
பங்கமபழித் தாண்டி பார்த்தானைப் பார்த்திருந்தேன்.

(பொ-ரை.) இரவும் பகலுமில்லாத இடத்திலே என்னைச்சேர்ப்பித்தான், பலத்தினை யொழித்தான், இங்ஙனஞ்செய்யவே என்னைப்பார்த்துக்கொண்டிருந்த சிவபெருமானையே நானிப்போது பார்த்துக் கொண்டிருந்தேன்.

(கு-ரை.) கங்குல் பகலற்ற இடமாவது கேவல சகலமற்றவிடம், காட்டிக்கொடுத்தல் திருவருளைக் கூட்டிவைத்தல், பங்கமழித்தல் ஆணவத்தை நீக்கல், பார்த்தானைப் பார்த்தலாவது மலத்தடிப்பால் தனக்குநேரே பிரத்தியட்சமாகக் காணாது தன்னில் மறைந்து பார்த்துக்கொண்டிருந்த சிவபெருமானை இப்போது மலமொழியப்பெற்று நேரே தெரிசித்தலாம். 29

சாதியிற் கூட்டுவரோ சாத்திரத்திற் குள்ளாமோ
ஓதி யுணர்ந்ததெல்லா முள்ளபடி யாச்சுதடி.

(பொ-ரை.) இனிக்குலத்தினில்கூட்டிக் கொள்ளுவார்களோ இப்போது ஏற்பட்ட நடக்கை சாத்திரத்திற் சொல்லப்பட்டது தானோ, படித்துத்தெரிந்தவையெல்லாம்உண்மையாகவிளங்கியது

(கு-ரை.) எல்லார் வீட்டினிலும் இரக்கத் துணிந்துகொண் டமையின் சாதியில் கூட்டுவரோ எனவும், நன்மை தீமையிழந்து நடக்கின்றவொழுக்கம் சாத்திரசம்மதமாமோவெனவும்; நூற்றியே படித்து அறிந்த யாவும் அனுபவத்தில் விளங்கியது என்பதாம். ()

என்னகுற்றஞ் செய்தேனோ எல்லாருங் காணாமல்
அன்னைசுற்ற மெல்லா மறிவாரோ வாய்புவியில்.

(பொ-ரை.) நான் உலகின் கண்ணே யாவருமறியாதபடி என்ன தீமைகள் செய்திட்டேனோ அத்தீமைகள் என்னுடையருந்தாய் முதலிய உறவினரெல்லா மறிந்தாரோ.

(கு-ரை.) நான் இல்லறத்திலே கட்டுப்பட்டிருந்த காலத்தில் பிரபஞ்ச போகவிச்சையால் செய்திருந்த பாவங்கட்கு அளவில்லை என்பதைத் தெரிந்த சுற்றத்தினர் இப்போது எடுத்துத்தூற்ற முன்வருவர் என்பதைக் குறிப்பாக விளக்கினர். 31

கொன்றாரைத் தின்றேனோ தின்றாரைக் கொன்றேனோ.
எண்ணுதெல் லாமென்று மிச்சை மறந்தேனோ.

(பொ-ரை) என்னைக் கொன்றவரை நானொருக்கால் புசித்தேனோ, என்னைப்புசித்தவரை நானொருக்கால் கொன்றேனோ, செய்த தீமைகளை யெண்ணி யெண்ணி வருந்தும் தன்மையைச் செய்யாதவனாயினேனோ.

(கு-ரை.) எந்தச்சீவன் ஒருகாலத்தில் என்னைக் கொன்றதோ அந்தச்சீவனை நானும் ஒரு காலத்தில் கொன்று தின்றிருப்பேன், எந்தச்சீவன் என்னையொரு காலத்தில் தின்றதோ அந்தச்சீவனை

ான் கொண்டிருப்பேன் இங்ஙனஞ் செய்தபின்னர் இத்திமைக்கா
ரிக்கிலேனொன்று மில்லையென்பதாம். 32

சாதியிற் கூட்டிலரோ சமயத்தோ ரென்னுவரோ
போதித்து வாழ்த்ததெல்லாம் பேச்சுக்கிட மாச்சுதடி.

(பொ-ரை.) யாதாமொரு சாதியிலென்னையேற்றுக்கொள்ளு
வாரோ, யாதாமொரு சமயத்தினனென வென்னைக் கொள்ளுவ
ரோ இன்னசமயம் இன்னசாதியென்று பாராட்டி யனுபவித்த
தெல்லாம் பேச்சுக்கிடமாயதே யொழிய வேறுபிரயோசன
மில்லை.

(கு-ரை.) எல்லாச்சாதியரினும் ஞானியர்க்குசாதி யெனவும்,
மற்றைச் சமயத்தினரைக் காட்டினு ஞானிகளைச் சமயத்தவனெ
னவும் ஏகதேசப்படுத்தி வாழ்த்த வாழ்வனைத்தும் பெரியோர்கள்
இழிவாகப்பேசுதற்கு இடமாயதேயன்றி யாதொரு பிரயோசன
மும் விளைத்ததில்லை யென்பதாம். 33

கண்டார்க்குப் பெண்ணல்லவோ காணார்க்கு காமமடி
உண்டார்களுண்டதெலா முணல்ல தண்பார்களோ.

(பொ-ரை.) உண்மையினைக் கண்டவர்க்கு உண்மையினைக
காணுவான் பெண்டன்மையலவோ, அனுபவியாதவர்கட்கே இ
ச்சையுண்டாகும். அனுபவிப்பவர்கள் அனுபவிப்பதெல்லாம் பிரா
ரத்துவ உணவல்லாது வேறுவகையில் அனுபவிப்பரோ.

(கு-ரை) உண்மையினை விசாரித்துத் தேர்ந்த பெரியோரே
ஆண்பிள்ளையெனவும், அங்ஙனம் விசாரியாதார் ஆணிலும் பெ
ண்மைத் தன்மையுடையவரே யெனவும், மாதர்சுக மனுபவியாத

வர்கட்கே இன்பமதிகரிக்கு மாறுபோல, திருவருளினை யடையா தவர்கட்கே மோட்சதாகமாகிய விச்சையதிகமாமெனவும், உலகத்திலொவ்வொருவரு மனுபவிப்பது பிராரத்துவத்திற்குத்தக்கபடியேயல்லது வேறில்லையெனவும் கூறியபடியாம். 34

கொண்டார்கள்கொண்டதெல்லாங் கொள்ளாதார்கொள்ளுவரோ
விண்டவர்கள்கண்டவரோ கண்டவர்கள்விண்டவரோ.

(பொ-ரை) ஆசாரியனிடத்துப் பெற்றவர்கள் பெற்றபேறனைத்தும் அங்ஙனம் பெறார்கள் பெறும்பேறுமோ, பேசுபவர்கள் உண்மையறிந்தவரோ, உண்மை யறிந்தவர்கள் வாய்விட்டுப் பேசுவரோ.

(கு-ரை.) நேரே ஆசாரியனிடத்தையடைந்து அவர்பால்பெற்ற அனுக்கிரகத்தை மற்றையர் எவ்விதத்தினும் அடையார்கள். பூரணத்திருவருளினிற் றிளைத்தவர்கள் மவுனமுற்றிருப்பார்கள். பெறுதார் பெற்றவரைப்போலப் பேசித் திரிபவரென்பதாம் 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்னும் பழமொழியைக் காண்க. 35

பண்டாய நான்மறைகள் பாடும் பரிசலவோ
தொண்டாய தொண்டருளந் தோற்றி யொடுங்குமதோ.

(பொ-ரை.) பழமையாகிய நான்குவேதங்கள் பாடுந் தன்மையுடையதன்றோ, அடிமைபூண்ட அடியார்கள் மனத்தின் கண்ணே தோன்றி அம்மனத்திலேயே யொடுங்கத்தக்கதன்றோ.

(கு-ரை) சிவபெருமானை வேதங்கள் எக்காலமும் புகழ்ந்து பாடிக்கொண்டேயிருப்பதே யதன் சுபாவமென்பார் 'பாடும்பரிசலவோ'எனவும், அப்பெருமான் சிவனடியார்கள் இருதயத்திலே

யேதோன்றி அவரிடமே தங்கியிருப்பானென்பார் 'தோற்றியொ டுங்குமதோ' என்றனர். (36)

ஓத வரிதோ வொருவரு ணர்வரிதோ
பேதமத வெங்கும் விளங்கும் பெருமையன்காண்.

(பொ-ரை) வாக்காலெடுத்துச் சொல்லுதற் கரிதானவனே, ஒருவர் உணர்ந்துகொள்வதற்கு அருமையானவனே, அபேதமாக சர்வவியாபகமாகப் பிரகாசிக்கும் பெருமையினை யுடையவன், சிவபெருமான்.

(கு-ரை) எவ்விடத்தும் தோய்வறச் சர்வ்வியாபியாய் நின்ற பெருமானைத் தற்போத முனைவுகொண்டு ஒருவர் சொல்லவும், ஒருவர் அறியவும் கூடாதென்பதாம். (37)

வாக்கு மனமுங் கடந்த மனோலயன்காண்
நோக்க வரியவன்கா ணுன்னரிய னுண்ணியன்காண்.

(பொ-ரை) வாக்கினுக்கும் மனதினுக்கு மெட்டாது அடியார் கள் மனத்திலேலயப்பட்டு இருப்பவன். பிரத்தியட்சகாட்சியினும் காணப்படாதவன், நுட்பமாயறிபவர்பாலும் நுண்மையாகவிள ங்குபவன்.

(கு-ரை) தற்போதமுன்னிட்ட வாக்கினுக்கு மனதினுக்கு மெட்டாதவனாயினும், திருவருளை முன்னிட்டறிய மனத்தில் விளங்குபவன், அஞ்ஞானிகள் பார்ப்பதற்குக்கூடாதவன், கூர்ந்து விசாரிக்க, அதிநுட்பமாகவிளங்குபவன் சிவபெருமானென்பதாம்

சொல்லுக் கடங்கான்காண் சொல்லிறந்து நின்றவன்காண்
கல்லு ளிருந்த கனலொளிபோ னின்றவன்காண்.

(பொ-ரை) சொல்லினிற் கட்டுப்படாதவன்; சொல்லினைத்தும் கடந்தவன், கல்லினுக்குள்ளே பிரகாசிக்கும் அக்கினிப் பிழம்பாய் நின்றவன்.

(கு-ரை) சிவபெருமான் பாசசாலமாகிய சொற்களினாலே பிரதிபாதிக்கவும் தீர்மானிக்கவும் முடியாதிருந்தவன், எனவே ஞானிகளுடைய சுயம்புலிங்கமாகவும், ஆங்காங்கு விளங்கியிருப்பவன்.

சுட்டிறந்த பாழதனிற் சுகித்திருக்கச் சொன்னவன்காண்
எட்டி லெழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ.

(பொ-ரை) ஏகதேசவறிவினால் காணுதற்கரிய சிதாகாயத்தில் சுகமாக வாழும்படி கட்டளையிட்டனன் ஆனால் ஏகதேசவறிவினால் காணலாமென்ச் சிலநூல்கள் கூறுவது சாமானியர் சிலரெழுதிவைத்த சுவடியின் வார்த்தையோ, உண்மையினையே யெழுதும்போது பிழைபட்டு யோய்விட்டதோ,
அறியேம்.

(கு-ரை) சிதாகாயமானது எல்லாவற்றையும் விழுங்கிகொண்டு வியாபகமாக விருத்தலின் சுட்டறிவிற் கெட்டாதென்றனர் அவ்வாகாய அருள்வெளியில் கலந்துகொள்ள வேண்டுமென்பார் சொன்னவன்காண் என்றனர். இத்தகைவஸ்து சுட்டுக்கடங்குமெனக் கூறும்நூல் பிரயோசன மில்லையென்பார் 'எழுத்தோ' பிழையோ' என்றனர். (40)

சும்மா விருக்கவைத்தான் சூத்திரத்தை நானறியேன
அம்மா பொருளிதென வடையை விழுங்கினன்டி.

(பொ-ரை) சும்மாவிருக்கும்படி கட்டளை யிட்டானுடைய தந்திரத்தினை யின்னதென நானறியேன். அங்ஙனம்சும்மாவிருக்க

வைத்த உண்மையினைத் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் என்னைத் தானாக்கிக்கொண்டனன் இது ஆச்சரியம்.

(கு-ரை.) ஆசாரியன் மவுனநிலையிலிருக்கும்படி கட்டளையிட்டதனை நான் முதலில் தெரிந்துகொண்டேனில்லையாயினும் அதனை அனுபவத்தில் கொண்டுவந் துண்மையறிகையில் திருவருள்மயமாக நின்றனனென வியந்து பாராட்டினர். (41)

பார்த்த விடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி
கோர்த்த நிலைகுலைத்த கொள்கை யறியேண்டி.

(பொ-ரை.) தரிசித்த விடமனைத்தும் சிவமயமாகவிருந்தது தத்துவங்களால் கட்டப்பட்டிருந்த உடனிலை கலைந்த வகையறிந்தேனில்லை.

(கு-ரை.) 'எங்கும் சிவமொழிய வில்லையவன்றன்னாணை' என்றதற்கேற்ப ஞானிகட்குப் பிரபஞ்ச முழுவதும் சிவமாந் தன்மையாகத் தரிசன முண்டாகுமாதலின் 'பரமாகக்கண்டேன்' என்றனர். ஆசாரியன் அனுக்கிரகத்தால் தத்துவக்கூட்டத்தின் செயல் இன்னவழியாகப் போயினதென வறியவராமையின் 'கொள்கையறியேன்' என்றனர். (42)

மஞ்சன மாட்டி மலர்பறித்துச் சாத்தாமல்
நெஞ்சுவெறும் பாழானே னின்றனிலை காணேண்டி.

(பொ-ரை.) அபிடேகம்செய்து புட்பத்தினைப்பறித்து அருச்சிக்காமற் மனத்தினை வீண்பாழாக்கினன், ஆகையினால் பெருமான் எழுந்தருளிய 'உண்மை' நிலையினைக் காணாதவனாயினேன்;

(கு-ரை.) சிவாலயத்தி லெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கு மகாபிஷேகம்செய்து நன்மலர்களைக்கொண் டருச்

சித்து வணங்கினர்க்கே மனம் சுத்தமாக மெய்மையாகிய நிலைமையறிய வேது உண்டென்பதாம். (43)

பாடிப் படித்திருந்தும் பன்மலர்கள் சாத்தாமல்
ஓடித் திரியாம லூருக்கெட்டு விட்டேண்டி.

(பொ-ரை.) பாடவும் படிக்கவும் தெரிந்திருந் தும் நூற்களிற் குறித்தபடி பல புட்பங்களைக்கொண்டு சிவபெருமானை யர்ச்சிக்காமலும், திவ்ய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்யாமலும் தேகத்தை வீணாக்கினேன்.

(கு-ரை) சாத்திரங்களைக் கற்றுக்கல்விமானாக விளங்கியும் அச்சாத்திரங்களிற் குறித்தபடி சிவபூசைபண்ணாமலும், புண்ணியஸ்தலங்களுக்குச்சென்று தரிசியாமலும் வீணாயினனென்பார் 'கெட்டு விட்டேன்' என்றனர். "மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாற்றொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்றதனாற் காண்க. (44)

மாணிக்கத் துள்ளொளிபோல் மருவி யிருந்தாண்டி
பேணித் தொழுமடியார் பேசாப் பெருமையன்காண்.

(பொ-ரை.) மாணிக்கத்தின் கண்ணே பிரகாசிக்கும் ஒளியினைப்போல சத்தியிற் றிருமேனிகொண்டு விளங்கினன், அவனை விரும்பி வணங்கும் அடியார்கள் வேறுபிரித்துக் கூறுதற்குக் கூடாதமேன்மை நிலையினையுடையவன்.

(கு-ரை) மணியும் அதினின்றும் வேறுபிரிக்கக்கூடாத ஒளியும்போலச் சிவசத்தியாகிய திருமேனிகொண்டு விளங்குபவன் என்பார் 'மாணிக்கத்துள்ளொளி' என்றனர் உண்மைச்சிவனடி

யார்கள் மவுன நிலையிலிருந்து அனுபவிக்கக்கூடிய பதார்த்தம்பர மசிவமென்பார் 'பேசாப்பெருமையன்காண்' என்றனர். (45)

அன்றுமுத லின்றளவு மறியாப் பருவமதில்
என்றும் பொதுவா யிருந்த நிராமயன்காண்.

(பொ-ரை.) பிறந்தநாள் முதல் இன்றையவரையில் என்னை நானறியாத காலமுழுவதும் 'சிவபெருமான்' என்னிடத்து அத்துவிதமாகஇருந்த நிராமயனுவன்.

(கு-ரை.) ஆன்மாவுடன் பரமான்மா எந்நாளும் அத்துவிதமாகஇருந்துகொண்டிருப்பா னெனவும், அங்ஙனமிருக்கினும் அப்பெருமான் அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி பக்குவா பக்குவங்களைநோக்கித் தோன்றிய மறைதலுமாகவிருப்பனென்பதாம்.

சித்தவிகா ரத்தாலே சின்மயனைக் காணமல்
புத்தி கலங்கிப் புகுந்தேன் பொறிவழியே.

(பொ-ரை.) மனமயக்கத்தாலே ஞானமயனுகிய சிவபெருமானைத் தரிசியாமல் அறிவுமயங்கி ஐம்பொறிவழியே யலைந்தேன்.

(கு-ரை) மெய்கண்ட சாத்திரங்களைவாசித்து உண்மையினைத்தேராத தன்மையினுல் மனம்கலங்கியதெனவும், அதுகாரணமாகவே பெருமானை யறிதற்கேதுவில்லாமல் போயிற்றெனவும், அங்ஙனம் போகவே மனமானது பிரபஞ்சமுகமாக ஐம்பொறிவழியே சென்றதென்பார் 'புகுந்தேன் பொறிவழியே' என்றனர். (47)

பத்தியறி யாமற் பாழிற் கவிழ்ந்தேன்டி
ஒத்தவிட நித்திரையென் றொத்து மிருந்தேன்டி.

(பொ-ரை.) சிவபக்தியின்னதெனவறியாமல் மாயாகாரியமாகிய பாழினிலழிந்துகிடந்தேன். சௌக்கியமானவிடத்தில் நித்திரையே சுகமென்று தங்கிவாழ்ந்தேன்.

(கு-ரை.) 'பக்திவலையிற் படுவோன்காண்க. என்றதனால் பத்தியில்லாதவர்கள் ஒரு பிரயோசனத்தை யடையாமல் நரகத்திலாழ்வர் என்பார் 'பாழிற்கலந்தேன்' என்றனர் இடம்சுகமாகவாய்ந்தகாலத்தில் நித்திரைசெய்தேனேயல்லது நிஷ்டை கூடினேனில்லை யென்பார் 'நித்திரையென் றொத்துமிருந்தேன்' என்றனர்.

செத்தாரையொத்தேண்டி சிந்தை தெளிந்தேண்டி
மற்றொரு மில்லையடி மறுமாற்றங் காணேண்டி.

(பொ-ரை.) இறந்த பிணத்தினை யொத்திருந்தேன், சிந்தை தெளிவுகண்டேன், சுட்டியறிதற் கொருவருமில்லை, வார்த்தை சொல்பவரும் வேறு கிடையாது.

(கு-ரை,) தத்துவங்களின் சேஷ்டைகள் பிரபஞ்சமுகமாகச் சிறிதும் சொல்லுதலில்லை யாகையால் 'செத்தாரை பொத்தேன்' என்றனர் ஆசாரியன்பால் கேட்டவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து உண்மை தெளிந்துகொண்டேனென்பார். 'தெளிந்தேன்' என்றனர். அன்னியவார்த்தைகளும் கண்டேனில்லை யென்றனர் மவுன நிலையோடு தங்கினதால் எனக் கன்னியரும்,

கல்வியல்ல கேள்வியல்ல கைகாட்டுங் காரணங்காண்
எல்லையள வற்றவடி யெங்கு நிறைந்ததடி.

(பொ-ரை) 'எனக்கேற்பட்ட மவுனநிலை' கல்வியினாலேனும் கேள்வியினாலேனும் கிடைத்ததல்ல அது குறிப்பாற்றெரிவி

த்தினாலே கிட்டியது அவ்வுண்மை அளவுபட்டதன்று எங்கும் பரிபூரண நிலையினையுடையது.

(கு-ரை) ஆசாரியமூர்த்தியின் முத்திரையுபதேசத்தாலேயே உண்மைநிலை விளங்கி விட்டமையின்; 'கைகாட்டுங்காரணங்காண்' எனவும். அவ்வுபதேசத்தால் விளைந்த திருவருள் வியாபகமானது பூரணத்தன்மை வாய்ந்ததெனவும் கூறினர். (50)

வாசா மகோசரத்தை மருவிடங் கொண்டாண்டி
ஆசூச மில்லாண்டி யறிவுக் கறிவாண்டி.

(பொ-ரை) வாக்குக்குஎட்டாத இடத்தினைப்பொருந்தியிருப்பவன் பெருமான் ஆன்மாக்களின் அறிவினுக்கு அறிவாகி எவரிடத்தும் அசூசையில்லாதிருப்பவன்.

(கு-ரை) பெருமான் ஆன்மாக்களின்வைகறிவரக்கினுக்கு எட்டாத சிதம்பராகாயத்தில் இருப்பவனெனவும் ஆன்மாக்களின்சிற்றறிவினை யதிட்டித்துக்கொண்டு அவர்கள் கன்மத்திற்குத்தக்கபடி பிரேரேபித்துத் தான் தாக்கற்று விளங்குபவனாகலின் இடங்கொண்டான்,, 'ஆசூசமில்லான்' எனவுங்கூறினர். (51)

பத்துத் திசைக்கு மடங்காப் பருவமடி
எத்திசைக்கு மெங்கு மிடைவிடா தேகமடி.

(பொ-ரை.) பத்துத்திக்குகளிலும் அடங்காதநிலையினையுடையன் ஆகலினாலும் எவ்விடத்தினும் சிறிதும் இடமில்லாது ஒன்றுயிருப்பவன்,

(கு-ரை.) பெருமான் பரிபூரண விலக்கணம் வாய்ந்தவன் ஆகலினாலும் அனைத்தும் அவன்பால் வியாப்பியமுற்றுவிளங்கலானும்அவனில்லாதவிடம் சிறிதும்கிடையாது என்றனர். (52)

தித்திக்க வூறுமடி சித்த முடையார்க்குப்
பத்திக் கடலுட் பதித்தபரஞ் சோதியடி.

(பொ-ரை.) பெருமானிடத்து மனமுடையவர்கட்கு அவர் இருதயத்தில் சுவைப்பொருளாய் விளங்குபவன். அடியார்களுடைய பத்தியென்னும் சமுத்திரத்தில் திளைத்த அருட்பெருஞ் சோதி.

(கு-ரை.) சிவத்தியானத்தி லுறைந்தவர்கள் மனத்தின்கண்ணே இன்பசுவையுடன் விளங்கிக்கொண்டிருப்பவனென்பார் 'தித்திக்கவூறுமடி' என்றனர். விசேஷபக்தி யுடையார்மாட்டு நீங்காது எந்நாளுமுறைபவன் என்பார் 'பத்திக்கடலுட்பதித்த' என்றனர்.

உள்ளுணர்வாய் நின்றவர்த முணர்வுக் குணர்வாண்டி
எவ்வளவு முள்ளதிலே யேறிக் குறையாண்டி.

(பொ-ரை.) அதோகமுகவறிவு வியாபாரத்துடன் கூடியவர்கள் அறிவிலே அறியப்படுவன், அன்பர்கள் மனத்தில் ஒரேபடித்தாகவிருப்பவன்.

(கு-ரை.) பிரபஞ்சமுகமாகவிஷயங்களைச்செலுத்திப் போகானுபவமுடைய வரையில் தோன்றாது உண்முகநாட்டம் பெற்றவளவில் நன்குவிளங்குவனென்பார்'உணர்வுக்குஉணர்வான்'என்றனர். ஆன்மாக்கள் மனத்தில் சிவவிளக்கம் தோன்றுவதும் மறைவதும்போல அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி விளங்கினும் அப்பெருமான் எக்காலத்தும் ஒரேதன்மையாக விருப்பானென்பார் 'ஏறிக்குறையான்' என்றனர். (54)

தாருந் தலையுமிலான் றோற்ற மொடுக்கமிலான்
ஆரு மறியாப கெண்டமாய்நின் றாண்டி.

(பொ-ரை.) அடியும் முடியுமில்லாதவன், உற்பத்தியும் நாசமுமில்லாதவன், ஒருவராலுமறியப்படாது வியாபகமாகவிருப்பவன்.

(கு-ரை.) அகண்டிதனைபடியால், அடிமுடிகாணுவது அரிது. நித்தியனைபடியால், தோற்றமொடுக்கமில்லை. சர்வ வியாபகனைகலின், ஏகதேசவுணர்வாலறியப்படாதவனென்பதாம் (55)

எத்தனையோ வண்டத் திருந்தவர்க ளெத்தனைபேர்
அத்தனைபே ருண்டாலும் அணுவுங் குறையாண்டி.

(பொ-ரை.) அளவில்லாத அண்டங்களில் வாழ்கின்ற ஆன்மாக்கள் எத்தனையோ கணக்கிலடங்காதவராவர் அவ்வளவு ஆன்மாக்களும் புசித்தாலும் சிறிதும் குறையாதவராவர்.

(கு-ரை.) சிவபெருமானுடைய கிருபாசமுத்திரமானது அளவுபடா நித்தியத்தன்மையுடையது; இவ்வளவெனக்கணக்கிலடக்கக்கூடாத ஆன்மகோடிகள் அக்கிருபாசமுத்திரத்திற்படிந்து திருவருளையனுபவித்தாலும் பரமாணு அளவும் அதுவற்றாது. "பூரணம்குறையுமோ" என்றனர் தாயுமானவர். (56)

வாக்கு மனமும் வடிவுமிலாவான் பொருள்காண்
போக்கு வரவுமிலான் பொருவரிய பூரணன்காண்.

(பொ-ரை.) வாக்கும், மனதும், உருவமும் இல்லாத வொருபொருளா யுள்ளவன், போக்குவரத்தில்லாதவன், ஒப்பற்ற பரிபூரணன்.

(கு-ரை.) தனக்கெனவடிவொன்றில்லாத நிட்களனாய்விளங்குபவன் சிவபெருமானாகலின் வாக்குமுதலியவில்லான் என்றனர். எங்குமொரு படித்தாய் சர்வவியாபகனாகலின் ஏகதேசப் பொருளினைப்போலப் போக்குவரத்தற்றவனென்றனர். (57)

காட்சிக் கெளியான்காண் கண்டாலும் காணான்காண்.
மாட்டிமனம் வைத்ததற்கு மாணிக்கத் துள்ளொளிகாண்.

(பொ-ரை.) திருவருட்காட்சியினுக்கு இலேசாக எட்டக்கூடியவன், அங்ஙனம் திருவருளைக்கொண்டு கண்டாலும் பிரத்தியட்சமாகவூனக்கண்ணினுக்குக் காணாதவன்,பெருமைபொருந்திய மனத்தின்கண்ணே தியானித்தார்க்கு மாணிக்கவொளிபோல் பிரகாசிப்பவன்.

(கு-ரை.) திருவருளைக்கொண்டு விசாரிக்கின்ற அடியவர்கட்குமாத்திரம் வெளிப்பட்டுச் சிவபெருமான் காட்சியளித்தருளுவனன்றி மற்றபடி தரிசனங்கொண்டானென்பார் "காணான்காண" என்றனர். அன்பர் மனத்தின் கண்ணே மணிவொளிபோல் விளங்குவானென்பார் 'உள்ளொளிகாண்' என்றனர். (58)

வாழ்த்தி யவனை வழிப்பட்டால் மன்னுயிர்கள்
தோற்ற வரியான்காண் சொல்லிறந்த சோதியன்காண்.

(பொ-ரை.) தற்போதமுனை வால் சொற்களைக்கொண்டு வாழ்த்துதல்செய்து வணங்கினால் ஆன்மகோடிகட்குப் பிரத்தியட்சமாகத்தோற்ற அருமையானவன் சொற்களுக்கு மெட்டாதசோதிசொரூபமானவன்.

(கு-ரை.) திருவருளை முன்னிட்டு அன்பின்மயமாக விருந்து வாழ்த்துபவர்க்கே காட்சி கொடுத்தருளுவனெனவும், சிவகரணங்களையடைந்த மெய்ஞ்ஞானிகள் வாக்கின்கண்ணெழுந்தசுத்தவைதீகவிசார்களுக்கேசெவி கொடுப்பவனெனவும் கூறுவாராயினார்.

ஐய மறுத்தவனை யாராய்வா ருண்டானால்
மவையகத்தே வந்து மலர்ப்பாதம் வைத்திடுவான்.

(பொ-ரை.) ஆன்மாக்கட்கு உண்டாகிய சந்தேகத்தினை நீக்கினவனை, விசாரித்துணர்வாராகில் சிவபெருமான் பூமியிலே வெழுந்தருளி அவர்கட்கு அவனுடைய திருவடியைச் சிரசில் தரித்தருளுவன்.

(கு-ரை.) மெய்கண்ட நூல்களைப் படித்துப் புதியிலக்கணந்தேர்ந்து உண்மை விசாரிப்பவர்பால் பெருமான் ஆசாரியகோலங்கொண்டுவெந் தெழுந்தருளித் திருவடிதீட்சை செய்தருளுவனென்பார் 'பாதம், வைத்திடுவான்' என்றனர். (60)

அணுவுக்கு மேருவுக்கு மகம்புறமாய் நின்றான் காண்
கணுமுற்றா ஞானக் கரும்பின் றெளிவான்காண்.

(பொ-ரை.) அணுவினிடத்தும், மேருவினிடத்தும் உள்ளும் புறம்புமாக வியாபகமாய் எழுந்தருளியவன், கணுமுற்றியுள்ள ஞானமாகிய கரும்பின் தெளிவாக விளங்கும் சாற்றின் சுவையையொத்தவன்.

(கு-ரை.) பரமாணுரூபமாய் அதிநுட்பமான பொருளாயிருக்கினும் மேருமலையினைப்போலப் பெரியவடிவான பொருளாயிருக்

கினும் பெருமான் அப்பொருள்களில் 'எள்ளின் எண்ணெயைப் போல வியாபித்து நிற்பவனெனவும், ஞானமே சொரூபமாகிய கரும்பினிடத்து ஞேயமான சுவைப்பொருளால் விளங்குபவனெனவும் கூறிப்போந்தார். (61)

எந்நாளு மிந்நாளு மிப்படியா யப்படியாய்ச்
சொன்னாலுங் கேளான்காண் சோத்திரத்திற் கொள்ளான் காண்.

(பொ-ரை.) எக்காலத்தும் இக்காலத்தும் இவ்விதமெனவும் அவ்விதமெனவும் ஒருவன் கூறினும் கேட்கமாட்டான் தனது காதுகொடான்.

(கு-ரை.) பதியுண்மை விசாரித்துத் தேர்ந்து திருவருளிற் கட்டுப்பட்டுத் தோத்திரம்புரிகின்ற மெய்ஞ்ஞானிகளாகிய சிவனடியார்கட்கே தமது திருச்செவியினைப் பெருமான்சாத்துவரே யன்றி மற்றையரைக் கவனியான் என்பார் 'கொள்ளான்காண்' என்றனர். (62)

ஆத்தாளுக் காத்தாளா மப்பனுக்கு மப்பனுமாங்
கோத்தர்க்குக் கோத்தநிலை கொண்ட குணக்கடல்காண்.

(பொ-ரை.) தாய்க்குத்தாயாகியும், தந்தைக்குத் தந்தையாகியும், உறவினர்க்கு உறவினராகியும் வாய்ந்த கிருபாசமுத்திரம்.

(கு-ரை.) தன்பால் அன்புபூண்டு தன்திருவடி தொழுதுவரும் சிவனடியார்கட்குத் தாயினைப்போல் ஞானாமிர்தம் ஊட்டியும், தந்தையினைப்போல் பாசமணுகாதபடி காத்தும், உறவினரைப் போல வேண்டிய வேண்டிய அருளை உதவியும் பெருமான் வருவனென்பதாம். (63)

இப்போ புதிதோடி யெத்தனைநா ளுள்ளதடி
அப்போதைக் கப்போ தருளறிவுந் தந்தாண்டி.

(பொ-ரை.) இன்றுதான் நூதனமாக வுதித்தவனோ எத்தனை யோர்காளாக வுள்ளவனன்றோ அப்பப்போது திருவருள் கொடுப்பவனேயாம்.

(கு-ரை.) "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாயுள்ளவன்" ஆகலின் பெருமான் அநாதிநித்தியனாக வெழுந்தருளியிருந்து அடிக்கடிபிறந்துவருகின்ற ஆன்மாக்கட்கு அவ்வக் காலத்தில் அவரவர்கள் கன்மத்தினுக்குத் தக்கபடி திருவருளைக் கூட்டி முடிப்பவனென்றபடியாம். (64)

பற்றற்றார் பற்றாகப் பற்றி யிருந்தாண்டி
குற்ற மறுத்தாண்டி கூடி யிருந்தாண்டி.

(பொ-ரை.) பாசப்பற்றினின்று நீங்கின ஆன்மாக்களையே பற்றாகக்கொண்டு அவர்பால் தங்கியிருந்தான், அவர்கள் குற்றமனைத்தையும் ஒழித்தான், அவருடன் கலந்திருந்தான்.

(கு-ரை.) ஆன்மாக்களுடன் அத்துவிதமாக விருக்கும் சிவபெருமான் ஆணவத்தடிப்புள்ளவரையில் வெளிப்படாது அது நீங்கவேதோன்றி அவர்கள் பூர்வசென்ம வாசனை யனைத்தையுமொழித்து அவர்களுடன் அளவளாவி யிருப்பனென்பதாம். (65)

வெட்ட வெளியிலெனை மேவி யிருந்தாண்டி
பட்டப் பகலிலடி பார்த்திருந்தா ரெல்லோரும்.

(பொ-ரை.) பகிரங்கமான விடத்தில் என்னைக் கலந்திருந்தான் அது பகற்காலமேயாம் அநேகரும் கண்டிருந்தனர்.

(கு-ரை) அநேகமான சிவனடியார்கள் கண்டுகொண்டிருக்கச் சகலத்தில் சிதம்பர சிதாகாயத்தில் கலந்துகொண்டா னென்பதாம். (66)

வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்
தாழாமற் றாழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல்.

(பொ-ரை.) நல்ல வாழ்வான வொருவாழ்வானது எனக்குக் கிடைத்தது. அதனால் பாசத்தில் தாழாமல் திருவருளிற் றாழ்ந்தேன் சிறிதும் குறைவு அடையாதபடி.

(கு-ரை) வாழ்வானவாழ்வு என்பது பிரபஞ்ச வாழ்வினின்று நீங்கிய திருவருள் வாழ்வு, தாழாமல் தாழ்வது தற்போத முன்னிட்டுத் தாழாமல் திருவருளை முன்னிட்டு தாழ்வது, இங்ஙனம் திருவருள் முன்னிட்டு எவற்றினை யுங்கடந்துகொண்டு அத்திருவருள் வியாபகத்தில் கட்டுப்பட்டிருப்பார்க்கு யாதொருகுறையும் வாராதென்பார் 'சற்றுங் குறையாமல்' என்றனர். (67)

பொய்யான வாழ்வெனக்குப் போதுமெனக் காணேண்டி
மெய்யான வாழ்வெனக்கு வெறும்பாழாய் விட்டதடி.

(பொ-ரை) நிலையுறுதலில்லாத பிரபஞ்ச வாழ்வானது எனக்குப்போதுமென வெறுப்படைந்தேன் இல்லை. (இங்ஙனம் வெறுப்படையாததால் உண்மையான திருவருள்வாழ்வு எனக்குக் கிட்டாமல் பொய்த்துப் போய்விட்டது.

(கு-ரை.) அநேக சென்மாந்தரங்களாகப் பிரபஞ்சத்திலழுந்திக்கிடக்கின்றமையின் அதில் வெறுப்புக்காணே னென்பார் 'போதுமெனக்காணேன்' என்றனர். பிரபஞ்சத்திலழுந்திக் கிடக்

குமளவும் உண்மையான சிவஞானவாழ்வு கிட்டாதென்பார் 'வெறும்பாழாய் விட்டது' என்றனர். (68)

கன்னி யழித்தவனைக் கண்ணாரக் கண்டேனடி
என்னியல்பு நானறியே னீதென்ன மாயமடி.

(பொ-ரை.) எனது கன்னிப் பருவத்தினைக் கெடுத்தவனைப் பிரத்தியட்சமாகத் தரிசித்தேன். அதனால், என்னுடையஉண்மைத்தன்மையினை நானறிந்தேனில்லை, ஈதென்னகாலமோ, 'அறியகில்லேன்.'

(கு-ரை.) கன்னிப்பருவமானது மலத்தில் கட்டுப்பட்டிருக்கும் காலவளவு. கன்னிப்பருவ மழிதலாவது அம்மலநீங்கச் சிவபெருமான் கலந்த அவசரம். அங்ஙனம் கலந்தபின் இதுகாறும் இருந்த சுதந்தர மிழக்கச்செய்தனர் ; இது வியப்பே என்பார் 'ஈதென்னமாயம்' என்றனர். (69)

சொல்லாலே சொல்லுதற்குச் சொல்லவா யில்லையடி
எல்லாருங் கண்டிருந்து மிப்போ தறியார்கள்.

(பொ-ரை.) பெருமான் தன்மையினைச் சொற்களினாலே எடுத்துக்கூறித் தீர்மானித்துப்பேசுதற்கு வாயெழவில்லை. இவ்வுண்மையினை எல்லாரு மறிந்திருந்தும் மலத்தடிப்பா லீதுணரவில்லை.

(கு-ரை.) அன்பின்மயமாக விருந்து தோத்திரஞ்செய்தலினாலே சிவபெருமான் உண்மையறிதற்கேதுவென எல்லோரும் நன்கறிந்திருந்தும் அங்ஙனம் செய்யாது வாளாதோத்திரஞ்செய்து அவலமாகின்றாரென்பார் 'இப்போதறியார்கள்' என்றனர். (70)

கண்மாய மிட்டாண்டி கருத்தா மிழந்தேண்டி
யுண்மாய யிட்டவளை யுருவழியக் கண்டேண்டி.

(பொ-ரை.) ஆசாரியன் தனது கண்ணினாலே தந்திரஞ்செய்தான், உடனே என்னெஞ்ச மிழந்தேன், அங்ஙனம் தந்திரஞ் செய்தானை அரூபமாகத் தரிசித்தேன்.

(கு-ரை.) ஆசாரியன் எழுந்தருளிவந்து நயனதீட்சை செய்தமாத்திரத்தில் என்போதத்தினை யொழித்து விட்டேனென்பார் 'இழந்தேன்' என்றனர். அத்தீட்சை யடைந்தபின் அத்தீட்சாபரனாகிய ஆசாரிய மூர்த்தியானவரை நிஷ்கள சிவமாகத் தரிசித்தேன் என்பார். 'உருவழியக்கண்டேன்' என்றனர். (71)

என்னசொல்லப் போரேனா னிந்த வதிசயத்தைக்
கன்னி யிளங்கமுகு காய்த்ததடி கண்ணாரே.

(பொ-ரை) என்னவென வெடுத்துச் சொல்லுவேன் என்முன் விளைந்த இவ்வதிசயத்தினை 'சிறிய இளமையான பாக்குமரமானது பிரத்தியட்சமாகக் குலைவிட்டது.

(கு-ரை.) இளமைமரமொன்றிலே காய்க் காய்த்தது போன்று எனது இளமை வயதிலேயே எனது ஆணவமலத்தினை நீங்கித் திருவருள் விளையும்படி ஆசாரியன் அனுக்கிரகித்தனன். இது எதிர்பாராது வந்த விளைவாகலின் 'இந்த அதிசயம்' என்றனர்.

ஆர்ந்தவிட மத்தனையு மருளா யிருக்குமடி
சார்ந்தவிட மெல்லாம் சவ்வாது மணக்குதடி.

(பொ-ரை.) தங்கிய விடமனைத்தும் திருவருண்மயமா யிருக்கின்றது' அடைந்தவிடமெல்லாம் சவ்வாது பரிமளம்வீசுகின்றது.

(கு-ரை.) திருவருளிற்றிளைத்த பெரியோர்க்கு எங்கும் திருவருளே தோன்றுமாகலின் 'அருளாயிருக்கும்' என்றனர். சிவஞானிகள் தேகத்தில் சுகந்தவாசமே வீசுமென்பார் சவ்வாதுமணக்குதடி' என்றனர். (73)

இந்த மணமெங்கு மியற்கைமண மென்றறிந்து
அந்தச் சுகாதீதக் கருட்கடலில் மூழ்கினண்டி.

(பொ-ரை.) இங்ஙனம்வீசுகின்ற மணமானது இயற்கையிலேயேதோன்றியதெனத் தேர்ந்து அந்த ஆனந்தாதீத கிருபாசமுத்திரத்தில் மூழ்கினன்.

(கு-ரை.) ஜீவகரண முற்றவர்க்குச் செயற்கைமணமும், சிவகரணமுற்றவர்க்கு இயற்கை மணமும் உண்டாதல் அனுபவசித்தமாகலின் இயற்கை மண மென்றறிந்து என்றனர். அத்தகைய இயற்கை மணத்தின் உண்மையுணர்ந்தாரே திருவருளிற் றிளைப்பாரென்பார் 'மூழ்கினன்' என்றனர். (74)

இரும்பினுறை நீர்போல வென்னைவிழுங்கிக் கொண்டாண்டி
அரும்பினுறை வாசனைபோ லன்றே யிருந்தாண்டி.

(பொ-ரை.) புட்பத்தின் அரும்பினிடத்தே அடங்கியிருந்தமணம்போல அநாதியிலேயே ஆன்மாவுடன்கலந்திருந்தவன்இப்போது இரும்புண்ட நீரினைப்போல என்னைக் கவர்ந்துகொண்டனன்.

(கு-ரை.) அரும்பினிடத்தே வாசனை யடங்கியிருந்து அது மலர்ந்தகாலத்து வெளிப்படல்போல, ஆன்மா மலத்திற் கட்டுப்பட்டிருந்தகாலத்து அவனிடத்தில் மறைந்திருந்த சிவபெருமான் மலநீங்கியகாலத்து வெளிப்பட்டுத் தோன்றுவானென்பார் 'அன்

றேயிருந்தான்' என்றனர். நெருப்பிற்காய்ந்து அக்கினிமயமா யுள்ளஇரும்பினை நீரிற்றோய்த்தால் அந்நீரினை இரும்புகிரகித்தல் போல,ஞானமயமாயுள்ள சிவபெருமானிடத்துஆன்மா அத்துவித மாயதுஎன்பார் 'விழுங்கிக்கொண்டான்' என்றனர். (75)

அக்கினிகற் பூரத்தை யறவிழுங்கிக் கொண்டாப்போல்
மக்கினம்பட் டுள்ளே மருவி யிருந்தாண்டி.

(பொ-ரை.) அக்கினியானது கற்பூரத்தினை முற்றும் தன்மய மாக்கிக்கொண்டதுபோல, நான் மறைந்துவிட என்னுள்ளே யெ ழுந்தருளியிருந்தனன்.

(கு-ரை.) அக்கினிக்குமுன்னே கற்பூரத்தின்தடிப்புமறைந்த துபோல பெருமான்திருவருளின்முன்னர் சிவகரணமுற்ற ஆன் மா அத்திருவருள் மயமாவனென்பார் 'கற்பூரத்தை யறவிழுங்கி க்கொண்டாப்போல' என்றனர் 'கற்பூரமலைபடு தீப்பட்டவிந்தை யென' என்றார் தாயுமானவரும் இதுஏகதேச உவமை. (76)

கடல்நீரு மாறும்போற் கலந்துகரை காணேண்டி
உடலுமுயி ரும்போ லுட்கலந்து நின்றாண்டி.

(பொ-ரை.) சமுத்திரஜலம் நதிசலமும்போலக் கலந்த கால த்து வரம்புகாணாததுபோல உடலுமுயிரும் ஒற்றுமைபட்டது போலவும் சிவபெருமான் உயிருடன் அபேதமாகநின்றனன்.

(கு-ரை.) சமுத்திரநீருடன்ஆற்றுநீர்கலந்தபோதுவேற்றுமை தோன்றாததுபோலப்பரமான்மாவுடன் ஆன்மாஇரண்டறக்கலந்த காலத்து வேறுபட்டுத்தோன்றானென்பதாம்இதுஏகதேசவுவமை யாம். உயிரானது உடலெனத்தானென வேற்றுமையின்றிஅபேத

மாய் நிற்றல்போலச் சிவபெருமான் ஆன்மாவுடன் அபேதமாய் ஒட்டிநிற்போனென்பார் 'உடலுமுயிரும்' என்றார் இது முற்றுவமை. (77)

பொன்னுமுரை மாற்றும்போற் பொருவரிய பூரணன்காண்
மன்னுமனு பூதியடி மாணிக்கத் துள்ளொளிபோல்.

(பொ-ரை.) பொன்னும் அதனை யுரைத்துத் தெரிந்துகொள்ளு மாற்று போலவும் மாணிக்கமுமதனுள் விளங்கு மொளியைப் போலவும் எங்கும்பரிபூரணனைப்பிரித்து வறியக்கூடாத நிலைபெற்று அனுபூதித்தன் னையன்காண்.

(கு-ரை.) பொன்னினின்று மாற்றினையும், மணியினின்று ஒளியினையும் பிரித்து அறியக்கூடாதவாறுபோலப் பிரபஞ்ச சராசரப்பொருள்களினின்றும் பெருமானைப்பிரித்து அறியக்கூடாதெனவும் இது சிவானுபூதியடைந்த காலத்திலேயே விளங்குமென்பதாம். (78)

கங்குகரை யில்லாண்டி கரைகாணுக் கப்பலடி
எங்குமள வில்லாண்டி யேகமாய் நின்றாண்டி.

(பொ-ரை.) ஓர் அளவுகாணப்படாதவன், ஒரு துறையினைச் சாராத நாவாய்போன்றவன், இவ்வளவென அளவிடப்படாதவன் ஒருபொருளாயிருப்பவன்.

(கு-ரை.) அண்டபகிரண்டங்களில் உள்ளும்புறம்பும் கலந்து அப்பாற்பட்டு எல்லையறவிளங்கும் சர்வபரிபூரணனென்பதாம். 79

தீவகம்போ லென்னைச் சேர்ந்தபர சின்மயன்காண்
பாவமொன் றில்லாண்டி பார்த்திடமெல் லாம்பரன்காண்.

(பொ-ரை.) தீபம்போலவிளங்கி; அடியேனிடமிருந்து விளக்கம் செய்துகொண்டிருக்கும் ஞானமயன், பவமென்பது இல்லான் நோக்குமிடந்தோறும் சிவமாகவிளங்குபவன்.

(கு-ரை.) வீட்டின்கண்ணே விளக்கிருந்து அவ்வீட்டிருளை யோட்டி யாவுந் தோன்றும்படி செய்யுமாறு, உடலின்கண்ணே பெருமானிருந்து மலவிருளை யொழித்துத் திருவருள்தோற்று மாறு செய்வானென்பார் 'தீவகம்போல்' என்றனர். சிவமாந்தன்மையடைந்தார் சிவமேகண்டிருப்பராகலின் 'எல்லாம் பரங்காண்' என்றனர். (80)

உள்ளார்க்கு முள்ளாண்டி யூருமில்லான் பேருமில்லான்
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி.

(பொ-ரை.) உண்டு என்று கொண்டு உள்ளபொருளாய் விளங்குபவன், அவனுக்கென வொரு இடமும், பெயரும் இல்லாதவன், ஆயினும் ஆன்மாக்களின் வஞ்சகப் புலன்களின் சேஷ்டைகளையொழிக்க (ஊரும்பேருங்கொண்டு) ஆச்சாரியவடிவமாய் வந்தனன்.

(கு-ரை.) தெய்வம் உண்டு என்பார்க்கு அனுக்கிரகம் புரிந்தும் இல்லையென்பார்க்குச் சும்மாவிருந்துகொண்டு மிருப்பவன். அவன் தனக்கென ஊரும்பேரு மில்லாதவனாகவிருந்தாலும் ஊரும் பேருங்கொண்டுவாழும் ஆன்மாக்களை ஆட்கொள்ள நிமித்தம் ஊரும்பேரும் கொண்டெழுந்தருளி வருவனென்பதாம். (81)

அப்பிறப்புக் கெல்லாம் அருளா யமர்ந்தாண்டி
இப்பிறப்பில் வந்தா னிவனருகு மெய்ப்பொருள்காண்.

(பொ ரை.) முன்பிறப்புக்களனைத்திலும் திருவருளைக் கூட்டி வந்தான், இச்சென்மத்தில் ஆசாரியகோலங் கொண்டெழுந்தருளிவந்தான், இவனே உண்மைப்பொருளாகும்.

(கு-ரை.) இப்பிறப்பில் ஆசாரியனாகவந்து ஆட்கொள் வத ற்கு ஏற்ற திருவருள் பூர்வ செனமங்களி லில்லாவிட்டால் இச் சென்மத்தி லித்தகையபேறு கிட்டாதென்பார் 'அருளாயமர்ந் தான்' என்றனர். (82)

நீரொளிபோ லெங்கும் நிறைந்த நிராமயன்காண்
பாரொளிபோ லெங்கும் பரந்த பராபரன்காண்.

(பொ-ரை.) நீரினது ஒளியானது அந்நீரிலேயே கலந்திருத் தல்போல உலகமெங்கும் இரண்டறக்கலந்துள்ள பவ நோயற்ற வன். பூமியிற் சூரியப்பிரகாசம் எங்கும் வியாபித்திருத்தல்போல உலகெங்கும் பரவிய பராபரன்.

(கு-ரை.) நீரினிடத்து ஒளியானது விளங்கத் தோன்றாத வாறு போல சராசரங்களிடத்துப் பெருமான் தோன்றாது கலந் திருப்பனெனவும் சூரியப்பிரகாசம் எங்குமொருபடித்தாய் வியா பித்திருப்பதுபோலப்பெருமான் பூரணனாயிருப்பனெனவும் கூறி னாயினர். (83)

நூலா லுணர்வரிய நுண்மையினு நுண்மையன்காண்
பாலாறு சாக்கரைபோற் பரந்தபரி பூரணன்காண்.

(பொ-ரை.) சாத்திரங்களினாலே அறிதற்கரிய நுட்பத்தினு மதிநுட்பமாய்விளங்குபவன். பாலும் சர்க்கரையும்போலப் பரவிய பரிபூரணன்.

(கு-ரை.) பாசமாம் ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலு நேசனை யறியவொண்ணாது என்றபடி பாசசாத்திரங்களினாலும் பசுசாஸ்திரங்களினாலும் தெரியாதவனாகிப் பதிநூல்களாலேயே யறியப்படுவானென்பார் 'நுண்மையன்காண்' என்றனர். பால்

குணம் போன்ற அன்பரிடத்து எல்லாம் சர்க்கரையின் சுவை யினைப்போல அவர்பால் விரவி நிற்பனென்பார் 'பூரணன்' என் றனர். (84)

உள்ளக்கண் ணுக்கல்லா தூன்கண்ணு லோருமதோ
விளக்குச் சுடரொளிபோல் மேவி யிருந்தான்டி.

(பொ-ரை.) ஒரு அகலைப் பற்றிக்கொண்டிருக்கிற பிரகாசத் தினைப்போல் பொருந்தியிருந்தவன் மனக்கண்ணுக்குப் புலப்படு வானல்லது ஊனநேத்திரத்தினால் தெரியத்தக்கதோ.

(கு-ரை.) தீபம் தனித்து நில்லாது ஒன்றினைப் பற்றிக்கொ ண்டே யுலகத்தினுக்கு உபகரிப்பதுபோல, பெருமான்குருலிங்க சங்கமங்களை யதிட்டித்துக்கொண்டே ஆன்மாக்கட்கு அனுக்கிர கம் செய்வனென்பார் 'மேவியிருந்தான்,' என்றனர். அப்பெரு மான் திருவருளை முன்னிட்டுப் பார்ப்பார்க்கன்றித் தரிசனந் தரா னென்பார் 'ஓருமதோ' என்றனர் (85)

கல்லு ளிருந்த கனலொளிபோற் காரணமாய்ப்
புல்லி யிருந்தும் பொருவரிய பூரணன்காண்.

(பொ-ரை.) கல்லினுள்ளே அக்கினிசம்பந்தமான பிரகாசமா னது கலந்திருந்தாற்போல எல்லாவற்றிலும் சம்பந்தப்பட்டிருந் தும் ஒப்பற்ற பரிபூரணன்.

(கு-ரை.) பெருமான் எங்கும் பரிபூரணமாக இருந்தும் கல் லுட்கலந்த அக்கினிபோல யாவருக்குந் தோன்றாதபடி யிருப்ப னென்பதாம். கல்லி லக்கினியுண்டென்பதைக் கல்லுடன் கல் மோதிய காலத்திலுண்டாம் நெருப்பாற் காணலாம். (86)

பொற்பூவும் வாசனைபோற் போதம் பிறந்தார்க்குக்
கற்பூவும் வாசனைபோற் காணக் கயவருக்கு.

(பொ-ரை.) ஞானமுடையாருக்கு அழகிய பூவினுதித்த மணம் போலவும், அஞ்ஞானிகட்குக் கல்லாற்செய்யப்பட்டபூவின் வாசனை தோன்றாதவாறு போலவு மிருப்பான்.

(கு-ரை.) சிவபெருமான் ஞானிகட்கு நன்கு வெளிப்பட்டு அனுக்கிரகம் செய்தருளி வருவன், அஞ்ஞானிகட்கு எவ்விதத்தும் தோன்றாது தெய்வமேயில்லையென்று சொல்லும்படி யிருந்திடுவனென்பதாம். (87)

மைக்குழம்பு முத்தும்போன் மருவிமற வாதவர்க்குக்
கைக்குட் கனியாகுங் கருவறுத்த காரணர்க்கு.

(பொ-ரை,) தன்னை மறவாது வாழ்பவர்கட்கு மைக்குழம்பினையும் முத்தினையுமொத்து விளங்கி பிறப்பினையொழித்த பெரியோர்கட்கு உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காணுவன்.

(கு-ரை.) பிறப்பிலே கட்டுப்பட்டுப் பெருமானை மறவாது தியானஞ்செய்து வருபவர்கட்குக் கருமையிலே வெண்மை பிரகாசிப்பதுபோல ஒருவாறுவிளங்குவன். பிறப்பற்றவர்கட்குப் பிரத்தியட்சமாகச் சந்தேகமின்றி உள்ளங்கை நெல்லிக்கனி யெனப் பிரகாசிப்பன். (88)

பளிங்கிற் பவளமடி பற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சிலை வெள்ளியென்பார் கிட்டாதார் கிட்டுவரோ?

(பொ-ரை.) பிரபஞ்சப்பற்று இல்லாத வித்துவான்கட்குப் பளிங்கினுடன் பதித்த பவளம்போல விளங்குவன், கிளிஞ்சிலைக் கண்டு வெள்ளியென மயங்குவார்பால் ஒருவருக்கும் கிடையாதவர் இவர்கட்குக் கிடைப்பாரோ?

(கு-ரை.) கிளிஞ்சிலை வெள்ளியென்று மயங்குதலாவதுமாயாகாரியமாகிய பிரபஞ்சத்தினைக் கண்டு இக்காரியம் உண்மையென

மயங்கல், உண்மை விசாரித்தவழி கிளிஞ்சிலை என்று வெள்ளியில் லாததுபோல மாயையன்றிப் பிரபஞ்சமில்லையாம். (89)

எட்டுக் கடங்காண்டி யெழுத்திற் பிறவாண்டி
நாட்டி னரிகளெல்லா நற்புரவி செய்தாண்டி.

(பொ-ரை.) பெருமான் எட்டினுக் கடங்காதவன், எழுத்துக்களாற் பிரதிபாதிக்கப்படாதவன், காட்டினையடுத்த காட்டிலுள்ள நரிகளனைத்தையும் நல்ல குதிரைகளாகச் செய்தனன்.

(கு-ரை.) பெருமான் இத்தகையனென அனுபூதியாற் றெறிந்துகொள்ளத்தக்கவனேயன்றி எழுத்தாலும் எட்டாலுந் தெரிந்து கொள்ளத்தக்கவனல்ல. அன்றியும் திருவாதவூர் மாணிக்கவாசக சுவாமிகளின் பொருட்டு மதுரையின் கண்ணே நரிகளைக் குதிரைகளாக்கிய திருவிளையாட்டினைச் செய்தவன். (90)

பஞ்சப் பிரளயத்து மிஞ்சி யிருப்பாண்டி
நஞ்சு பொதிமிடற்று னயனத் தழல்விழியான்.

(பொ-ரை.) ஐவகைப்பிரளயத்தினுக்கும் அப்பாற் பட்டவன், விடந்தங்கிய கண்டத்தினன், அக்கினிக்கண்ணினை யுடையவன்.

(கு-ரை.) ஐவகைப் பிரளயமான பஞ்சபூதங்கள் முறையே லயித்து வருவன அவ்வப்பூதங்கள் இலயிக்கும்போது அப்பூதத் தலைவரும் இலயிப்பர், பெருமான் அவ்வகைத் தேவரையும் கடந்தவராகலின் 'மிஞ்சியிருப்பான்' என்றனர். (91)

அகங்காக்கும் புறங்காக்கும் அளவிலா வண்டமுதற்
செகங்காக்குங் காணத் திசைபத்துங் காக்குமடி.

(பொ-ரை) உள்ளும் புறம்புங் கலந்துகாக்கும் இவ்வளவெனவளவிடக்கூடாத அண்டமுதலாகச் சொல்லப்பட்ட செகத்தினையும் காக்கும் எட்டாததூரத்துப் பத்துத்திசையினையும் காக்கும்.

(கு-ரை.) பிருதிவிமுதல் நாதமீறாகவுள்ள தத்துவங்களிலுள்ள எண்ணிறந்த அண்டங்களனைத்தினிலும் உள்ளும் புறம்புமாகவிருந்து காத்து வருபவன் பெருமானென்பதாம். (92)

பேசாப் பிரமமடி பேச்சிறந்த பேரொளிகாண்
ஆசா பாசங்கள் அணுகாத பேரொளிகாண்.

(பொ-ரை.) ஒருவராலும் இன்னபடித்தெனப் பேசக்கூடாத பிரமமயமாயுள்ளவன், வார்த்தைக்கடங்காத பெருஞ்சோதியாக விளங்குபவன் 'மாயாகாரியமான' ஆசைமுதலியவற்றால் நெருங்காத பெரியசோதியாக விளங்குவன்.

(கு-ரை.) சிற்றறிவினராகிய ஆன்மாக்களின் பேச்சினுக்கு அடங்காது அப்பாற்பட்டவனும், அராகதத்துவத்தில் கட்டுப்படாதவனுமாகிய அருட்பெருஞ்சோதி சொரூபனாக விளங்குபவனென்பார் 'பேரொளி' என்றனர். (93)

தேச மிறந்தவன்காண் திசையிறந்த தெண்கடல்காண்
ஊசி முனையூன்ற வில்லா வருபொருள்காண்

(பொ-ரை.) தேசமிழந்தவன் திக்கினைக்கடந்த இனிமையான சமுத்திரம்போன்றவன், ஊசிமுனையளவும் நாட்டுதற்கும் இடமில்லாதபடி பரவியவன்.

(கு-ரை.) தனக்கெனவொருதேசமும் தனக்கென வொரு திசையும் இல்லாமல் கடல்போல் பரவித்தானில்லாத விடமில்லை யெனச்சொல்லும்படியிருப்பவன் பெருமானென்றபடியாம். (94)

சிப்பியில் முத்தொளிகாண் சின்மயநோக் கில்லார்க்கு
அப்பி லொளிபோ லமர்ந்த வரும்பொருள்காண்.

(பொ-ரை.) ஞானமயமான பார்வை யுடையாருக்குச் சிப்பியினிடத்துத் தோன்றுகிற முத்துப்போன்றவனும், ஞானமயமான பார்வையில்லார்க்கு நீரினிடத்துத் தோன்றாதுவிளங்கும் ஒளி போலமர்ந்தவன்.

(கு-ரை.) ஞானவிசாரணையுடைய ஞானிகட்குச் சிவபெருமான் பிரத்தியட்சமாக நன்குவிளங்கிப் பிரகாசிப்பன். ஞானவிசாரணையில்லார்க்குச் சிறுதுந் தேன்றுவென்றபடியாம். (95)

ஆலா விருட்சமடி யளவிலாச் சாகைபடி
மேலாம் பதங்கள்விசும் பூடுருவு மெய்ப்பொருள்காண்.

(பொ-ரை.) எண்ணில்லாத கிளைகளுடன் கூடிய பெரிய ஆலவிருட்சம்போன்று அநேகமான உலகங்களைவாய்ந்த ஆகாய வெளியில் ஊடுருவி வியாபித்து விளங்குபவன்.

(கு-ரை.) விருட்சங்களிற் சிறந்த ஆலானது அதிவிலாசமாகத்தழைத்து வியாபித்திருப்பது போலப்பெருமான் ஆகாயவெளியெங்கணும் வியாபித்திருப்பவனென்றார். இது ஏகதேச உவமானம். (96)

வங்கிஷமெல் லாங்கடந்து மருவா மலர்ப்பதங்காண்
அங்கிஷமா யெங்கும் ஆய்ந்த வரும்பொருள்காண்.

(பொ-ரை) பரம்பரை யெல்லா வற்றையுங் கடந்து வரும் தாமரைபோன்ற திருவடியினையுடையவன் நுணுக்கமாயாய்ந்து அறியத்தக்க அரியபொருளாவன்.

(கு-ரை) மற்றைய தேவர்களைப்போலப் பரம்பரை பெறாது தன்னைரற்றுத் தனக்குத்தானே தனியாய் விளக்குபவன் சிவபெருமானென்பார் 'வங்கிஷமெலாங்கடந்து' என்றனர். ஞானத்தால் நிட்சண்ய மடைந்தி நுண்மையறிவுகொண்டே ஆராயத்தக்க பொருளாகலின் 'அரும்பொருள்' என்றனர். (97)

நாமநட்ட மானதடி நவிலவிட மில்லையடி
காமனைக்கண் ணலெரிக்கக் கனல்விழித்த காரணன்காண்.

(பொ-ரை) யாவரும் அஞ்சத்தகுந்த ஆனந்த நிர்த்தனம்செய்பவன் அவனிலைமை இன்னபடித் தெனச் சொல்லுதற்கு இடமில்லாதவன், மன்மதனை நேத்திரத்தினல் எரிக்கும்படி விழித்துப் பார்த்த யெல்லையுடையவன்.

(கு-ரை) நாமநட்ட மென்பது சர்வ சங்காரகாலத்தில் தன்னம் தனியேயிருந்து செய்யும் திருக்கூத்து நவிலவிடமில்லை யென்றது வாக்கினுக் கெட்டாதவ னென்றபடியாம், காமனை யெரித்தது தான் காமத்தில் கட்டுப்படாதவனென்றகுறிப்பினைத் தெரிவித்தபடியாம். (98)

கொட்டாத செம்பொனடி குடியாத் தரளமடி
எட்டாத கொம்பிலடி யீப்புகாத் தேனமுதம்.

(பொ-ரை) வேலைசெய்யாத சுத்த செம்பொன்னையும், சமுத்திரத்தில் மூழ்கி எடுக்கக்கூடாத முத்தினையும், ஒருவருக்கு மெட்டாத கிளையிற் கட்டியுள்ள ஈமொய்க்காத தேனையும் ஒத்தவன்.

(கு-ரை) லோகங்களில் உயர்ந்தது பொன்னும், மணிகளிற் சிறந்தது முத்தும், சுவையிற் சிறந்தது தேனுமாகலின் ஒருபுடை யுவமானமாகவைத்து உபசாரமாகப் பெருமானைச் சிறப்பித்தனர்.

காணிப்பொன் னாணியுடன் கல்லுரைமாற் றின்னதென்றே
ஆணியுடன் கூட்டி யடங்கலிட்டுக் கொண்டாண்டி.

(பொ-ரை) (யாவருக்கும்) உரிமையாகிய பொன் கட்டை யுடன் அது உரைக்கப்பட்ட மாற்று இன்னதெனத்தெரிந்து பொற்கட்டையின் றன்மை தெரிந்து கொள்ளுதல் போல, ஆன் மாவனைத்தையும் தெரிந்து கொண்டான்.

(கு-ரை) உரை மாற்றினைக்கொண்டு பொன் மாற்றினைத் தெரிந்துகொண்டு அதனைக்கொள்ளுதல் போல, ஆன்மாக்களின் சாதனச்செயலைக் கண்டு அவர்கள் பக்குவநிலையுணர்ந்து தன்னடி யாரிற் கூட்டிக்கொள்ளுவன். (100)

அளவிறந்த வண்டத்தா ரத்தனைபே ருண்டாலும்
பிளவளவுந் தான்சற்றும் பேசாப் பிரமமடி.

(பொ-ரை) அளவில்லாத அண்டத்தினர்கள் அவ்வளவு பே ரும் புசித்திடினும் ஒரு சிறிதும் குறையாதபடி மவுனமாக விருக் கும் பிரமம்.

(கு-ரை) கணக்கிலடங்காத அண்டங்கள் கணக்கில்லாத காலம் பெருமான் திருவருளினை யனுபவித்து வந்தாலும் தமது திருவருளில் ஒருசிறிதுங் குறைந்ததாகக் கூறாது இருந்தவண்ணம் மவுனமுற்று இருக்கும் சிவமென்பதாம். (101)

கன்னெஞ்சி னுள்ளோ கழுநீலம் பூத்தாப்போல்
என்னெஞ்சி னுள்ளே யிணையடிகள் வைத்தாண்டி.

(பொ-ரை) கருங்கல்லினையொத்த மனதிலுள்ளே நீலோற்பலம் பூத்தவிதம்போல அடியேன் இருதயத்தின் கண்ணே பெருமானது இரண்டு திருவடிகளையும் மலர்ந்தருளச் செய்தான்

(கு-ரை.) நீர் நிறைந்த தடாகத்தில்' புஷ்பிக்கவேண்டிய மலர்களுங் கல்லிற்றோன்றியது போல,பக்குவான் மாக்களின்இருதயத்தில் தோன்றவேண்டிய திருவடி, மலத்தடிப்பினை வாய்ந்தஅபக்குவத்தினை யுடையன்பால் தோன்றியது வியப்பென்பார் 'அடிகள் வைத்தாண்டி' என்றனர். (102)

வேதப் புரவியடி விரைந்தோடி யும்மறியார்
காதற்ற ஞானமடி காண்பார் கருத்துடையோர்

(பொ-ரை) மறைகளையே குதிரையாகவுடையவன்,அதிவேகமாகத் தேடித்திரியினும் அறியப்படாதவன், மவுனஞானத்தில் வெளிப்படுபன் தரிசிப்பார் மனத்தில் விளங்குபவன்.

(கு-ரை) பெருமான் மகிமைகளைத்தாங்கி உலகமுழுவதும் உலவிவருவது வேதமாகலின் அவற்றைப்புரவி யென்றனர். பிரமாதிதேவர்கட்கும் எட்டுதற்கரியன் என்பார்.'அறியார்' என்றனர். பிரபஞ்ச அசுத்த மாயாகாரிய வொலி கேளாமலிருப்பதே மவுனமென்பார் 'காதற்றஞான' மென்றனர் அருட்போத முன்னிட்டறிவார்கள் மனத்து விளங்குபவனென்பார் 'கருத்துடையோர்' என்றனர். (103)

பாச வினையைப் படப்பார்த்த பார்வையுடன்
நேசத்தை காட்டியடி நில்லென்று சொன்னாண்டி.

(பொ-ரை) பாசமாகிய வினையொழியத் தீட்சித்த நேத்திரத்தையுடையவன். அன்பினைக்காட்டிக் குறிப்பினில் வென்றருளினன்.

(கு-ரை.) பெருமான் ஆச்சாரியகோலம் கொண்டெழுந்தருளி நயனதீட்சைசெய்து சஞ்சிதத்தை யொழித்தனனெனவும், திருவருளிற்பிணைத்து ஞான நாட்டத்தில் நிறுத்தினனெனவும் கூறுவாராயினர். (104)

ஓசை யொடுங்குமிட மோகங்காரத் துள்ளொளிகாண்
பேசா திருக்கும் பிரமமிது வென்றாண்டி.

(பொ-ரை) நாததத்துவம் ஒடுங்கிய இடம், பிரணவத்தினுள்ளே பிரகாசரூபமானவன், மவுன நிலையினர்கட்குத் தோன்றும் பிரமம்.

(கு-ரை) நாத தத்துவத்தினைக் கடந்து பிரணவத்தினுளியாகி மவுன முனிவர்கள் காணும் பிரமமாக விளங்கத்தகுந்தது பரப்பிரம மென்றனர். (105)

சின்மய நன்னோக்காற் சிற்சொருபங் காட்டியெனைச்
தன்மயமா யாக்கியே தானவனாய் நின்றாண்டி.

(பொ-ரை) ஞானமாகிய பார்வையினால் ஞானசொரூபத்தினைத் தரிசிப்பித்து அடியேனையும் ஞானமயமாக்கி ஞானவடிவுமாத்திரமா யிருந்தனன்!

(கு-ரை) ஆச்சாரியனெழுந்தருளி நயனதீட்சைசெய்தருளித் தன் திருவருளினைத் தரிசனம் செய்யும்படிசெய்து அங்ஙனம் செய்வித்த மாத்திரத்தில் திருவருள் மயமாக்கி என்னைத் தோன்றாதபடித்தான்மாத்திரனின்றான் என்பதாம். (106)

தன்னென்னைப் பார்த்தாண்டி தன்னைத்தா னல்லாமல்
நானென்ன சொல்லுவண்டி நவிலவிட மில்லையடி.

(பொ-ரை) தான் என்னைத் திருஷ்டித்துப்பார்த்தான் (அங்ஙனம்பார்க்கவே) தன்னைத்தவிர நாமொருவன் அவனுக்குவேறாக விருப்பதாய்ச் சொல்லுதற்கிடமில்லை. அவ்வருமைப் பாட்டினை நானென்னவென்று சொல்லுவன்.

(கு-ரை) ஆச்சாரியன் தீட்சானுக்கிரகத்தினால் நான் திருவருண்மயமாய் நின்ற அவதரித்த பெருமான் தோற்றமேயல்லாமல் என் தோற்றமென்பதில்லை. இதுவொரு வியப்பாகமுடிந்தது.

இன்றிருந்து நாளைக் கிறக்கிறபே ரெல்லாரும்
என்றும்பரி பூரணத்தி லினிதிருக்கச் சொன்னாண்டி.

(பொ-ரை) இன்றுவாழ்ந்து நாளையதினம் இறந்து போகத் தக்கவர்களெல்லாம் எக்காலமும் திருவருள் வியாபகத்தில் நன்றாகவாழ்கச் சொல்லினான்.

(கு-ரை) அநித்தியவாழ்வையுடைய மாந்தரெல்லாரும் நித்தியமாகவாழ்ந்து வரும்படியாகத் திருவருளிற் கலப்பித்தனன் 'இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவுந்திடமில்லையே' யென்றனர் தாயுமானவர். (108)

பார்க்கி லெளிதலவோ பற்றற்ற பற்றலவோ
ஆர்க்கு மிடங்காட்ட வவனிதனில் வந்தாண்டி.

(பொ-ரை) (அன்பர்களுடைய) பார்வைக்கு எளிமையானவனன்றோ, பற்றற்றார்கட்குப் பற்றாக விளங்குபவனல்லவோ, எத்தகையினர்கட்கும் மோட்சமாகிய இடத்தினைக்காட்ட பூமியில் ஆச்சாரியகோலம் கொண்டெழுந்தருளினன்.

(கு-ரை) "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" என்பார் 'பார்க்கிலெளிதலவோ' என்றனர், வெளிமுகப்பற்றினை விட்டார்பால் அந்தர்முகப்பற்றாக விளங்குபவ னென்பார் 'பற்றலவோ'

என்றனர், ஆச்சாரிய மூர்த்தங்கொண் டெழுந்தருளி வந்து காட்டினாலன்றி எத்தகையினர்கட்கும் திருவருணிலை தெரியா தென்பார் 'காட்ட வந்தான்' என்றனர். (109)

இத்தனை காலமடி யிறந்து பிறந்ததெல்லாம்
இத்தனையு மில்லையடி யிரும்பினுறை நீரானேன்.

(பொ-ரை) இதுவரையில் சென்னப்பட்டதும், மரணப்பட்டதுமான இவ்வளவும், இனியில்லையென்று சொல்லும்படியாக நீருண்ட இரும்புபோலானேன்.

(கு-ரை) நெருப்பிற்காய்ந்த இரும்பானது தன்முன்சேர்ந்த நீரினைக்கிரகித்து விடுமாறு, ஆசாரியன்முன்னர் அவன் றிருவருளிற்றிளைத்தவுடனே அநேக சென்மங்களி லனுபவித்து வந்த சென்ன மரண மற்றுப்போய்விட்டது. (110)

எக்காலம் பட்டதடி யிறந்து பிறந்ததெல்லாம்
அக்கால மெல்லாம் அழுந்தினே னரகில்.

(பொ-ரை) எக்காலமுதல் நான் இறந்துபிறந்து வருகின்றேனோ அக்காலமனைத்தினிலும் நரகத்தி லனுபவிப்பதற்கேதுவாகினேன்.

(கு-ரை) நான் ஒருசென்மத்திலும் புண்ணியத்தினுக்கேதுவாகிய தனைச்செய்து மறுபடியும் பிறப்புவாராதபடி செய்துகொள்ளவில்லையென்பார் 'அழுந்தினேன்' என்றனர். (111)

காலங் கழிந்ததடி கர்மமெல்லாம் போச்சுதடி
நாலு வகைக்கருவு நாமநட்ட மாச்சுதடி

(பொ-ரை.) எண்ணிலாதகாலம் கழிந்துவிட்டன, கன்மமனைத்தும் நீக்கியது. நான்குவகைப்பட்ட பிறப்புக்களும் அற்றது.

(கு-ரை) எடுத்த அநேகமான ஜென்மங்கள்தோறும் செய்து வந்த புண்ணிய விசேடத்தால் இனிச் ஜென்மமெடுப்பதற்கேதுவாயிருந்த கன்மநீங்கியது, அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்னும் நால்வகைகளிலொன்றிற் பிறந்து ஒருபெயரைப்பெறேன் என்பார் 'நட்டமாச்சு' என்றனர். (112)

முப்பாழுங் கப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான்காண் என்னைவிழுங்கிக் கொண்டான்காண்.

(பொ-ரை) மூன்று பாழினுக்கும் அப்பாற்பட்ட சூனியமாக விளங்குமிடத்தில் முழுமுதலாயுள்ள சிவம் இப்போது ஆச்சாரியமூர்த்தியாகவந்தான் அடியேனைக் கிரகித்துக்கொண்டான்.

(கு-ரை) பிரகிருதிப்பாழ் அசுத்தமாயைப்பாழ் சுத்தமாயைப்பாழ் இப்பாழ்களைக்கடந்தசிதம்பராகாயத்தில் விளங்கும்சிவபெருமான் சகளீகரித்துவந்து தனது திருவருளில் முழுகுவித்தான் என்பார் 'விழுங்கிக்கொண்டான்' என்றனர். (113)

பாலின்க ணெய்யிருந்தாற் போலப் பரஞ்சோதி
ஆலிங் கனஞ்செய் தறவிழுங்கிக் கொண்டாண்டி.

(பொ-ரை) பாலினிடத்திலே நெய்பிரகாசித்தது போல அருட்பெருஞ்சோதி எனைக்கலந்து தன்னுள் மறையச்செய்தனன்.

(கு-ரை) பாலில் மறைந்துகிடந்த நெய்யினைப்போல, என்னுள் மறைந்திருந்தே என்னுடன் அத்துவிதமாகித் தனது திருவருளினில் முழுகுவித்தனன். (114)

செத்தபட மானேனடி தீயிரும்பி னீரானேன்
ஒத்தவிட நித்திரையென் றேது முணர்வறிந்தேன்.

(பொ-ரை) நெருப்பில்வெந்த வஸ்திரமாயினேன், அக்கினி மயமான இரும்புகிரகித்த நீர்போலானேன், வினையாத்தவிடத்தில் சிவயோக நித்திரை செய்யவேண்டுமென அறிவினையும் தெரிந்தேன்.

(கு-ரை) அக்கினிபட்டதுணி உருவமாத்திரமாய் விளங்குவ்து போலச் சீவன்முத்தநிலை இரும்புண்ட நீராவது திருவருளில் பதிந்து வாழ்தல், ஒத்தவிடத்து நித்திரையாவதுசிவயோகசமாதி.

ஒப்பு முவமையுமற் றேதவரி தாயபொருள்
இப்பூவி னிற்குருவே யென்னவந்தோன் றாள்வாழி.

(பொ.ரை) சமத்துவம் உவமானமும் அல்லாது சொல்லுதற்கரிய பெருமான் உலகின்கண்ணே ஆசாரியமூர்த்தியாகவந்தான் திருவடி வாழக்கடவது.

(கு-ரை) சமானமும் உவமானமுமின்றி விளங்கும் ஒருபெருமானே என்பொருட்டுத் திருவுருக்கொண்டெழுந்தருளி வந்தனனாகலின் அவன் திருவடி வாழக்கடவதென்றனர். (116)

ஒப்பாரி சொல்லிடினு முவமை பிழைத்திடினும்
முப்பாழுங் கற்றுணர்ந்தோர் முன்னோர் பொறுத்தருளே.

(பொ-ரை) நான் ஒப்புச்சொல்லிப்பாடிய புலம்பலிலே உவமை (ஏகதேசம்) தவறின் மும்மாயையின் சொரூபத்தினை தெரிந்தோராகிய பெரியர் பொறுத்தருளவேண்டும்.

(கு-ரை.) ஒப்பாரி என்பது புலம்பற்செய்யுள். இந்நடையில் திருவருட் சம்பந்தமாகப் பாடிய பாக்களில் எடுத்துக்கொண்ட உவமானம் மூரண்படில் தக்கோர் கவனியாதிருக்க வேண்டு மென்பார் அவையடக்கம் கூறினராயிற்று. (116)

அருட்புலம்பல் முற்றியது.

பட்டினத்துப்பிள்ளையார்

இறந்தகாலத்திரங்கல்.

வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல்லாஞ்
சாத்திரங்கள் சொல்லிச் சதுரிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) பேசும் வார்த்தைகளில் உறுதியில்லாத மனிதர்கள் பால் அற்பசொல்லாகிய சாஸ்திரங்களையெடுத்துப்பேசியெனது சாமர்த்தியத்தினை யிழந்து கெடுதியை யடைந்தேன்.

(கு-ரை.) அசத்திய வார்த்தை யுடையாரே வார்த்தைத்திறமில்லாதவராவர். புன்சொல்லாவது:— பிரயோசனமற்ற சொற்கள். சாஸ்திரமாவது:— பசுசாஸ்திரங்களும் பாசசாஸ்திரங்களுமாம். (1)

மெத்தமெத்த செல்வாக்கில் வேறு மருளடுத்துத்
தத்தித் தலைகீழாய்த் தானடந்து கெட்டேன்.

(பொ-ரை.) அபாரமாகிய செல்வத்தில் மருளினையடைந்து ஒழுங்கீனமாக நடந்துகொண்டு கெடுதியையடைந்தேன்.

(கு-ரை.)பொருட் செல்வம் அபாரமாக அனுபவிக்கும் சமயத்தில் அச்செருக்கினால் ஒழுக்கம் தவறிவாழ்ந்து வந்தனன். (2)

வழக்கத் தலங்களினு மண்பெண்பொன் ஞசையினும்
பழக்கந் தவிராமற் பதியிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) வழக்கமாகிய ஊர்களிலும், மண்ணினிடத்தும் பெண்ணினிடத்தும் பொன்னினிடத்தும் வைத்த அவாவினுல் பழக்கத்தினை விடாமல் முதல்வனையிழந்து கெடுதியை யிழந்தேன்.

(கு-ரை) பழகிய பதார்த்தங்களில் விட்டுப்பிரிதல் எந்த வகையினும் கஷ்டமாகலின் 'பழக்கம் தவிராமல்' எனவும், அங்ஙனம் அவற்றைப் பிரியாததினுலேயே பெருமான் தன்மையை யறிதற்கு நேரமில்லாமல் போயிற்று என்பார் 'பதியிழந்து' என்றனர். (3)

ஆணி பொருந்து மரும்பூமி யத்தனையுங்
காணி நமதென்று கனம்பேசிக் கெட்டேனே.

(பொ-ரை.) முதன்மை வாய்ந்த அரிய பூமியெல்லாம் நமக்கே யுரியதென்று கௌரவம்பேசிக் கெடுதியடைந்தேன்.

(கு-ரை.) ஈஷணத்திரயங்களில் முதற்பற்றினையுடையது பூமியேயாகலின் 'ஆணி பொருந்து' என்றனர். தனக்குச் சொந்தமாக வாய்ந்த நிலங்கள்யாவும் தனக்குச் சொந்தமாக விருக்குமென்ற செருக்கினுல் கருவங்கொண்டிருந்தே னென்பார் 'கனம் பேசி' என்றனர். (4)

ஆசார மில்லா வரச ருடன்கூடிப்
பாசாங்கு பேசி பதியிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) ஒழுக்கமில்லாத அரசர்களுடன் சிநேகித்துத் தந்திரவார்த்தைகளைப்பேசி தலைவனையிழந்து கெடுதியையடைந்தேன்.

(கு-ரை.) கொடுங்கோலரசன் சிநேகம்கொள்ளும்படி அவனுடன் கூடி அவனுக்கிஷ்டம் வரும்பொருட்டு அவ்வார்த்தை

கட்டுங் கட்டுண்டவன்போனடித்து வாழ்ந்தவதனுல் பதிவிசாரணை யிழந்தேன் என்பார் 'பதியிழந்து' என்றனர் (5)

குருமார்க்க மில்லாக் குருட ருடன்கூடிக்
கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே.

(பொ-ரை.) குருவினை வழிபட்டு நடவாத மனக்குருடருடன் கலந்து செனனமுண்டாதற் கேதுவாகிய வழியிலே கட்டப்பட்டு மனந்தடுமாறிக் கெடுதியை யடைந்தேன்,

(கு-ரை.) இரண்டுபுற நேத்திரங்களிலிருந்தும் ஆச்சாரியர் சொற்ற வழியிலே நடவாதவர் அகக்கண்ணில்லாதவரே யென்பார் 'குருடர், என்றனர். அவர் சிநேகம் பிறப்பினுக் கேதுவாக முடிந்தது என்பார் கருமார்க்கத்துள்ளே' என்றனர். (6)

ஆல மருந்து மரன்பெருமை யெண்ணுமல்
பாலர்பெண்டீர் மெய்யென்று பதியிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) ஆல்காலத்தினையுண்ட சிவபெருமான் மகிமையினைச் சிந்தியாமல் புத்திரர், மனைவியர், சத்தியமென்னத்தேர்ந்து தலைவனையிழந்து கெடுதியை யடைந்தேன்.

(கு-ரை.) தன்னைச் சூழ்ந்துகொண்டிருந்த புத்திரபாக்கியத்தினையும், மனைவியர் பாக்கியத்தினையுங் உண்மையெனவெண்ணிக் கொண்டிருந்தமையின் நீலகண்டத்தனையும் மறந்தேனென்பார். 'பதியிழந்து என்றனர். (7)

பிணவாச முற்ற பெருங்காய மெய்யென்று
பணவாசை யாலே பதியிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) முடைநாற்றம் வீசுகின்ற பெரிய தேகத்தினைச் சத்தியமென்று திரவியவாசையாலே தலைவனையிழந்துகெடுதியை யடைந்தேன்.

(கு-ரை.) தேகத்தினையே சத்தியமென வெண்ணிஅத்தேகத் தினைப் பேணு நிமித்தம் திரவியம் சேகரித்தலிலேயே காலங்கழித் தமையின் தலைவனை விசாரியாதவனாயினேன் என்பார் 'பதியிழந்து' என்றனர். (8)

கண்ட புலவர் கனக்கவே தான்புகழ
உண்டவுடம் பொல்லா முப்பெரித்துக் கெட்டேனே.

(பொ-ரை.) எதிரிட்ட புலவர்கள் மிகவாகப் புகழுதற்குநன்கு உணவு ஊட்டி வளர்ந்து வந்த, தேகம் தளாந்துவிடக் கெடுதியை யடைந்தேன்.

(கு-ரை.) கவிஞர்கள் புகழ்ந்து பாடுதற்கேற்றபடி நன்றாய்ப் புசித்து உடலை ரொம்பப்புஷ்டியாக வைத்துக்கொண்டிருந்தும் அது உப்பிட்டபாண்டம்போலத் தளர்ச்சியடையப் பெற்றேன் என்றனர். (9)

எண்ணிறந்த சென்ம மெடுத்துச் சிவபூசை
பண்ணிப் பிழையாமற் பதியிழந்து கெட்டேனே.

(பொ-ரை.) அநேகமான பிறப்புக்களினையெடுத்தும் அச் சென்மங்களால் சிவபூசைசெய்து பிறப்பு வராதபடிசெய்துகொள் ளாது தலைவனையிழந்து கெடுதியை யடைந்தேன்.

(கு-ரை.) யாதாமொரு பிறப்பினில் சிவபூசைசெய்து இருப்ப னேல் மேலும் சென்ம மெடாதிருப்பேன். அங்ஙனம் செய்யாத தால் அநேக சென்மத்திற் கிடமுண்டாகத் தலைவனை விசாரியா தவனாயினேன், என்பார் 'பதியிழ்ந்து' என்றனர். (10)

சிற்றெறும்பு சற்றுந் தீண்டப் பொறுவுடம்பை
உற்றுருக்க வுஞ்சுடவு மொப்பித்து மாண்டேனே.

(பொ-ரை.) சிறிய எறும்பு ஒன்று கடிக்கினும் சகியாதிருந்த உடலை அக்கினியிலிட்டு உருக்கவும் சுடவும் ஒப்பித்து வாழ்தற் கேதுவாக இறந்துபட்டவனாயினேன்.

(கு-ரை.) ஒரு அற்பதுன்பமும் சகியாது சுகத்தினை வாய்ந்து வாழ்ந்த உடலானது அக்கினியில் வேகும்படி செய்துகொள்ளு தற்கேது விளைவித்துக் கொண்டேன் என்பார் 'ஒப்பித்து மாண் டேன்' என்றனர். (11)

தன்னுடம்பு தானே தனக்குப் பகையாமென்
றெண்ணுமுணர் வில்லாம லின்பமென்று மாண்டேனே.

(பொ-ரை.) தன்னுடைய தேகந்தானே தனக்குச் சத்துரு வாகு மென்னும் அறிவில்லாமல் இன்பத்தினை யெண்ணியேமாண் டவனாயினேன்.

(கு-ரை.) சகலதீமை விளைவதற்குக் காரணம் இவ்வுடலேயல் லாமல் வேறில்லையென்று தேர்ந்து அதற்குத்தக்கபடி நடந்து கொள்ளாதே போயினேனென்பார் 'மாண்டேனே' என்றனர். 12

தோலெலும்பு மாங்கிஷமுந் தொல்லன்னத் தால்வளரு
மேலெலும்பு சுற்றமென்று விருப்பாய் மாண்டேனே.

(பொ-ரை.) தோலும் எலும்பும், மாமிசமும், எல்லாம் பழை மையான அன்னத்தால்வளரும் உடலும் சுத்தமானவையென்று கர்வித்து மாண்டவனாயினேன்.

(கு-ரை.) சகல அருவருப்புக்கும் இடமாயுள்ள பலஉறுப்பு களை வாய்ந்த உடலை அதிகச் சுகத்துடனிருப்பதென வீணேகா லம்கழித்துவந்ததனால் மாண்டவனுக்குச்சமானமானவனாயினேன் என்றனர். (13)

போக்கு வரத்தும் பொருள்வரத்துங் காணமல்
வாக்கழிவு சொல்லி மனமறுகிக் கெட்டேனே.

(பொ-ரை.) இறப்பும், பிறப்பும், உண்மைப்பொருளின் அனுக்கிரகமும் ஆராயாமல் வீண்வார்த்தைப்பேசி மனமயக்க மடைந்துகெடுதியுடையவனுயினேன்.

(கு-ரை.) இறப்பினுக்கும் பிறப்பினுக்கும் காரணம் விசாரியாமலும், உண்மைப்பொருளையடைதற்கு எதுதெரிந்துகொள்ளாமலும் வாழ்ந்ததனுல் மனத்தின்கண்ணே கலக்கம் கொண்டேன்என்பார் 'மனமறுகி' என்றனர். (14)

இறந்தகாலத்திரங்கல் முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்.

நெஞ்சொடுபுலம்பல்.

மண்காட்டிப் பொன்காட்டி மாய விருள்காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றுமல்
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடி நாய்போ லலைந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே ! மண்ணைக்காட்டியும், பொன்னைக்காட்டியும் மாயவிருளுக்குச் சமானமான (பெண்ணைக்) காட்டியும்திருச்செங்காட்டிலே நிர்த்தனம்செய்கின்ற சிவபெருமானைத் தோத்தரியாமல்கண்களினுற் சாடைகாட்டியழைக்கும்வேசிகளின் ஆசை

வலையிற்சிக்குண்டு நாளும் கடைவீதி நாயினைப்போல அலைந்தனையே (இதுவுனக்குத்தகுமோ.)

(கு-ரை) ஆன்மாக்களின் கன்மத்திற்குத் தகுந்தபடி உலகிலே ஈஷணாத் திரவியங்களைக் கூட்டிவைத்து அவற்றைச் சுகமாயனுபவித்துக்கொண்டு இல்லறத்தினில் கிரமமாக வாழ்ந்திருக்கக் கடவையெனப் பெருமான்விதித்தும், அவ்வொழுக்கத்தினின்று மீறிக்கெடுதிவினை விளைவிப்பதற் கேதுவாயுள்ள விலைமகளிரைநாடிக் கண்டவர்கள் கல்லாலடித்து ஒட்டத் தகுந்த நிலையினையுடைய கடைத்தெரு நாயானது என்னையோ என்றனர். (1)

புட்பா சனவணையிற் பொற்பட்டு மெத்தையின்மேல்
ஒப்பா வணிந்தபணி யோடாணி நீங்காமல்
இப்பாய்க் கிடத்தி யியமனுயிர் கொள்ளுமுன்னே
முப்பாழைப் போற்ற முயங்கிலையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! புட்பம் பரப்பப்பெற்ற அழகியபட்டும் மெத்தைக் கட்டிலிட்டு அதன்மேல் படுத்தும்; அழகாக அணிந்திருந்த ஆபரணங்களை பூண்டும் (இருந்தநிலை நீங்காத உடலினை) பாய்மீது படுக்கவைத்து இயமன் உயிரினைக் கொண்டுபோவதற்கு முந்திபே முப்பாழைக் (கடந்த ஒன்றை) போற்றுதற்கு முயற்சித்தாயில்லையே.

(கு-ரை) மிகுந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்றுக் கட்டிலின்மேல் உறங்கத்தகுந்த உடலைப் பூமியின் பாய்மேலே கிடத்த உயிர் நீங்குமுன் பிரகிருதிப்பாழ், அசுத்தமாயைப்பாழ், சத்தமாயைப் பாழ் மூன்றையுங் கடக்த பெருமானைத் தியானம் பண்ணுவாயாக. (2)

முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய்
அப்பாழுக் கப்பானின் றாடுமதைப் போற்றாமல்

இப்பாழாம் வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்தனைமே நெஞ்சமே.

(பொ-ரை.) முப்பாழும் சூனியமாய் அவற்றைக்கடந்த முத்தற் பாழானது வெட்டவெளியாய் அவ்வெளியினைக் கடந்து நிர்த்தனம்செய்யும் நடராஜப் பிரபுவினைப் போற்றாமல் இங்கு அழிந்து போகத் தகுந்த பிரபஞ்ச வாழ்வினை நம்பி அடைந்து யாசித்தவர் கட்குதவிசெய்யாமல் பாழாகியவினைவந்து சூழ்ந்துகொள்ளும்படி செய்துகொண்டனையே.

(கு-ரை.) முப்பாழாவது மேற்செய்யுளின் குறிப்புதாயிலுரைத்த மூன்றுபாழ், அதற்குமேற்பட்டபாழ் அருட்பாழ்அதற்குமேற் பட்ட இடம் ஆனந்தவெளி அதைக்கடந்து நின்றது சிதாகாயம் அங்கே நிர்த்தனம் பண்ணத்தகுந்தவன் பெருமான் என்றபடியாம்

அன்னம் பகிர்ந்திங் கலைந்தோர்க் குதவிசெயுஞ்
சென்ம மெடுத்துஞ் சிவனருளைப் போற்றாமல்
பொன்னு மனையுமெழிற் பூவையரும் வாழ்வுமிவை
இன்னுஞ் சதமாக வெண்ணினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அன்னத்தினை பங்கிட்டும் பசியினால் அலைபவர்கட்கு உபகரிக்கும் மனித சென்மத்தினை யெடுத்தும் சிவபெருமானைப் போற்றாமல் பொன்னினையும் மண்ணினையும் அழகிய பெண்ணினையும் ஆகிய இவை என்றும் நிலையாகவிருப்பதாக வெண்ணி விட்டனையே.

(கு-ரை.) பிறர் பசியைத் தணிவிக்கும் உயர்ந்த பிறப்பாகிய மனிதப்பிறப்பினை யெடுத்தும் அப்பிறப்பினா லடையவேண்டிய பெரும் பேற்றினைப் பெறுதற்கேதுவாய்ச் சிவதரிசனமாகிலும செய்யாது அழிதற்சேதுவா யவற்றினை நாடி வாழுதலிலென்ன பிரயோசன மென்றனர். (4)

முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இவற்றைநாட் போற்றோமென் றெண்ணாது பாழ்மனமே
அற்றவர்க்கு மீயாம லரன்பூசை யோராமல்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறந்து விட்டனையே.

(பொ-ரை.) பாழாகியமனமே! முன்செமத்தில் செய்த புண்ணியத்தினால் நேர்ந்த செல்வம் இச்சென்மத்தில் வாய்க்கப்பெற்றோம் என்று சிந்தியாது தரித்திரர்கட்குக் கொடாமல், சிவபூசை செய்யாமல் வித்துவான்களுக்கு உதவிபுரியாமல் கண்மறந்து கிடக்கின்றனை.

(கு-ரை.) ஒருவன் இச்சென்மத்தில் செல்வ மனுபவிப்பதும் தரித்திரமனுபவிப்பதும் பூர்வஜென்மத்தில்ஆர்ச்சித்துக்கொண்டவையாகலின் மறுசென்மத்தில் செல்வனாய் வாழவேண்டின் இச்சென்மத்தில் சிவபூசையும் தானதருமங்களும் இன்றியமையாதுசெய்யவேண்டுமென்பதாம். (5).

மாணிக்க முத்து வயிரப் பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்கா தனத்தி லிருந்தாலும்
காணித் துடலைநமன் கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! மாணிக்கங்களாலும், முத்துகளாலும் வயிரக்கற்களாலும் ஆகிய ஆபரணங்களைத்தரித்து உயர்ந்த பொன்னாற்செய்யப்பட்ட சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்தாலும், இலட்சியம்வைத்து உடலை இயமன் கயிற்றாற்கட்டித் தன் கைவசம்கொண்டால் அவ்வமயம்) மண், பொன் உடன் வரக்கண்டோமில்லை.

(கு-ரை) சகல சம்பத்துடன் ஒருவன் வாழ்ந்தாலும் அவனை இயமன்கொண்டு போம்போது செய்துகொண்ட புண்ணியபாவங்களேயல்லாமல் மேற்குறித்த செல்வங்கள் வருவதில்லையாம். (6)

கற்கட்டு மோதிரகற் கடுக்கனரை ஞாண்பூண்டு
திக்கெட்டும் போற்றும் திசைக்கொருத்த ராளுலும்
பற்கிட்ட வேமனுயிர் பந்தாடும் வேளையிலே
கைச்சட்டங் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! இரத்தினக்கற்களால் கட்டியமோதிரங்களும் நல்ல கடுக்கன்களும், அரைஞாணும் தரித்து எட்டுத் திக்கினரும் புகழ, எல்லாத் திசையினருக்கும் மேற்பட்ட ஒருவனானாலும், மரணகாலத்தில் பல்கிட்டிக்கொள்ளும் சமயத்தில் உயிரினை இயமன் பந்தினை யாடுவதுபோல இலேசாகக்கொண்டு போகும் சமயத்தில் கையிலுள்ளவை யெல்லாம் உடன்வரக் கண்டோமில்லையே.

(கு-ரை) எவ்வளவு விலையுயர்ந்த ஆபரணங்களைக் கையாடி வந்தாலும் அவையனைத்தையும் இவ்விடம் வைத்துவிட வேண்டுமே யொழிய ஒரு சிறிதும் கொண்டுபோவதில்லை கொண்டுபோவத்தக்கது புண்ணிய பாவங்களேயாம்) (7)

முன்னை செய்ததவ முப்பாலுஞ் சேருமன்றிப்
பொன்னும் பணிதிகளும் பூவையுமங் கேவருமோ
தன்னைச் சதமாகச் சற்குருவைப் போற்றுமற்
கண்ணற்ற வந்தகன்போற் காட்சியுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! பூர்வசென்மத்திற் செய்த தவமானது மூன்றுசென்மத்திலும் பொருந்துமல்லாமல் பொன்னும் ஆபரணங்களும், மாதரும் அங்கே உடன்வருமோ (வராது) அவற்றை

கிலேயுடைய பொருளாகவெண்ணி நல்ல ஆசாரியமூர்த்தியைப் போற்றுமல் கண்கெட்ட குருடனைப்போலப் பார்வையில்லாதவனுமனே.

(கு-ரை.) ஒரு ஜென்மத்திற் செய்துகொண்ட புண்ணியம் மூன்று ஜென்மம் வரையில் தொடர்ந்துகொண்டு வருவதால் ஒவ்வொரு ஜென்மத்திலும் புண்ணியஞ் செய்துகொண்டால் எக்ஜென்மங்களிலும் சுகமநுபவிக்கலாம். அங்ஙனஞ் செய்யாவிடினும், அப்புண்ணியம் விளைவதற்கேதுவாகிய ஆசாரியனை வணங்காமலும் இருப்பது அந்தகனுக்குச் சமானமென்பதாம். (8)

மையரவம் பூண்ட பரமர்திருப் பொற்றாளைப்
பையமலர்பறித்துத் தொழுதுவணங்காமல்
கைகளினி வளையும் காதினிற் பாடகமும்
மெய்யென் றிருமாந்து விட்டனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! படத்துடன்கூடிய பாம்பினை ஆபரணமாகத்தரித்த சிவபெருமான் அழகியதிருவடி யிணைப்பரிசுத்தம் ப்பொருந்திய புட்பங்களைப் பறித்துச்சாத்தித் தோத்தரித்து வணங்காமல், கரத்தின் கண்ணேயுள்ள வளையல்களையும், காதுகளிலே பாடகமும் (தரித்தமாதரைச்) சத்தியமென்று கருவித்து விட்டாயே.

(கு-ரை.) சிவபெருமானைப் பூசித்தலாகும் திருப்பணியொன்றே ஜென்மங்கடோறும் உதவிபுரிந்து மோட்ச சாம்பிராச்சியத்தினைத்தருவதால் அதனைவிட்டு மாதர்போகமே மெய்யென்று நம்பிவாழ்ந்து இறுமாப்புற்றிருத்தல் அறிவினுக்குக் கேடென்பதாம். (9)

மாதுக் கொருபாகம் வைத்தவரன் பொற்றாளைப்
போதுக் கொருபோதும் போற்றி வணங்காமல்

வாதுக்குத் தேடியிந்த மண்ணிற் புதைத்துவைத்தே
ஏதுக்குப் போகநீ யெண்ணினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! பார்வதியாருக்கு ஒரு பாகத்தினையளித்த சிவபெருமான் திருத்தாளினை ஒருநாளைக்கு ஒரு பொழுதாயினும் தோத்தரித்துக் கசியாமல் வம்பாகச் சம்பாதித்து இப்பூமியிலே மறைத்துவைத்துவிட்டு (என்னகாரியத்திற்காக அங்ஙனம் செய்து) நீ இறந்தனை. (9)

(கு-ரை) உடன்கொண்டு போவதாக விருந்தால் எந்தவித மானவம்புகளையும் உலகினிற்செய்து திரவியம் சேகரீத்து அது பிறர்க்கீயாதபடி சேமித்து வைக்கவேண்டியதுதான். அங்ஙனமேலாதபோது என்ன உத்தேசங்கொண்டு புதைத்துவைத்தனை (அந்தோ இது வீணனகாரியம்.) (10)

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துறக்க
நெஞ்சே யுனக்கு நினைவுநான் சொல்லுகிறேன்
வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமற்
செஞ்சரணத்தானைச் சிந்தைசெய்வாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அஞ்சத்தகுந்த திருவருளினை யாதரித்துப்பஞ்சேந்திரிய சேஷ்டையினை யொழிக்க உன்றனக்கு ஞாபக மூட்டுகின்றேன், வஞ்சகத்தையொழித்து வேறு சிந்தனைசெய்யாமல் செவ்விய திருவடியுடைய (சிவபெருமானைத்) தியானிப்பாயாக.

(கு-ரை.) உலகில்வரும் அனர்த்தங்களெல்லாம் பஞ்சேந்திரியங்களின் சேஷ்டையினாலல்லாமல் வேறில்லை அத்தகைய சேஷ்டைகளை யொழித்துக்கொள்ள வேண்டுமென்றால், சிவபெருமான் திருவடி சிந்தனை யொன்றினையே செய்யவேண்டுமென்பதாம். ()

அற்புதமா யிந்தவுட லாவி யடங்குமுன்னே
சற்குருவைப் போற்றித் தவம்பெற்று வாழாமல்
உற்பந்தி செம்பொ னுடைமைபெரு வாழ்வைநம்பிச்
சற்பத்தின் வாயிற் றவளைபோ லானேனே.

(பொ-ரை.) மனமே! ஆச்சரியமாக இந்தத் தேகத்தினின்றும் உயிரானது வெளிப்படுமுன்னரே, நல்ல ஆசாரியனைத்தோத்தரித்துத் தவத்தினையடைந்து வாழாமல் உண்டாகின்ற செவ்விய பொன்னினையும், ஆபரணங்களையும் பெருத்த வாழ்வினையும் நிலையென நம்பிப் பாம்பின்வாயகப்பட்ட தவளையினைப்போலாயினன்.

(கு-ரை.) உடலினின்றும் உயிர் நீங்குகிற காலத்தில் எத்தனைபெயர் அதிசாக்கிரதையாகச் சூழ்ந்து கொண்டிருக்கினும் தெரிந்துகொள்வதற்குக் கூடாமையாக விருத்தலின், 'அறபுதம்' என்றனர், பாம்பின்வாய்ப்பட்ட தவளை மறுபடியுமீளுதல் எக்காலத்திலு மில்லைபோலப் பிரபஞ்சவாழ்விற் பட்டயான் மீளுதலில்லையென்பார், 'தவளைப்போலாயினேன்' என்றனர். (12)

உற்றாரார் பெற்றாரா ருடன்பிறப்பார் பிள்ளைகளார்
மற்றாரி ருந்தாலென் மாளும்போ துதவுவரோ
கற்று விழுந்தவிளங் கன்றதுபோ லேயுருகிச்
சிற்றாகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! உறவினர்களியார், பெற்றவரியார், உடன் பிறந்தாரியார், புத்திரர்களியார், மற்றவரியார் இவர்களிருந்து என்ன பிரயோசனம் இறந்துவிடும்போது உதவி செய்வாரா, பசுவினை விட்டுப் பிரிந்த இளமையான கன்றினைப்போலேயுள்ள முருகி சிறுமையினை யடைந்து அற்பப்பிரபஞ்ச இன்பத்தினை யடைந்தனையே.

(கு-ரை.) "தந்தையார் தாயார் தாரமார் உடன்பிறந்தாரார் தாந்தாமாறே தந்தவாறெங்ஙனே போமாறேதோ" என்றபடி இவர்க்கும் நமக்கும் சம்பந்தமில்லை நம்மை நெருங்கியிருந்தார் ஒவ்வொருவரும் முயிரைத்தடுத்தாண்டு கொள்வாரில்லை, ஆகலின் இத்தகையினரின் பொருட்டு இரங்குவதிலென்ன பிரயோசன மென்றனர். (13)

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனை யாளிருக்கப்
பீடிருக்க வூணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.

(பொ-ரை.) வீடிருக்கவும், பெற்றதாயிருக்கவும், மிகவேண்டிய மனைவியிருக்கவும், பெருமையிருக்கவும், உணவிருக்கவும், புத்திரர்களிருக்கவும், மாடுகளிருக்கவும், கன்றுகளிருக்கவும், இருப்பாயுள்ள செல்வமிருக்கவும் உடலிருக்கவும் (ஆன்மாவாகிய) நீ பிரிந்து போன மாய்கை யென்னமாய்கையோ.

(கு-ரை.) சகல சம்பத்துடன் பிரபஞ்சத்தில் யாதொருகுறை யின்றி நெடுநாள்வாழ்ந்து கொண்டிருந்தும் இவையனைத்திலும் சிறிது விசுவாசமின்றி அனைத்தையும் திடீலெனப்பிரிந்து உயிர் நீங்கியது அதிசயமென்பார் 'கோலமென்ன கோலமே' என்றனர்.

சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் பரிமளமும்
விந்தைகளாய்ப் பூசிமிக வேடிக்கை யொய்யாரக்
கந்தமலர் சூடுகின்ற கன்னியருந் தாமிருக்க
எந்தவகை போனுயென் றெண்ணிலையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! சந்தனத்தையும்குங்குமத்தினையும், கூட்டுவர்க்கத்தினையும் (இன்னுமநேகமான) வாசனைத் திரவியங்களை

யும் விநோதமாக பூசிக்கொண்டு மிக வேடிக்கையாகவும்,ஒழுங்காகவும் வாசனையுடன்கூடிய புட்பங்களைத்தரித்த மனைவியரும் சமீபத்திருக்க எந்தவகையாகப் போயிற்றென்று எண்ணிப் பார்த்தாயில்லையே

(கு-ரை.) எல்லாப் பதார்த்தங்களிலும் உயர்வாயும் அத்தியந்தபிரியமாயும் உடனுயிர்விடத் தகுந்த தன்மைவாய்ந்தவராயுமிருக்கத் தகுந்தவர் மனைவியர் அத்தகையினரும் மாய்ந்துநிற்க, உயிர் நீங்குந் தன்மையைப்பற்றிச் சிறுதும் சிந்தித்தாயில்லையென்பார் 'எண்ணிலையே' என்றனர். (15)

காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான
ஊற்றைச் சடலத்தை யுண்டென் றிறுமாந்து
பாத்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்
ஆற்றுவெள் ளம்போல வளாவினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! காற்றினையடைத்து வைத்திருக்கும் தோல் துருத்தினையொத்து கொடுமையான வினையிற் கட்டுப்பட்டநாற்றமாகிய உடலினை என்று நிலையாக விருக்குமெனக் கருவித்து எளியாரைக்கண்டு மனமிரங்கி அன்னத்தினைப் பசித்தோருக்குக்கொடுக்காமல் நதியின் நீர்ப்பெருக்கினைப்போலப் பரதவிக்கின்றனையே.

(கு-ரை.) நிலையற்றதாகிய உடலினைப்பற்றிவிசாரியாது அதனைநிலையெனவெண்ணி அதனாற் செருக்குற்று எளியவர்கட்காக மனமிரங்கியவர்களை யாதரிக்காமல் விசாலமானவாழ்வில் புத்தியை விட்டதனாலென்னபிரயோஜனமென்பார் 'அளாவினையே' என்றனர். (16)

நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சயமென் றேயெண்ணிப்
பாக்களவா யன்னம் பசித்தோர்க் களியாமல்

போக்கு ளெமதூதன் பிடித்திழுக் கும்போது
ஆர்படுவ ரென்று யறிந்திலையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! நீரினிடத்துண்டாகும்குமிழியினையொத் தவாழ்வதனைச் சத்தியமெனத் தீர்மானித்து, ஒருபர்க்கு அளவே னும் அன்னம் பசித்தவர்கட்களியாது சிலேத்துமப்போரில் இய மனுடையதூதன் கூட்டிக்கொண்டு போகும்போது யார் உதவி செய்ய வருவாரென்று தெரிந்துகொண்டா யில்லையே.

(கு-ரை.) இயமன் பிடித்துக் கட்டிக்கொண்டு போம்போது எளியவர்கட் கன்னமிட்ட தருமந்துணையாக வருவதல்லது நிச்ச யமென நம்பியிருந்த உடலானது உதவாதென்பர் 'அறித்திலையே' என்றனர். (17)

சின்னஞ் சிறுநுதலாள் செய்த பலவினையான்
முன்னந்த மார்பில் முளைத்த சிலந்திவிம்மி
வன்னந் தளதளப்ப மயங்கிவலைக் குள்ளாகி
அன்னம் பகிர்ந்துண்ண வறிந்திலையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! (மூன்றுவிரற்கடையுள்ள) அதிக சிறிய நெற்றியுள்ளவள் பூர்வத்திற்செய்த வினைக்குத் தக்கபடி முன் னர் அவளுடைய மார்பினிடத்தே யுண்டாகிய கட்டிபோன்றதன மானது பெருத்து நிறந்தளதளப்பாய் பிரகாசிக்கக்கண்டு மயங்கி மோகத்திற் பட்டு அடியார்கட் கன்னமளித்துண்ணத் தெரிந்தா யில்லை.

(கு-ரை,) பெண்களில் சிறந்த அங்கமாகப் பாவிப்பது தனம் அதுதன்னுடைய அழகியஉருவத்தால்எத்தகையினரையும்மயங்க ச்செய்வதுசகசம். அவ்வுருவத்தினைச்சிறிது ஆராய்ந்து அது இரத்தம் மாமிசத்தாலாகிய ஒருகட்டி போன்றதெனத் தீர்மானித்து அதன்

மோகத்தினின்று நீங்கி அடியார்கட் கன்னமளித்து வாழ்வதே சிறந்த தென்றனர். (18)

ஓட்டைத் துருத்தியை யுடையும் புழுக்கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ரருளைமிகப் போற்றியே
வீட்டைத் திறந்து வெளியையொளி யாலழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! துவாரமுடைய தோல் துருத்தியினை, அழியும் புழுக்கணிறைந்த கூண்டினை (ஒத்த இவ்வுடலை) ஆட்டுவிக்கும் சிவசித்தராய்ச் சுவாமியின் திருவருளை மிகவாகநாடியே ஆணவக் கபாடந்திறந்து இருதய சிதாகாய வெளியினை ஞானத்தால் அழைத்து நிறுத்தி ஆன்மாவிற்குக் காட்டுவிக்கும் பொருளின்னதென நினைத்தாயில்லையே.

(கு-ரை) ஆணவ மலத்தடிப்பால் சிதாகாயத்தின் கண்ணே மறைந்து கிடக்கும் முதல்வனை ஞானத்தாற்கண்டு தெரிந்து கொள்ளவில்லையே என்பார் 'கருதிலையே' என்றனர். உயிருக்குயிராக விருந்து கன்மத்திற்குத் தக்கபடி உடலினையாட்டுபவன் பெருமானாகலின், 'ஆட்டுஞ்சிவ்சித்தர்' என்றனர். (19)

ஊன்பொதிந்த காய முளைந்தபுழுக் கூட்டைத்
தான்சுமந்த தல்லால்நீ சற்குருவைப் போற்றாமல்
கான்பறந்த வெள்ளங் கரைபுரளக் கண்டேகி
மீன்பறந்தாற் போலே விசாரமுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை) மனனே! தசைக் கொழுத்த தேகத்தினைப் புழுக்கள் நிறைந்த கூட்டினைப் (பலவருடங்களாகச்) சுமந்து (வாழ்ந்த) தல்லாமல் நீ உண்மையான ஆச்சாரிய மூர்த்தியைப் போற்றாமல்

காட்டினிடத்தே பரவி நீர் வெள்ளமான இருகரையினும் புரண்டு பாய்தலைக் கண்டு மீன்களும் சென்று பரவியதுபோல துன்பமுற்றனையே.

(கு-ரை) ஆற்றிலே வெள்ளம்திகரித்து இருகரையும்கடந்து பூமியிற் பரவியபோது மீன்களும் வெள்ளத்திற்சென்று பூமியிற் பரவியிருக்கும் சமயத்தில் பூமி நீர்வற்றிவிட மீன்கள் பூமியிலே தங்கி நீரின்றிப் பரிதபிக்கும். அதுபோல, உடல்வழியாக எல்லாப் பிரபஞ்ச காரியங்களிற் சென்று விஷயானு போகங்களை யனுபவித்து வரும்சமயத்துத் தேகமழிய உயிர் தவிக்குமென்பார், 'விசாரமுற்றாய்' என்றனர். (20)

உடக்கை யொறுக்கி யுயிரை யடைத்துவைத்த
சடக்கைச் சதமென்று சார்த்தங் கிறுமாந்தை
உடக்கை தகர்ந்தே யுயிரையமன் கொள்கையிலே
யடக்கமாய் வைத்தபொரு ளெங்குவர மாட்டாதே.

(பொ-ரை.) (மனமே! வாயுவாகிய வொரு) சுள்ளாணியை முறுக்கி யுயிரை யடைத்துவைத்த தேகத்தினை நித்தியமென்று பொருந்திக் கர்வித்திருந்தனை, (வாயுவாகிய) சுள்ளாணி கழற்றி யுயிரை எமன் பிடித்துக்கொண்டு போகையிலே நீ சேகரித்து வைத்த திரவியம் உன்னுடன் வராது.

(கு-ரை) உயிரினைத் தேகத்தினிலடைத்து அது வெளிவாராதபடி ஒரு ஆணியாகவாயு பூரிக்கப்பட்டிருக்கிறது, அவ்வாயுவெளிப்படின் உயிர் வெளிப்பட்டு விடுமாகையால் வாயுவை 'உடக்கை' என்று உவமித்தார். (21)

தித்திக்குந் தேனைத் தெவிட்டாத தெள்ளமுதை
முத்திக்கு வித்தான முப்பாழைப் போற்றாமல்

பற்றிப் பிடித்தியமன் பாசத்தாற் கட்டும்வண்ணம்
சுற்றி யிருக்கும்வினை சூழ்ந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! சுவைவாய்ந்ததேனை, (உண்ண உண்ண) வெறுக்காத தெள்ளிய அமுதினை, முத்திக்குக்காரணமாயுள்ள முப்பாழினைக்கடந்த பொருளைப் போற்றாமல் நெருங்கிப் பிடித்து இயமன் கயிற்றால் பிணிக்கும்படியாகச் சூழ்ந்திருக்கும் வினைகளினிற் கூடினையே.

(கு-ரை.) வினைசம்பந்தமாக விருக்கும் வரையில் இயமன் கட்டிற்குட்பட வேண்டியது வினைநீங்கி இயமன்கட்டினின்றும் நீங்க வேண்டுமாயின் முப்பாழினை விசாரித்து அதற்கப்பாற்பட்ட முதல்வனைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதாம். (22)

அஞ்செழுத்தா யெட்டெழுத்தா யைம்பத்தோ ரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய் நின்ற பெருமானைப் போற்றாமல்
வஞ்சகமா யுற்றமுலை மாதர்வலைக் குள்ளாகிப்
பஞ்சரித் துத்தேடிப் பாழுக் கிறைத்தோமே

(பொ-ரை) பஞ்சாட்சரமாகியும் அஷ்டாட்சரமாகியும் ஐம்பத்தோரெழுத்தாகியும், பிஞ்செழுத்தாகியும் எழுந்தருளிய சிவபெருமானைப் போற்றாது வஞ்சகம் வாய்ந்த தனத்துடன்கூடிய பெண்களின் வலையிற்பட்டுக் கெஞ்சிபேசி அவரைத் தொடர்ந்து நாடிப் பாழினிற் காலத்தைக் கழித்தோமே.

(கு-ரை.) ஈண்டு எட்டெழுத்தென்றது ஓம்-ஆம் அவ்வும் சிவாயநம என்றதாம். பிஞ்செழுத்தென்பது சத்தியட்சரமாகிய வகரமாம் மாற்றிவற்றின் விபரங்களனைத்தையும் சுத்தாத்துவித சித்தாந்த வைதிகசைவசன்மார்க்கரையடுத்து உபதேசக்கிரமமாகத் தெளிந்து கொள்ளவேண்டும். (23)

அக்கறுகு கொன்றைதும்பை யம்புலியுஞ் சூடுகின்ற
சொக்கர் திருத்தாளைத் தொழுது வணங்காமல்
மக்கள்பெண்டீர் சுற்றமுடன் வாழ்வைமிக நம்பியன்பாய்
எக்கா லமுமுண்டென் றெண்ணினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! உருத்திராட்சத்தினையும், அறுகம்புல்லினையும், கொன்றைப்புட்பத்தினையும், தும்பைமலரினையும், சந்திரனையும் தரிக்கின்ற சொக்கலிங்கப் பெருமான் அழகியசரணங்களைத்தொழுது வணங்காமல், புத்திரர் மனைவியர், சுற்றத்தினர் இவர்களுடன்கூடி வாழுதலையை அதிகமாகநம்பி ஆசையாய் எக்காலமும் சத்தியமா யிருக்குமென்று நினைத்துவிட்டனையே,

(கு-ரை) என்றும் சத்தியமாயுள்ள சிவபெருமான் திருத்தாளை வணங்காது என்றும் அசத்தியமாயுள்ள வாழ்வினரை நம்பியிருத்தலிற் கண்டபயனென்னை யென்பதாம். (24)

ஆண்ட குருவி னருளை மிகப்போற்றி
வேண்டுங் கயிலாய வீட்டுவழி பாராமற்
பூண்ட்குழன் மாதுநல்லார் பொய்மாய்கைக் குள்ளாகித்
தூண்டிலகப் பட்டுத் துடிகெண்டை யானேனே.

(பொ-ரை) மனமே! அடிமையாக ஆட்கொண்ட ஆசாரியனின் திருவருளை அதிகமாகவாதரித்து அத்தியாவசியமாகவடைய வேண்டும் திருக்கயிலாய வழியினை யெதிர்ப்பாராமல், (புட்பத்தினைத் தரித்த கூந்தலையுடைய மாதர்களின் பொய்யாகிய வஞ்சனைபிற்சிக்கித் தூண்டினிலகப்பட்டுத் துடிக்கின்ற கெண்டைமீனுக்கு ஒப்பானேன்.

(கு-ரை) ஆச்சாரிய மூர்த்தியின் அனுக்கிரகத் தன்மையினை யடைந்தால் கயிலாயமடைதல் திண்ணமாகலின் அங்ஙனம்செய்

யாது தூண்டிலகப்பட்ட மீனைப்போல மாதர்மயலிற் சிக்குண்டு துன்பமடைவதிலென்ன பிரயோசனமென்றனர். (25)

வனிப் பழுவை யிருளை யறுத் தாளமுற்றும்
பேணித் தொழுங்கயிலை பேறுபெற மாட்டாமல்
காணா வருட் பொருளாய்க் கண்கலக்கப் பட்டடியேன்
ஆணியற்ற மாமரம்போ லாகினனே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! வனிபழுவாகிய ஆணவவிருளையொழித்து ஆட்கொள்ளவும் வந்தித்து தொழத்தகுந்த திருக்கயிலையின் பாக்கியத்தையடையமாட்டாது, காண்டற்கரியதாயுள்ளநிஷ்களப் பொருளைநாடி வீண்சஞ்சலமுற்று அடியேன் ஆகாரமற்ற வொரு மாமரத்தினை யொத்தேன்.

(கு-ரை.) சகளரூபகமாயுள்ள திருக்கயிலாயத்திலெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீகண்டபரசிவப்பொருளின் திருவடியை யடையமுயற்சிசெய்யாது நிஷ்களமாயுள்ள வொருபொருளிருப்பதாக வெண்ணிச் சிந்தித்துச் சூனியமேகண்ட பொருளாகி முடிந்ததால் 'கண் கலக்கப்பட்டேன்' என்றனர். (26)

கோத்துப் பிரகாசங் கொண்டுருகி யண்டமெல்லாம்
காத்த படியே கயிலாயஞ் சேராமல்
வேற்றுருவப் பட்டடியேன் வெள்ளம்போ லுள்ளுருகி
ஏற்றங் கழுவி யிருந்தபிண மானேனே.

(பொ-ரை) கலந்து சிவப்பிரகாசமடைந்து மனமுருகி உலக மனைத்தும் திருவருளிற்றிளைத்துக் காத்தவண்ணமே திருக்கயிலையினையடையாமல், வேறு இடங்களிலுள்ள தேவர்கள்பால் மனம்

வைத்து எதன்பொருட்டு வெள்ளெலும்பினைப்போல இளைத்து, ஏற்றியகழுவில் தங்கிய சவத்திற்குச் சமானமாயினேன்.

(கு-ரை) திருக்கயிலாயத்தின்கண் ணேயுள்ளசிவபெருமானைத் தியானித்தலினாலேயே முத்தியுண்டாம், வேறுபட்ட பொருள்களாகிய தேவர்கள்பால் சிந்தைவைக்கின் கழுவேறிய பிணத்தின் நிலையினை யெய்துமென்பதாம். (27)

நிலைவிட் டுடலையுயிர் நீங்கி யகலுமுன்னே
சிலைதொட்ட வேடனெச்சிற் றின்றானைச் சேராமல்
வலைபட் டுழலுகின்ற மான்போற் பரதவித்துத்
தலைகெட்ட நூலதுபோற் றட்டழிந்தாய் நெஞ்சமே.

(பொ-ரை.) தேகத்தின் நிலையினைப்பிரிந்து உயிர்நீங்குமுன்னர்வில்லினைக் கரத்திலேந்திய வேடராகிய கண்ணப்பர் எச்சிலையுண்ட பரமசிவனையடையாமல் வலையிற்சிக்குண்ட மானினைப்போலவும், நுனியகப்படாத நூலினைப்போலவும், மாறிகெட்டேன் என்றனர்.

(கு-ரை.) சிவபெருமானை வணங்காது வேறுபட்ட மனத்தரியாவரும் வலையிற்சிக்குண்டமான் கஷ்டப்பட்டது போலவும் நுனிகாணாத நூல்சிக்குண்ணுவதுபோலவும், மானினையொத்துத் தான் துன்பப்படுவதன்றி, நூற்சிக்கினைப்போலப் பிறருக்குத்துன்பங் கொடுப்பரென்பதாம். (28)

முடிக்குமயிர்ப் பொல்லா முழுக்குரம்பை மின்னாரின்
இடைக்கு நடைக்கு மிதங்கொண்ட வார்த்தைசொல்லி
அடிக்கொண்ட தில்லைவனத் தையனே நாயனையேன்
விடக்கை யிழந்த மிருகமது வானேனே.

(பொ-ரை) புட்பங்களை முடிக்கும் கூந்தலினை வாய்ந்து, தீமையாகிய தேகத்தினை யெடுத்துள்ள மாதர்களின் இடுப்பினுக்கும், நடையினுக்கும் (உவமித்த) இதமாகிய வார்த்தையினைப் பேசி அன்பிரின் பொருட்டுத் திருவடியினை வாய்ந்த தில்லை வனத்தின்கண்ணே யெழுந்தருளியிருக்கும் ஐயனே மாமிசத்தையிழந்த மிருகத்தை யொத்தவனாயினேன்.

(கு-ரை) மாதர்களின் அங்கங்களுக்கு உவமானம் சொல்லியிருக்கிறவார்த்தைகளை யெடுத்துக்கூறி அவர்கட்குச்சந்தோஷம் விளைவித்துக் குஞ்சிதபாதத்தினையுடைய பெருமான் றிருவடியை மறந்திருப்பது தனக்கு உணவாகக்கிட்டிய மாமிசத்தினை யிழந்த மிருகத்தினுக் கொப்பென்பதாம். (29)

பூவாணர் போற்றும் புகழ்மதுரைச் சொக்கரது
சீர்பாதம் போற்றிச் சிவலோகம் சேராமல்
தாவாரந் தோறுந் தலைபுகுந்த நாய்போல
ஆகாத நெஞ்சமே யலைந்து திரிந்தாயே.

(பொ-ரை) பிராமணர் வந்திக்கும் புகழினை வாய்ந்தமதுரையிலெழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப் பெருமானது சிறப்புப் பொருந்திய திருவடியினைத் தோத்தரித்துச்சிவபதவியடையாமல் வீட்டின்தாவாரம் தோறுமோடிப் பிரவேசித்து (யாவராலும்மொத்துண்ணும்) நாயினைப்போல (ஒன்றினுக்கும்) உபயோகப்படாத மனமே வீணாயலைந்து திரிந்தனையே.

(கு-ரை.) மதுரைச் சொக்கலிங்கப்பெருமானைத்தோத்தரித்து அடையவேண்டிய நற்பதவியினையடையாமல் கண்டகண்ட வூரை நாடித்திரிதல் வீடுகள்தோறு நுழைந்து எல்லாராலும்மொத்துண்ணும் நாயினிலைக்கு ஒத்திருக்கு மென்பதாம். (30)

பத்தெட்டா யோரைந்தாய்ப் பதின்மூன்றை யுங்கடந்த
ஒத்திட்டு நின்றதோ ரோவியத்தைப் போற்றாமல்
தெத்திட்டு நின்ற திரிகண்ணிக் குள்ளாகி
வித்திட்டாய் நெஞ்சே விடவு மறியாயே.

(பொ-ரை) மனமே! பத்து, எட்டு, ஐந்து, பதின்மூன்று ஆக முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து ஒத்துஎழுந்தருளியதொரு சொரூபத்தினை வணங்காமல் அலைந்துநின்ற சுழலு நேத்திரத்தினுக்குட்பட்டு ஆதாரமானாய் நீங்கவுமறியாய்.

(கு-ரை) தத்துவாதீதனாக விளங்கும் பெருமானை வணங்காது கண்ணால் மயக்கி யலைகின்ற மாதர்பால்சிக்குண்டனை யினிமீள வறியாய். (31)

அஞ்சுட னேழாகி யைமூன்று மெட்டுமொன்றாய்
மிஞ்சி யிருந்த விளக்கொ ளியைப் போற்றாமல்
பஞ்சிலிடு வன்னியைப்போற் பற்றிப் பிடியாமல்
நஞ்சுண்ட கெண்டையைப்போல் நானலைந்து கெட்டேனே.

(பொ.ரை) ஐந்து, ஏழு, பதினைந்து எட்டு, ஒன்று ஆகிய (முப்பத்தாறு தத்துவங்களையும்) கடந்திருந்த அருட்சோதியைப் போற்றாமல் பஞ்சிலிட்ட அக்கினியைப்போலத் தாவிப்பிடியாமல் விஷமுண்ட மீனைப்போல நானலைந்து கெட்டேனே.

(கு-ரை) தத்துவாதீதனாக விளங்கும் பெருமானைப் போற்றாமலும், பஞ்சியில் அக்கினி யதிசீக்கிரம் பற்றுதல்போல அதிவிரைவில் தாவாமலும் விடமுண்ட மீனையொத்துத் துடிக்கின்றேனென்பதாம். (32)

ஊனமுட னேயுடையும் புழுக்கூட்டை
மானமுட னேசுமந்து மண்ணுலகில் மாளாமல்
ஆனதொரு பஞ்சவர்க ளாண்டிருந்த தேசம்விட்டுப்
போனதுபோ லேநாம்போய்ப் பிழைத்தோ மில்லையே.

(பொ-ரை.) மனமே! குற்றத்துடனே அழிந்துபோகும் புழுக்கள் நிறைந்தகூண்டினையொத்த உடலைக் கவுரவத்துடனே தாங்கிப் பூமியிலே சாகாமல் பஞ்சபாண்டவர்கள் அரசாட்சி செய்து கொண்டிருந்த சுதேசத்தை நீங்கிக் காட்டிற்சென்றதுபோல நாம் சென்று உயர்ந்தோமில்லை.

(கு-ரை.) பஞ்சபாண்டவர்கள் சுதேசத்தி லிருந்துகொண்டு பங்காளிகள் உபத்திரவம் சகியாமல் அவர்களைவிட்டு நீங்கிக்காட்டிற்சென்று பெரியோர்கூட்டத்திலிருந்து வாழ்ந்ததுபோல, இல்லறத்தின்கண்ணே யிருந்துகொண்டிருந்து அனேகமான சச்சரவுகளுடன் சஞ்சலப்படாது வெளியேறித் தவம் செய்தோமில்லையேயென்றனர். (இது ஏகதேச உவமானம்.) (33)

ஊறை யிறைக்கின்ற வுப்பிருந்த பாண்டத்தை
நாறாமல் நாறி நழுவும் புழுக்கூட்டை
வீறும் புரத்தை விரும்புகின்ற தெப்படியென்
றூறாத நாட்டி லகன்றிருந்தே னில்லையே.

(பொ-ரை.) சலமலாதிகளை யிறைக்கின்ற உப்படைத்த பாண்டத்திற்கொத்தனை, நாற்ற மெடாததுபோல் தோன்றி நாறிக் கொண்டிருந்து ஒருகாலத்தில் அழிபடும் புழுநிறைந்த கூட்டினை, இறுமாப்பு வாய்ந்த உடலை விரும்புகின்ற தெவ்வண்ணம் எனினும் அழிவில்லாத பூமியில் சென்றேனிருந்தேனில்லை.

(கு-ரை.) எந்தவிதத்திலும் சிறிதும் சுகமென்பது கிடை
உடலினை நம்பி சுத்த பூமியில் போய்வாழும் பாக்கியத்தி
பெற்றேனில்லையே.

அரிய வரிதேடி யறியா வொருமுதலை
பரிவுடனே போற்றும் பரஞ்சுடரைப் போற்றாமல்
கரியபெரு வாழ்வைநம்பிக் காமத் தழுந்தியே
அரிவாயிற் பட்ட கரியதுபோ லானேனே.

(பொ-ரை.) அருமையான விஷ்ணுமூர்த்திதேடி அ
கொள்ளக்கூடாத ஒப்பற்ற முதல்வனை ஆசையுடன்போற்று
பரஞ்சுடரைத் தோத்தரியாமல் கரிந்துபோகத்தகுந்த
வாழ்வினை நம்பிகொண்டு காமாந்தகாரத்திலழுந்தியே சிங்கத்
வாயிலகப்பட்ட யானையைப்போல வாயினேன்.

(கு-ரை.) பிரபஞ்ச வாழ்வானது அதியற்புதவாழ்வென்
தியாது ...ந்து பெருவாழ்வாக நினைத்திருக்கின்ற ரென்
பெருவாழ்வு' என்றனர் இவ்வாழ்வை நம்பின் சிங்கத்தின்வ
பட்ட யானையின் கதியே யாமென்றனர்.

தந்திரத்தை யுன்னி தவத்தைடபிக நிறுத்தாது
மந்திரத்தை யுன்னி மயங்கித் தடுமாறி
விந்துருகி நாதமா மேலொளியைக் காணாமல்
அந்தரத்தே கோலெறிந்த வந்தகன்போ லானேனே.

(பொ-ரை) சிவாகமங்களைப்படித்துத் தவத்தினை நி
செய்யாது, சாமான்னிய மந்திரங்களைச்செபித்து அதில் மய

தமோதி விந்துநாதங்களைக்கடந்த சோதி சொரூபத்தினைத்தரிசி யாமல் ஆகாயத்தில் கைக்கோலை வீசிட்ட குருடனையொத்தேன்.

(கு-ரை.) சிவாகமங்களிற் குறித்த மகாமந்திரங்களைச் சிந்தி யாது பசுமந்திரங்களைச் சிந்தித்து மோட்சமடையக் கருதுதல் தனக்காதாரமாகவிருந்த கையிலுள்ள கோலினை ஆகாயத்திலெ றிந்துவிட்டு வழிதெரியாது மயங்கிவிழும் குருடனுக்குச்சமமாம்.

விலையாகிப் பாணனுக்கு வீறடிமை பட்டதாயின்
சிலையார்கை வேடனெச்சிற் றின்றானைப் போற்றாமல்
அலைவாய்த் துரும்பதுபோ லாணவத்தி லழுங்கி
யுலைவாய் மெழுகதுபோ லுருகினையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! பாணபத்திரனுக்கு அடிமையாகவெழுந் தருளியவரும், கைவில்லேந்திய கண்ணப்பநாயனார் எச்சில்தின்ற வருமாகிய பெருமானைத் தோத்தரியாமல், சமுத்திரவலையிற் சிக் குண்ட துரும்பினைப்போல. ஆணவமலத்திலே கட்டுப்பட்டு உலை யிலுருகும் மெழுகினைப்போல, உருகினையே.

(கு-ரை.) சிவபெருமான் திருவடிகளைப் போற்றியுய்யாது, பிர பஞ்ச போகத்தின்கண்ணே உலைவாய் மெழுகா யுருகுவதனால், அலையிலகப்பட்ட சிறு துரும்பு, கரையினும்சேராமல் கடலினும் புகாமல் அலைவதுபோன்ற நிலையடைந்தனை யென்பதாம். (37)

செஞ்சொற்புலப்பல் முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்

பூ ர ண மா லை,

மூலந் துதித்தெழுந்த முக்கோண சக்கரத்துள்
வாலைதனைப் போற்றுமல் மதிமறந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! மூலாதாரத்திலே யுதித்த முக்கோணவடிவமாயுள்ள சக்கிரத்தின்கண்ணேயெழுந்தருளியிருக்கும் வாலாம்பிகைத் தாயைத் தோத்தரியாமல் புத்தி கெட்டேன்.

(கு-ரை) மூலாதாரமாவது காலெலும்பும் இரண்டுங் கதிரெலும்புங்கூடிய இடம் குய்யம் குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவே குண்டலிவட்டமாய் அந்த வட்டத்திற்கு நடுவே நாலிதழுடைய ஒருபுட்பவட்டமாய் கடப்பம்பூப்போன்றிருக்கும் அந்தப்புட்பத்திற்குநடுவில் ஓங்காரவெழுத்துநிற்கும் அந்த ஓங்காரத்திற்குநடுவில் விக்கினேஸ்வரனும், வல்லபைசத்தியும் எழுந்தருளியிருப்பார்கள்.

உந்திக் கமலத் துதித்துநின்ற பிர்மாவைச்
சந்தித்துக் காணுமற் றட்டழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்குநிறைகின்றபோருளே! உந்தியாகிய கமலத்திலே தோன்றியிராநின்ற பிரமனைநெருங்கித் தரிசியாமல் தடுமாறினேன்.

(கு-ரை.) இது சுவாதிட்டானம் மூலாதாரத்திற்கு இரண்டுவிரற்கடைமேலிருப்பது நாற்சதுரமும் அச்சதுரத்தினடுவ்வ ஆறிதழ்களுடைய ஒரு புட்பவட்டமும் அதன்மத்தியிலே லிங்க பீடமும் வீணைத் தண்டினடியுமாயிலங்கி அதனடுமெத்தியிலே நகார எழுத்துநிற்கும். அந்நகாரத்தினடுவில் பிரமாவும் சரஸ்வதியும் வீற்றிருப்பர். (2)

நாவிக் கமல நடுநெடுமால் காணாமல்
ஆவிகெட்டு யானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! உந்தியின் கமலமாகிய நடுவிலே விண்டுமூர்த்தியைத் தரிசியாமல் உயிரிழந்து அடியேனும் புத்திகெட்டேன்.

(கு-ரை) இது மணிபூரம் சுவாதிஷ்டானத்திற்கு எட்டுவிரற் பிரமாணத்திற்குமேல் இருப்பது இது அண்டம்போல ஆயிரத்தெட்டு நரம்பு நாடிகளுஞ்சூழ நாடிக்கெல்லாம்வேருள்ளது இது உந்திக்கு நேரில் அப்புத்தானத்தில் எழாம்பிறைக்கிணங்கியிருக்கும் இது நடுவே பத்து இதழையுடைய ஒருபுட்பம் வட்டமாயிருக்கும் அந்தப்புட்பத்தி னடுவில் மகாரவெழுத்து நிற்கும், அம்மகாரத்திற்கு நடுவில் மகாவிஷ்ணுவும்இலட்சுமி எழுந்தருளியிருப்பார்கள்

உருத்திரனை யிருதயத்தி லுண்மையுடன் பாராமல்
கருத்தழிந்து நானுங் கலங்கினேன் பூரணமே.

(பொ-ரை) எங்குநிறைகின்றபொருளே! உருத்திரமூர்த்தியை இருதயத்திலே பிரத்தியட்சமாகத் தரிசியாமல் மனங்கெட்டு அடியேனுங் கலங்கினேன்.

(கு-ரை) இது அனாகதம், மணிபூரகத்திற்குமேல் பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்திற்குமேலுள்ளது, இது இருதயகமலமாம் இத்தேயுத்தானத்தில் முக்கோணமாயிருக்கும். அம்முக்கோணத்தினடுவில் பனிரண்டிதழையுடைய ஒரு புட்ப வட்டமாயிருக்கும். அப்புட்பத்தினடுவில் சிகாரவெழுத்துநிற்கும். அச்சிகாரத்தி நடுவில் உருத்திரனும் பார்வதியும் எழுந்தருளியிருப்பார். (4)

விசுத்தி மகேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! விசத்தியிலே மகேஸ்வரனை விழித்துக்கொண்டிருந்து தரிசியாமல் பசியாமல் வருந்தி மனம் பதைத்தேன்.

(பொ-ரை) இது விசுத்தி அநாகதத்திற்குமேல் பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இடத்திலிருப்பது. இது கண்டஸ்தானத்திலே வாயுஸ்தானத்திலுள்ளது அறுகோணமாயிருக்கும் அக்கோணத்தினடுவில் பதினறிதழையுடைய ஒருபுட்பவட்டமாயிருக்கும் அப்புட்பத்தினடுவே வகாரவெழுத்து நிற்கும், அதனடுவில் மகேஸ்வரனும் மகேஸ்வரியும் எழுந்தருளியிருப்பர். (5)

நெற்றி விழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன் பாராமற் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! நெற்றியின் கண்ணே நேத்திரத்தையுடையமலரகிதராயுள்ள சதாசிவத்தினை அறிவுடனே தரிசியாமல் ஞானமிழந்தேன்.

(கு-ரை.) இது ஆஞ்ஞை விசுத்திக்குப் பனிரண்டுவிரற்கடை பிரமாணமுள்ள ஸ்தானத்திற்குமேலிருப்பது. வீணைத்தண்டின் முடியுமாய் ஊடுருவிப் பொன்போன்ற வடிவமுற்றுநிற்கும். நெற்றிப்புருவத்தின் வெளியாய் ஆகாயதானத்தில் மூன்றிதழையுடைய ஒருபுட்பத்தினடுவே யகாரவெழுத்தோடிணங்கியிருக்கும் அவ்வெழுத்திற்கு நடுவே சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளியிருப்பர். (6)

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! நாததத்துவத்தினையும் விந்து தத்துவத்தினையும், விருப்பமுடனே தரிசியாமல் அறிவு கெட்டு இந்திரிய கலக்கமுற்றேன்.

(கு-ரை) நாததத்துவம் விந்துதத்துவமிரண்டும் சதாசிவதத்துவத்தைக் கடந்த தத்துவங்கள் சிவதத்துவத்திற்கும் சத்திதத்துவத்திற்கும் கீழ்பட்டன. (7)

உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுட னுனு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கும் நிறைகின்றபொருளே! உச்சியிலேயிருக்கும் வெளியினை நிலையாகத் தரிசியாமல் பயத்துடன் !அடியேனும் அறிவிழந்தனன்.

(கு-ரை.) உச்சிவெளியாவது விந்துநாதமாகிய தத்துவங்களைக்கடந்த சிதாகாய சிதம்பரவெளியாம். (8)

மூக்கு முனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டு நானும் மறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே ! மூக்கினுனியாகிய இடத்தினைக் கண்விழித்திருந்து ,தரிசியாமல் உடல்கெட்டு அடியேனும் அறிவழியப்,பெற்றேன்.

(கு-ரை.) மூக்கினுனியாவது சுழுமுனை ஸ்தானம் அவ்விடத்தில் பார்வையினை நாட்டித் தியானம்செய்வது ஒருமுறை. (9)

இடையிங் கலையி னியல்பறிய மாட்டாமல்
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! இடைகலை, பிங்கலைகளின் தன்மையினை உணரமாட்டாமல் தடையுற்று அடியேனும் தத்தளித்தேன்.

(கு-ரை.) இடகலையானது மூக்கின் இடது துவாரத்தின் வழியாகவரும் பிராணவாயுவாகிய சுவாசம். இதனைச்சந்திரகலையென்பார். பிங்கலை மூக்கின் வலத்துவாரத்தின் வழியாகவரும்பிராணவாயுவாகிய சுவாசம். இதனைச் சூரியகலை யென்பார். (10)

ஊனுக்கு ணீனின் றுலாவினதைக் காணமல்
நானென் றிருந்து நலமழிந்தேன் பூரணமே.

(பொ ரை.) பரிபூரணப் பொருளே! உடலுக்குள்ளேதேவரீர் (ஆன்மாவிற்கு ஆன்மாவாக விருந்து) உலாவிக் கொண்டிருப்பதனைத்தெரிந்துகொள்ளாமல் நானே அப்பர மான்மாவென விருந்து நலமனைத்தையு மிழந்தேன்.

(கு-ரை.) இது, "யாங்களே கடவுளென்றிடு பாதகத்தவரை வெறுத்தது. (11)

மெய்வாழ்வை நம்பி விரும்பிமிக வாழாமல்
பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கும் நிறைகின்ற பொருளே! உண்மையான வாழ்வதனைச் சத்தியமென நம்பிக்கைகொண்டு ஆசைப்பட்டுவாழாது, பொய்மையான வாழ்வதனைச் சத்தியமென நம்பிவியசனமடைந்தேன்.

(கு-ரை.) மெய்வாழ்வாவது சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து வாழ்வது. பொய்வாழ்வாவது பிரபஞ்சத்தினைச் சத்தியமென எண்ணி வாழ்வது. (12)

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
யுண்டென்று நம்பி யுடலழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கும் நிறைந்தபொருளே! மனைவி, புத்திரர், பிதா, அன்னை, சோதரருடன் உறவினர் ஆகிய இவர்களெல்லாம் எந்நாளுமிருப்பரென வெண்ணி தேகமழியப்பெற்றேன்.

(கு-ரை.) இவர்களனைவரும் எந்நாளுமிருந்து தனக்கு உதவி புரிவார்களெனநம்பி அவர்களைக் காக்கும்பொருட்டு உழைத்து உழைத்து உடலிளைத்தேனேயொழிய தனக்கென வொன்றுஞ் சம்பாதித்துக்கொண்டே னில்லையென்பார் 'உடலிழந்தேன்' என்றனர். (13)

தண்டிகைப்பல் லாக்குடனே சகலசம் பத்துகளும்
உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கும் நிறைந்தபொருளே! தண்டிகை, பல்லக்கு மற்றையசெல்வங்கள் ஆகிய இவைகளெல்லாம் எந்நாளுமிருக்குமென நம்பி அறிவழிந்தேன்.

(கு-ரை.) தனது ஆயுள்பரியந்தம் தானனுபவித்து வரும்போகங்கள் தனக்கு உபகாரமாக விருக்குமென நம்பி மோசம்போயினேனென்பார் 'உணர்வழிந்தேன்' என்றனர். (14)

இந்த வுடலுயிரை யெப்போதுந் தான்சதமாய்ப்
பந்தமுற்று நாளும் பதமழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைந்தபொருளே! இவ்வுடலிலே உயிரானது எக்காலத்தும் நிலையுற்றிருக்குமெனப் பந்தப்பட்டவனாகி அடியேனும் பக்குவத்தை யிழந்தனன்.

(கு-ரை.) உலகிலே எந்நாளும் சீவித்திருப்பமென நம்பிக் கொண்டு அடையவேண்டியவற்றை யடையாது இழந்தேன் என்பார் 'பதமிழந்தேன்' என்றனர். (15)

மாதர்பிர பஞ்ச மயக்கத்தி லேவிழுந்து
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைந்தபொருளே! மாதர்களென்னும் பிரபஞ்ச மோகத்திலேயழுந்தி அறிவுகெட்டு மயங்கிமதிகெட்டனன்.

(கு-ரை) ஒருவன் மயக்கமடைவதற் கேதுவாகிய போகப் பொருள்கள் உலகத்திலே எண்ணிலவா யிருப்பினும் அவற்றுள் மாதரே சிறந்தவராய் எத்தகையினரையும் மயக்கத்தக்க பொருளாயிருத்தலின் 'மாதர்பிரபஞ்சம்' என்றனர். (16)

சரியைகிரி யாயோகந் தான்ஞானம் பாராமற்
பரிதிகண்ட மதியதுபோற் பயனழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைந்தபொருளே! சரியை, கிரியை, யோகம் ஞானம்முதலியவற்றி லொன்றினையும் நாடாமல், சூரியனைக் கண்ட சந்திரன்போலப் பிரயோசன மிழந்தேன்.

(கு-ரை.) நான்குவகைப்பட்டசாதனங்களுளொன்றைக்கைப் பற்றி வாழின் அதற்குத்தக்கபிரயோசனமடைதல் நிச்சயமாகலின் அங்ஙனம்செய்யாது அப்பிரயோசனமற்று நின்றேனென்பார் 'பயனழிந்தேன்' என்றனர். (17)

மண்பெண்பொன் னாசை மயக்கத்தி லேவிழுந்து
கண்கெட்ட மாடதுபோற் கலங்கினேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கும் நிறைந்தபொருளே! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையென்கிற மயக்கத்திலே சிக்குண்டு கண்ணில்லாதவொரு மாட்டினைப்போலக் கலக்கமுற்றேன்.

(கு-ரை.) ஈஷணைத் திரயங்களிற் சிக்குண்டு அவற்றின் வழி பட்டார்க்குச் சிவபெருமானுண்மை எவ்விதத்தினும் தோன்ருது என்பார் 'கண் கெட்ட மாடு' என்றனர். (18)

தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அனியாய மாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! ஒப்பற்ற முதல் வனுகிய (சிவபெருமானை) தெரிசித்துச் (சுகமாக) இருந்து வாழு தலை யடையாமல் அனியாயமாக இறத்தலிலும், பிறத்தலிலும் மொத்துண்டு இவ்வுலகில் அலைந்து திரிந்தேன்.

(கு-ரை.) யாரொருவர் சிவபெருமானைத் தரிசிக்கும் புண்ணி யத்தினை யடைகின்றனரோ அவரே இறப்பினும் பிறப்பினும் வாராரென்பது நிச்சய மாகலின் 'அங்ஙனம் தரிசியாததினுல் செனனமரணங்களிற் கட்டுண்டேனென்பார் 'அலைந்துநின்றேன்' என்றனர்.

ஈராறு தன்கலைக்கு ளிருந்துகூத் தாடினதை
ஆராய்ந்து பாராம லறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! துவாதசாந்த தவ த்திலிருந்துகொண்டு ஞானநடனம்செய்தருளினதை விசாரித்துத் தரிசனம் செய்யாமல் மதிகெட்டேன்.

(கு-ரை.) சிவயோகம் புரிந்து அவ்வியோக சமாதியில்துவாத சாந்தத்திலேயுள்ள பெருமானைத் தரிசியாது வாழ்ந்தவதலினுலே 'மதிகெட்டேன்' என்றனர். (20)

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்ருமற்
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! பிராணவாயுவினைக் கண்டு சந்தோஷித்துத் தேவரீரைத் தோத்தரியாமல் காசிதலம் வரையிற்சென்று அலேந்து கால் சோர்ந்தேன்.

(கு-ரை.) சிவயோகசமாதி கூடிப் பிராணவாயுவினை யடக்கி யங்கு அந்தர்முகத்திலே தரிசியாது உலகம் சுற்றியலேந்தேனென் பார் 'காலலுத்தேன்' என்றனர். பெருமான் உள்ளும் புறம்பும் வியாபித்துள்ள உண்மையினைத் தெரிந்துகொள்ளாது வெளிமுக நாட்டத்திலே மாத்திரம் கருத்தினை வைத்துக் காசிமுதலியதலங் கட்கு யாத்திரைசெய்வதிற் பிரயோசனமில்லை யென்றபடியாம்.

கருவிகளொன் றைத்தாறிற் கலந்தவினை பாடினதை
இருவிழியாற் பாராம லிடைழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்குள் நிறைகின்ற பொருளே! தத்துவங்களா கிய தொண்ணூற்றாறிலும் இரண்டறக்கலந்து நடத்தலைதிருநேத் திரங்களாலும் தரிசியாமல் கெட்டேன்.

(கு-ரை.) அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி அவரவர்கள் தத்துவங்களைச் சேட்டிப்பிப்பவன் சிவபெருமானென்ற உண்மை யினைத்தெரிந்து கொள்ளவில்லையென்பார் 'கீடழிந்தேன்'என்றனர்

உடலுக்குள் நீநின் றுலாவினதைக் காணமற்
கடமலைதோ றுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! தேகத்திற்குள் ளே தேவரீர் எழுந்தருளியிருந்து சஞ்சரித்தலைத் தரிசியாமல் காடுமலைகளிற் சென்று திரிந்து கால் சோர்ந்தேன்.

(கு-ரை.) உயிருக்கு உயிராயிருந்து உயிரைச் சேட்டிப்பிக்கும் தன்மையை விசாரித்துத் தேராது அன்னியமாகக் காணும்பொ

ருப்பி னதுக்காங்களிற்சென்று அலேதல் பிரயோசனமில்லேயென் பார் 'காலனுத்தேன்' என்றனர். (23)

எத்தேச காலமுநா மிருவா திருப்பமென்று
உற்றனைத்தான் பாராம லுருவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! எக்காலமும் நான் சாகாமலே யிருந்துகொண்டிருப்பேனென்று (நினைத்துத்,) தேவரீரைப்பற்றி விசாரியாது நான்கெட்டேன்.

(கு-ரை.) தேகம் அநித்தியமெனும் உண்மையினைத் தேர்ந்து அது அழியுமுன்னே நித்தியனாகிய சிவபெருமானை விசாரித்துச் சுகப்பேறடையாது அஞ்ஞானத்தினாலே நெடுநாளாக்கிருப்பமென வெண்ணி விசாரியாது கெட்டேன் என்பார் 'உருவழிந்தேன்' என்றனர். (24)

எத்தனைதாய் தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனா யானும் பிறந்திறந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்குநிறைகின்றபொருளே! எண்ணில்லாததாய் தந்தையர்கள் கர்ப்பத்திற்றங்கிப் பேதையனாகி இறப்பினும் பிறப்பினும் உட்பட்டேன்.

(கு-ரை.) எடுத்த சென்மத்திலேயே விசாரிக்கவேண்டியஉண்மையினை விசாரித்து அவ்வழியிலே நின்று பெறவேண்டிய பேற்றினையடையாததால், அநேக சென்மங்கள் எடுக்கும்படி நேரிட்டதென்பார் 'பித்தனாயானும்' என்றனர். (25)

பெற்றலுத்தாள் தாயர் பிறந்தலுத்தேன் யானுமுன்றன்
பொற்றாளைத்தான் தந்து புகலருள்வாய் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! தாய்மார்கள் எண்ணிலர்கள் என்னைப்பெற்று அலுத்துவிட்டார்கள், அடியேனும் பிறந்தலுத்துவிட்டேன். (இனியாகிலும்) தேவரீர் அழகிய இரண்டுதிருவடிகளைத்தந்தருளி அடைக்கலந் தந்தருளாய்.

(கு-ரை.) பெற்றெடுத்த தாய்மார்கட்கும், பிறப்பெடுத்ததற்கும் இவ்வளவென எண்ணற்குக்கூடாமையின் 'அலுத்தாள்அலுத்தேன், என்றனர். இனியாகிலும் தடுத்தாண்டுகொள்ள வேண்டுமென்பார் 'புகலருள்வாய், என்றனர். (26)

உற்று ரழுதலுத்தா ருறன்முறையார் சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! சுற்றத்தினர்அழுது அலுத்துப்போய் விட்டனர், உறவினர் தீயிலிட்டு அனுத்துப் போய்விட்டனர், தால்மார் பெற்றலுத்து விட்டனர்கள்,அடியேன் பிறந்தலுத்து விட்டனன்.

(கு-ரை.) எடுத்த சென்மங்களிலே பெற்ற தாய்மார்கட்கும், இறந்தபோதழுத சுற்றத்தினர்கட்கும் சுடுகாட்டிற்கொண்டுபோய் கொளுத்தினவர்களுக்கும் கணக்கில்லையெனவும், அங்ஙனமே அடியேனும் அலுத்துப்போனேன் எடுத்த செனனங்களால் எனவும் கூறினர்.)27)

பிரமன் படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்
உரமுடைய வக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! பிரமதேவனே உண்டாக்கிவருந்தினன், அடியேனே பிறப்பினும் இறப்பினும் துன்புற்றேன், பலம்பொருந்திய நெருப்புகொளுத்தி யலுத்துப் பாய்விட்டது.

(கு-ரை) அடிக்கடி பிறந்தும், அடிக்கடி இறந்தும் வருகிற காலத்தில் முறையே பிரமன்படைக்கவும், அக்கினிகொளுத்தவும் வேண்டியிருத்தலினால் அவர்கள் அலுத்தனரெனவும் அவற்றால் நானுமங்ஙனமே அலுத்தேனெனவும் கூறினர். (28)

எண்பத்து நான்கு நூறாயிரஞ் சென்னமுஞ்செனித்துப்
புண்பட்டு நானும் புலம்பினேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! எண்பத்து நான்கு நூறாயிரம் சென்மங்களிலும் பிறந்து துன்பமுற்றுத் துக்கமடைந்தேன் யான்.

(கு-ரை) கன்மத்திற்குத் தக்கபடி பற்பல சென்மங்களிலும் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயமாகலின் எண்பத்து நான்கு நூறாயிரம் சென்மமென்றனர். (26)

என்னை யறியாம லெனக்குள்ளே நீயிருக்க
உன்னை யறியாம லுடலிழந்தேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! நானறிந்து கொள்ளாதபடி என்னிடத்துத் தேவரீர் எழுந்தருளியிருக்கத் தேவரீரை யறிந்து கொள்ளமாட்டாமல் தேகத்தைவிட்டு நீங்கினேன்.

(கு-ரை.) சிவபெருமான் ஆன்மாக்கள்தோறும் அத்துவிதமாகக் கலந்திருந்தும் மலத்தடிப்பால் தெரிந்துகொள்ளாமலே இறத்தல் சகஜமாகலின் 'உடலிழந்தேன்' என்றனர். (30)

கருவா யுருவாய்க் கலந்துலகெ லாநீயாய்
அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! பிறப்பிலும், உருவத்தினிலு மிருந்துகொண்டிருப்பதேயல்லாமல் உலகமனைத்தும் சர்வவியாபியாய் அருவமாகநின்ற உண்மையினை அறிகின்றேனில்லை.

(கு-ரை.) பிறப்பினுக்கேதுவாகிய கருவினிடத்தும், விக்கிரகங்களிடத்து மற்றுமுலகனைத்தும் வியாபித்திருந்தும் விசாரித்து உண்மையினைத் தெரிந்துகொண்டேனில்லையென்றார் 'அறிகிலேன்' என்றனர். (31)

செம்பொற் கமலத் திருவடியைப் போற்றாமல்
பம்பைகொட்ட வாடும் பசாசானேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! செவ்விய அழகிய தாமரை மலர்போன்ற நினது சரணத்தினைத் தோத்தரியாமல், உடுக்கைதட்டத்தலைவிரித்தாடும் பேயினையொத்தேன்.

(கு-ரை.) சிவபெருமான் திருவடியினைத் தரிசியாதவர்கள்எத்தகையினரேனும் பேய்ச்சென்மமெடுப்பார் என்பார்'பசாசானேன்' என்றனர். (32)

எனக்குள்ளே நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனங்கவலை தீர வரமருள்வாய் பூரணமே.

(கு-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! என்னிடத்தே தேவரீர் வாழவும், தேவரீரிடத்தே நான் வாழவும் எனது மனத்துன்பம் நீங்கி வாழவும் வரந்தருளவேண்டும்.

(கு-ரை.) ஆன்மாவினிடத்துப் பரமான்மாஇரண்டறக்கலந்து அத்துவிதமாக விருக்கினும் மலத்தடிப்பாலவ்வுண்மை தெரியவராதிருக்கிறபடியால் அது தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டுமென்பார் 'வரமருள்வாய்' என்றனர். (33

எழுவகைத் தோற்றத் திருந்துவிளை யாடினதைப்
பழுதறவே பாராமற் பயனழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கும் நிறைகின்றபொருளே! எழுவகையான பிறப்புக்களினும் தேவரீரெழுந்தருளி அவ்வப்பிறப்புகடோறும் நீ கிருபைசெய்துகொண்டு வந்திருக்கவதனைச் சூழ்ந்து தெரியாது கெட்டேன் என்பார் 'பயனழிந்தேன்' என்றனர்.

(கு-ரை) தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன தாவரம் முதலியவகையில் சென்மமெடுக்குந்தோறும் உபகரித்துவந்தவன் சிவபெருமா னென்பதையறிந்து தேர்ந்துகொள்ளாததால் மேலும்மேலும் சென்மங்களுக்கேதுவாயிற் றென்பார் 'பயனழிந்தேன்' என்றனர். (34)

சாதிபே தங்கள் தனையறிய மாட்டாமல்
வாதனையா னின்று மயங்கினேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! சாதிவித்தியாசங்கள் தன்மையினைத் தெரிந்து கொள்ளமாட்டாமல் வேதனைபட்டுக் கொண்டிருந்து மயக்க முற்றேன்.

(கு-ரை) சாதிபேதங்கள் தொழிற்பாட்டினைக் குறித்து ஏற்பட்ட தென்பதனை விசாரியாது அப்பேதத்தைச் சத்தியமென அதிலழுந்தினவனுதலால் பல துன்பத்திற்கேது வுண்டாயிற்று என்பார் 'மயங்கினேன்' என்றனர். (35)

குலமொன்றாய் நீபடைத்த குறியையறி யாமல்யான்
மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! குலமொன்றாக வே நீசிருட்டித்திருக்கவும் அந்தகுறிப்பினை நான் தெரிந்துகொள்ளாமல் மலநிறைந்த தேகத்தினிற்கட்டுபட்டு மயக்கமுற்றேன்.

(கு-ரை) மனிதசென்மமுற்று வொருவகைப் பட்டிருந்தும் அஃதுணராமல் கற்பித்துள்ள பேதங்களில் மொத்துண்டறிவும யக்க முற்றேன் என்பார் 'மயங்கினேன்' என்றனர் (36)

அண்டபிண்ட மெல்லா மணுவுக் கணுவாய்நீ
கொண்ட வடிவின் குறிப்பறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! அண்டத்திலேயு ம் பிண்டத்திலேயும் அணுவிற்கும் அணுவாகித் தேவரீர் வாய்ந்தி ருக்கும் வடிவத்தின் குறிப்பினைத் தெரிந்து கொள்ளாதவனு யினேன்.

(கு-ரை) அண்டோற்பத்திற்கட்கும் பிண்டோபாத்திகட்கும் அதிசூக்குமகாரணமாகவிருந்து காரியப்படுத்து முண்மையின் வடிவத்தை விசாரித்துணர்ந்தே னில்லையென்பார் 'குறிப்பறியேன்' என்றனர். (37)

சகஸ்திரத்தின் மேலிருக்குஞ் சற்குருவைப் போற்றும
லகத்தினுட வாணவத்தா லறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! ஆயிரமிதழுடன் கூடிய தாமரைபோன்ற (இதயத்திலே எழுந்தருளியிருக்கும்ஆசிரி யனைத் தோத்தரியாமல் அவ்விருதயத்திலே யிருந்துகொண்டி ருக்கும் அகங்காரத்தால் கெட்டேன்.

(கு-ரை) இருதயத்திலே ஆசிரியராகிய சிவபெருமான் வாழ்ந் தும் அகங்காரதத்துவம் தெரிந்துகொள்ளாதபடி தடுத்துக் கொண்டிருந்ததினுல் 'அறிவழிந்தேன்' என்றனர். (38)

ஐந்து பொறியை யடக்கியுனைப் போற்றுமல்
நைந்துருகி நெஞ்ச நடுங்கினேன் பூரணமே.

(பொ-ரை) எங்குநிறைகின்றபொருளே! பஞ்சேந்திரியங்களை யடங்கித் தேவரீரைத் தரிசியாமல் வாடிமனமிளகி நடுக்கமுற் றேன்.

(கு-ரை) இந்திரிய ஜயங்கொண்டாலன்றிச் சிவபெருமான் தரிசனம் கிட்டுவது அருமையாகலின் அங்ஙனம் செய்யாது வீணாய்நொந்தேன் என்பார் 'நடுங்கினேன்' என்றனர். (39)

என்னைத் திருக்கூத்தா லிப்படிநீ யாட்டுவித்தாய்
உன்னை யறியா துடலழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! அடியேனை (என் கன்மத்திற்குத் தக்கபடி) பிரபஞ்சக்கூட்டத்திலே இப்பிரகாரமாகத் தேவரீர் ஆட்டுவித்தனை. தேவரீரை நானறியாமல் தேகமிழந்தேன்.

(கு-ரை) ஆன்மாக்களின் கன்மத்திற்குத்தக்கபடி அவரவர்கள் போகத்தினை யனுபவிக்கும்படிக் கூட்டிவைக்கின்றவனாகச் சிவபெருமானிருந்தும் அதுதெரியாது போயினேனென்பார் 'உடலழிந்தேன்' என்றனர். (40)

நரம்புதசை தோலெலும்பு நாற்றத்துக் குள்ளிருந்து
வரம்பறிய மாட்டாமல் மயங்கினேன் பூரணமே.

(பொ-ரை) நரம்பு, மாம்சம், தோல் எலும்புமுதலிய வமைந்த நாற்றத்துடன் கூடியதேகத்திலிருந்து தேவரீர் அளவைதெரிந்துகொள்ளாமல் மயக்கமுற்றேன்.

(கு-ரை) உடலிலே கட்டுப்பட்டுக் கிடந்தேனேயன்றித் தேவரீர் சர்வ வியாபக உண்மைகளைத் தெரிந்துகொள்ளாதிருந்தேன் என்பார் 'மயங்கினேன்' என்றனர். (41)

சிலந்தியுடை நூல்போற் சீவசெந்துக் குள்ளிருந்த
நலந்தனைத்தான் பாராமல் நலமழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைநின்ற பொருளே! சிலந்தி பூச்சியி விருந்து நூல் உண்டானதுபோல ஆன்மாவிடத்து நீ தங்கியிருந்து நன்மையினைப் பார்த்தறியாமல் தீமையுற்றேன்.

(கு-ரை) சிலந்தியானது தன்னுடலிலே யிருந்து நூலினையுண்டாக்கல்போல, தேவரீர் மாயையினிடத்திலிருந்துஉலகத்தைக் காரியப்படுத்துமுன்னே விசாரித்துணராது விழலனேனென் என்பார் 'நலமழிந்தேன்' என்றனர். (42)

குருவாய்ப் பரமாகிக் குடிலைசத்தி நாதவிந்தாய்
அருவா யுருவான தறிகிலேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! குருவாகியும், பரம்பொருளாகியும், சுத்தமாயையாகியும், சத்தியாகியும், நாதயாகியும், விந்துவாகியும், அருவாகியும், உருவாகியும் நின்ற உண்மையினையறிந்தேனில்லை.

(கு-ரை) சகலான்மாக்களைத் தடுத்தாளும்பொருட்டு ஆச்சாரியகோலங்கொண்டு வருபவனாகலின் குருவாயெனவும், எல்லாருக்குமேலானவனாகலின் 'பரமாகி' யெனவும், சுத்தமாயையினையும், நாதவிந்துக்களையும் காரியப்படுத்த வலனாகலின் 'குடிலைநாதவிந்தமாய் எனவும், சத்தியினைத் திருமேனிகொண்டு விளங்குபவனாகலின் 'சத்தியெனவும், சொரூபத்தில் நிஷ்களமாயும் தடத்தத்தில் சகளமாயும் விளங்குபவனாகலின் அருவாயுருவாவெனவுங்கூறினர்.

ஒளியாய்க் கதிர்மதியா யுள்ளிருளா யக்கினியாய்
வெளியாகி நின்ற வியனறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! சோதியாய்ச் சூரியசந்திரராய் ஆணவவிருளாய், தீயாய் ஆகாயமாயிருந்த ஆசிரியனைத் தெரியேன்.

(கு-ரை) ஒளி, கதிர், மதி, மலம், அர்க்கினியாவும் சிவபெருமானையன்றிக் காரியப்படாதாகலினாலும், தான் சிதாகாயமான வெளியாகிநிற்பவனாகலினாலும் 'வியனறியேன்' என்றனர். (44)

இடையாகிப் பிங்கலையா யெழுந்த சுழிமுனையாய்
உடலுயிராய் நீயிருந்த வுளவறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! இடகலை நாடியாகியும், பிங்கலை நாடியாகியும், சுழிமுனை நாடியாகியும், உடலின் கண்ணே உயிராயும் தேவரீரெழுந்தருளியிருந்த தந்திரத்தினையறியேன்.

(கு-ரை) மூவகைப்பட்ட பிரணவாயு காரியப்படுத்துவதும், உடலிலே உயிர் நிலைபெற்றிருத்தலும் சிவபெருமான் பிரேரபனையாகலின் அவ்வுண்மைதெரிந்துகொள்ளவில்லையென்பார் 'உளவறியேன்' என்றனர். (45)

மூலவித்தாய் நின்றுமுளைத் துடல்தோறு மிருந்து
காலனென வழிக்குங் கணக்கறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்குநிறைகின்றபொருளே! (ஆன்மாக்கள்உண்டாதற்குக்) காரணமாயிருந்து தோன்றியபின் அவர்களுடலின் மன்னி இயமனாகவிருந்து சங்கரிக்கும் உண்மையறியேன்.

(கு-ரை) ஆன்மாக்களினனுக்கிரகார்த்தமாக உண்டாக்குதலும், காத்தலும், அழித்தலும் ஆகிய தொழிலுண்மை தேரேனென்பார் 'கணக்கறியேன்' என்றனர். (46)

உள்ளும் புறம்புமா யுடலுக்கு ணீயிருந்த
தெள்ளளவு நானறியா திருந்தேனே பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! தேகதத்தினிட்த்து உள்ளேயும் வெளியிலேயும் எழுந்தருளியிருந்த த்ன்மையினைச் சிறிதும் தெரிந்துகொள்ளாதிருந்தேன்.

(கு-ரை) கன்மத்திற்குத் தக்கபடி ஆன்மாவின் உயிருக்குயிராயிருந்து சேட்டிபித்தும், பிரபஞ்சபோகத்தினை யூட்டுவித்தும் நிற்பவன் சிவபெருமானென்பதனைச் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை யென்பார். (அறியாதிருந்தேன்) என்றனர். (47)

தாயாகித் தந்தைதாய் தமர்கிளைஞர் சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலை யறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! அன்னையாகியும், பிதாவாகியும், உறவினராகியும், தேவரீராகியு மிருந்த நிலையினை யறியேன்.

(கு-ரை) ஒருவனுக்கு உலகத்தின்கண்ணே உதவியாக விருப்பவரைக் கூட்டிவைப்பவனும் இவர்கட்கு அன்னியமாக விருப்பவனும் சிவபெருமானே யென்னும் தன்மையினைத் தேரேனென்பார் 'நிலையறியேன்' என்றனர். (48)

விலங்குபுள்ளூர் வனவசரம் விண்ணவர்நீர்ச் சாதிமனுக்
குலங்களெழு வகையில்நின்ற குறிப்பறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! விலங்கு, புள், ஊர்வன, தாவரம், தேவர், நீர்வாழ்வன, மக்கள் ஆகிய பிறப்புக்கள் எழுவகையினுமிருந்த சைகை யறியேன்.

(கு-ரை) எழுவகைப்பட்ட பிறப்புக்களினும் அவ்வவ்வற்றின் கன்மத்திற்குத்தக்கபடி தனுகரண புவனபோகங்களைக் கூட்டி வைப்பவன் சிவபெருமானென்னும் கருத்தையறியே னென்பார் (குறிப்பறியேன்) என்றனர்! (49)

ஆணாகிப் பெண்ணா யலியாகி வேற்றுருவாய்
மாணாகி நின்ற வகையறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும், இவைகளைக்கடந்த வேறுபட்ட உருவமாகியும், பெருமையுடனின்ற தன்மையினையறியேன்.

(கு-ரை) ஆன்மா வொன்றினை அதன் கன்மத்திற்குத் தக்கபடி அவன் ஆகவும், அவளாகவும். அலியாகவும், அதுவாகவும் சிருஷ்டிப்பவன் சிவபெருமானே யென்னும் தன்மைதெரிந்தேனில்லை யென்பார் 'வகையறியேன்' என்றார். (50)

வாலையாய்ப் பக்குவமாய்ப் புகழ்வா ரிதியாகி
பாலையாய் நின்ற பயனறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! பாலைவாலை, யௌவனம், மூப்பு ஆகியிருந்த பிரயோசனத்தினைத் தேரேன்.

(கு-ரை) மரணமானது எப்போதுமே யிருக்கினும் பிராரத்துவத்தினை யனுபவிக்குமளவும் தேகமிருக்குமாகலின் பலபருவங்கள் வரையில் தேகமிருப்பது கன்மத்தளவு என்பதாம். (51)

பொய்யாய்ப் புவியாய்ப் புகழ்வா ரிதியாகி
மெய்யாகி நின்ற வியனறியேன் பூரணமே.

(பொ-ரை.) பொய்யாகியும், பூமியாகியும், புகழப்படும் சமுத்திரமாகியும், மெய்யாகியும் இருந்த ஆச்சரியமறியேன்.

(கு-ரை.) தெல்வ மில்லையென்பார்பால் பொய்யாகியும், உண்டென்பவர்பால் மெய்யாகியும், மண் நீர் என இரண்டு கூறப்பட்ட பிரபஞ்சம் காரியப்படுவதற் கேதுவாகியும், சிவபெருமா னிருந்த லாகிய உண்மையினை யறியேனென்பார் 'நயமறியேன்' என்றனர்.

பூவாய் மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச் சொல்லான நயமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! பூவாகியும் அதன் வாசனையாகியும், பொன்னாகியும் அதன் மாற்றாகியும்' நாவாகியும் அதன் சொல்லாகியுமுள்ள அருமையினையறியேன்.

(கு-ரை.) புட்பத்தில் மணமும், பொன்னில் மாற்றும், நாவில் சொல்லும் தாதான்மிய சம்பந்தமுற்றுச் சிவமும் சத்தியும் விளக்கும் மெய்யினைத் தேர்ந்தேனில்லை யென்பார் நயமறியேன்' என்றனர். (63)

முதலாய் நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகா
யிதமாகி நின்ற வியலறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! ஆதியாகியும், நடுவாகியும், (அந்தமாகியும் முத்தேவர்களாகியும், மூன்றுலகங்களாகியும், நன்மையாகியும் இருந்த தன்மையினைத் தெரியேன்.

(கு-ரை) ஆதியந்தமில்லாதவனாயிருந்தும், ஆதியந்த முடையவன்போலிருந்து, மும்மூர்த்திகளை யதிட்டித்துக் கொண்டு மூவுலகங்களையும்காத்து எல்லாநன்மையினையும் ஆன்ம கோடிகட்குச்

செய்தவருபவனுடைய தன்மையினைத்தேரேனென்பார் (இயலறியேன்) என்றனர். (54)

ஊனா யுடலுயிரா யுண்ணிறைந்த கண்ணொளியாய்த்
தேனாய் ருசியான திறமறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! ஊனாகியும்உடலில் உயிராகியும் உயிருள்நிறைந்த கண்ணில் ஒளியாகியும், தேனாகியும் அதன் சுவையாகியும் இருக்குந்தன்மையினை யறியேன்.

(கு-ரை.) ஆன்மாவினுள் பரமான்மாவாக விருந்து சேட்டிப்பிக்கிறதினாலேயே ஊனாதி நிலைத்திருத்தலினால் அவ்வுண்மை யறியேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (55)

வித்தாய் மரமாய் விளைந்தகனி யாய்ப்பூவாய்ச்
சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே.

(பொ-ரை) வித்தாகியும் (அதன்காரியமான) மரமாகியும் (அம்மரத்திலுண்டாகும்) பழமாகியும் (அப்பழத்திற்கேதுவாகிய) புட்பமாகியும் அறிவு சொரூபமாகி நின்ற உண்மையறியேன்.

(கு-ரை.) அசுத்தமாயுள்ள ஒருவிதை பலவகையாகக்காரியப்படுகிறதற்கு ஏதுவாயுள்ள சித்துரூபனாயுள்ளவனே காரணமென்பதனைத் தேரேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (56)

ஐவகையும் பெற்றுலக வண்டபகி ரண்டமெல்லாந்
தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! பஞ்சகிருத்தியங்களைச்செய்து உலகமுழுவதிலும் தெய்வமாக எழுந்தருளி யிருக்கின்ற உண்மையறியேன்.

(கு-ரை.) இவ்வுலகத்தில் ஆன்மகோடிகட்குப் பஞ்சகிருத்திய நடத்த அதனாலேயே எல்லாரும் தெய்வமுண்டென்று வழிபடுதற் கேதுவாயுள்ள உண்மையறியேனென்பார், திறமறியேன்' என்றனர்.

மனமாய்க் கனவாகி மாய்கையா யுள்ளிருந்து
நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே.

(பொ-ரை.) 'எங்கு நிறைகின்றபொருளே! மனமாகியும், (அம் மனத்தில் விளையும்) கனவாகியும் மாயமாக உள்ளேயிருந்து நினைப்பனவாயிருந்த நிலையினையறியேன்.

(கு-ரை) உடலின்கண்ணே ஆன்மாவானது அவஸ்தாபேத மடைதற்குக்காரணமும் சிவபெருமானென்ற தன்மையினையறியே னென்பார் 'நிலையறியேன்' என்றனர். (58)

சத்திசிவ மிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! சத்திசிவமென்னும் இரண்டுபொருளாகி, முடிவில் ஒருபொருளாகி விசித்திரதன்மைய தாகவிருந்த உண்மையறியேன்,

(கு-ரை.) சிவமொன்றே புனர்சிருஷ்டியில் ஞாயிறும்அதனொளியும்போல இரண்டென்னச் சிவசத்தியாகிஇலயகாலத்தில் சத்தி சிவத்திலொடுங்கச் சிவமேயாயிருந்த உண்மையினை விசாரித்தறி யேனென்பார் 'திறமறியேன்' என்றனர். (59)

பொறியாய்ப் புலனாகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகி நின்ற வளவறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! ஐம்பொறிகளாகவும், ஐம்புலனுகவும், பூதங்களாகவும் அவற்றின் பேதங்களாகவும், அறிவு சொரூபமாகவு மிருந்த அளவினையறியேன்.

(கு-ரை) ஞானேந்திரிய முதலிய தத்துவமனைத்தும் காரியப்படுதற்கேதுவாக அவற்றினைப் பிரேரேபித்து தாக்கற்றுச் சித்துருபமாகவிருந்து கொண்டிருக்கிற தண்மையறியேனென்பார் 'அளவறியே' னென்றனர். (60)

வானிற் கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன் றானதுபோல்
ஊனுடலுக் குள்ளிருந்த வுயிர்ப்பறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! ஆகாயத்தின் கண்ணே சூரிய சந்திரர்களாய் விளங்கிப் பிற்பாடு ஒரு தன்மையானது போல ஊனுடன் கூடிய தேகத்திற்குள்ளிருந்த பிராணனைத் தெரியேன்.

(கு-ரை.) சகலகேவலமற்ற அவசரத்தில் இரவு பகல் தோன்றாது அருளொளியென்றே தோன்று மென்பார் 'ஒன்றானதுபோல்' என்றும், தேகத்தினிடத்தே பிராணவாயு சஞ்சரிக்கும்விதமறியேனென்பார் 'உயிர்ப்பறியேன்' என்றனர். (61)

பொய்யும் புலையுமிகப் பொருந்திவீண் பேசலன்றி
ஐயோ வுனைவுரைக்க வறிகிலேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! பொய்மையும, புலாலுண்ணுதலையும் அதிகமாகப்பெற்று வீண்வார்த்தை பேசுதலேயொழிய ஐந்தோ! தேவரீரைத் தியானிக்கத் தெரிந்தேனில்லை.

(கு-ரை.) நாள்முழுவதும் பிழைத்தற்குப் பொய் பல பேசுத லும், உடலைப் பெருத்தற்குப் புலாலுண்ணுதலுமாகிக் காலத் தினைக்கழித்தேனேயன்றித் தெய்வசம்பந்தமாக வொன்றும் செய் தேனில்லை யென்பார் 'அறிகிலேன்' என்றனர். (62)

நிரந்தரமா யெங்கு நின்றுயிரை யாடினதைப்
பரமதுவே யென்னப் பதமறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! நித்தியமாகவெங்கு மிருந்துகொண்டு விளையாடிக்கொண்டிருப்பதாகிய தன்னையே பர மப் பொருளென்னும் தன்மையினைத் தேரேன்.

(கு-ரை.) சர்வவியாபகமாக எங்குநிறைந்துகொண்டு பிரபஞ்ச காரியம் செய்துவராநின்ற வொருபெரிய வஸ்துவே பொருளென் பதனை யுணர்ந்துகொண்டே னில்லையென்பார் 'பதமறியேன்' என் றனர். (63)

கொல்வாய் பிறப்பிப்பாய் கூடவிருந் தேசுகிப்பாய்
செல்வாய் பிறர்க்குட் செயலறியேன் பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்றபொருளே! சங்காரம்செய்வாய் சிருஷ்டிப்பாய் உடனிருந்து காத்துவருவாய், உள்ளுணர்வாயிரு ந்துகொண்டிருப்பாய் இக்காரியத்தினைத் தேரேன்.

(கு-ரை.) ஆன்மாக்கட்கு முத்தொழில் செய்வதுடன்உள்ளும் புறம்புமாய் விளங்கும் காரியத்தைத் தெரிந்துகொண்டேனில்லை யென்பார் 'செயலறியேன்' என்றனர். (64)

வாரிதியாய் வையமெல்லா மன்னுமண்டப் பிண்டமெல்லாஞ்
சாரதியாய் நின்ற தலமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! சமுத்திரமாய் உலக மனைத்திலு நிலைபெற்ற அண்டபிண்ட மனைத்தினுமிருந்து நடத்துகின்ற தன்மையினைத் தேரேன்.

(கு-ரை) நீரும் நிலனுமாகப் பிரிந்துள்ள சர்வாண்டங்களாகிய தேரினை நடத்துகின்ற வொருசாரதியினை யொப்பாகவிருந்துகொண்டிருக்கின்ற இடந்தேரேன் என்பார் 'தலமறியேன்' என்றனர்.

வித்தாய் மரமாய் வெளியா யொளியாநீ
சத்தா யிருந்த தரமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! விதையாகி, மரமாகி, ஆகாயமாகி, பிரகாசமாகித் தேவரீர் உண்மையாயிருந்த தன்மை தேரேன்.

(கு-ரை) யாவற்றிற்குங் காரணமாகியும், அவை காரியப்படுதற்கும் ஏதுவாயும், சிதாகாயமாகியும் அதனில் விளங்கும் அருட்சோதியாயும், நித்தியவஸ்துவாகியும் இருந்ததன்மை யுணரேன் என்பார் 'தரமறியேன்' என்றனர். (66)

தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னை யறிந்தறிவால்
உய்த்துனைத்தான் பாராம லுய்வாரோ பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! தத்துவ தரிசனம் செய்து பின்னர் ஆன்மாவாகிய தன்னைவிசாரித்து விசாரித்தஅறிவைக்கொண்டு ஆராய்ந்து உனைத்தரிசியாமல் வாழ்பவர் உச்சிவிப்பரோ.

(கு-ரை) தத்துவ தரிசனம், ஆன்மதரிசனம் செய்த பின்னர் சிவதரிசனம் செய்ய முயலாது வாழ்பவர் அடையவேண்டிய பிரயோசனத்தினை யடையாரென்பார் 'உய்வாரோ' என்றனர் (67).

ஒன்றா யுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்று மறியார்க ளேழைகள்தாம் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! ஒன்றாகியும், உயிராகியும், ஒல்வொரு தேகத்தும் நீ தங்கியிருந்தும் எக்காலத்தும் தெரிந்துகொள்ளார்கள் அறிவிலிகள்.

(கு-ரை) ஒப்பற்ற ஒருதெய்வமாக இருந்தும், உயிருக்கு உயிராயிருந்தும், உடலினைக் காரியப்படுத்தியும் இருந்துகொண்டிருக்கிற உண்மையினைக் கல்வியில்லாதவர்கள் தெரிந்து கொள்ளுதலில்லை என்பார் 'அறியார்களேழை என்றனர். (68)

நேற்றென்று நாளையென்று நினைப்புமறப் பாய்ப்படைந்து
மாற்றமாய் நின்ற வளமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! நேற்றையதினமென்றும், நாளையதினமென்றும், நினைவையும் மறதியையுமடைந்து வேறுபட்டிருக்கும் தன்மையறியேன்.

(கு-ரை) இறந்தகாலம் எதிர்காலங்களில் கட்டுப்பட்டும் சகல கேவலமடைந்தும் இவற்றைக்கடந்து வாழவேண்டிய வண்மையைத்தேரேன் என்பார் 'வளமறியேன்' என்றனர். (69)

மனம்புத்தி சித்தி மகிழறிவாங் காரந்தாய்
நினைவாந் தலமான நிலையறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! மனம், புத்தி, சித்தம் களிக்கின்ற அறிவென்னும் ஆங்காரம் ஆகியவிவை விளைதற்கேதுவான இடத்தில் நிலையினைத்தேரேன்.

(கு-ரை) அந்தக்கரணம் நான்கும் உண்டாதற்கேதுவாயுள்ள தத்துவத்தின் உண்மைதெரிந்து அவற்றையொடுக்கிக்கொண்டேனில்லையென்பார் 'நிலையறியேன்' என்றனர். (70)

உருப்பேத மின்றி யுயர்ந்தசத்த பேதமதாய்க்
குருப்பேத மாய்வந்த குணமறியேன் பூரமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! உருவத்தினால்வேற்றுமையின்றிச் சொல்லின் சத்தபேதத்தினாலேயே காத்திரமமைந்ததென்கிற உண்மையறியேன்.

(கு-ரை) ஆண், பெண், அது என்னும் வேற்றுமைசொல்லின் சத்தத்தால் அமைந்த தேகவித்தியாசமேயன்றி (ஆன்மாவினுக்கொன்றுமில்லை) என்றும் உண்மைதேறேன் என்பார் 'குணமறியேன் என்றனர். (71)

சட்சமய பேதங்கள் தான்வகுத்துப் பின்னுமொரு
உட்சமய முன்டென் றுரைத்தனையே பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! ஆறுவகையான சமயபேதங்களையுண்டாக்கி மேலும் இவற்றையெல்லாம் அடக்கிக்கொண்டிருக்கின்ற உட்சமயமுளதென ஆசாரியகோலங்கொண்டெழுந்தருளித் தெரிவித்தனையே.

(பொ-ரை) அறுசமயங்களாவன:—பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சமவாதசைவம், சங்கிராந்த வாதசைவம், ஈசுவர

விகாரவாத சைவம், சிவாத்துவிதசைவம் ஆம். உட்சமயமாவது சித்தாத்துவித சித்தாந்த வைதிகசைவம். (72)

முப்பத் திரண்டுறுப்பாய் முன்னந்துடைத் துள்ளிருந்த
செப்படி வித்தை திறமறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! முப்பத்திரண்டு அங்கங்களுடன் கூடிய ஒரு உடலினையுண்டாக்கி அவ்வுடலிலிருந்து கொண்டு செய்யும் காலத்தின் சாமர்த்தியத்தினை யறியேன்.

(கு-ரை) ஒருவனுக்கு கேசாதிபாதம் வரையிலுள்ள உறுப்புகள் முப்பத்திரண்டு இவ்வளவுமமைந்த ஒருவன் உயிருக்குயிராயிருந்து அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடிக் கூட்டிவைப்பவனென்பார் 'செப்படிவித்தை' என்றனர். (73)

எனதான் கற்றாலென் னெப்பொருளும் பெற்றாலென்
உன்னையறி யாதாருய்வரோ பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! எவ்வளவுசாஸ்திரங்களைப் படித்திருந்தும் என்ன, எவ்வளவு செல்வமடைந்திருந்துமென்ன? தேவரீரைத் தெரிந்துகொள்ளாதவர் உய்வரோ.

(கு-ரை) தெய்வவுண்மை தேராதவர்கள் எவ்வளவு படித்தாலும், எவ்வளவு செல்வமடைந்தாலும் சிறிதும் பிரயோசனமில்லையென்பதாம். (74)

கற்றறிவோ மென்பார் காணார்க ளுன்பதத்தைக்
பெற்றறியார் தங்களுக்குப் பிறப்பறுமோ பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! கல்வி கற்றுத் தெரிந்துகொள்வோமென்பார் (கற்றபின்) நின்பதத்தைக்காணார்கள் உன்னருளைப் பெற்றறியாதவர்கட்குப் பிறப்பு நீங்குமோ.

(கு-ரை) மெய்கண்ட சாஸ்திர வாராய்ச்சியின்றி இலக்கிய இலக்கண நூல்கள் எவ்வளவு கற்றாலும் சிவபெருமான் உண்மையினைத் தேறார் அவனருளாலின்றிச் செனன மரணமு நீங்கார்.

வானென்பா ரண்டமென்பார் வாய்ஞ்ஞான மேபேசித்
தானென்பார் வீணர் தனையறியார் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! ஆகாயமே இருப்பிட மென்பர், அண்டத்திலுள்ள (பதங்க) ளென்பர், வாசா கைங்கரியப்பேசித்தானே (தெய்வமென்பர்) (இவரனைவரும்) தன்னை யாராய்ச்சி செய்யாதவர் ஆவர்.

(கு-ரை) ஆன்மவிசாரணையில்லாத சிலர் சிவபெருமானுக்கும் பல இடங்களைக் கற்பிப்பர் சிலர்தானே பிரமமெனப்பிதற்றிவாய் ஞானம் பேசித் திரிவர் என்பதாம். (76)

ஆதியென்பா ரந்தமென்பா ரதற்குநடு வாயிருந்த
சோதியென்பார் நாதத் தொழிலறியார் பூரணமே.

பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! உற்பத்திசொல்லுவர், முடிவுசொல்வர், அவற்றிற்கு நடுவேயுள்ள சோதிசொரூப மென்பர், நாதசொரூபமாக விருக்கிற காரியத்தை யறியார்.

(கு-ரை) முப்பத்தைந்து தத்துவங்களையும் கடந்த நாதசொரூபமாயுள்ள சிவத்தினுண்மையறியாதவர் பலவடிவமாக முடிவு கட்டிக் கூறுவர் தங்கள் தெய்வத்திற் கென்பதாம். (77)

மூச்சென்பா ருள்ளமென்பார் மோகமெனு மோட்சமென்பார்
பேச்சென்பா ருன்னுடைய பேரறியார் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! சிலர் பிராணவாயு வென்பர், சிலர் மவுன நிலையான மோட்சமென்பர், சிலர் சத்த ரூபமென்பர். இவரனைவரும் தேவரீர் திருநாமத் துண்மையறி யார்.

(கு-ரை) சிவபெருமானுக்குள்ள பெயரின் பரத்துவ உண்மை யறியார் யாரும் பற்பலவிதமாகப் பிராணவாயுவே என்பாரும், மவுன நிலயே என்பாரும், சத்தரூபமே யென்பாருமாகி யுழலுவ ரென்பதாம். (78)

பரமென்பார் பானுவென்பார் பாழ்வெளி யாய்நின்ற
வரமென்பா ருன்றன் வழியறியார் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! சிலர் மேலான தென்பர், சிலர் சூரியனென்பார், சிலர் சூனிய வெட்ட வெளியாக விருக்கும் மேன்மைப்பொருளென்பர். இவரனைவரும் தேவரீர் உண்மை வழியறியார்.

(கு-ரை) சிவபெருமான் உண்மைத் தன்மையைப் பற்றிப்பிர திபாதிக்கும் பதிநூல்களையாராய்ந்து பாராதார் பசுபாச நூல்களை நம்பித் தங்களுக்கு இஷ்டமானபடி பரத்துவம் சொல்லுவரென் பதாம். (79)

எத்தனை பேரோ டெடுத்தெடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க் கொன்றான தறிகிலேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! உலகில்எண்ணிலா தவர் நின்பெருமையினைப் பற்பலவிதமாகவெடுத்துப்பேசினர்(அங்

னைம்பேசினும்) அத்தனை பெயருக்கும் நீயொரு பொருளாகவே விளங்கிக்கொண்டிருக்கின்ற தன்மையறியேன்.

(கு-ரை) சிவபெருமான் ஒருவனே அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடி அவரவர்கள் துதிக்கின்ற தெய்வமாகத் தானேயிருந்து அனுகிரகிப்பானாகலின் 'ஒன்றான தறிகிலேன்' என்றனர். ()

நகார மகாரமென்பார் நடுவே சிகாரமென்பார்
வகார யகாரமென்பார் வகையறியார் பூரணமே.

(பொ ரை) நகரவெழுத்தென்பர், மகரவெழுத்தென்பர், நடுவேயுள்ள சிகரவெழுத்தென்பர், வகரவெழுத்தென்பர், யகரவெழுத்தென்பர், இவற்றினுண்மை வகையினையறியார்.

(கு-ரை) நகாரம் திரோதான சத்தியெனவும், மகாரம் மலமெனவும், சிகாரம் சிவமெனவும், வகாரம் சத்தியெனவும் யகாரம் ஆன்மாவெனவும், உண்மையினை விசாரித்தறியாரென்பார் 'வகையறியார்' என்றனர். (81)

மகத்துவமாய்க் காம மயக்கத்துக் குள்ளிருந்து
பகுத்தறிய மாட்டாமற் பயனழிந்தேன் பூரணமே.

(பொ.ரை) எங்கு நிறைகின்ற பொருளே! கௌரவமாய்க் காமமயக்கத்திற் சிக்குண்டு பிறித்தறியவாராது பிரயோசனமிழந்தேன்.

(கு-ரை) காமமயக்கத்திற் கட்டுப்பட்டு அதிலதிகமாக அமிழ்ந்து விட்டமையின் அவ்வின்பத்திற் கன்னியமாக வேறுபெரிய வின்பமொன்று உண்டு, என்னத் தெரிந்துகொள்வதற்கு ஏலாமையின் 'பயனழிந்தேன்' என்றனர். (82)

உண்மைப் பொருளை யுகந்திருந்து பாராமற்
பெண்மயக்கத் தாலே பிறந்திருந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! சத்தியமான பொருள் தன்னை விரும்பியிருந்து தரியாமல் மாதரிடத்து வைத்த ஆசையால் வீணாகப்பிறந்திருந்தேன்.

(கு-ரை) ஜனிதப் பிறப்பெடுத்தும் மாதரிடத்து வைத்துள்ள மோகத்தினாலே சிவபெருமான்தான் உண்மையானதெய்வமெனத் தெரிந்து தரிசித்தற் கேலாதவனாயினே னென்பதாம் (83)

வாயார வாழ்த்தி மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காய மெடுத்துக் கலங்கினேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! வாய்நிரம்பவாழ்த்தெடுத்துச் சந்தோஷத்துடன் தோத்தரியாமல் தேகமெடுத்துக் கலக்கமுற்றேன்.

(கு-ரை) எக்காலமும் உனைப் பாடுதலிலும், நின்னைக்கண்டு தரிசிப்பதிலும் பொழுது போக்காம லிருத்தலினாலே அநேகமான பிரபஞ்ச கலக்கம்வந்து போராடுகிறதென்பார் 'கலங்கினேன்' என்றனர். (84)

சந்திரனை மேகமது தான்மறைக்க வாறதுபோற்
பந்தமுற யானுமுனைப் பார்க்கிலேன் பூரணமே.

(பொ-ரை) சந்திரனைமேகமானது மறைத்து விடுவதுபோன்று பாசத்தடிப்படைய அதனால் தேவரீரைத் தரிசித்தேனில்லை.

(கு-ரை) மேகமறைத்து விடுதலினாலே சந்திரனுக் கியற்கை யாயுள்ள நிலை தடைபடுவது போன்று ஆணவமலமறைத்துவிடுதலி னாலே ஆன்மாவினுக் கியற்கையாயுள்ள நல்லறிவு தடைபட்டுச் சிவபெருமானைத் தரிசித்தற் கிடமில்லாமற் போயிற் றென்பதாம்.

செந்தா மரைத்தாளைத் தினந்தினமும் போற்றாமல்
அந்தரமாய் நின்றங் கலைந்தேனே பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! சிவந்த தாமரை போன்ற திருவடியினை நித்தியமும் தோத்திரியாமல் அநாதரவா யிருந்து உழன்றேன்.

(கு-ரை) சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவாலயத்துட் பிரவேசித்து அப்பெருமான் திருவடிகளைக் கண்களாரத் தரிசித் துத் தோத்திரியாதவர்கள் எச்சார்புமின்றி அலைவரென்பார் 'அலைந் தேன் நான்' என்றனர். (86)

நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
தாரகமென் றெண்ணிநான் தட்டழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! ஜலத்தின்மேலே தோன்றும் குமிழியினை யொத்த நிலையில்லாத தேகத்தினை ஆதார மென்று நினைத்துத் தடுமாறினேன்.

(கு-ரை) நீரினிடத்தே குமிழியானது தோன்றி மறைவது போல இவ்வுடல் இவ்வுலகினில் அடிக்கடி அதிசீக்கிரத்திற் றோன்றி மறையும் நிலையினையுடைய தென்பதைச் சிறிதும் ஆலோ சித்துப் பாராததால் சதமென வெண்ணி உடலிற் பற்றுவைத்தலி னால் தடுமாறினேன் என்பார் 'தட்டழிந்தேன்' என்றனர். (87)

நெஞ்ச முருகி நினைந்துனைத்தான் போற்றிநெடு
வஞ்சகத்தைப் போக்க வகையறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! மனங்கசிந்து எண்ணித் தேவரீரைத் தோத்தரித்து (எனக்குள்ள வஞ்சகத்தினைப் போக்கிக்கொள்ள வகையொன்று மறிந்துகொண்டே னில்லை.

(கு-ரை) அன்புடனே மனநெக்குருகச் சிவபெரு மானைத் தோத்தரித்து வருவார்கட்குமனத்தின் கண்ணேபிரபஞ்சசம்பந்தமாக நேரிடும் மயக்கம் வராதென்பார் 'வகையறியேன்' என்றனர்.

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு நிறைந்திருந்த
துள்ள மறியா துருகினேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! எள்ளுக்குள்ளே எண்ணெய் வியாபித்திருப்பதுபோலச் சர்வவியாபகமாக நிறைந்துள்ள உண்மையினை மனத்தினிடத்தே தெரிந்து கொள்ளாது நைந்தேன்.

(கு-ரை) சிவபெருமான் சர்வவியாபகமாக இருந்துகொண்டிருக்குந் தன்மையினை விசாரித்துணராத தன்மையினாலே அப்பெருமான் சம்பந்தமாகவிளையும் சந்தேகங்கட் கிடங்கொடுக்க மனம் வாடினேனென்பார் 'உருகினேன்' என்றனர். (89)

மாயாப் பிரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்தே
ஓயாச் சனன மொழித்திலேன் பூரணமே.

(பொ-ரை) காரிய ரூபமாயுள்ள உலகத்தின் கண்ணே மயங்கி நீங்காத பிறப்பினை நீக்கிக்கொண்டேனில்லை.

(கு-ரை) பிரபஞ்ச மாயாகாரியமாகவென்று மிருத்தலின்இத னிடத்திற் பற்றுவைத்தல் கூடாதென்பதை யுணராது அதனிடத்து மோகம் கொண்டிருத்தலினாலே பிறப்பினுக்கேது வுண்டாயிற்றென்பார் 'ஒழித்திலேன்' என்றனர். (90)

பூசை யுடன்புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றே நானு மறிவழிந்தேன் பூரணமே.

(பொ-ரை) எங்குநிறைகின்ற பொருளே! சிறுதெய்வப்பூசையினும், உலகத்தின்கண்ணே அனுபவிக்கப்படும் போகவஸ்துக்களினும்அவாவைத்து வாழ்ந்ததினாலேஅடியேனுமறிவுகெட்டேன்.

(கு-ரை.) சிவபூசையல்லாத வேறு அற்பபூசைகளிலும், உலகபோகமனுபவிப்பதிலுமே அவாவை வைத்துக் காலத்தினைக்கழித்து வந்ததினாலேயே நல்லறிவின்றிக்கெட்டேன் என்பார் 'அறிவழிந்தேன்' என்றனர். (91)

படைத்து மழித்திடுவாய் பார்க்கிற்பிர மாவெழுத்தைத்
தொடைத்துச் சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! உண்டாக்கியும் சங்கரிப்பால் ஆராயில் பிரமனாலே விதித்த எற்பாட்டினை நீக்கி நித்தியனாகவிருந்து பிரகாசிக்கும்படி செய்வாய்.

(கு-ரை;) சிருஷ்டியால் தொழிலினைத்தேவரீரே செய்வதல்லாமல் வேறு தேவர்கள் விதித்துள்ள ஆணையையு மாற்றிவைக்கும் சர்வசாமர்த்தியத்துடன் விளங்குந் தெய்வம் நீயேயென்பார்'துலங்குவிப்பாய்' என்றனர். (92)

மந்திரமாய் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தை நானறியத் தகுமோதான் பூரணமே.

(பொ-ரை.) மந்திரசொரூபியாகியும், சாஸ்திரத்தினல் பிரதிபாதிக்கப்படுபவனுகியும் வேதநான்காலும் கொண்டாடப்படுபவனுகியும், தேவரீர் எழுந்தருளியிருக்கும் முளவினை அடியேன்தெரிந்து கொள்ளத்தகுமோ.

(கு-ரை) வேதங்களினுலேயும் சாஸ்திரங்களினுலேயும்கொண்டாடப்படுகிற தெய்வமாகத் தேவரீரிருப்பதுடன் அவற்றுல் பஞ்சபிரம மந்திரசொரூபி தேவரீரே எனக் கூறுவதும் ஆகிய உண்மையினைச்சிற்றறிவினையுடையநான்தெரிந்துகொள்ளதக்கவனேயோ.

அல்லாய்ப் பகலா யனவரத காலமெனுஞ்
சொல்லாய்ப் பகுத்த தொடர்பறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கும் நிறைகின்ற பொருளே! இரவாயும் பகலாயும், எல்லாக்காலமாயும், சொல்லாகியும் வகுத்துள்ள சம்பந்தத்தினை யறிந்தேனில்லை.

(கு-ரை) இவ்வுலகத்தினைக் காலபேதத்தாலும், சத்சரூபத்தாலும் அமைத்து வைத்துள்ள சம்பந்தாசம்பந்தத்தினைச் சாஸ்திரமூலமாக விசாரித்து அவற்றினுண்மை தெரித்துகொண்டேனில்லை யென்பார் 'தொடர்பறியேன் என்றனர். (94)

நரகஞ் சுவர்க்கமென நண்ணுமிரண்டுண்டாயும்
அரகரா வென்ப தறிகிலேன் பூரணமே.

(பொ-ரை.) நரகமெனவும், சுவர்க்கமெனவும் பொருந்தியஇரண்டு இடங்களேற்பட்டிருந்தும் அரகர எனச்சொல்லத் தேர்கிலேன்.

(கு-ரை.) சிவபெருமான் திருநாமங்களிலொன்றாகிய அரகர சப்தம் செய்பவர்க்கு மோட்சமும், சொல்லாதவர்கட்கு நரகமும், உண்டாமென்பதைத் தெரிந்திருந்தும் கன்மவசத்தால் அப்பெயரை யுச்சரிக்கும் வகை தெரிந்திலேன் என்பார் 'அறிகிலேன்' என்றனர். (95)

பாவபுண் ணியமென்னும் பகுப்பாய்ப் படைத்தழித்திங்
காவலையுண் டாக்கிவைத்த வருளறியேன் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்றபொருளே! பாவமெனவும் புண்ணியமெனவும் இருவகையாக வுண்டாக்கி, சிருஷ்டித்தும், சங்கரித்தும், பிரபஞ்சமுகமாக ஆசையினை விளைவித்தும் வைத்ததிருவருளினுண்மையறியேன்.

(கு-ரை) ஆன்மாக்களின் கன்மத்திற்குத் தக்கபடி இருவினை வகுத்தும் பிறப்பினும் இறப்பினும் செலுத்தியும், பிராரத்துவம் புசித்துத் தொலைக்குமாறு போகத்திலவாவினை யுண்டாக்கியும் செய்து வரும் திருவருள் விளையாட்டினைத்தேரேன் என்பார்'அருளறியேன்' என்றனர். (96)

சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபே தங்களென்றும்
பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! பொறுமையெனவும், கோபமெனவும், பலவகையான சாதிகளெனவும், பந்தமெனவும், புத்தியெனவும் உண்டாக்கினை.

(கு-ரை) பொறுமை, கோபம், சாதிபாசம், புத்திமுதலியு யாவும் ஆன்மாக்களினுடைய கன்மத்திற்குத் தக்கபடியே விளையுமாயினும் அக்கன்மத்தினைக்கூட்டி முடிப்பவன் சிவபெருமானேயாகலின் 'படைத்தனையே' என்றனர். (97)

பாச முடலாய்ப் பசுவதுவுங் காணுயிராய்
நேசமுட னீபொருளாய் நின்றனையே பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! உடல் பாசமாகவும் உயிர்பசுவாகவும்,தேவரீர்பதியாகவும், அன்புடனே எழுந்தருளினை.

(கு-ரை) பாசம்சடமாகலினாலும்,பசுசுதந்தர வீரனாகலினாலும் இரண்டினையும் கன்மத்திற்குத் தக்கபடி கூட்டி முடிப்பித்துக்கொண்டு இருப்பவன் பதியாகலின் திரிபதார்த்தமாகவும் நீயேயாயிருந்தனை யென்பார் 'நீ பொருளாய் நின்றனை' என்றனர். (98)

ஏதில்டி யாரிரங்கி யிகத்தில் வந்துன்றன்
பாதமதில் தாழப் பரிந்தருள்வாய் பூரணமே.

(பொ-ரை) எங்கு நிறைகின்ற பொருளே! குற்றமில்லாத சிவனடியார்கள் மனமிரங்கி இம்மையில் வந்து தேவரீர் திருவடியில் வணங்க அவர்கட்கு விருப்பத்துடன் திருவருள் புரிவை.

(கு-ரை) தேவரீருடைய திருவடியில் அன்புமயமாக விருந்து மனங்கசிந்து வணங்கும் உண்மையை சிவனடியார்கட்குவேண்டியவற்றைத் திருவருள்புரிவையென்பார் 'புரிந்தருள்வாய்' என்றன.

நானேநீ நீயேநா னுமிரண்டு மொன்றானால்
தேனின் ருசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே.

(பொ-ரை.) எங்கு நிறைகின்ற பொருளே! (சிவமாந் தன்மையடைய) நானே நீயாகவும், நீயே நானாகவும் இருவருமொரு தன்மையினை யடைந்தால் அவ்வமயம் தேனினுடைய சுவையினைப் போல இனித்திடுவை.

(கு-ரை) ஆன்மாவும் பரமான்மாவும் இரண்டறக்கலந்து அத்துவிதமாக விருந்த அவசரத்துவிளையும் சிவானந்தம் ஆன்மாவிற்குத் தேனினை யொக்குமென்பார் 'தேனின் ருசியது' என்றனர். ஈண்டு முத்தியனுபவத்தில் தேனின் சுவையை ஒருபுடை யுவமையாகக் கூறினமையின் ஏகான்மவாதத்தினை மறுத்தவாறாயிற்று. என்னை? அனுபவம் இரண்டு பதார்த்தத்தினுக்கேயன்றிஒன்றினுக்கின்மையின். (100)

முடிவிலொரு சூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொரு சூனியத்தி லலைந்தேனே பூரணமே.

(பொ-ரை,) எங்கு நிறைகின்றபொருளே! தத்துவங்களை யெல்லாங்கடந்த முடிவில் சிதாகாய சொரூபமாக விளங்குகிற சூனியத்தினைத் தெரிந்திருந்து தரிசியாமல், ஆகாயத்திலேயே யொன்றுமில்லையென அறியாமையினாலே சூனியத்தின்பாற் பட்டேன்.

(கு-ரை.) ஈண்டு சூனியமென்பது விளங்காமை பொருட்டாம் தற்போதத்திற்கு விளங்காது சூனியமாக விருக்கிற சிதாகாயசின்மய வெளியினை அருட்போதத்தைக் கொண்டு தரிசிக்க முயலாமல் ஆரம்பத்திலேயே தற்போதங்கொண்டு யாவும் சூனியமென அறியாமையால் உழன்றேன். (101)

பூரண மாலைதனைப் புத்தியுட னோதினர்க்குத்
தாரணியில் ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே.

(பொ-ரை.) பூரணமாலையென்னும் இப்பிரபந்தத்தினை அன்புடனே படித்தார்க்கு இவ்வுலகில் ஞானத்தினை யருள் செய்வாய்.

(கு-ரை) ஆன்மாக்களின் பொருட்டு மனமிரங்கிக் கருணைகூர்ந்து நித்யாநித்ய உண்மையினைப் பூரணமாலையினில் விளக்கிக்காட்டினமையின் அந்நூல் சிவனடியார்கட்குப் பிரயோசனமாமாறுசிவபெருமானை ஆசிரியர் வணங்கிக் கேட்டுக் கொண்டவிதமாக இத்திருச் செய்யுளை யருளினர். (102)

பூரணமாலை முற்றிற்று.

பட்டினத்துப் பிள்ளையார்

நெஞ்சொடு மகிழ்தல்.

அன்றுமுத லின்றளவு யாக்கையொடு கூட்டியுமாய்
நின்றநிலை யறிய நேசமுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! பிறந்த நாளாகிய அந்நாள்முதல் இன்றை யதினம் வரையில் தேகத்துடனே தந்திரமாக விருந்த நிலையினை யறிந்துகொள்ள என்பால் விருப்பம் வைத்தனை.

(கு-ரை) உடல் வந்ததற்குக்காரணமும் அவ்வுடலுடன் இன்றையதினம் வரையில் உயிர் சம்பந்தப்பட்டு நடத்திக் கொண்டு வருகிற தன்மையும் இத்தகையதென விசாரித்துத் தெரிந்து கொள்ளற்குக் காரணமாயிருந்தனை. (1)

அங்கங் குணர்வா யறிவாகி யேநிரம்பி
எங்கெங்கு மானதிலே யேகரித்தாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அவ்வவ்விடங்களில் அறிதற்கேதுவான அறிவாகியிருந்து, எவ்விடத்துமான எவற்றிலும் கலந்தனை.

(கு-ரை.) மனமானது எந்தெந்த பதார்த்தங்களில் தாவுகின்றதோ அவ்வப்பதார்த்தங்களின் மயமேயாகி அவற்றுள் கலந்துடன் வேற்றுமையின்றி யிருந்து கொண்டிருக்கின்றனை. (2)

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா யழுந்திருந்து நின்றனையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! சலனமில்லாத பேரானந்தக் கடலில் சாசுவதமாகத் தங்கித் தலையெடா திருந்தனை.

(கு-ரை.) சிவானந்தமாகிய சமுத்திரத்திலழுந்தித்தலையெடாதபடி அவ்வானந்தமே தனக்குரிய செயலாய்த் தற்போத முளை வின்றி யிருந்தனை யென்பார் 'உருவிறந்து' என்றனர். ஈண்டு உருவென்றது வேறுசெயல். (3)

பாராமற் பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓரா துணர்வின்னே யொன்றினையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! நோக்காமலும், அவசரப்படாமலும், உண்ணாமலும், எதனையும் ஆராயாமலும், சிவபெருமானுடனே சேர்ந்தனையே.

(கு-ரை) பிரபஞ்சமுகமாக விருந்துகொண்டு யாதொரு சீவச் செயலைச்செய்யாது சிவமயமாக விருந்தனை யென்பார் 'ஒன்றினை' என்றனர். (4)

களவிறந்து கொலையிறந்து காண்பனவுங் காட்சியும்போ
யளவிறந்து நின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! பிறர்பொருளைக் கிரகிப்பதிலு மின்றி, கொலைத்தொழிலற்று, ஞாதுரு ஞானந்தோன்றாது எல்லையற்ற பொருளினிடத்தே விருப்பம் வைத்தனை.

(கு-ரை) உலகிலேபற்று உண்டாதற் கேதுவாகிய செயலை யொழித்துச் சிவபெருமானை யடைதலிலே யவாவுற்றனை என்பார் 'அன்புற்றாய்' என்றனர். (5)

பேச்சிறந்து சுட்டிறந்து பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்து நின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! மவுனத்திற்குரியதாகிய, ஏகதேசநோக்கிற்கரியதாகி, எதிர்காலம் இறந்தகாலங் குறித்தற் கில்லாமல், அசைவற்றவொரு பொருளினிடத்தே விருப்பம் வைத்தனை.

(கு-ரை.) எவ்வகையான பிரபஞ்ச செயல்கட்கும் அப்பாற்பட்டுவிளங்கும் சிவபெருமானிடம் அவாகொண்டனை யென்பார் 'நேசமுற்றாய்' என்றனர். (6)

விண்ணிறந்து மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்து நின்றதிலே யேகரித்தாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! ஆகாயங்கிடந்தும், பூமிகிடந்தும் வெளிகிடந்தும், பிரகாசங்கிடந்தும், அளவற்றிருந்த வஸ்துவினிடத்தே வொன்றாகக் கலந்தனை.

(கு-ரை) பௌதிக சம்பந்தமாயுள்ள பொருள்களனைத்தினையும் கடந்து விளங்கும் வியாபக வஸ்துவாகிய சிவபெருமானை விரண்டறக் கலந்திருந்தனை. (7)

பார்த்தவிட மெங்கும் பரமெனவே யுட்புறம்பும்
கோர்த்தபடி யுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! நோக்கிய விடங்கள்தோறும் சிவமயமெனவேயாகி அகமும்புறமு மொன்றாகக் கலந்திருத்தல் சத்தியமெனத்தெரிக்துகொண்டனை.

(கு-ரை.) சிவத்தியானத் தடிப்பேறி உலகமனைத்தையும் சிவமயமாகக்கண்டு உள்ளும்புறம்பு மொரேதன்மையாகவுள்ள நிலையினைத்தெரிந்துகொண்டனை யென்பார் 'உண்மையெனக் கொண்டனை' என்றனர். (8)

ஊரிறந்து பேரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்து நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! தேசமிழந்து, பூதப்பிரகாச மொழிந்து பூதாகாயமொழிந்து பிரபஞ்சச் சிறப்பொழிந்திருந்த நிலையினிலே கலந்தனையே.

(கு-ரை) தனக்கென ஊர்முதலிய வொன்றுமில்லா துஎவற்றினும் கடந்து விளங்கும் சிவபெருமான் திருவருளில் இரண்டற விளங்கினையே என்பார் 'கலந்தனையே' யென்றனர். (9)

ஆண்பெண் ணலியென் றழைக்கவரி தாய்நிறைந்து
காண்பவரி தாயவிடங் கண்ணுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அவன், அவள், அதுவென வழைக்கத் தகுந்த வேற்றுமைப் பொருட்டன்மைக் கருமையாயிருந்து காண்டற்கரிய விடத்தினைத் தரிசித்தனை.

(கு-ரை.) இன்னதன்மைய னென்றழைத்தற்கரிய சிவபெருமான் எழுந்தருளியிருக்குமோர் இடத்தினைத் தெரிந்துகொண்டனை யென்பார் 'கண்ணுற்றாய்' என்றனர். (10)

ஆங்கார மச்ச மகற்றி யறிவினொடு
தூங்காமற் றூங்கிச் சுகம்பெற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! அகங்காரம், பயம் நீங்கி ஞானமயமாகி தூங்காமலே தூக்கங்கொண்டு இன்பமுற்றாய்.

(கு-ரை.) சிவானந்தவின்பம் அடைதற்கிடையூறாயுள்ள அகங்காரமுதலிய வொழித்துத் தற்போத முன்னிட்டுத் தூங்காமல்

அருட்போதமுன்னிட்டுத் தூங்கிச் சிவானந்த மடைந்தனை யென்பார் 'சுகமுற்றாய்' என்றனர். (11)

ஆதியாய் நின்ற வகண்டபரி பூரணத்தைச்
சாதியாய் நின்றவிடஞ் சார்வுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! எல்லாவகையான பொருள்களுக்கும் தலைமையாகவுள்ள வியாபகமான பரிபூரணவஸ்துவைத் தெரிவிக்கத்தகுந்த இடத்தினைச் சேர்ந்தனை.

(கு-ரை.) சிவபெருமானைத் தெரிந்து கொள்ளுதற் கேதுவாகிய திருவருளாகிய வொரு இடத்தினைக் கலந்தாயென்பார் 'சார்வுற்றாய்' என்றனர். (12)

விருப்புவெறுப் பில்லாத வெட்ட வெளியதனில்
இருப்பே சுகமென் றிருந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! விரும்புதற்கும் வெறுத்தற்கும் ஏதுவில்லாதசிதாகாய வெளியிலேயுள்ள வாழ்வே சுகமெனக்கொண்டனை.

(கு-ரை.) சகல கேவலமற்ற சிதம்பரவெளியே தனக்கிடமாக்கிக்கொள்ளுதல் இன்பமென்று கொண்டனை யென்பார் 'சுகமென் றிருந்தனை' என்றனர். (13)

ஆருமுறாப் பேரண்டத் தப்புறத்து மிப்புறத்தும்
நீருமுப்பு மென்ன நிலைபெற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! எவரு மடைதற்குக்கூடாத அண்டத்தினுள்ளும் புறம்பும் நீரு முப்பும்போலக் கலந்த நிலையுற்றனை.

(கு-ரை.) நீரினிடத்தே உப்புக் கலந்தபோது உப்பின்தடிப்பு நீங்கியதுபோல சிவபெருமான் திருவருள் வியாபகத்தில் முனைவு தோன்று திருந்தனை யென்பார் 'நிலைபெற்றாய்' என்றனர். இது ஏகதேச உவமானம். (14)

உடனாகி வேயிருந்து முணரவரி யானோடு
கடனீரு மாறும்போற் கலந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! என்றும் கலந்திருந்தும் அறிதற்கருமை யாக விருக்கின்ற பெருமானுடன் சமுத்திரம் நதியும்போலக் கலந்தனையே.

(கு-ரை.) ஆன்மாவுட னிருந்து கொண்டிருந்தும் ஆணவத் தால் வெளிப்படாதுள்ள சிவபெருமானுடன் கடனீரும் ஆற்று நீருமொன்றானாற் போலச் சேர்ந்தனை யென்பார் 'கலந்தனை' என் றனர். இதுவும் ஒருபுடை யொற்றுவமையாகலின் ஏகதேச வுவமை. (15)

நெடியகத் தைப்போக்கி நின்ற சழக்கறுத்துப்
படிகத்துக் கும்பம்போற் பற்றினையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! நீளப்பிதற்றுதலும், நிலையுற்ற குற்றங் களும் நீக்கிப் படிகப்பாண்டம் போலக் கிரகித்தனை.

(கு-ரை.) படிகத்தாற்செய்துள்ள வொருகுடமானது தனக்கு முன்னிட்ட நிறங்களைக் கிரகித்துத் தனக்கெனவொரு நிறமின்றி யிருத்தல் போலச் சார்ந்த தன் வண்ணமாய் நீயு நின்றனையென் பார் 'பற்றினை' என்றனர். (16)

மேலாகி யெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறு மென்சுவைபோற் பற்றினையே நெஞ்சமே.

(பொ-ரை.) எவற்றினுக்கும் சிறந்து பிரகாசிக்கின்ற பெருமானிடத்துப் பாலு மதன்சுவையும்போல விருந்தனை.

(கு-ரை.) பாலினின்று நீங்காத சுவையினைப்போலச் சிவபெருமானிடத்து விளங்கினை யென்பார் 'பற்றினை' என்றூர். ஈண்டு கூறிய உவமையும் ஏகதேசமாகலின் குணகுணிபேதவுவமை கொள்ளாது ஒன்றிலொன்று விளங்குந் தன்மைமாத்திரங் கொள்ளுக. (17)

நீரோடு தண்ணாலிண்டு நீரான வாறேபோல்
ஊரோடு பேரில்லாதே ரொன்றினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! நீருடனே குளிர்ச்சிபொருந்திய ஆலாங்கட்டி பழையபடி நீரான தன்மைபோல ஊரும்பேருமற்ற சிவபெருமானுடன் பொருந்தினை.

(கு-ரை.) நீரும் ஆலாங்கட்டியும் ஒருபுடையுவமையேயாகலின் தடிப்பு நீங்குந்தன்மை யவ்வளவினுக்கே கொள்ளுக. (18)

இப்பிறப்பைப் பாழ்படுத்தி யிருந்தபடி யேயிருக்கச்
செப்பவரி தாயவிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை, மனமே! எடுத்த சென்மத்தினைப்பாழாக்கி மவுனநிலையிலிருந்திடச் சொல்லற்கரிய இடத்தினை யடைந்தனை.

(கு-ரை.) மறுசென்மமுண்டாதற் கேதுவாகியதத்துவ சேஷ்டைகளை இச்சென்மத்திலேயே யொழித்து மவுனநிலை யடைந்தனையாகலின் திருவருளினை யாதாரமாகப்பெற்றனை யென்பார் 'சேர்ந்தனை' என்றனர். (19)

(பொ-ரை.) மனமே! எக்காலமுமஒரு நிலையிலேயே தங்க அந்த இன்பமயமாக விருக்கச் செய்தனையே.

(கு-ரை.) எக்காலத்தும் ஒரேதன்மையான மவுன நிலையுடன் கூடிச்சிவானந்த மனுபவிக்கச் செய்தனை என்பார் 'ஆச்கினை' என்றனர். (25)

வாக்கிறந்து நின்ற மனோகோ சரந்தனிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய் நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! சொல்லற்கடங்காத மனாதீத நிலையிலே யாதொன்றிலும் சம்மதப்படாத நிலையிலே தலைமைவாய்ந்தாய்.

(கு-ரை.) சொல்லாலெடுத்து விவகரித்தற்கும், மனத்தினாலே நினைத்தற்கும் அரியசுகாதீத நிலையிலே தனித்து நின்றனை என்பார் 'தலைசெய்தாய் என்றனர். (26)

எத்தேச முநிறைந்த யெக்கால முஞ்சிறந்து
சித்தாய சித்திடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! எல்லாத் தேயங்களினும் பூரணமாகி எப்போதும் சிறப்புற்று விளங்கும் அறிவுரூபமாயுள்ள சிவத்திலடைந்தனையே.

(கு-ரை.) சர்வ வியாபகமாய் எல்லாவற்றினு மேன்மை யடைந்து சூக்குமசித்தி ரூபமாகவிளங்கும் அறிவுமயமான பெருமானிடம் கலந்தனையென்பார் 'சேர்ந்தனை' என்றனர். (27)

தாழாதே நீளாதே தன்மய மாய்நிறைந்து
வாழாதே வாழ மருவினையே நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! தாழ்வுபடாமலும், உயர்வடையாமலும் ஒரே தன்மையினையுற்றுப் 'பிரபஞ்சமுகமாக வாழாமல் திருவரு ளினை முன்னிட்டு வாழக் கலந்தனை.

(கு-ரை.) திருவருள் வியாபகத்திற் றிளைத்து என்றும் ஒரு படித்தாயிருக்கும் தன்மையினை யடைந்தாயென்பார் 'மருவினை' என்றனர். (28)

உள்ளும் புறம்பு முவட்டாத வானந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! அகத்திலேயும் புறத்திலேயும் தெவிட் டாத சிவானந்தத்தேனருந்தியநிலைபிலேயே இலட்சியம்வைத்தனை

(கு-ரை.) எக்காலத்தும், எவ்வகையினும் விருப்பு வெறுப் புண்டாகாத சிவானந்த சமுத்திரத்திற்றிளைக்கக் கருதினையென் பார் 'கண்ணுற்றாய்' என்றனர் (29)

வாதனைபோய் நிட்டையும்போய் மாமௌன ராச்சியம்போய்
பேதமற நின்றவிடம் பெற்றனையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! பிரபஞ்சவாசனை யொழிந்து, யோகம் கலைந்து, மவுன நிலையினின்று நீங்கி அபேதமாகவுள்ள திருவரு ணிலை யடைந்தனை.

(கு-ரை.) திருவருணிலையை யடைதற்குச் சாதனமாயிது சாறு மிருந்தவை யெல்லாம் தாமே நெகிழ்ந்துவிடச் சாத்திய முற்று யென்பார் 'பெற்றனை' என்றனர். (30)

இரதம் பிரிந்துகலந் தேகமாம் வாறேபோல்
விரகந் தவிர்த்தனல்பால் மேவினையே நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! பாதரசம் பிரிந்தகாலத்து உடனேகலந்து விடுமாறுபோல மோகம் நீங்கி அக்கினியிடத்துப் பொருந்தினையே.

(கு-ரை) ஒவ்வொரு சமயம் பிரபஞ்ச விரகம் தாக்கிய காலத்து வெளிமுகப்படினும் அக்கணமே பழையபடி திருவருளிற் கலந்து விடுவையென்பார் 'மேவினை' என்றனர். ஈண்டு அனல் என்றது அக்கினி சொரூபனான சிவம். (31)

சோதியாற் சூழ்பனிநீர் சூறைகொளு மாறேபோல்
நீதிகுரு வின்றிருத்தாள் நீபெற்றாய் நெஞ்சமே.

(பொ-ரை.) மனமே! சூரியனானவன் தன் பிரகாசத்தால் தன்னைச் சூழ்ந்துள்ள 'பனிநீரினை நீக்கி' விடுமாறுபோன்று நீதியுடன் கூடிய ஆச்சாரிய மூர்த்தியின் அழகிய சரணங்களை நீ யடைந்துவிட்டனை.

(கு-ரை.) 'சூரியன் பனியை யொழித்தாற்போல, ஆச்சாரியன் பிரபஞ்ச வியாபாரத்தினை யொழிக்கத் திருவருள் பெற்று அவனடி யினையடைந்தனை யென்பார் 'நீ பெற்றாய்' என்றனர். (32)

நெஞ்சோடு மகிழ்தல்-முற்றிற்று.

பட்டினத்துப் பிள்ளையார் பாடற்றிரட்டினுக்கு, அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவராகிய வாயிலார் நாயனார் பரம்பரையில் வந்தவரும் சுத்தாத்வித சித்தாந்த வைதிகசைவ பிரவர்த்தகாசாரியரும் சென்னை மெய்கண்ட சந்தான சபை அக்கிராசனாதிபதியுமாகிய, சித்தாந்தசரபம், அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தரர் இயற்றிய

ஞானார்த்த தீபவுரை முற்றியது.



பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப் புலம்பல்-மூலமும்

ஞானார்த்ததீப வுரையும்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துச்சுவாமிகள் சீடராகிய
பத்திரகிரியார் சரித்திரச்சுருக்கம்.

தவராஜசிங்கமாகிய திருவெண்காட்டடிகளென்னும் பட்டினத்துச்சுவாமிகள் சர்வசங்கப்பரித்தியாக முற்றுக் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் வெளியேறிச் சிவத்தலயாத்திரை செய்துவருகையில், பத்திரகிரி மகாராஜன் நகர்ப்புறத்திலுள்ள ஒரு விநாயகர் ஆலயத்தினையடைந்து சிவஞானநிஷ்டை கூடியிருக்குஞ் சமயத்தில் கள்வர் சிலர் பத்திரகிரியரசன் மாளிகையிற் பிரவேசித்து வெகுதிரவியங்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போகும்போது வழியில் தாங்கள் பிரார்த்தித்துக்கொண்டு வந்த விநாயகருக்குச் சமர்ப்பிக்கவெண்ணி ஓரிரத்தினமாலையை இருட்டில் அவ்விநாயகர் கோவிலில் சிவயோக நிஷ்டையிலிருந்த பட்டினத்தடிகளை விநாயகரென்றெண்ணி யவர் கழுத்திற் போட்டுப்போயினர்; உதயத்தில் கள்வரைத் தேடிக்கொண்டு புறப்பட்ட அரண்மனைக் காவலர்கள் பட்டினத்தடிகள்கழுத்தில் ஆபரணமிருக்கக்கண்டு இவரும் கள்வரைச் சேர்ந்தவரென பிடித்துக்கொண்டுபோய் அரசன் முன்னிலையில் விடுக்க அரசன் வினவுகட்கெல்லாம் சிவ! சிவ! என்று சொல்லிக்கொண்டிருந்த சுவாமிகளைப் பற்றி யொன்றுந் தோன்றாது அமைச்சனை நோக்கி நீ உன்னிஷ்டப்படி யாக்கினை தருகவென அவ்வமைச்சன் கழுவேற்ற நியமித்தனன். அங்ஙனமே காவலர்கள் சுவாமிகளை யழைத்துக்கொண்டுபோய் கழுமரத்தின் முன்னிறுத்த சுவாமிகள் புன்னகைசெய்து "என்செயலாவதியாதொன்றுமில்லை யினித்தெய்வமே" என்னுந் திருச்செய்யுளை

ப்பட்டக் கழுமரம் எரிந்துவிட்டது! அதுகண்டார் அரசனுக்கு அறிவிக்க அரசன் திடுக்கிட்டு ஓடிவந்து சுவாமிகள் திருவடியில் விழுந்து நமஸ்கரிக்க அவ்வரசன் மனப்பக்குவத்தினை யுணர்ந்து தமது திருக்கண்களால் தீட்சிக்க உடனே யரசன் இராஜகோலத்தினை நீக்கி உடன் தொடர "திருவிடை மருதூரினுக்குச்செல்வாய்" எனக் கட்டளையிட்டு மீண்டும் தாம் அநேகமான சிவத்தலங்களையடைந்து சிவதரிசனஞ்செய்து திருவிடைமருதூரில் கீழைக்கோபுரவாயிலில் வீற்றிருந்தருளினர். பத்திரகிரியாரும் ஆசாரியன் ஆணையை யேற்று அநேகமாக சிவத்தலங்களைத் தரிசனஞ்செய்துகொண்டே திருவிடை மருதூரையடைந்து குருவைத் தரிசித்துக்கொண்டு அவர் கட்டளைப்படி மேலைக் கோபுரவாயி லிருந்து கொண்டிருந்து தினம் பிச்சையேற்றுவந்து குரு நிவேதனம்செய்து மீதிச் சேடத்தையுண்டு சிவநிஷ்டாபரரா யிருந்தனர். இங்ஙனமாக, பத்திரகிரியாரிடம் ஒரு பெட்டை நாய்க் குட்டிவந்து வாலைக்குழைத்துத் தன் பசிநோயைக் குறிப்பித்து நிற்க, அதனையறிந்து தனது சேட்ப்பிரசாதமளிக்கப் பசியாறி, அவருடன்கூடவே யிருந்துவிட்டது. ஒருநாள் மருதவாணர் ஒருயாசகனைப்போல வேடங்கொண்டு பட்டினத்தாரிடஞ் சென்று அதிக பசியுள்ளவர் போல நடிக்க பட்டினத்தடிகள் "யான் கோவணந் தாங்குவதே பாரமாகவுடையேன் மேற்கு கோபுரவாயிலிலொரு சமுசாரியிருக்கின்றான்" அவனிடம் மேகினால் பசியாற்றுவனென, இதுகேட்டு மருதவாணர் மேலைக் கோபுரவாயலையடைந்து, பட்டினத்துச்சுவாமிகள் புகன்றதையுரைக்கக்கேட்ட பத்திரகிரியார் இவ்வோடும், நாய்க்குட்டியுமோ என்னைச் சமுசாரியாக்கியது எனப் பாத்திரத்தை யெடுத்தெறிய, அது நாயின்சிரத்திற்பட அது இறந்தது. மருதவாணர் மறைந்தனர். அந்நாயானது காசிராஜாவின் மகளாகப்பிறந்து வளர்ந்து பக்குவமடையத் தந்தையறிந்து புரோகிதரையழைத்துத் தனது புத்திரிக்குத் தக்க நாயகன் நியமிக்கவேண்டுமென ஆலோசிக்

கையில் இது தெரிந்த பெண் பிதாவைநோக்கி, ஐயா! யாவெரொருவனுக் குரியவனல்லள். 'திருவிடைமருதூரில் மேலகோபுரவாயிலில் எழுந்தருளியிருக்கும் எனது குருநாதரிடம் ஒப்புவிப்பீர்' என அரசனதிசயித்து அவ்வுண்மை விசாரித்தறிந்து புத்திரியைப் பத்திரகிரியார் முன் கொணர்ந்துவிட, அவர் சிவநிஷ்டையிலிருந்து விழித்து நோக்க, அப்பெண் "அடிநாய் மீண்டும் திருவடியை நாடிவந்து" என யாவும் திருவுளத்திலறிந்த பத்திரகிரியார் எழுந்து அப்பெண்ணின் கரத்தினைப்பற்றிச்சென்று தனது ஆசிரியர் முன்விட்டு தேவரீர் உச்சிட்டமுண்டு வளர்ந்த நாய்க்குமீண்டும் இப்பிறவி நோய்வரலாமோவெனச் சுவாமிகள் "அவன்செயலன்றி யாவதொன்றுமில்லை" எனத் திருவருளை நாட அப்போது ஒரு அருட்பெருஞ்சோதிதோன்றி அதனில் அப்பெண்ணுடன் பத்திரகிரியார் மறைந்தருளினர். சுபம்! சுபம்!! சுபம்!!!

இந்நூலுரையாசிரியரியற்றிய

பத்திரகிரியார் திருநட்சத்திர வெண்பா.

ஓங்குதிரு வெண்காட் டுயரடிகள் தன்னருளைப்
பாங்குபெற வேபெற்ற பத்ரகிரி—பாங்கொளியாய்ச்
சித்திரை மாமகத்திற் சேர்ந்தனனே மாமருதூர்க்
சுத்த னருளிற் கலந்து.

பத்திரகிரியார் பதாம்புயம் வாழ்க.

உ

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

பத்திரகிரியார்

மெய்ஞ்ஞானப் புலம்பலும் ஞானார்த்த தீபவுரையும்.

விநாயகர் வணக்கம்.

முத்திதரும் ஞான மொழியாம் புலம்பல்சொல்ல
அத்திமுக வன்ற னருள்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை.) (ஆன்மகோடிகளின் மோட்சத்திற்கு கேதுவான) ஞானசம்பந்தமாகிய (அனுபவ) வார்த்தைகளால் (மெய்ஞ்ஞானப்) புலம்பலைப்பாட (இந்நூல் இடையூறின்றி முடிதற்பொருட்டு) யானை முகத்துடன் கூடிய (மூத்த பிள்ளையாரின் திருவருளினை அடைதல் எக்காலம். என்றவாறு.

நூல்.

ஆங்கார முள்ளடக்கி யைம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை.) (என்னோ டொப்பாரில்லையென அகந்தைப்படு தற்குக்காரணமாயுள்ள அகங்காரத் தத்துவம் காரியப்படாதபடி அடங்கச் செய்து அகங்காரத்தி னின்றும் தோன்றும் மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஞானேந்திரியங்களாகியபஞ் சேந்திரியங்களைக் காரியப்படவொட்டாமல் கெடுத்து நித்திய சுழுத்தியினைப் போல வொன்றுந் தோன்றாதபடி தூங்காமல் திரு வருளினை முன்னிட்டு அறிவுமயமாக விருந்து தூங்கிச் சிவானந்த மடைவ தெக்காலம். எ-று. (1)

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) எண்ணெ யொழுக்குப்போலத் தொடர்ச்சியாய் இடைவிடாது சிவராஜயோக சமாதியடைந்திருந்து மாயாகாரியங்களால் தளும்பாதசுகவாரி என்னிடத்து நிறைந்திருத்த லெக்காலம். எ-று. (2)

தேங்காக் கருணைவெள்ளந் தேங்கியிருந் துன்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) நிறைந்துள்ள கிருபாவெள்ளம் என்னிடம் ததும்பியிருந்து அதனை யநுபவித்தற்குப் பின் வாங்காமல் பூர்வசென்மாந்தர நண்ணிய சேஷம் என்னையடுத்து அதனையுண்ணும்படி செய்வது எக்காலம், எ-று. (3)

ஓயாக் கவலையினா லுள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்.

(பொ.ரை.) பிரபஞ்சத்தின் கண்ணே நீக்கப் பெறாத மண், பெண், பொன் என்பவற்றால் விளையும் துன்பத்தினால் மனம் தளர்ச்சியடைந்து மெலியாமல் அசுத்தமாயா காரியத்தால் உண்டாகும் சென்மத்தினால் விளையும் மயக்கத்தினை யொழித்துக் கொள்வது எக்காலம். எ-று (4)

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம்.

(பொ-ரை.) மாயை சம்பந்தத்தா லுண்டாகிய சென்மத்தால் விளையும் பிரஞ்ச மயக்கத்தினை அடியோடே நீக்கித் தேகமென்

னுங்கோட்டை (நிலைபெறுமாறு காயசித்தியைச்) செய்து கொள்வது எக்காலம். (5)

காயா புரிக்கோட்டை கைவசமாய்க் கொள்வதற்கு
மாயா வனுபூதி வந்தடுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) (காயசித்தியினால்) தேகத்தினை நிலைபெறச்செய்துகொள்வதற்கு (சுத்த) மாயாசம்பந்தமாகச் சிவானுபூதி) என்னிடத்துச்) சுவானுபூதியாய் விளைவது எக்காலம். எ-று. (6)

சேயாய் சமைந்து செவிடூமைப் போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம்.

(பொ-ரை.) (இவ்வுலகிலே) ஒரு புத்திரனாகப்பிறந்து (பிரபஞ்ச சம்பந்தமான விஷயங்கள் கேளாத) செவிடனாகவும் (தற்போதவார்த்தைகளைப்பேசாத ஊமையனாகவும் சஞ்சரித்துப் (பிசாசால் பிடியுண்டவன் தேகத்தில் ஒருத்தர் பண்ணும் இதாகி தங்கள் பிடித்தபேய்க்கேயாகத் தனக்குப் பாறமற நிற்பதுபோலச (சுதந்திரமின்றி) பேய்ப்பிடிப்பான்போற்சஞ்சரித்து (சிவபெருமானாகிய) தேவரீரிடத்து மெய்யறிவுகொள்வது எக்காலம்-எ-று.

பேய்போற் றிரிந்தும் பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம்.

(பொ-ரை.) பேய் ஆவேசம் கொண்டவனைப்போலச் (சுதந்திரமின்றி) யுலவி (பிரபஞ்சவாசனை சிறிதும் தங்காது நிருவிகற்ப சமாதியில் சலனமற்று) பிணம்போற்றங்கி (உலகிலுள்ள மாதர்களைத் தாய்மாரைப் போலப் பாவித்து (வாழும்) விரதத்தினைப் பூர்த்திசெய்து கொள்வது எக்காலம். எ-று. (8)

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) செம்பஞ்சூட்டிய மிருதுவானகால்களைக் காட்டியும், கைகளினால் சாடைமுதலிய காட்டியும் பற்பல சைகைகள் கண்களாற் காட்டியும் முகம் மினுக்கிக் காட்டியும் காமவிச்சையினைக்காட்டியும் வாழுகின்ற (வேசிகளாகிய) மாதர்களை மறந்து தேவரீர் திருவருள் மயமாக இருப்பது எக்காலம். எ-று. (9)

பெண்ணினல் லாராசைப் பிரமையினை விட்டொழிந்து
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) பெண்டன்மையுடைய மாதர்களிடத்து வைக்கும் காமவாசையான மயக்கத்தினை நீங்கிப் பௌதிக சம்பந்தமான இரண்டு கண்களையு மூடிக்கொண்டு அறிவாகிய (கண்களைத்திறந்து) தேவரீர் திருவருளில் கலந்து சுகித்திருப்பது எக்காலம்.

வெட்டுண்ட புல்போல் விரிந்தவல்குற் பைதனிலே
தட்டுண்டு நிற்கை தவிர்வதுவு மெக்காலம்.

(பொ-ரை.) சத்தியினால் காயம்பட்ட புண்ணினைப்போலப் பிளப்பினையுடைய நிதம்பமென்ற பாம்பின் படம்போன்ற வதனிகில மனம் சிக்கிக்கொண்டு நிற்றலினின்றும் நீங்கியிருத்தலு மெக்காலம். எ-று. (11)

ஆறாத புண்ணி லழுந்திடக் கிடவாமல்
தேறாத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம்.

(பொ-ரை.) எவ்விதமான மருந்தினாலேயும் சௌக்கியமடையாத புண்ணினைப்போல விருக்கும்) அல்குல் ஆசையினில்)மனம் அழுந்கியிராமல் திருவருளினை யாராயாத சிந்தையினை நன்னெறியினில் சேர்ப்பது எக்காலம். எ-று. (12)

தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு சிக்கறுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) பிதா, மாதா, புத்திரர், சோதரரும் வந்தவாறும் போமாறும் மாயாஜாலமெனவே மனத்தினால் உண்மைவிசாரித்துத் தெளிந்து பிரபஞ்ச மயக்கை யொழிப்ப தெக்காலம். எ-று.

மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்
தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்ப தெக்காலம்.

(பொ-ரை.) (ஆடு, கோழி, மச்ச முதலிய) ஜெந்துக்களைக் கொன்று (அவற்றை) உபத்திரவப்படுத்தி வயிறுறத்தின்று பாவசொரூபிகளாகத் திரியாமல் தன்னுயிரைப்போலவே பிறவுயிர்களையும் பாவித்துக்கொல்லா விரதத்தினைப் பூர்த்திசெய்வது எக்காலம். எ-று. (14)

பாவியென்றே பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவிநின்ற சூத்திரத்தை யறிவதினி யெக்காலம்.

(பொ-ரை.) பிறருக்குத் தீங்குசெய்வதனால் பாவியென்று யாரும் சொல்லும்படியானபேரை வகித்து அதற்குப் பலனாகப் பாழாகிய நரகத்தில் வீழ்ந்து வருந்தாமல் உயிரானது உடலில் நிலைத்து நின்ற இரகசியத்தினைத்தெரிவித்துக்கொள்வ தெக்காலம் எ-று. (15)

உளியிட்ட கல்லு முருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம்.

(பொ-ரை,) உளியைக்கொண்டு செதுக்கியமைந்த சிலாவுருவத்தினையும், செவ்வியசுண்ணாம்பு சாந்தினாலமைத்த வுருவத்தினையும்,புளியினாற் சுத்தம்பண்ணப்பட்ட செம்பு விக்கிரகத்தையும், (சி

லைசாந் தரு, விக்கிரகமென்று சாமானியமாகப் பாவிக்காமல் அவ
ற்றையதிட்டித்துக்கொண்டு சிவபெருமான் அனுக்கிரகிக்கும் உ
ண்மைப்பொருள் இவ்வகையெனத் தெரிவது எக்காலம்-எ-று. (16)

வேடிக்கை யுஞ்சொகுசு மெய்ப்படகட்டும் பொய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லா மறந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச வேடிக்கையினும் அழகாக நடப்பதிலு
ம் தேகத்தை யலங்கரித்துக் கொள்வதிலும், பெரியாரைப்போல
நடிப்பதினும் செய்யும் வழக்கத்தினையெல்லாம் மறந்து எவற்றி
னும் பற்றறற்றிருப்பது எக்காலம் எ-று. (17)

பட்டுடை பொற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட்டுன் பாதம் விரும்புவது மெக்காலம்.

(பொ-ரை.) பீதாம்பர முதலிய தரித்துக்கொள்ளுவதிலும்
ஆபரணங்களால் அலங்காரம் செய்துகொள்வதிலும், பிறர்போல்
நடித்தலினும், கொடிய பாவங்கள் செய்தலிலு மிருந்து நீங்கித்
தேவரீர் திருவடியிணையே விரும்புவது எக்காலம் எ-று. (18)

ஆமைவரு மாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) ஆமையானது தனக்குச் சமீபத்தில் வரும் மனி
தரைக்கண்டு நீரிலடைந்து தனது தலை நாலுகால் என்னுமைந்து
றுப்புகளையும் தன்னுடற்குளிழுத்துக் கொள்ளுதல்போல மெய்,
வாய், கண், மூக்கு, செவி யென்னு மைந்து இந்திரியங்களின்வழி
யே செல்லும்விஷயங்களை யடக்கிக்கொண்டு மவுனநிலையுமாறு
விகாரமற்று ஒடுங்கியிருப்பது எக்காலம் எ-று. (19)

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையு மாளிகையும்
கண்டு களிக்குங் கருத்தொழிவ தெக்காலம்.

(பொ-ரை.) நிலையாக வொருவர்பா லிருக்கத்தகுந்த நல்லனவாகிய பல்லக்கினையும், சத்திரத்தினையும், பணப்பையினையும், வீட்டினையும் பார்த்து எந்நாளும் தனக்குச் சொந்தமெனச் சந்தோஷித்திருக்கும் எண்ணத்தினை நீக்குவது எக்காலம். எ-று. (20)

அந்த விருப்பிடத்தை யாராய்ந்து பார்த்துநிதஞ்
செத்த சவம்போற் றிரிவதினி யெக்காலம்.

(பொ-ரை.) பொதுத்தன்மையில் சருவ வியாபகமாகவும், சிறப்புத்தன்மையில் குருலிங்க சங்கமங்களிலும் சிவபெருமானெழுந்தருளியிருக்கும் உண்மையிடமொவ்வொன்றையும் மெய்கண்ட சாத்திரங்களைக்கொண்டு விசாரித்துத் திருவருளை முன்னிட்டுத் தரிசித்து எந்நாளும் உயிர்நீங்கிய பிணம்போலப் பிரபஞ்ச சுதந்திரமின்றிச் சஞ்சரிப்பது எக்காலம். எ-று. (21)

ஒழிந்ததரு மத்தினைவைத் துள்ளெலும்பு வெள்ளெலும்பா
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) பாவத்தினின்று நீங்கிய பதிதருமத்தினை ஆதாரமாக வைத்துக்கொண்டு உடலின்கண்ணேயுள்ள என்புவெளுத்த வெலும்பாகித்தசைகழிந்த சவம்போலவாழ்ந்து உனைத்தரிசிப்பது எக்காலம். எ-று. (22)

அற்ப சுகமறந்தே யறிவையறி வாலறிந்து
கெர்ப்பத்தில் வீழ்ந்துகொண்ட கோளறுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச சம்பந்தமான சிற்றின்பத்தினை மறந்து அறிவு சொரூபமாகவுள்ள சிவபெருமானைத் திருவருள் முன்னிட்ட வான்ம வறிவினாற்றெரிந்து பிறவியில் தங்கும்படி வாய்ந்த தீமையை நீக்கிக்கொள்வது எக்காலம். எ-று. (23)

கருப்படுத்தி யெள்ளையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்
உருப்படுத்தி யாள வுடன்படுவ தெக்காலம்.

(பொ-ரை.) பிரமன் மனிதனைப்பிறப்பித்து வாழ்ந்தபின்னர் என்றனை இயமன் பிடித்துக் கொண்டேகா முன்னம், சிவமாந்தன்மைசெய்து ஆட்கொள்ளக் கருணைகூர்தல் எக்காலம். எ-று. (24)

தூண்டு விளக்கணைய தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்போல்
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம்.

(பொ-ரை.) தூண்டுகோலினையுடைய தீபமானது அணைந்துவிட உடனே இருள்தொடர்ந்து எங்கும் சூழ்ந்துகொண்டு ஒளியும் இருளும் மாறிமாறி வருதல்போல அடிக்கடி இறந்து பிறந்து உலகில் வந்தவிதம் விருப்பு வெறுப்பினால் விளைந்த கன்மத்தினாலெனத் தெரிந்து கொள்வது எக்காலம். எ-று. (25)

தூரியினிற் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி யடிபணிவ தெக்காலம்.

(பொ-ரை.) பெருவலையினிற்பட்ட மீனைப்போல பிரபஞ்சமாயாவலையிற்பட்டுத் திரிந்து மனமிளைக்காமல் குருநாதனைத்தேடிக்கண்டு அவன்றிருவடியினை வணங்குவது எக்காலம். எ-று. (26)

எண்ணா றுகமிருந்து மெய்தாத் வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) விபூதியினையணியாது அநேகமான யுகங்களிருந்தாலும் அடையக்கூடாத மோட்சத்தினையடைய வெண்மையான விபூதியினைத் தேகமனைத்தினிலும் சண்ணித்துக்கொண்டு (அதனால்) மோட்சவீட்டினில் வாழ்ந்திருப்பது எக்காலம். எ-று. (27)

அவ்வேடம் பூண்டிங் கலைந்து திரியாமற்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) புறச் சமயத்தினர்க்குரிய அப்பிரயோசனமான வேடத்தினைத்தரித்து இவ்வுலகில் நாய்போல அலைந்து உலவாம லைசைவசமயத்திற்குரிய (விபூதிருத்திராட்சமான மங்களவேடந்த ரித்துச் சிவஞானச்செல்வத்தில் சிறப்படைந்து இருப்பதெக் காலம் எ-று. (28)

ஆண்டருக்கா நஞ்சருந்தி யம்பலத்தி லாடுசிவன் [காலம்.
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டு செய்வ தெக்

(பொ-ரை.) தேவர்களனைவரும் சாகாதிருக்கும் பொருட்டு விஷத்தினையுண்டு தில்லைச் சிற்றம்பலத்திலே ஆனந்த நிர்த்தனஞ் செய்யும் நடராஜமூர்த்தியின் அடியார்கட்கு அடியனென அவர் அவர்கட்கு பணிசெய்வது எக்காலம் எ-று. (29)

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்து மால்காணுக்
குன்றில் விளக்கொளியை கூறுவது மெக்காலம்.

(பொ-ரை.) விஷ்ணுவானவர் பன்றியுருவினையெடுத்து நூறு வருஷகாலம் பூமியினை யகழ்ந்தும் காணப்படாத திருவண்ணமலையின் முடியில் விளங்கும் ஞானதீபத்தினை வாயாரச்சொல்வதும் எக்காலம். எ-று. (30)

தித்திக்குந் தெள்ளமிர்தை சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்.

(பொ-ரை.) சிவனடியார்கள் உள்ளத்தில் தித்திக்கும் படியான தெள்ளியதேவாமிர்தம் போன்றவனை வேதாந்தத்தைக்கடந்த வேதாந்த தரமாகிய சித்தாந்தத்திலே விளங்கும் உட்பயனை சத்

தாத்துவித சித்தாந்த முத்தியினுக்கு வித்தினை எத்தேவர்கட்கும் முதலாகத்தியாணிப்பது எக்காலம் எ-று. (31)

வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்த நிஷ்டையிலே
ஏகாந்த மாக விருப்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மகோடிகட்குப் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ள உபநிடதங்களுடன் கூடிய வேதமனைத்தையும் விட்டுச் சத்திநிபாத உத்தமர்கட்குச் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ள சிவாகமத்தில் குறித்த நிஷ்டையினில் தனியாகவிருப்பது இனியெக்காலம் எ-று. (32)

மற்றிடத்தைத் தேடியென் றன் வாழ்நாளைப் போக்காம
லுற்றிடத்தை தேடி யுறங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) பகிர்முகமாகவுள்ள அந்நிய பிரபஞ்சத்தினைத் தேடி எனது ஆயுள் நாள்களை வீணாக்காமல் அந்தர்முகமாயுள்ள அந்நிய பிண்டத்தினைத்தேடி யுண்மையறிந்து சிவானந்த யோக நித்திரையிலிருப்பது எக்காலம். -எ-று. (33)

இன்றுளோர் நாளை யிருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம்.

(பொ-ரை.) இன்றையதின மிருப்பவர் அடுத்தநாளிருப்பதுவும் நிச்சயமில்லையெனவே அறிவாளிகள் கூடிய சபையிலேயுள்ள பெரியோர்கள் சொல்லும் தன்மையினைத் தெரிவது எக்காலம்.

கஞ்சா வபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
பஞ்சா வமிர்தம் பருகுவது மெக்காலம்.

(பொ-ரை.) அறிவை மயக்கும்விபரீதங்களிற் புத்தியினைச்செலுத்துகின்ற கஞ்சா, அபினி, கள் இவைகளைத் தின்றும், குடித்

தூ மயக்கமடையாமல் சிவபெருமானுக்கு அபிடேகித்த தயிர், பாய், நெய், சருக்கரை, பழம் கூடிய பஞ்சாமிருதத்தினை உண்ணுவதும் எக்காலம். எ-று. (35)

செஞ்சுக்கி லுற்றிரண்ட ஜெனனமோ க்ஷம்பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம்.

(பொ-ரை) கருப்பாசயத்தினில் சிவந்த இரத்தத்தினால் வடிவெடுத்த பிறப்பானது மோட்சமடையவே பிரபஞ்ச சம்பந்தமாகவுள்ள மாயாகாரிய துன்பத்தினின்று நீங்கித் தேவரீர் திருவடியினை யடைவ தெக்காலம்-எ-று. (36)

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பா ரிடந்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) வயிற்றினுக்கென்று சாப்பாடுதேடி அது கொடுப்பாருடைய வீடுதோறும் மனம்புழுங்கித்திரிதலைத் தடுத்துக்கொண்டு இருக்குமிடந் தேடிவர வாழ்தல் எக்காலம்-எ-று. (37)

ஆடுகின்ற சூத்திரந்தா னற்றளவு மேதிரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மெக்காலம்.

(பொ-ரை) உலகத்தில் சஞ்சரிக்கின்ற இத்தேகமானது சாகுமளவும் உலவி இறக்குநாளை யடைவதற்கு முந்தியே தேவரீரைத் துதிப்பது எக்காலம்-எ-று, (38)

நவசூத் திரவீட்டை நானென் றலையாமல்
சிவசூத் திரத்தைத் தெரிந்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) ஒன்பது துவாரங்களுடன் கூடிய உடலினை ஆன்மாவாகிய நானென்றலையாமல் சிவஞானபோத சூத்திரத்தினைப் படித்தறிவது எக்காலம்-எ-று. (39)

மறந்து மலசலங்கள் மாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்து னடியிணைக்கீழ் கலந்துநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) அறிவு மயங்கி மலமும் சலமும் தாமே வழியும்படி இறந்துபோகும் புழுக்கள் நிறைந்த தேகத்தினின்று நீங்கி நினது திருவருளில் மறைந்து தேவரீர் இரண்டு திருவடிக்கீழ்இரண்டறக் கலந்து தங்குவது எக்காலம்-எ-று. (40)

இம்மைதனிற் பாதகனா யிருவினைக்கி டாயெடுத்த
பொம்மைதனைப் போட்டுன்னைப் போற்றிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை.) இறப்பில் பாவியாக பூர்வ ஜென்மத்திற் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி யெடுத்த பொம்மையாகியஉடலை நீக்கிவிட்டுத் தேவரீரைத் தோத்தரித்து வாழ்வதுஎக்காலம்எ-று.

உப்பிட்ட பாண்ட முடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுக் காட்படுவ தெக்காலம்.

(பொ-ரை) உப்பினையடைத்துவைத்துள்ள பானை யுளுத்துப் போவதுபோல நிலையுற்றிராதபடி அழிந்துமறுபடியும்பிறவியெடுப் தன் முன்னரே கங்காநதியினைத் தரித்த சடாபாரத்தினையுடைய பரமசிவனுக்கு அடிமையாவது எக்காலம்-எ-று. (42)

சேவை புரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவைதனைக் கழித்துப் பயனடைவ தெக்காலம்.

(பொ-ரை.)ஆலய வழிபாடுசெய்து சிவலிங்கப் பெருமான்திரு வுருவத்தினைத் தரிசித்து மாதர் மயக்கத்தினை நீக்கி மோட்ச பிரயோசனத்தை யடைவ தெக்காலம்-எ-று. (43)

காண்டத்தை வாங்கிக் கருமேக மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம்.

(பொ-ரை) சமுத்திரத்தினின்றும், உப்புநீரைக்குடித்துகரிய மேகமானது திரும்பிநன்னீரைப்பொழிவதுபோல தேகத்தினின்றும் மலத்துடன் சம்பந்தித்த உயிர்நீங்கித் திருவருளினைப்பொழிந்து மேலான பதத்தினை யடைவது எக்காலம். எ-று. (44)

சோற்றுத் துருத்தியினைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊத்தைச் சடம்போட் டுனையடைவ தெக்காலம்.

(பொ-ரை) சாதத்தினை யடைத்துவைக்கும் பையாகிஉடலைத் தாங்கி யிளைத்துப்போகாமல் அங்நாற்றமுற்ற தேகத்தை விட்டுத் தேவரீரை யடைவதெக்காலம். எ-று. (45)

தொடக்கைச் சதமெனவே சுமந்தலைந்து வாடாமல்
உடக்கை கழற்றி யுனையறிவ தெக்காலம்.

(பொ-ரை) நரம்பாதிகளால் கட்டுப்பட்டுள்ள தேகத்தினைநிச் சயமென எண்ணித் தாங்கித் திரிந்து இளைக்காமல் ஒருங்கு கூடி யுள்ள தத்துவங்களை நீக்கித் தேவரீரைத் தெரிந்துகொள்வது எக் காலம். எ-று. (46)

ஆசைவலைப் பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்சமென்னும் ஆசையாகியமாயாவலையில்சிக் கிக்கொண்டழியாமல் நாத தத்துவத்திலே தோன்றும் அழகிய சிவச்சோதியிலிரண்டறக் கலந்து வாழுத லெக்காலம். எ-று. (47)

கூறரிய நால்வேதங் கூப்பிட்டுங் காணாத
பார ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) சொல்லுதற் கருமையான வேதங்கள் முறையிட்டும் அவற்றாற் காணப்படாது சிவாகமங்களா லறியத்தகுந்தபெரிய இரகசியப் பொருளாகிய சிவபெருமானைத் தரிசித்துக் கொண்டிருப்ப தெக்காலம். எ-று. (48)

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவா
யெல்லாப் பிறப்பி னிருளகல்வ தெக்காலம்.

(பொ-ரை) புல்லாகியும், மிருகமாகியும், புழுவாகியும், மனித வடிவாகியும் மற்ற எல்லாவகையான பிறப்புகளிலேயும்(பிறப்பதற் கேதுவாகவுள்ள ஆணவமலமாகிய இருளினின்று நீங்குவது எக்காலம். எ-று. (49)

தக்கும்வகைக் கோர்பொருளுஞ் சாராம லேநினைவில்
பக்குவம்வந் துன்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) திருவருள்கூடும் விதம் பிரபஞ்ச சம்பந்தமான ஒருபொளிலும் பற்றுவையாமல், அறிவின் கண்ணே, இருவினை யொப்படைந்துதேவரீர்திருவருளைத் தரிசித்துக்கொண்டிருப்பது எக்காலம். எ-று, (50)

பருவத் தலைவரொடும் பல்கியின்பங் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம்.

(பொ-ரை) ஆன்ம பரிபாகக் காலத்தி லாட்கொள்ளுந்தலைவ ராகிய பெருமானுடன் கலந்து பேரின்பம் கொள்வதற்கு (இருபத்தாறு வயதிற்கு மேற்பட்ட) தெரிவை யென்னும் வயதடைந்து திருவருளில் மயங்குவதும் எக்காலம். எ-று. (51)

தெரிவையுறாம் பக்குவத்தின் சீராட்டெல் லாமறிந்து
குருநவையறிந் தேநினைத்துக் கும்பிடுவ தெக்காலம்.

(பொ-ரை) தெரிவைப்பெண் தன் வயதில் உலகசீரனைத்தும் அறிந்து அனுபவித்ததுபோல சிறப்பனைத்தும் எனது பக்குவமான காலத்தி லனுபவித்துப் பின்னர் குருநாதனை விசாரித்தறிந்து தியானித்து வணங்குவது எக்காலம்-எ-று. (52)

வெம்படிக்கு மாதருடன் வாழ்ந்தாலு மன்னுபுளி
யம்பழமு மோடும்போ லாவதினி யெக்காலம்.

(பொ-ரை) உபத்திரவம் செய்யும் பெண்களுடன் கூடியிருந்தாலும் மனமான அ புளியமோடும் அதனுள் பழமும் எங்ஙனம் பற்றற்றிருக்குமோ அங்ஙனம் வாழ்ந்திருப்பது எக்காலம்-எ-று. (53)

பற்றற்ற நீரிற் படர்தா மரையிலைபோற்
சுற்றத்தை நீக்கிமனந் தூரநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்ச சம்பந்தமான பொருள்களில் ஆசையற்று ஜலத்திலே ததும்பிக்கொண்டிருக்கிற அழகியதாமரையிலை அந்நீரிற் பற்றற்றிருப்பதுபோல சுற்றத்தாரினின்று நீங்கி மனம் தாக்கற்று வாழ்தல் எக்காலம்-எ-று. (54)

சல்லாப லீலையிலே தன்மனைவி செய்தசுகம்
சொல்லாரக் கண்டெனக்குச் சொல்வதினி யெக்காலம்.

(பொ-ரை) சரசவார்த்தையுடன் கூடிய கலவிக் காலத்திலே தன்னுடைய நாயகிதந்த இன்பத்தினைப் போல தேவரீர் திருவருளுடன் கலந்தனுபவித்த பேரின்பத்தினை சொல்லமையக்கண்டு அடியேனுக்கு எடுத்துச் சொல்வது எக்காலம்-எ-று. (55)

மருவ வயற்புருடன் வருநேரங் காணாம
லுருகுமனம் போலெனுள முருகுவது மெக்காலம்.

(பொ-ரை) தன்னைக்களவாகப் புணரும் வேறு நாயகன் வர வேண்டிய காலத்தில் வரக்காணாதபோது ஒரு நாயகிக்கு இரங்கும் மனம்போல, அடியேனுடைய நெஞ்சு தேவரீரை நோக்கிக் கரைவது எக்காலம்-எ-று. (56)

தன்கணவன் றன்சுகத்திற் றன்மனம்வே றானதுபோ
லென்கருத்தி னுன்பதத்தை யேற்றுவது மெக்காலம்.

(பொ-ரை) தன்னுடைய சொந்த கணவனுடன் சுகத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிற வொருபெண் வேறொரு நாயகன் மீதுள்ள மோகத்தினால் தன்மனம் வேறுபட்டிருப்பது போல் பிரபஞ்ச போகங்களை யானனுபவிக்கிற காலத்தும் என் மனம் உன் வசமாகவிருந்து உருகுதல் எக்காலம்-எ-று. (57)

கூடிப் பிரிந்துவிட்ட கொம்பனையைக் காணாமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தைவைப்ப தெக்காலம்.

(பொ-ரை) வெகு காலமாகக் கலந்திருந்து திடீரென நீங்கிய தன் தனைவியைக்காணாமல் எங்குந்தேடிச் சஞ்சலப் படுபவன்போலத் தேவரீரிடத்து மனம் வைப்பது எக்காலம்-எ-று. (58)

எவ்வனத் தின்மோக மெப்படியுண் டப்படிபோல்
கவ்வனத்தி யானம் கருத்துவைப்ப தெக்காலம்.

(பொ-ரை) யவ்வர்ன வயதுடைய பெண்ணின்மீது ஆசை எங்ஙன முண்டாமோ அதுபோன்று மனத்தியானத்தில் பரமனை நெஞ்சில் வைப்பது எக்காலம்-எ-று. (59)

கண்ணு லருவி கசிந்துமுத்துப் போ லுதிரச்
சொன்னபரம் பொருளைத் தொகுத்தறிவ தெக்காலம்.

(பொ.ரை) கண்களினால் ஆனந்தக்கண்ணீர் அருவியினைப் போலக்கசிந்து முத்தினைப்போலச்சிந்தவேதாந்த தரத்தாற்புகழப் பட்ட சிவபரம்பொருளை ஆராய்ந்தறிவது எக்காலம்-எ-று. (60)

ஆக மிகவுருக வன்புருக வென்புருகப்
போகவனு பூதி பொருந்துவது மெக்காலம்.

(பொ-ரை) உடல் புளகிக்க, அன்புமேலிட, என்பு நெக்கு விடச் சிவபோகச் சிவானுபூதி நிலையினைப் பொருந்துவதும் எக் காலம்-எ-று. (61)

நீரிற் குமிழிபோ னிலையற்ற வாழ்வைவிட்டுன்
பேரிற் கருணைவெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம்.

(பொ-ரை) நீரினிலே யுதித்தொடுங்கும் குமிழியினைப்போல நிலையில்லாத வாழ்க்கையை வெறுத்துத் தேவரீர்மீது ஆனந்த வெள்ளம் என்னிடத்துத் ததும்புவது எக்காலம்-எ-று. (62)

அன்பை யுருக்கி யறிவைபதன் பேற்புகட்டித்
துன்ப வலைப்பாகத் தொடக்கறுப்ப தெக்காலம்.

(பொ-ரை) அன்பினைப்பெருக்கி யதன்வழியாக வறிவைச் செலுத்திப் பிரபஞ்சமுகமாகவுள்ள தீமையான மாயாவலையின்சம் பந்தத்தை யொழித்துக்கொள்வ தெக்காலம்-எ-று. (63)

கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழிசொரிய வன்புவைப்ப தெக்காலம்.

(பொ-ரை) பிறப்பினுக் கேதுவாகவுள்ள நெறியினைத்தெரி ந்து அந்நெறியினில் மனத்தினைச் செலுத்தாமல் விழிகளினின்

றும் அருவியினைப்போல நீர்வழிய தேவரீரிடத்து அன்பு பாராட்டுவது எக்காலம்-எ-று. (64)

தெளியத் தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) மனமானது அசைவற அசைவறநின்ற அவசரத்துக் கலக்கமற்ற சிவானந்தத்தேன் என்னுள் அடிக்கடி சொரிய அதனால் மனம் ஆனந்தங்கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (65)

ஆதார மூலத் தடியிற் கணபதியை
பாதார விந்தம் பணிந்துநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவேயுள்ள முக்கோணவடிவாகிய மூலாதாரத்தின் மத்தியிலெழுந்தருளியிருக்கும் ஓங்காரகணபதியின் திருவடித் தாமரையினை வணங்கியிருப்பது எக்காலம்-எ-று. (66)

மண்விளைந்த நற்கீற்றில் விளைத்திருந்த வேதாவைக்
கண்விளைந்து பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) மூலாதாரத்தின் இரண்டு விரற்கடைக்கு மேல் பிருதிவியின் கூறாகிய நாற்கோண வடிவாகிய சுவாதிட்டானத்தினடுவில் எழுந்தருளியிருக்கும் பிரமாவை உண்முகமாகக்கண்ணை வைத்துப்பார்த்து மனத்தே தரிசித்திருப்பது எக்காலம்-எ-று.

அப்புப் பிறைநடுவே யமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) சுவாதிட்டானத்தின்மேல்எட்டுவிரற் கடைக்குமேலுள்ள நாபிக்கமலத்தில் அப்புவின் கூறாகிய மூன்றாம்பிறை வடி

வாகிய (மணிபூரத்தினடுவில்) எழுந்தருளியிருக்கும் விட்டுணுவை உப்பிட்ட குடுக்கைபோன்ற (நிலையற்ற) தேகத்தினுள்ளே தெரிந்து அறிந்து எக்காலம்-எ-று. (68)

மூன்று வளையமிட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்று முருத்திரனைத் தொழுதுநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) (மணிபூரத்தின்மேற் பத்துவிரற்கடை பிரமாணமுள்ள இருதயத்தில்) தேயுவின் கூறாகிய முக்கோண வடிவாகிய (அநாகதத்தினடுவில்) எழுந்தருளி யிருந்த உருத்திர மூர்த்தியை வணங்கி நிற்பது எக்காலம்-எ-று, (69)

வாயுவறு கோணமதில் வாழு மகேச்சுரனைத்
தோயும் வகைகேட்கத் தொடங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) (அநாகதத்தின்மேற் பத்து விரற்கடை பிரமாணமுள்ள கண்டத்தில்) வாயுவின் கூறாகிய அறுகோண வடிவாகி (விசுத்தியினடுவில் எழுந்தருளியிருக்கும் மகேச்சுரனை அடையும் விதம் விசாரிக்க வாரம்பிப்பது எக்காலம்-எ-று. (70)

வட்டவழிக் குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்டவழி தேடக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ-ரை) (விசுத்தியின்மேல் பன்னிரண்டு விரற்கடைபிரமாணமுள்ள லலாடத்தில்) ஆகாயகூறாகிய வட்டவடிவாகிய (ஆஞ்ஞையினடுவில்) எழுந்தருளியிருக்கும் சதாசிவத்தினை நெருங்கும் வழிதேடக் கிருபை புரிவது எக்காலம்-எ-று. (71)

உச்சிக் கிடைநடுவே யோங்குகுரு பதத்தை
நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி யெக்காலம்.

(பொ-ரை) (ஆறுதாரத்திற்கும் மேற்பட்ட உச்சியின் மேல் விளங்காநின்ற (சிவமாகிய) குருவின் றிருவடியை (மனத்தில்தியா னஞ்செய்து கொண்டிருந்து) பொருந்துவது எக்காலம்-எ-று. (72).

பாராகிப் பார்மீதிற் பஞ்சவர்னந் தானுகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) (முதல்வன் சந்நிதானத்தில் காரியப்படுந்தன்மை யால்) பிருதுவியாகியும், அப்பிருதிவியுடன் ஐந்து வர்ணங்களோடு கூடிய ஐம்பூதமாகியும், அவற்றையுங் கடந்த வேறு பொருளாகித் தேவரீர் உதித்த காரணத்தினையறிவ தெக்காலம்-எ-று. (73)

கட்டறுக்க வொண்ணுக் கருவிகர ணுதியெல்லாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவது மெக்காலம்.

(பொ ரை) பிரித்தற்கேலாத புறக் கருவிகளையும், அந்தக்கர ணமாதியவற்றையும் காரிப்படாதபடிச் செய்து சிவயோகநிஷ்டை யிலே அருட் சுழுத்தியிலே யிருப்பது எக்காலம்-எ-று. (74)

கள்ளக் கருத்தையெல்லாங் கட்டோடு வேரறுத்திங்
குள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) (உலகத்தினடிக்கும்) வஞ்சகமான எண்ணத்தினை முழுவதும் அடியோடு நீக்கி இவ்விடத்து (சிவபெருமானே தெய் வமெனும்) சத்தியக்கருத்தைத் தெரிந்து வாழ்வது எக்காலம்எறு.

அட்டகா சஞ்செலுத்து மவத்தைச் சடசலத்துடனே
பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) வீணான ஆடம்பரங்களைநடத்தும் துன்பத்திற்கே துவாகவுள்ள தேகத்துடனே அனுபவித்த செய லத்தனையையும் கூர்ந்தாலோசித்து உண்மை யறிவது எக்காலம்-எ-று. (76)

அறிவுக் கருவியுட னவத்தைபடும் பாட்டையெல்லாம்
பிறியவுட னிறுத்திப் பெலப்படுவ தெக்காலம்.

(பொ-ரை) அறிதற்கேதுவாகவுள்ள தத்துவங்களுடன் துன்பத்தை யனுபவிக்கும் செயலை யெல்லாம் நீங்கித் திருவருளுடன் நிலைபெறச்செய்து ஆதாரப்படுவது எக்காலம்-எ-று. (77)

பூதம் பொறிகரணம் போந்தவிந்து நாதமுமாய்
பேதம் பலவிதமும் பிரித்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) ஐம்பூதம், ஐம்பொறி, நாற்கரணங்களுடன் சம்மதித்த சிவமும், சத்தியுமாய்ப் பேதப்பட்ட பலவகை யனைத்தையும் உண்மை விசாரித்து வெவ்வேறாகப்பகுத்து நிச்சயந்தெரிவது எக்காலம்-எ-று. (78)

தோன்றாசை மூன்றுந் தொடர்ந்துவந்து சுற்றாமல்
ஊன்றாசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்.

(பொ-ரை) அவ்வவ்வமயங்களில் உண்டாகா நின்ற மண், பெண் பொன் என்னும் மூன்றாசை தொடர்ந்து வந்து சூழ்ந்து கொள்ளாமல் அங்ஙனம் உண்டாதற்குக்காரணமாயுள்ள அராகமென்னுந் தத்துவ ஆசையினடியினை முற்றமொழிப்ப தெக்காலம்.

புன்சனனம் போற்றாமுன்னே புரியட்டம் போகிலினி
யென்சனன மீடேற மென்றறிவ தெக்காலம்.

(பொ-ரை) எடுத்தசெனனத்திலேயே அடையவேண்டியவற்றை அதிசீக்கிரமடையாமல் காலங்கழித்து வந்து இவ்வற்ப சென

னத்தினை நிலையென வெண்ணிக் காத்துவரு முன்னரே (புரியட்டகமாகிய) சூக்குமதேகம் நீங்கி விடில் இனி யெந்தச் செனனத்தினைக் கொண்டு நித்திய வாழ்வடைதல் என்ன அறிவது எக்காலம்-எ-று. (80)

நட்ட னடுவினின்று நற்றிரோ தாயியருள்
கிட்டவழி காட்டிக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாவின் இருதயத்திலேயிருந்து பின்னர் அருளைவிளைவிக்கும் நல்ல திரோதாயி யென்னுஞ் சத்தியானது, சிவபெருமான் திருவருளினை யடைய நெறியினைத்தெளிவித்துக் கருணைபுரிவதெக்காலம்-எ-று. (81)

நானேநா னென்றிருந்தேன் நடுவினிற் கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவனென்ப தெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாவாகிய நான் பிரமமாகிய நானென்றிருந்தேன் அவ்வமயம் எனதிருதயத்தில் திருவருட்சத்தி வலிய வெளிவந்து எனக் கன்னியமாகிய முதல்வ னொருவனைக் கூட்டிவைப்பனென்ப தெக்காலம்-எ-று. (82)

அடர்ந்த மனக்காட்டை யஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்து தொடர்ந்துவெட்டிச் சுடுவதினி யெக்காலம்.

(பொ-ரை) அஞ்ஞானத்தால் நெருங்கிய மனமாகிய வனத்தினைப் பஞ்சாக்கர மென்னும் வாளாயுதத்தினாலே அடிக்கடிச் சேதித்து மறுபடியும் தலையெடாதபடி சிவத்தியானத்தால் கொளுத்திவிடுவது எக்காலம்-எ-று. (83)

ஐந்து பொறிவழிபோ யலைந்துமிந்த பாழ்மனதை
வெந்துவிழப் பார்த்து விழிப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) பஞ்சேந்திரியங்களின் வழியாக சென்றலைந்த இந்த வீண் மனத்தினைத் தலையெடாதபடி யிருக்கக்கண்டு திருவருளினில் பார்த்துக் கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (84)

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லோருந் தான்மாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்ச சம்பந்தமான இனமனைத்து நீங்க, தன்னுடன் சேர்ந்திருக்கத் தத்துவமனைத்துமொடுங்க, கோபமுங்கெட்டுப்போகத் திருவருளிற் கலந்திருப்பது எக்காலம்-எ-று. (85)

அமையா மனதமைய மானந்த வீடுகண்டங்
கிமையாம னோக்கி யிருப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) ஒருவழியிலும் ஒடுங்காத மனமானது, திருவருளினால் கிடைக்கும் சிவானந்த வீட்டினைத் தரிசித்து அவ்விடத்தில் இமைகொட்டாது தரிசித்து வாழ்வது எக்காலம்-எ-று. (86)

கூண்டுவிடுஞ் சீவன்மெள்ளக் கோட்டாவி கொண்டாற்போற்
மாண்டுவிடு முன்னேனான் மாண்டிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) தேகத்தினைவிட்டு நீங்கத்தகுந்த சீவனானதுமெதுவாக கொட்டாவி விடுதல்போலத் தேகத்தினை விட்டு நழுவு முன் நான் பிரபஞ்ச சேஷ்டையினின்று நீங்கித் தன்னை மறந்திருப்பதெக்காலம்-எ-று. (87)

ஊனிறைந்த காய முயிரிழந்து போகுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்.

(பொ-ரை) மாமிசம் பொதிந்த உடலினின்றும் உயிர்வெளிப்பட்டுப்போகு முன்னர் நான் அகங்காரமற்று வாழ் நாளடைவது எக்காலம்-எ-று. (88)

கெட்டு விடுமாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்னென்னைச் சுட்டிருப்ப தெக்காலம்."

(பொ-ரை) மாயையால்அழியு மனிதர்கள்இறுமாப்புவார்த்தைகள் பேசிக்கொண்டுவந்து எனதுடலைக் கொளுத்திவிடு முன்னர் பிரபஞ்சச் சுட்டினை யொழித்து அந்தர் முகமாக என்னுட்குறித்து நோக்கிக் கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (89)

தோலேணி வைத்தேறித் தூரகடந் தெய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம்.

(பொ-ரை) தோலினாகிய உடலாகியஏணியினை யாதாரமாகக் கொண்டு பலதேயஞ்சென்று இளையாமல் மெய்கண்ட சாஸ்திர நூல்களாதாரமாகச்சென்று திருவருளைத் தரிசிப்பது எக்காலம்.

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடி கண்மூடி தழுவிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) வாயினையும் கண்களையுமாத்திர மூடிக்கொண்டு மனமடங்காமல் மயக்கத்தினையடைந்து வாழாமல்திருவருட்சத்தியுடன் அதீதமாகிய கண்ணைச்செத்லுதி அருளையனுபவித்துஇருப்பது எக்காலம்-எ-று. (91)

காசினியெ லாநடந்து காலோய்ந்து போகாமல்
வாசி தனிலேறி வருவதினி யெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்சமுழுது மலைந்து உண்மைதேறாது நடை இளைத்துப்போகாமல் உசுவாச நிசுவாச மென்கிற வாயுவாகியகுதிரையின் மேலிவர்ந்துஅதனைத் தன்வசப்படுத்தி வருவதுஎக்காலம்.

ஒலிபடருங் குண்டலியை யுன்னியுணர் வாலெழுப்பிச்
சுழுமுனையின் ருள்திறந்து தாண்டுவது மெக்காலம்

(பொ-ரை) மூலாதாரத்தினின்று மெழும்பிப்பிரகாசத்துடன் விசிரிம்பிக்கும் சுத்தமாயாரூபமாகிய குண்டலி சத்தியைத் தியானித்து அறிவைக்கொண்டு உயரவெழச்செய்து அது சுழுமுனை வரையிற்செல்ல அங்கு மறைவு நீங்கித் திருவருள் தோன்றுவதும் எக்காலம்-எ-று. (93)

இடைபிங் கலைநடுவே யியங்குஞ் சுழுமுனையில்
தடையறவே நின்று சலித்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) வலது மூக்கின் வழியாக வரும் இடைகலைக்கும் இடதுமூக்கின் வழியாகவரும் பிங்கலைக்கும் நடுவேயுள்ள சுழுமுனை நாடியில் சுவாச மிரண்டினையும்விடாது உள்ளேயிழுத்து அசைவற விருந்துகொண்டிருப்பது எக்காலம்-எ-று. (94)

மூல நெருப்பைவிட்டு மூட்டிநிலா மண்டபத்தில்
பாலையி றக்கியுண்டு பசியொழிவ தெக்காலம்.

(பொ-ரை) மூலாதாரத்திலுள்ள அக்கினியினை எழுப்பிமேலே சந்திர மண்டலத்தில் தாக்கச்செய்து அந்நிலாவினிடத்தினின்றும் அமுதத்தினைப்பெய்யச்செய்து உண்டுபசிதீர்ந்திருப்பது எக்காலம்-எ-று. (95)

ஆக வெளிக்குள்ளே யடங்காப் புரவிசெல்ல
ஏக வெளியி லிருப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) தேகத்தினுள்ளே இருதயா காயத்தில் கட்டுக்கு அடங்காத வாசியென்னும் குதிரையானது வெளியேறாதுஉள்ளே செல்ல அப்போது அங்குத்தோன்றும் சிதம்பராகாய சொரூபமாயதிலிருப்பது இனி எக்காலம்-எ-று. (96)

பஞ்சரித்துப் பேசும் பலகலைக்கெட் டாப்பொருளிற்
சஞ்சரித்து வாழ்ந்து தவம்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை) மெய்யினை புணர்த்தாது சொற்சாலமாகவிஸ்தார மாய்ப்பேசும் பலவகைப்பட்ட நூல்களுக்கெட்டாத உண்மைப் பொருளாகிய திருவருளினில் கலந்து வாழ்ந்தவரும் தவமடைவ தெக்காலம்-எ-று. (97)

மலமுஞ் சலமுமற்று மாயைபற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) உணவினை நீக்குதலினாலே மலமும் சலமும் நீங்கி பிரபஞ்ச பற்றுவையா திருத்தலினால் மாயையினின்று நீங்கி, நல்ல தென்று சொல்லப்படுகிற கொண்டாட்டங்களும், சாதியபிமான மும், நீங்கி நான் தனித்திருப்பது எக்காலம்-எ-று. (98)

ஓடாம லோடி யுலகைவலம் வந்துசுற்றித்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்.

(பொ-ரை) அன்பின் வழியே யாத்திரை செய்யாமல், வே டிக்கையாக யாத்திரை புரிந்து பூமிமுழுவதும் சுற்றிச் சிவபெரு மானை முன்னிட்டுத் தேடாமல் எனது சிதாகாயத்துள்ளே தரிசிப் பது எக்காலம்-எ-று. (99)

அஞ்ஞானம் விட்டே யருண்ஞானத் தெல்லைதொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்ச பற்றாகிய அஞ்ஞானத்தினின்று நீங்கித் திருவருண்ஞானத்தினைப்பற்றிஉண்மை ஞானத்தினைப்பயப்பிக்கும் மோட்சத்தினையடைந்துசிவனடியனென வெளிவருவதெக்காலம்.

வெல்லுமட்டும் பார்த்து வெருளியெலாம் விட்டகன்று
சொல்லுமட்டின் சிந்தை செலுத்துவது மெக்காலம்.

(பொ-ரை.) தத்துவங்களைச் செயிக்கும் வரையில் செயித்துக் கோபமனைத்தினையும் நீக்கித் (திருவருளினை) எட்டும் வரையில் மனத்தினை விடுவது எக்காலம்-எ-று. (101)

மேனாட் பதிந்தபடி மெய்ப்பொருளை யுள்ளிருத்தி
நாளாம் பதிந்து காண்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை.) மேன்பட்ட திருவருணிலையினை விசாரித்துஉண்மைப் பொருளாகிய சிவபெருமானை மனத்திருத்திச் சிவசாயுச்சியத்தினை நாடியதனை யானடைவது எக்காலம்-எ-று. (102)

எண்ணுக் கடங்கா வெண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணுட் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம்.

(பொ-ரை.) சிவபெருமானைத் தரிசித்தற்கேது நினைவில் எண்ணுதபடி அறிவிற்கு அதிதூரமாக இருக்கும் நூல்களை நினைத்து நினைத்து வீணாகப்பாராமல் கண்ணுக்குள் ஒளியினைப்போல மனத்தின் கண்ணே சந்தேகமின்றித் தெரிந்துகொள்வது எக்காலம்-எ-று. (103,

என்னை யறிந்துகொண் டேனெங்கோமா னொடிருக்குந்
தன்மை யறிந்து சமைந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) ஆன்மா வின்னதெனத் தெரிந்துகொண்டு அதன்பின் எமது தலைவனாகிய சிவபெருமானுடன் இரண்டறக் கலந்திருக்கும் தன்மையினைத் தெரிந்து அமைதல் எக்காலம் எ-று. (104)

ஆறுதா ரங்கடந்த வானந்தப் பேரொளியை
பேறாகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) மூலாதாரமுதல் ஆஞ்ஞையீறாகவுள்ள ஆறு தாரங்களையுங் கடந்த சிவானாத சொரூபமாயுள்ள அருட் பெருஞ் சோதியை நான் அடையும் பாக்கியமாகத் தரிசித்து அதனையடைந் திருப்பதெக்காலம்-எ-று. (105)

ஆணவ மாயத்தா லழிந்துடலம் போகாமுன்
காணுதலா லின்புமுற்றுங் கண்டறிவ தெக்காலம்.

(பொ-ரை.) ஆணவமலத்தின் மயக்கத்தால் தேகம் அழிந்து படு முன்னே சிவபெருமானைத்தரிசனம் செய்தலால் பேரின்ப மடைந்து உண்மை தெரிவது எக்காலம்-எ-று (106)

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீங்கிருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) ஆணவாதி மலங்களின் சம்பந்தத்தால் காரியப் பட்டு உருவாகிய இத்தேகத்தினை அத்தேகத்தினுள்ள சீவகரணங்களைச் சிவகரணங்களாக்கிச் சுத்தமா யிருக்கக்கண்டு செயலற்றிருப்ப தெக்காலம்-எ-று. (107)

முன்னை வினைகெடவே மூன்றுவகை காட்சியினால்
உன்னை வெளிப்படுத்தி யுறுவதினி யெக்காலம்.

(பொ-ரை.) பூர்வபிராரத்துவம் நீங்கவே தத்துவதரிசனம், ஆன்மதரிசனம், சிவதரிசனம் என மூவகைப்பட்ட காட்சிகளினால் தேவரீரை என்னிடத்துநின்றுந் தரிசிக்கவேதுவாகி யடைவது எக்காலம்-எ-று. (108)

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம்.

(பொ-ரை.) கண்ணினுள்ளே யோர் சிற்றொளி தங்கியிருப்பதும் மனமொன்றை தெரிந்து கொண்டதுவும் ஆகாயத்தில் அருட்சோதியைத் தரிசித்ததும் ஆகிய உண்மை எனக்குப் புலப்படுவது எக்காலம்-எ-று. (109)

கனவுகண்டாற் போலெனக்குக் காட்டிமறைந்தேயிருந்த
நினைவைப் பரவெளிமேல் நிறுத்துவது மெக்காலம்.

(பொ-ரை.) கனவுகண்டு உடனே மறந்தாற்போல அடியேனுக்குத் திருவருளினை வெளிப்படுத்தி உடனேமறந்திருந்ததற்கேதுவாகிய எண்ணத்தினை அங்ஙன மறையாதபடி சிதாகாயத்தினிறுத்துவதும் எக்காலம்-எ-று. (110)

ஆரென்று கேட்டதுவு மறிவுவந்து கண்டதுவும்
பாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தெக்காலம்.

(பொ-ரை.) தத்துவங்களை யார்யார் என்று விசாரித்துக் கொண்டேபோனதும் அவ்விசாரணை முடிவில் அறிவாகிய ஆன்மாவைத் தரிசித்தும் அவ்வான்மா தனக்கன்னியமாக முதல்வனொருவனுண்டெனப் பரமான்மாவைப் பாரென்று சொன்னதுவுமாகிய உண்மையினை விசாரித்தறிவதெக்காலம். எ-று. (111)

நினைக்கு நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் கண்டுகண்ணில் முளைத்தெழுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) எண்ணும் எண்ணங்களிலிருந்து எண்ணுவிக்கும் வியாபகமான பரிபூரணமாச் பொருளை சுழுமுனைக்குமேலே தரிசித்து ஞானக்கண்ணில் தோன்றும் படிச்செய்வதெக்காலம்-எ-று.

முப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழா யன்புசெய்வ தெக்காலம்.

(பொ-ரை.) பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை ஆகிய மூன்றும் சூனியமாகி அதாவது அவைகளின் காரியம் தோன்றாமல் இவைகட்கு முதலாவிருந்த விந்துதத்துவமும் சூனியமாய் அதன் மேலுள்ள நாததத்துவமும் சூனியமாய் இவற்றைக்கடந்த சிவத்தினிடத்திலன்புபாராட்டுவது எக்காலம்-எ-று. (113)

சீயென் றெழுக்து தெளிந்துநின்ற வான்பொருளை
நீயென்று கண்டு நிலைபெறுவ தெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்சத்திளைச் சீயெனவிகழ்ந்து என்னுளுதித்து மனத்தினில் விளங்காநின்றஉயர்ந்த பரம்பொருளைத் தேவரீரென்னத் திட்முறுவது எக்காலம்.எ-று. (114)

வவ்வெழுத்து மவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெழுத்தும்
யவ்வெழுத்தி னுள்ளே யடங்கிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை.) சத்திசொரூபமாகிய வகரவெழுத்தும் மலசொரூபமாகிய மகரவெழுத்தும் அஞ்ஞானத்திற்கு ஓர் வாளாயுதம் போன்ற சிவசொரூபமாகிய சிகரவெழுத்தும் ஆன்மசொரூபமாகிய யகரவெழுத்தில் சூக்குமமாக வடங்கிநிற்குந் தன்மையெனக்குத் தோன்றுவது எக்காலம்-எ-று. (115)

எழுத்தெல்லா மாண்டிறந்தே யோகமாய் நின்றதிலே
அழுத்தமாய்ச் சிந்தைவைத் தன்புகொள்வ தெக்காலம்.

(பொ-ரை.) எழுத்து வடிவாக விளங்குகின்ற அபரஞானமனைத்து நீங்கிப் பரஞானத்தில் தனியேநின்ற சிவத்திலே அசையாதபடி எண்ணம் வைத்து அன்படைவது எக்காலம்.எ-று. (116)

அருவாகி யுருவாகி யாதியந்த மாகிநின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்.

(பொ-ரை.) நிஷ்களமாகிச் சகளமாகி எவற்றிற்கு முதலுமுடிவுமாகி நிலைபெற்ற ஆசாரியமூர்த்தியாகி எழுந்தருளி வந்து அடியேனை அடிமையாக வாட்கொள்வது எக்காலம். எ-று, (117)

நானென் றறிந்தவனை நானறியாக் காலமெல்லாம்
தானென்று நீயிருந்த தனையறிவ தெக்காலம்.

(பொ-ரை.) நானென்பது இன்னதென்று அறிந்துகொண்ட ஆன்மாவை நான் தெரிந்துகொள்ளாத காலத்தில் அந்த ஆன்மாவே தானாகத் தேவரீர் அத்துவிதமாக விருந்ததன்மையினை யறிந்து கொள்ளுதல் எக்காலம். எ-று. (118)

என்மயமாய்க் கண்டதெல்லா மெண்ணியெண்ணி பார்த்தபின்பு
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்ப தெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச முழுவதும் ஆன்மசொரூபமாகக்கண்டதெல்லாம் ஆலோசித்து ஆலோசித்துத் திருவருளை முன்னிட்டுப் பார்ந்பிறகு அவையனைத்தும் சின்மயமாகத் தரிசித்து அதிலே பொருந்தி வாழ்த லெக்காலம். எ-று. (119)

ஒளியி லொளியா முருப்பிறந்த வாறதுபோல்
வெளியில் வெளியான விதமறிவ தெக்காலம்.

(பொ-ரை.) பூதப்பிரகாசத்தில் அருட்பிரகாசமாக வடிவு தோன்றியவாறு பூதாகாயத்தில் சிதாகாய சொரூபமான வகை தெரிவது எக்காலம். எ-று. (120)

ஒளியிட்ட மெய்ப்பொருளை யுள்வழியி லேயடைந்து
வெளியிட்டுச் சாத்திவைத்து வீடுறுவ தெக்காலம்.

(பொ-ரை.) சோதி சொரூபமாயுள்ள உண்மைச் சிவத்தை மனத்தின்கண்ணே வைத்துப் பிரகாசிக்கச்செய்து மவுனத்தினிறுத்திச் சிவபே றடைவது எக்காலம். எ-று. (121)

காந்தம் வலித்திரும்பைக் கரத்திழுத்துக் கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்.

(பொ-ரை.) காந்தமானது வலிய இரும்பினைத் தன்வசம்பண்ணிக்கொண்டது போலத் தேவரீர் அடியேன் பால் வலிய ஆவேசித்துக் கருணையாற் பிடித்திழுத்துத் தேவரீர் பதத்தில் சேர்ப்பது எக்காலம். எ-று. (122)

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி யெக்காலம்.

(பொ-ரை.) எதினும் பற்றற்ற பைத்தியத் தன்மை கொண்டு, பிரணவத்தினைத் தியானித்து நடைப்பிணம்போலச் சஞ்சரிப்பதெக்காலம். எ-று. (123)

ஒழிந்த கருத்தினைவைத் துள்ளெலும்பு வெள்ளெலும்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச வாசனையினின்று நீங்கிய மனத்தினை நிலையாகவைத்து உடலின் கண்ணேயுள்ள எலும்பனைத்தும் வெள்ளையெலும்பாகும்படி இரத்த நீங்கிய நடைப்பிணம்போல் வாழ்ந்து உனைத்தரிசிப்ப தெக்காலம். எ-று. (124)

ஆதிகபி லர்சொன்ன வாகமத்தின் சொற்படியே
ச்ாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம்.

(பொ-ரை.)பூர்வ காலத்தில் கபிலதேவர் அகவலாகியநூலின் படியே சாதிபேதம் பாராட்டாமல் உலாவித் திரிவது எக்காலம்.

சூதுங் களவுந் தொடார்வினையுஞ் சுட்டக்கா
லூதுங் துருத்தியைப்போட் டுனையடைவ தெக்காலம்.

(பொ-ரை.) வஞ்சனைச் செயலையும், திருட்டுத் தொழிலினையும், தொடர்ந்து வருகின்ற வினைகளையும் நீக்கிக்கொண்டால்,உலைக்களத்துவைத்து ஊதும் தோற்பையினையொத்த உடலை நீங்கித் தேவரீரை யடைவது எக்காலம். எ-று. (126)

ஆசைவலைப்பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசைமணித் தீபத்தி லொன்றிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச ஆசையாகிய வலையென்னும் பாசத்தில் சிக்கிக்கொண்டு அழியாமல் மணியினைப்போலச் சப்திக்கும் நாத தத்துவத்தில் விளங்கும் அருட்சோதியிலே கலந்து நிற்பது எக்காலம். எ-று. (127)

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்தசென்மம் போதுமென்ப தெக்காலம்.

(பொ-ரை.) கல்லாகியும், மரமாகியும், மச்சமாகியும், பட்சிகளாகியும், புல்லாகியும், அதுகாறும் பிறந்த சென்மங்களே போதும் இனிக்கீழிட்ட சென்மங்கள் வேண்டுவதில்லையென்பது எக்காலம்

தங்கும்வகைக் கோர்பொருளுஞ் சாராம லேங்கினைவில்
பக்குவமா நின்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) அருளானது எனக்கு உண்டாகும் விதமாகப் பிரபஞ்ச சம்பந்தமான ஒரு பொருளினிடத்தும் பொருந்தாமல் மனத்தின்கண்ணே தகுதியாகத் தேவரீர் திருவருளினைத் தரிசித்துக் கொண்டிருப்பதெக்காலம். எ-று. (129)

தூறோடிசைந்து சுழன்றுவருந் தத்துவத்தை
வேறோடிசைந்து விளங்குவது மெக்காலம்.

(பொ-ரை.) பிரபஞ்ச சேற்றிலழுந்தி எந்நாளும்விஷயங்களில் திரிந்துகொண்டிருக்கிற தத்துவத்தினை அடியோடே கிளர்ந்து நினது திருவருளிலேபிரகாசித்துக்கொண்டிருப்பது எக்காலம்எ-று

பாசநடு வேறிப் பாய்ந்தெழுந்த சித்திரத்தை
ஏசநடு மூலத் திருத்துவது மெக்காலம்.

(பொரை.) நமசியென்கிற வடியினடுவிலிருக்கிற மகரமென்கிற பாசத்தால் விளைந்த பிரபஞ்ச சித்திரத்தின் வெறுத்துவிட்டு மற்றைய விரண்டினையும் மூலாதாரத்திலேவைத்துத்தியானிப்பது எக்காலம். எ-று. (131)

ஓரின்பங் காட்டு முயர்ஞான வீதிசென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ-ரை. ஒப்பற்ற பேரின்பத்தினைக்கொடுக்கும் மேன்மையான சித்தாந்த ஞானவீதியிலே சென்று மோட்ச வீட்டினைத் தரிசித்துக்கொண்டிருப்ப தெக்காலம். எ-று. (132)

காரணமாய் வந்தென் கருத்தி னுரைத்ததெல்லாம்
பூரணமா கக்கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) 'பக்குவங் காரணமாகவெழுந்தருளிவந்து அடியேன் மனத்தில் பதியும்படி உபதேசித்தன வெல்லாம் பூர்த்தியாகவனுபவித்துத் தேவரீரைத் தோத்தரித்துக்கொண்டிருப்பது எக்காலம்-எ-று. (133)

ஆயுங் கலைகளெல்லா மாராய்ந்து பார்த்ததற்பின்
நீயென்று மில்லா நிசங்காண்ப தெக்காலம்.

(பொ-ரை.) ஆராயவேண்டிய சாத்திரங்களையெல்லாம் விசாரித்துணர்ந்த பிறகு தேவரீர் எக்காலத்தும் எனக்கு அந்நிய மில்லாத உண்மையினைத் தெரிந்துகொள்வதெக்காலம்-எ-று. (134)

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) என்னை இலட்சியமாக வாட்கொண்டு சிவனடியாரிற்சேரும் குலமீந்த எனது தலைவனை நீங்காமல் கலந்து என்னுடைய பிறப்பினை யொழித்துக்கொள்ளுதல் எக்காலம்-எ-று. ().

மத்தடுத்து நின்று மருளாடு வார்போலே
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) உன்மதங் கொண்டிருந்து மருட்சி யுற்றாடுவார்களைப்போல உன்னிடத்திலே மோகங் கொண்டிருத்தலினால் பைத்தியங் கொண்டவனைப்போல நின்று நினது திருவருளினை யடைந்திருப்பது எக்காலம்-எ-று. (136)

சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேவாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்.

(பொ-ரை) உயிர் நீங்கிய பிணமாகாமல் நடைப்பிணம் போலிருந்து உண்மையாச்சாரியர் அழகிய திருவடிக்கீழ் பூதாக்கினியில் வெந்து போகாமல் ஞானக்கினியால் வெந்திருக்க விரும்புவதும் எக்காலம்.எ-று. (137)

என்னையறி யாம லிருந்தாட்டுஞ் சூத்திரநின்
தன்னை யறிந்து தவம்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை.) எனக்குச்சிறிதுந்தோன்றாதவண்ணம் பிரபஞ்சத்திலிருந்தும் ஆட்டிவைக்கின்றகன்மமென்னும் சூத்திரம் தேவரீரைத் தெரிந்துகொள்ளும்படிசெய்து தவத்தினை யடைவது எக்காலம்-எ-று. (138)

உள்ள மறியா தொளித்திருந்த நாயகனை
கள்ள மனந்தெளிந்து காண்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) திரோதானத்தால் மனமானது அறியாது மறைத்திருந்த எனது தலைவனைக் கள்ளத்துடன் இதுகாறு மிருந்த அம்மனம் திரோதான நீங்கித் தரிசிப்பதெக்காலம். எ-று. (139)

வாசித்துங் காணமல் வாய்விட்டுப் போகாமல்
பூசித்துந் தோன்றாப் பொருள்காண்ப தெக்காலம்.

(பொ-ரை) உலக நூல்களில் பலவற்றைப் படித்துப் பார்த்தும் காணமல், மவுனமாக விருந்து பூசித்து வந்தும் எதிர்படாதிருக்கும் பொருளைத் தரிசிப்பது எக்காலம். எ-று. (140)

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்துசில்லந் தட்டாமல்
பன்னிரண்டு சங்கிலிக்குட் பிணைப்பதினி யெக்காலம்.

(பொ-ரை.) வெளியில் பன்னிரண்டங்குலம் பாயும்வாசியாகிய குதிரை ஆரவாரம்செய்ய வொட்டாமல் உள்ளே நோக்கும் பன்னிரண்டங்குல சங்கிலியாற் பிணித்திடுவது எக்காலம். எ-று. (141)

நாட்டுக்கா லிரண்டும்விட்டு நடுவுக்கா லூடேபோய்
ஆட்டுக்கா லிரண்டி னுள்ளே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) மூக்கின் வெளியிலே விடுகின்ற இரண்டாகிய இரேசக பூரகங்களை விடாது கும்பத்தின் மூலமாகச் சென்றுசுழு முனையின்கண் முதல்வன் நடனஞ்செய்கின்ற திருவடிக ளிரண்டின் மத்தியிலே யிருந்து கொண்டிருப்பது எக்காலம். எ-று.(142)

பாற்பசுவைப் பூட்டி பதியில்வைத்துச் சீராட்டிக்
காற்பசுவை யோட்டியதிற் கட்டிவைப்ப தெக்காலம்.

(பொ-ரை.) என்பால் பாசத்தன்மையால் வாய்ந்த பசுத்துவத்தை நீக்கிப் பதித்தன்மையிலிருந்து திருவருட் சீராட்டி வாசியாகிய பிராணவாயுவை யுள்ளே நடத்தி இருதயத்திலே கட்டிவைப்பது எக்காலம். எ-று. (143)

பலவிடத்தே மனத்தைப் பாயவிட்டுப் பாராமல்
நிலவறையி னூடேபோய் நேர்படுவ தெக்காலம்.

(பொ-ரை.) பூமியின்மேலே யிருந்து பல இடங்களிலேயும் மனதைச் செலுத்தி விஷயங்களைப் பார்த்துக் கொண்டிராமல் பூமியின் கீழே நிலவறை ஏற்படுத்தி யதனுள்ளிருந்து உனக் கெதிர்ப்படுவது எக்காலம். எ-று. (144)

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி யுள்ளிருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) போக வாசையென்கிற சமுத்திரத்தினை நீக்கித் திருவருள் கரையேறி முத்தியிற் போவதற்கே சிவாக்கினியை உள்ளேமூட்டி உண்ணிழலுக்குள் இருப்பது எக்காலம். எ-று. (145)

உதயச் சுடர்மூன்று முள்வீட்டி லேகொளுத்தி
இருதயத் திருநடன மினிக்காண்ப தெக்காலம்.

(பொ-ரை.) வளர்கின்ற ஆகவனீயம், தட்சணாக்கினியம், காருகபத்தியம் எனு மூன்றக்கினியும் உடலுக்குள்ளே வளர்த்தி அங்கிருதயத்தின் கண்ணே விளையும் நடனத்தினை யினித் தரிசிப்பது எக்காலம். எ-று. (146)

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) வேதவேதாந்தங்களை யெல்லாம் விசாரித்துக் கைவிட்டு அப்பாற் சென்று நாததத்துவத்தைக்கடந்து விளங்குகின்ற இடத்தில் தங்குவது எக்காலம். எ-று. (147)

பட்டமற்றுக் காற்றிற் பறந்தாடுஞ் சூத்திரம்போல்.
விட்டுவெளி யாக விசுவசித்த லெக்காலம்.

(பொ-ரை.) காற்றுடியினையிழந்து காற்றினிடத்தே அசைந்தாடாநின்ற கயிற்றினைப்போல பிரபஞ்ச விஷயங்களினின்றும் நீங்கிச் சிதாகாயவெளியில் விரும்பி யிருப்பது எக்காலம். எ-று. ()

அட்டாங்க யோகமதற் கப்பாலுக் கப்பாலாய்
கிட்டாப் பொருளதனைக் கிட்டுவது மெக்காலம்.

(பொ-ரை) சிவராஜயோகத்தினைச் செய்யாது எட்டுவிதமான யோகமார்க்கங்களைச் செய்ய அவற்றிற்கிட்டாது அதீதப்பட்டுத் தற்போத அறிவிற்கு எட்டாத வஸ்துவை அடைவது எக்காலம்.

ஒட்டாம லொட்டிநிற்கு முடலுமுயி ரும்பிரித்தே
எட்டாப் பழம்பதிக்கிங் கேணிவைப்ப தெக்காலம்.

(பொ-ரை.) திருவருட் சம்பந்தபடாமல் தத்துவங்களால் சம்பந்தப்பட்டிருக்கும் உடலும் அதனுள்ளிருக்கும் ஆன்மாவும் வேறு பிரிந்து தற்போதத்தா லெட்டக்கூடாதபழமையாகிய சிவபதத்திற்குத் திருவருளாகிய ஏணியினைச்சாத்துவது எக்காலம். எ-று.

பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே நினைத்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை.) மலசம்பந்தமாகிய பாசங்களை யொழித்து ஆன்மாவை பதியிற்கலக்கச்செய்து சிவநேசத்தினுள்ளே எண்ணியிருப்பது எக்காலம். எ-று. (151)

ஆசார நேய வனுட்டான முமறந்து
பேசாமெய்ஞ் ஞானநிலைப் பெற்றிருப்ப தெக்காலம்

(பொ-ரை.) பிரபஞ்சமுகமாகவிருந்து செய்துவரும் சீலம், உறவு அனுட்டான முதலிய தானே நழுவிவிட மவுனமாகிய சிவஞானநிலையினை யடைந்திருப்பது எக்காலம். எ-று. (152)

பல்லாயிரங்கோடிப் பகிரண்ட மும்படைப்பே
அல்லாது வேறிலையென் றறிவதினி யெக்காலம்.

(பொ-ரை.) எண்ணிக்கைக்கு அளவுபடாத பகிரண்ட மனைத்தும் ஒருமுதல்வனால் காரியப்படுவதேயல்லாமல் நிலையாக விருப்பதன்று என்னும் உண்மையறிவது இனி எக்காலம். எ-று. (153)

ஆதிமுத லாகிநின்ற வரியென்ற வட்சரத்தை
யோதியறிந் துள்ளே யுணர்வதினி யெக்காலம்.

(பொ-ரை) எழுத்துகளுக்கு முதலாகநின்ற அரியென்றஎழுத்தினைச் சொல்லி அதன் அதிட்டான மூர்த்தியாகிய விஷ்ணுவைத் தெரிந்து மணிபூரகமென்னும் மூன்றாவது ஆதாரத்திலே தியானிப்பது எக்காலம். எ-று. (154)

சாத்திரத்தை சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம்.

(பொ-ரை.) சாத்திரமனைத்தையும் படித்துப்பார்த்து நான்கு வேதங்களும் முதல்வனைக்குறித்துத் நிர்மாணமாகச் சொல்லாததனால் அவற்றை நீக்கி சிவஞானபோத சூத்திரத்தினை ஆராய்ந்து உண்மைதெளிந்து துன்பத்தினை யொழித்துக்கொள்ளுவ தெக்காலம். எ-று- (155)

அல்லும் பகலுமென்ற னறிவையறி வாலறிந்து
சொல்லு முறைமறந்து தூங்குவது மெக்காலம்.

(பொ-ரை) இரவும் பகலும் என்னுடைய அறிவினைத்திருவருளால் தெரிந்து வாய்ப்பேச்சினைவிட்டு யோகநித்திரையிலிருப்பதும் எக்காலம். எ-று. (156)

இயங்குஞ் சராசரத்தி லெள்ளுமெண்ணெ யும்போல
முயங்குமந்த வேத முடிவறிவ தெக்காலம்.

(பொ-ரை.) இயங்கியற் பொருளாகிய சரபதார்த்தங்களிலும், அசரபதார்த்தங்களிலும் எள்ளுக்குள் எண்ணெயைப்போலத் தங்கியிருக்கும் அந்தவேதாந்த பொருளையறிவது எக்காலம். எ-று. ()

ஊனாகி யூனி லுயிராகி யெவ்வுலகுந்
தானாகி நின்ற தனையறிவ தெக்காலம்.

(பொ-ரை) காரியப்படுதலினால் உடலாகி அறிவித்தலால் அவ்வுடலில் உயிராகி எங்கும் வியாபித்தலால் உலகமனைத்துமாகியிருந்த முதல்வன் தனையறிவது எக்காலம். எ-று. (158)

என்னைவிட்டு நீங்காம லென்னிடத்து நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம்.

(பொ-ரை) எக்காலத்தும் என்னைப் பிரியாது அத்துவிதமாக என்னிடத்து, தேவரீர் கலந்திருக்க அவ்வுண்மை தெரிந்து தேவரீரினின்றும் நானீங்காமல் கலந்திருக்க எண்ணுவதுஎக்காலம்எறு

இன்னதென்றுசொல்லவொண்ணாவெல்லையற்றவான்பொருளைச்
சொன்னதென்று நானறிந்து சொல்வதினி யெக்காலம்.

(பொ-ரை.) சொல்லாலே இத்தகையதென்றுசொல்லக்கூடாதஅளவற்ற உயர்பொருளையே ஆச்சாரியர்எனக்கு உபதேசித்ததென்று தெரிந்துகொண்டு தியானிப்பது எக்காலம். எ-று. (160)

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவை யம்பாக்கி யெய்வதினி யெக்காலம்.

(பொ-ரை.) என்னுடைய மனமதனை வில்லாகவளைத்து அதற்குப்பெரிய இந்திரியத்தினை நாணாகப்பூட்டி அவ்வில்லினூடே என்னுடைய அறிவினை அம்பாகவைத்து ஆணவாதி மலங்களின்மேல் பிரயோகிப்பது எக்காலம். எ-று. (161)

என்னை யிறக்கவெய்தே யென்பதியை யீடழித்த
உன்னை வெளியில்வைத்தே யொளித்தூநிற்ப தெக்காலம்.

(பொ-ரை.) என்னைப் பேசவொட்டாமல் அடங்கச் செய்து நான் ஆதாரமாகக் கொண்டிருந்த என் பிரபஞ்சத்தைத் தோன்று மற் செய்த தேவரீரைச் சிதாகாயத்தில் வைத்து உன்னுடன் கலந்து நிற்பது எக்காலம். எ-று. (162)

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம்

(பொ-ரை.) மீகாமனால் கடலில் செலுத்துகின்ற தோணியினை அத்தோணியிலுள்ள சரக்கிய மூங்கில்கள் அத்தோணியைத் துளைசெய்து விடடாற்போல, ஆண்மாவால் உலகில்செலுத்துகின்ற உடலினை அவ்வுடலிலுள்ளவினைகள் அவ்வுடலைக்கெடுத்து விட்ட விசித்திரத்தினை நான் தெரிந்துகொள்வது எக்காலம். எ-று

நின்றநிலை பேராம னினைவிலொன்று சாராமற்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவ தெக்காலம்.

(பொ-ரை.) தியானத்திலிருக்கும் நிலையிலிருந்து 'அசையாமல்' வனத்தில் பிரபஞ்சவிஷயங்களொன்றும் பொருந்தாமல், சித்தார்த்த வழியே சென்ற நிலையானது மோட்சமென்று திருவருளைச் சேர்ந்தறிவது எக்காலம். எ-று. (164)

பொன்னும் வெள்ளியும்பூண் பொற்பதத்தை யுள்ளமைத்து
மின்னு மொளிவெளியே விட்டடைப்ப தெக்காலம்.

(பொ-ரை.) வேதங்களையே பொன் வெள்ளிச் சிலம்புகளாகத் தரித்திருக்கிற அழகியபதத்தினை மனத்தின்கண்ணே வைத்து அவ்விடத்தும் பிரகாசிக்கின்ற சோதியாகிய சிதாகாயத்திலே என்னை உட்புகுத்துவது எக்காலம். எ-று. (165)

கூட்டிலடைப் பட்டபுழு குளவியுருக் கொண்டதுபோல்
வீட்டிலடைப் பட்டருளை வேண்டுவது மெக்காலம்.

(பொ-ரை) குளவியினாற் கட்டப்பட்ட கூண்டில் அடைப் பட்ட புழுவானது குளவி வடிவினைப் பெற்றதுபோல, உடலி லடையப்பட்ட உயிர் திருவருளுருவமாக அடைவதெக்காலம். ()

கடலி லொளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போ
லுடலி லொளித்தசிவ மொளிசெய்வ தெக்காலம்.

(பொ-ரை) சமுத்திரத்தில் மறைந்திருந்த வடவாமுகாக்கினி வெளிவந்தாற்போல, தேகத்தில் இதுகாறும் அத்துவிதமாக விருந்து திரோதானத்தால் மறைந்திருந்த சிவம் வெளிப்பட்டொளிர்வது எக்காலம். எ-று. (167)

அருணப் பிரகாச மண்டமெங்கும் போர்த்ததுபோல்
கருணைத் திருவுருவிற் கலந்துநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) சூரியப்பிரகாசமானது உலகமெங்கும் வியாபித்ததுபோல திருவருள் வியாபகத்தில் (வியாப்பியமாக) திருவடியில் இரண்டறக் கலந்து இருப்பது எக்காலம். எ-று. (168)

பொன்னிற் பலவிதமாய்ப் பூஷணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்ததுன்னி லொடுங்குவது மெக்காலம்.

(பொ-ரை) பொன்னிடத்தினின்றும் பலவிதமான ஆபரணங்கள் தட்டானால் காரியப்பட்டதுபோல, உன்னிடத்துள்ள பரிக்கிரக சத்தியாகிய மாயையினின்றும் (நின்னால்காரியப்பட்டு) மறுபடியும் நின்னுடைய மாயையில் ஒடுங்குவது எக்காலம். எ-று. ()

நாயிற் கடைப்பிறப்பாம் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலொளிபோல் விளங்குவது மெக்காலம்.

(பொ-ரை) நாயினும் கடையாகிய பிறப்பாகும் நான் எடுத்த சன்மமொழிய, மூங்கிலிலிருந்து உண்டாகிய அனல் அம்மூங்கிலினை அவ்வனல்மயமாக ஆக்கிவிடுவதுபோல என்னுடலிலிருந்து அருள் வெளிவந்து என்னுடலை அருண்மயமாக விளக்குவது எக்காலம். எ-று. (170)

சூரிய காந்திவெளி சூழ்ந்து பஞ்சை சுட்டதுபோ
லாரியன் றேற்றத் தருள்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை) சூரியனுடைய ஒளியானது கண்ணாடி மூலமாக பஞ்சினைக் கொளுத்தியதுபோல, ஆசாரியன் பார்வையால் உடல் மூலமாக மலத்தினைக்கொளுத்த திருவருள்பெறுவ தெக்காலம். ()

இரும்பிற் கனன்மூட்டி யிவ்வுருபோ யவ்வுருவாய்க்
கரும்பிற் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம்.

(பொ-ரை) இரும்பினிடத்தில் அக்கினியைமூட்ட இவ்விரும் புருவமாறி அவ்வக்கினியுருவாய் விளங்குதல்போலத் திருவருளை உடலில்மூட்ட இவ்வுடலில் அத்திருவருளுருவாய் விளங்க அக்காலத்தில் விளையும் கரும்பினிடத்தினின்றும் உண்டாகிற சுவையுடன் கூடிய இரசத்தினை யொத்த சிவத்தினைத் தெரிந்துகொள்வது எக்காலம். (172)

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
வுருக்கொண்ட வாறதுபோ னுனையடைவ தெக்காலம்.

(பொ-ரை) கடலாமையானது தன்னிடத்துற்பவித்த தன்னுடைய முட்டையினைக் கடற்கரையிலிட்டு மறுபடியும்ஒருக்கால் நினைக்க அம்முட்டை உருக்கொண்டதுபோல, ஆச்சாரியர்என்னை நினைக்க யான் அருளுருவமடைவதும் எக்காலம், எ-று, (173)

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில்வரு வார்போல்
கூடுவிட்டுப் பாயுங் குறிப்பறிவ தெக்காலம்.

(பொ-ரை) தாம் வாழ்கின்ற வீட்டினைவிட்டுநீக்கி வெளிவருவார்களைப்போல உடலைவிட்டு நீங்கி வெளிவரும் நாளின் குறிப்பினைத் தெரிந்து கொள்வது எக்காலம். எ-று. (174)

கடைந்தவெண்ணெய் மோரிற் கலவாத வாறதுபோல்
உடைந்துதமி யேனுனைக்காண்ப தெக்காலம்.

(பொ-ரை) தயிரினின்றும் கடைந்து எடுத்தவெண்ணெயானது மறுபடியும் மோரிற்கலவாதது போல, மலத்தினின்றும் வெளிப்பட்ட நான் மறுபடியும் அம்மலத்திற் கலவாதபடி தேவரீரைத் தரிசிப்பது எக்காலம். எ-று. (175)

இருளை வெளிவிழுங்கி யேகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிரு ளகன்றுநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) பூதவிருளினைச் சூரியவொளி கெடுத்து ஒளிமயமாக விருந்ததுபோல அருளினால் ஆணவவிருள்கெட அவ்வருள் மயமாக நிற்பது எக்காலம். எ-று. (176)

மின்னெழுந்து மின்னடுங்கி விண்ணிலுறைந் தாற்போல்
என்னுணின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்.

(பொ-ரை) மின்னலாவது ஆகாயத்தினின்றும் உண்டாகி அம்மின்னல் ஆகாயத்திலொடுங்கத்தங்கியதுபோல, என்னிடத்து மறைந்து கிடக்கும் அருளானது என்னிடத்தினின்றும் வெளிப்பட்டு மறுபடியும் என்னிடம் தங்குவது எக்காலம். எ-று. (177)

கண்ட புனற்குடத்திற் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொரூபமதைக் கூறறிவ தெக்காலம்.

(பொ-ரை) வடிவுடன் கூடிய சலநிறைந்த பாண்டங்கள்தோறும் சூரியவொளி பிரகாசித்தாற்போல, பிரபஞ்ச பதார்த்தங்கள்தோறும் மாயை கலந்திருக்கும் மாயா சொரூபத்தின் கூறுபாட்டினை (என்னினின்றும் பிரித்தறிவது) எக்காலம். எ-று. (178)

பூணுகின்ற பொன்னணிந்தாற் பொன்சுமக்கு மோவுடலைக்
காணுகின்ற வென்கருத்திற் கண்டறிவ தெக்காலம்.

(பொ-ரை) ஆபரணங்களாகப் பொன்னினைப்பூண்டால் அப் பொன் உடலைப் பொன்சுமக்குமோ (சுமக்காது பொன்னினையுடலே சுமக்கும் அதுபோல) திருவருளினைப்பெறுகின்ற என்மனத்தில் திருவருள் என்னைத் தாங்காமல் நான் திருவருளைத் தாங்குமாறு தெரிந்து கொள்வது எக்காலம். எ-று. (179)

செம்பிற் களிம்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பினின்ற மும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம்.

(பொ-ரை) செம்பினைக் களிம்பு மறைத்துக்கொண்டிருப்பது போல் சிவம் தோன்றாதவாறு போல என்னை மறைத்துத் துன்பத்துடனின்ற மும்மலங்களை என்னிடத்தினின்றும் பிரிப்பது எக்காலம். எ-று. (180)

ஆவியுங் காயமும்போ லாத்துமத்து நின்றதனைப்
பாவி யறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) உயிரும் உடலும் அபேதமாக கலந்திருத்தற்போலத் (தேவரீர்) என் ஆன்மாவினிடத்து அபேதமாக அத்துவிதத் தன்மையிற் கலந்திருத்தலைப் பாவியாகிய நான் தெரிந்து மனப் பற்றுக்கொண்டு வாழ்வது எக்காலம். எ-று (181)

ஊமைக் கனாக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம்.

(பொ-ரை) ஒரு ஊமையானவன் ஒருஉத்தமமானகனவினைக் கண்டு (அதனைப் பிறருக்குச்) சொல்லவகையற்று தானே சந்தோஷிக்கும் இன்பத்தினையொக்க நாமுன்னை யறிந்துகொண்டு வெளியிடக்கூடாதசுகத்தையனுபவித்தற்குப் பாக்கியம்வருவது எக்காலம்.

சாகாத சிவனடியைத் தப்பாத ரெப்போதும்
போகா வுடலகன்று போவரென்ப தெக்காலம்.

(பொ-ரை) (எக்காலத்தும்) அழியாத சிவபெருமானின் திருவடியினைத் தியானித்தலினின்றும் நீங்காதவர் எக்காலத்தும் (மண்ணில் வீழ்ந்து) அழியாத உடலுடனே (பூமியினின்றும் நீங்கி மோட்சமடைவ ரென்பதனை யறிவதெக்காலம். எ-று. (183)

நிட்டைத் தனைவிட்டு நினைவறிவு தப்பிவிட்டு
வெட்ட வெளியில் விரவிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) உபாசனை பலிக்கும்வரையில் நிஷ்டைகூடிப்பின் அந்நிஷ்டையினைமறந்து (மூன்னிலைச்சுட்டாக) என்னும் எண்ணத்தையு நீங்கிச் சிதாகாயத்தில் கலந்து நிற்பது எக்காலம். எ-று. ( )

வெட்டவெளி தன்னில் விளைந்தவெம் பாசத்தை
திட்டமுடன் கண்டு தெளிவதினி யெக்காலம்.

(பொ-ரை) திருவருள் வியாபகத்திலிருந்துகொண்டு எனக்கு அநாதியாக வுண்டாகிய ஆணவமலத்தின் உண்மையினைத் தெரிந்து அதனினின்று நீங்கியிருப்பது எக்காலம். எ-று. (185)

எங்கும் பரவுமொ ரென்வடிவு நின்வடிவாய்க்
[illegible]ங்குபாக மின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) எவ்விடத்தும் சிவமயமாம், என்னுடைய சிவசொரூபம் சிவசொரூபமாய், சகல கேவலமற்று உன்னைத் தரிசித்துக்கொண்டிருப்ப தெக்காலம். எ-று. (186)

உண்டதுவு மாதரு டன்கூடிச் சேர்ந்தின்பங்
கண்டதுவு நீயெனவே கண்டுகொள்வ தெக்காலம்.

(பொ-ரை) பிரபஞ்சபோக மனுபவித்ததும், பெண்களுடன் கலந்து சிற்றின்பத்தினை நுகர்ந்ததும் (என்னுடைய கன்மத்திற்குத் (தகுந்தபடி) தேவரீர் கூட்டிவைத்தீரென்று (முண்மையினைத்) தெரிந்துகொள்வது எக்காலம். எ-று. (187)

ஈமென்று கேட்டதுவு மென்னுள்ளே நின்றதுவும்
ஓமென்று சொன்னதுவு முற்றறிவ தெக்காலம்.

(பொ ரை) (நான் நிஷ்டைகூடி யிருந்தகாலத்தில்) என்காதினிடத்து ஈம் என்ற நாதமுண்டானதுவும், பின்னரென்னுள்ளத்தில் (ஓர்) குண்டலிசத்தி நிலையுற்றதுவும் அது ஓங்காரத்துடன் சப்தித்ததும் (ஆகிய விஷயங்களின் உண்மை) நிலையுறச் சிந்தித்தறிவது எக்காலம். எ-று (188)

சத்தம் பிறந்தவிடந் தன்மயமாய் நின்றவிடஞ்
சித்தம் பிறந்தவிடந் தேர்ந்தறிவ தெக்காலம்.

(பொ-ரை) நாதோற்பத்திக்குக் காரணமாகவுள்ளமூலாதாரத்தையும், சுட்டின்றித் தான் திருவருள்மயமாக நின்ற அவசரத்தையும் மனோவிருத்திக்கு ஆதாரத்தையும் விசாரித்தறிவது எக்காலம்.

போக்கும் வரவும் புறம்புள்ளு மாகிநின்றும்
தாக்கு மொருபொருளைச் சந்திப்ப தெக்காலம்.

(பொ-ரை) (சகல வடிவினையுற்ற ஆன்மாக்களின் அனுக்கிரக நிமித்தமாக) காட்சிகொடுத்தருளுதலும் மறைந்தருளுதலும் செய்து, (நிஷ்களவடிவினையுற்று எங்கும்வியாபகமாகி பிரபஞ்சத்தில் அதிஷ்டித்துக்கொண்டிருக்கும் ஒப்பற்ற வஸ்துவைத் தரிசிப்பது எக்காலம். எ-று. (190)

நானெனவு நீயெனவு நாமிரண்டு மற்றொன்றும்
நீயெனவே சிந்தைதனி னேர்படுவ தெக்காலம்.

(பொ-ரை) சுதந்தரமாக நானென்னு மொருவனிருப்பதாகவும் எனக்கு அன்னியமாக நீயொருவனிருப்பதாகவும் சொல்லும் நாம் அப்பேதத்தன்மை யிரண்டு நீங்கி என்னிடத்தில் அன்னியமாகப் பொருந்தியிருப்பது தேவரீர் எனவே என்மனத்தில் உதயமாவது எக்காலம். எ-று. (191)

அறிவையறி வாலறிந்தே யறிவு மறிவுதனில்
பிரிவுபட நில்லாமல் பிடிப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) ஆன்ம அறிவை திருவருளை முன்னிட்ட அறிவினால் தெரிந்து அங்ஙனமறிந்த அறிவினில் வேறுபட்டு நில்லாமல் அத்திருவருண்மயமாக சம்மதிப்பது எக்காலம். எ-று. (192)

நீடும் புவனமெல்லாம் நிறைந்துசிந் தூரமதாய்
ஆடும் திருக்கூத்தை யறிவதினி யெக்காலம்.

(பொ-ரை) புவனமனைத்தும்வியாபித்து அப்புவனமுழுவதும் பஸ்பமாகும்படி (சர்வசங்காரகாலத்தில்) நடனம்செய்யும் அழகிய கூத்தின் (உண்மையினைத்) தெரிந்துகொள்வது எக்காலம். எ-று.

தித்தியென்ற கூத்துத் திருச்சிலம்பி னோசைகளும
பத்தியுட னேகேட்டுப் பணிவதினி யெக்காலம்.

(பொ-ரை) தித்தியென்றதான வொத்துடன் நடிக்கும் திருக்கூட்டத்தில் திருவடியிலுண்டாகிற (அழகிய) வேதச்சிலம்பின் சப்தங்களையும் பக்தியுடனே அடியேன்கேட்டுத் தில்லைச் (சிற்றம்பலத்திலே வணங்குவது எக்காலம். எ-று. (194)

நயனத் திடைவெளிபோய் நண்ணும் பரவெளியில்
சயனத் திருந்து தலைபடுவ தெக்காலம்.

(பொ-ரை) இரண்டுநேத்திரங்கட்கும் மத்தியிலுள்ள கோதண்டத்தானத்தில் தியானங்கூடி யிருந்து அங்குத்தோன்றும் சிதாகாய வெளியில் திருவருட் சுழுத்தி கூடியுன்னுடனே வாழ்தல் எக்காலம். எ-று. (195)

அருவி மலைநடுவே யாயிரக்கால் மண்டபத்தில்
திருவிளையா டற்கண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(பொ-ரை) அமிர்த தாரையாகிய அருவியோடிவருகின்ற சந்திரமண்டல மேருவினிடையிலுள்ள அநேகயாயிரமான நரம்புகளாகிய கால்களாலே தாங்கப்பெற்ற பிரமாந்திர மண்டத்தில் தெல்வத் திருவிளையாட்டினைத் தரிசிப்பது எக்காலம். எ-று. (196)

மீனைமிக வுண்டுநக்கி விக்கிநின்ற கொக்கதுபோல்
தேனைமிக வுண்டுநக்கி தெவிட்டிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) மீன்களை அதிகவாகபிடித்துண்டு விக்கிக்கொண்டுநின்ற கொக்கினைப்போல, சிதானந்தத்தேனைத் திருப்தியாகவுண்டு தேக்கெறிந்துகொண்டு இருப்பது எக்காலம். எ-று. (197)

பொல்லாத காயமதைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் கற்பதினி யெக்காலம்.

(பொ-ரை) தீவினையாலாகிய உடலினைப் பூமியிலே கிடத்திவிடுமுன்னமே (அவ்வுடலின் கண்ணேயுள்ள) கற்பசுவாகிய (ஆன்மாவினின்றும் ஞானப்) பாலினைக் கறந்தடைவதற்கு (வேண்டிய சாதனங்களை) தெரிந்து கொள்ளுதலினி எக்காலம். எ-று. (198)

வெட்ட வெளிக்குள்ளே விளங்கு சதாசிவத்தைக்
கிட்டவரத் தேடிக் கிருபைசெய்வ தெக்காலம்.

(பொ-ரை) சிதாகாய வெளியிலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் (அருவுருவாகிய) சதாசிவமூர்த்தியினைச் சமீபத்தில் தரிசனஞ் செய்யும்படி வரவிசாரித்து அதனால்கருணையடைவது எக்காலம். எ-று. (199)

பேரறிவி லேமனதை பேராம லேயிருத்தி
ஓரறிவி வென்னளு முன்றிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) பெரிய திருவருள் மயமான வறிவினிடத்தே மனத்தினையசையாதபடி நிறுத்தி ஒப்பற்ற அந்த அறிவின்கண்ணே எந்நாளு நிலையுற்றித் தங்குவது எக்காலம். எ-று. (200)

அத்துவிதம் போலுமென்ற னாத்துமத்தி னுள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம்

(பொ-ரை.) ஒன்று இரண்டென்னப் பிரித்தறிதற்கு வாராததாகிய அத்துவிதத் தன்மைபோல என்றனுடைய ஆன்மாவின் கண்ணே கலந்திருந்து மோட்சத்தை யான் அடைய பரிபக்குவ காலத்தினை நோக்கிக் கொண்டிருக்கிற தன்மையினை யறிந்து கொள்வது எக்காலம். எ-று. (201)

நானின்ற பாசமதி னிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிறைவிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) நானழுந்திக்கிடக்கிற மலத்திலேயே நான் தங்கியிருந்து அழியாமல் தேவரீர் வியாபகமாகவுள்ள திருவருள் மயத்தில் கலந்து இருப்பதெக்காலம். எ-று. (202)

எள்ளுநெய் கரும்பு மெழுமலருங் காயமும்போ
லுள்ளுநீ புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம்.

(பொ-ரை) எள்ளில் எண்ணெயைப் போலவும் கரும்பில் இரசம்போலவும், புட்பிக்கின்ற புட்பத்தில் வாசனைபோலவும், உடலில் உயிரைப்போலவும் எனது அகத்தும் புறத்தும் கலந்ததன்மையினைச் சூழ்ந்து தெரிந்துகொள்ளுத லெக்காலம். எ-ள. (203)

அன்னம் புனலை வகுத்தமிர்தை யுண்டதுபோ
லென்னைவகுத் துன்னை யினிக்காண்ப தெக்காலம்.

(பொ-ரை) அன்னபட்சியானது நீரினின்றும் பாலினைப்பிரித்து உண்ணுமாறுபோல (நானே நீயென்னும் பசு ஞானத்தினின்று) நீங்கி அடியேன் (ஆண்டானாகிய) உனக்குவேறாக (வடிவை யெனக்) கண்டபதி ஞானத்தால்தேவரீரைத்தரிசிப்ப தெக்காலம்.

அந்தரத்தி னீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தையைத் தூக்கொண்டு தெரிசிப்ப தெக்காலம்.

(பொ-ரை) ஆகாய கங்கையிலிருந்து பூத்து மலர்ந்த தாமரைப்புட்பத்தினைப்போல, திருவருட்பெருக்கத்தில் மனம்நாட்டி, இருதயதாமரை மலரக்கண்டு தரிசிப்பதெக்காலமோ. எ-று. (205)

பிறப்பு மிறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பு நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம்.

(பொ-ரை) பிறப்பதற்கும் இறப்பதற்கும் மேதுவாயுள்ள சுகதுக்கங்களையொழித்து, மவுனமோடிருந்து, பிராணவாயு விளங்கவொட்டாமல் தடுத்துக்கொண்டு, சகல கேவலங்கடந்து தற்போதங்கெட்டிருப்பது எக்காலம். எ-று. (206)

மன்னும் பரவொளியை மனவெளியி லடைத்தறிவை
என்னுமொரு நினைவை யெழுப்பிநிற்ப தெக்காலம்.

(பொ-ரை) நிலைபெற்ற சிதாகாய வெளியினை மனவிருதயாகாயத்திலடக்கி அறிவினைப் (பிரபஞ்சமுகமாகப் பலவழியிலும் விடாதிருவருளையே சிந்திக்கும்) ஒரு நினைவிலேயே தூண்டிநிற்பது எக்காலம். எ-று. (207)

ஆசைகொண்ட மாத ரடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானு மொடுங்குவது மெக்காலம்.

(பொ-ரை) மோகத்தினை வாய்ந்த மாதர்களைக் காண்கின்ற கனவதனை வரவொட்டாமல்நீக்கித் தேவரீரின்மீது தியானம்வைத்து அடியேனும் ஒடுங்கி யிருப்பது மெக்காலம். எ-று. (208)

தன்னுயிரை கொண்டு தான்பிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கொடுங்குவது மெக்காலம்.

(பொ-ரை) தனது ஆன்மசுதந்தரத்தினால் தான் உலகத்திற் சஞ்சரித்து வாழுதல்போல், தேவரீர் திருவருளினை யாதரவாகக் கொண்டு இவ்வுலகில் சீவன்முத்தனாகத் திரிந்துவருதல்எக்காலம்.

சேற்றிற் கிளைநாட்டுந் திடமா முடலையினிச்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம்

(பொ-ரை) சேற்றினிடத்தே யொரு விருட்சத்தின் கிளையினை நடுதலினால் பலங்கொண்டிராததுபோல், தேகத்தினை யினி மேல் பிராணவாயுவாகிய காற்றிலே சஞ்சரிக்கின்றகாற்றாடியென வுண்மையறிவது எக்காலம். எ-று. (210)

என்வசமுங் கேட்டிங் கிருந்தவச மும்மழிந்து
தன்வசமு கெட்டருளைச் சார்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) உடலின் சுதந்தரமுநீங்கி, உலகின் சுதந்தரமுநீங்கி ஆன்மாவின் சுதந்தரமு நீங்கித் திருவருளின் சுதந்தரத்தில் வாழ்ந் திருப்ப தெக்காலம். எ-று. (211)

தன்னை மறந்து தலத்து நிலைமறந்து
கன்ம மறந்து கதிபெறுவ தெக்காலம்.

(பொ-ரை) உடலிற்செய்கைகளையிழந்து, பிரபஞ்சகாரியங்களையிழந்து, கன்மத்தால் விளையும் போகங்களையிழந்து மோட்சமடைவது எக்காலம். எ-று. (212)

என்னையென்னி லேமறைந்தே யிருந்தபதி யும்மறந்து
தன்னையுந்தா னேமறந்து தனித்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) உடலினை யென்னிடத்தே மறந்து, இதுகாறும் வாழ்ந்துவந்த பூமியையுமறந்து ஆன்மாவாகிய தன்னையும் தானே மறந்து தனித்து வாழ்வது மெக்காலம்-எ-று. (213)

தன்னையுந்தா னேமறந்து தலைவாசற் றாழ்போட்டே
யென்னைநினைந் தன்ளே யுறங்குவது மெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாவாகிய தன்னையும் ஆன்மா காரணமாக வேமறந்து, பிரபஞ்சவாசனை நுழைதற்கேதுவாகவுள்ள மனவாயலையடைத்துத் தேவரீரை தியானித்துக்கொண்டு சிவயோகநித்திரையிலிருப்பது எக்காலம்-எ-று. (214)

இணைபிரிந்த போதலறி யின்பமுறு மன்றிலைப்போல்
துணைபிரிந்த போதருணூல் தொடர்ந்துகொள்வ தெக்காலம்.

(பொ-ரை) உற்றதுணையாக விருந்த ஆண்பட்சியாகிலும் பெண்பட்சியாகிலும் ஒன்றைவிட்டு ஒன்று நீங்கியபோது கூச்சலிட்டுப்பழையபடி விருப்பத்தினைநாடும் அன்றிற்பட்சிகளைப்போல தனக்கு உற்ற உதவியாகவிருந்த ஆசிரியரைப் பிரிய நேரிட்டபோது வேறுசிந்தனையின்றி ஞானசாத்திரங்களாகிய (மெய்கண்ட) நூல்களை யாராச்சியாக வைத்துக்கொள்வது மெக்காலம்-எ-று. (215)

ஆட்டமொன்று மில்லாம லசைவுசற்றுங் காணமல்
தேட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம்.

(பொ-ரை) சலனமென்பது சிறிதுமில்லாமல், சோர்வென்பது சிறிதுந்தோன்றாமல், கவலையற்ற உயர்ந்த திருவருளினை யாராய்வது மெக்காலம்-எ-று. (216)

முன்னைவினை யாலறிவு முற்றாமல் பின்மறைந்தால்
அன்னைதனைத் தேடி யமுதுண்ப தெக்காலம்.

(பொ-ரை) பூர்வ சென்மாந்தர வினையின்படி அறிவு அழுந்தாமல் ஒருக்கால் திரோதான சத்தியால் மறைந்தாலும் திருவருட் சத்தியினைநாடி ஞானாமிர்தம் உண்பது எக்காலம். எ-று. (217)

கள்ளுண்ட வன்போற் களிதருமா னந்தமதாற்
றள்ளுண்டு நின்றாடித் தடைபடுவ தெக்காலம்.

(பொ-ரை) கள்ளினைக் குடித்தவர்போலச் சந்தோஷத்தினை விளைவிக்கும் சிவானந்தந் தன்னால் அசைதல் பெற்று ஆனந்தக் கூத்தாடிப் பிரபஞ்சம் தோன்றாதபடி திருவருள் தடையுறுதல் எக்காலம். எ-று. (218)

தானென்ற வாணவமுந் தத்துவமுங் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா திலங்குவது மெக்காலம்.

(பொ-ரை) தான் என்று செருக்குகின்ற ஆணவமலமும், தத்துவங்களின் காரியப்பாடும் நீங்க ஏன் என்கிற சொல்லுமில்லாதபடி மவுனமுற்றிருப்பதும் எக்காலம். எ-று. (219)

நானவனைக் காண்பதெல்லா ஞானவிழி யாலறிந்து
தானவனாய் நின்று சரணடைவ தெக்காலம்.

(பொ-ரை) (ஆன்மாவாகிய) நான் முதலவனுடைய (பிரேரகத்தாலேயே) எல்லாவற்றையும் காணுவனென்னும் உண்மையினையெல்லாம், ஞானேந்திரியத்தாற்றெறிந்து தான் சிவோகம்பாவனையில்) முதல்வனாகவேயிருந்து திருவடியினை யடைவது எக்காலம்.

தானந்த மில்லாத தற்பரத்தி னூடுருவி
ஆனந்தங் கண்டே யமர்ந்திருப்ப தெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாவாகிய தான் முடிவில்லாத சிவ பெருமா னின் (திருவருளில்) திளைத்துச் சிவானந்த மனுபவித்தே பொருந்தி யிருப்பது எக்காலம். எ-று. (221)

உற்ற வெளிதனிலே உற்றுப்பார்த் தந்தரத்தே
மற்ற மறமாய்கை மாள்வதினி யெக்காலம்.

(பொ-ரை) பொருந்திய சிதாகாயவெளியிலே ஞானநோக்காற் பார்த்து அவ்வெளியிலே (அம்மயமாயிருந்து) வேற்ற மாய்கை யானது நீங்குவது எக்காலம். எ-று. (222)

ஏடலர்க்த பங்கயமு மிருகருணை நேத்திரமுந்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம்.

(பொ-ரை) புறவிதழ் அவிழப்பெற்ற தாமரையினைப்போன்ற திருமுகமும், கருணை வழியா நின்ற இரண்டு கருணை நேத்திரங் களும், வளையந்தரித்த குண்டலங்களுடன் கூடிய (செவிகளும்) கூடிய தேவரீர் எனக்கு முன்னே தரிசனம் கொடுத்தருளுவதும் எக்காலம். எ-று. (223)

ஐயாறு மாறு மகன்றுவெறு வெளியில
மையிருளில் நின்றமன மாள்வதினி யெக்காலம்.

(பொ-ரை) முப்பத்தாறு தத்துவங்களையுங்கடந்து சிதாகாயத் தில் (கலந்து) ஆணவ மயக்கத்திலிருந்த மனமொடுங்குவ்தினி யெக்காலம். எ-று. (224)

காட்டுமருண் ஞானக் கடலன்புகப் பல்விட்டு
மூட்டுங் கருணைக்கடலின் மூழ்குவது மெக்காலம்.

(பொ-ரை) ஆச்சாரியமூர்த்தி) காட்டும் திருவருளாகிய ஞான சமுத்திரத்தில் அன்பாகிய கப்பலினை நடத்திவிளையும் அக்கருணை சமுத்திரத்தில் திளைப்பது எக்காலம். எ-று. (225)

நானோ நீயோ நன்றும் பரமான
தானோ வென்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம்.

(பொ-ரை) நான் என்னும் தன்மைச் சுட்டினுக்கும், நீயென்னு முன்னிலைச் சுட்டிற்கும், நல்ல ஞானபரவெளியா யிருக்கிற தான் என்னும் படர்க்கைச் சுட்டிற்கும் இலக்கு எவரோவென ஆராய்ந்து தவத்தினை முடிப்பது எக்காலம்-எ-று. (226)

எவரெவர்க ளெப்படிகண் டெந்தப் படிநினைத்தார்
அவரவர்க்கப் படிநின்று னென்ப தெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாக்கள் தங்கள் கன்மத்திற்குத்தக்கபடி எவ்வெவர்கள் முதல்வனை எந்தவிதமாகத் தரிசித்து எந்தவிதமாக எண்ணினரோ, அவ்வவர்கட்கு அந்த விதமாககாட்சிகொடுத்தருளுவன் என்னு முண்மையறிவது மெக்காலம்-எ-று. (227)

உற்றுற்றுப் பார்க்க வொளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) இலக்காக மனத்தைவைத்து நோக்க அவ்விடத்துத் தோன்றும் அருட்பெருஞ் சோதியினை இருபுருவங்கட்கு மத்தியிலுள்ள கோதண்ட தானத்தில் நேரே தரிசித்துநிலைத்திடுவது எக்காலம்-எ-று. (228)

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமற வுன்காட்சி கண்டறிவ தெக்காலம்.

(பொ-ரை) பிரகாசிக்கின்ற நட்சத்திரக் கூட்டங்களை சூரியன் மறைத்தாங்கு அடியேன் மாயா சம்பந்தமான காரிய...லா மறைய ஞானசூரியனைத் தரிசிப்பது எக்காலம்-எ-று. (229)

என்னையே நானறியே னிந்தவண்ணஞ் சொன்னதெல்லா
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தெக்காலம்.

(பொ-ரை) ஆன்மாவாகிய தன்னையே இன்ன விலக்கண முடையதென வறியேன் என்று சொன்ன யாவும் சிவஞானிகள் சம்மதப்படும்படி தெரிந்துகொண்டு பெருமான் சந்நிதானத்திலே பணிவது எக்காலம். எ-று. (230)

ஐஞ்சுகரத்தானை யடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவ தெக்காலம்.

(பொ-ரை) ஐந்து திருக்கரங்களுடன் கூடிய விநாயகக் கடவுளின் இரண்டு திருவடிகளைத் தோத்திரஞ்செய்து அவர் திருவுருவத்தினை மனத்திற் பதித்து திருவருணிலைபடைவது எக்காலம்.

மெய்ஞ்ஞானப் புலம்பல் இடையூறின்றி முடிதற்பொருட்டும் முடிந்ததின் பொருட்டும் முதலிலும் கடைசியிலும் மூத்தபிள்ளையார் வணக்கம் கூறினாராயினர். (231)

இம்மெய்ஞ்ஞானப் புலம்பலுக்கு அறுபான் மும்மை நாயன்மார்களிலொருவராகிய வாயிலார் நாயனார் பரம்பரையில் வந்தவரும், சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவப்பிரவர்த்தகாசாரியரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து மகாவித்துவான்களிலொருவரும், சென்னை மெய்கண்ட சந்தானசபை அக்கிராசனாதிபதியுமாகிய சிததாந்தசாபம்.

அஷ்டாவதானம் பூவை - கலியாணசுந்தரர் இயற்றியது.

ஞானார்த்த தீபவுரையும்.

முற்றியது.

Edward
6 10 86